ஸங்கீதகல்பத்ருமம்

(முதற் பாகம்)

நூலாசிரியர் :
காயகசிகாமணி ஸங்கீதகலாநிதி
டாக்டர் எல். முத்தய்யா பாகவதர்

இரண்டாம் பதிப்பு
©
கேரள அரசு
1977

கேரள ஸர்க்காரால் திருவனந்தபுரம் கவர்மெண்டு அ
பதிப்பிக்கப்பெற்றது
1977

Message

From

His Highness the Maharaja

PRINTED BY THE S.G.P. AT THE GOVERNMENT PRESS,
TRIVANDRUM, 1977.



MAJOR GENERAL HIS HIGHNESS SRI CHITRA TIRUNAL
SIR BALA RAMA VARMA, G. C. S. I., G. C. I. E., D. LITT.,
MAHARAJA OF TRAVANCORE

Palace, Trivandrum,
20th July, 1947.

Gayakasikhamani Dr. Muthia Bhagavathar, late Principal of the Sri Swati Tirunal Music Academy, was not only a vocalist and composer of eminence but also an acknowledged Tamil and Sanskrit Scholar and an authority on the history and development of Carnatic Music in relation to its past traditions, commencing with the Sama Veda.

All his varied erudition and experience have been gathered together in the SANGITA KALPADRUMA, a compendium of musical lore which he completed in 1943 and which has now been published under the supervision of his successor in the Music Academy, Rajyasevanirata Semmangudi Srinivasa Aiyar.

It will be a valuable addition to musical literature and invaluable to the expert and the student alike.

RAMA VARMA

பதிப்புரை

ஸ்ரீ ஸ்வாதித்திருநாள் ஸங்கீதக்கழகத்தின் வாயிலாக வெளிவரும் இசை நூல் தொகுதிகளுள் 'ஸங்கீதகல்பத்ருமம்' என்னும் இம்மஹத்தான இசை இலக்கணநூல் நான்காவதாகும். இரண்டு பகுதிகளைக்கொண்ட இந்நூலில் முதற்பாகம் தற்சமயம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல், காலஞ்சென்ற காயகசிகாமணி ஸங்கீதகலாநிதி டாக்டர் எல். முத்தய்யா பாகவதர் அவர்களின் ஐம்பது வருஷப் பேராராய்ச்சியின்பயனாக உருவானதாகும். இவ்வரியபெரிய இசை இலக்கணநூல், மாட்சிமைதங்கிய ஸ்ரீ சித்திரைத்திருநாள் மஹாராஜா அவர்கள் ஸமக்ஷமத்தில் 10-1-1118-ல் ஸ்ரீ பாகவதரவர்களால் ஸமர்ப்பணம் செய்யப்பட்டது. ஸ்ரீ பாகவதரவர்கள் இயற்றிய இக்கிரந்தத்தின் அருமை பெருமைகளையெல்லாம் நன்கு அறிந்து மகிழ்ந்து, நமது மன்னர் பிரான் திருவாங்கூர் ஸர்வகலாசாலைவாயிலாக ப்ரும்மஸ்ரீ பாகவதரவர்களுக்கு 'டாக்டர்' என்ற அரிய பட்டத்தையளித்துப் பெரிதும் ஸம்மானித்தார்கள். இவ்வரியநூல், யாவர்க்கும் உபயோகமாகும்பொருட்டு வெளியிடவிரும்பிய நம் அரசர் பெருமானது ஆஜ்ஞைப்படி, ஸ்ரீ ஸ்வாதித்திருநாள் ஸங்கீதக்கழகத்தினின்று இப்போது வெளியிடப் படுகிறது.

இதில், இந்நூலாசிரியர் தம் முன்னுரையில் கூறியவாறு, அநேகம் ஸங்கீத இலக்கண நூல்களின் கருத்துக்களைத்தொகுத்தும், பல வாக்கேயகாரர்களின் கிருதிகளை உதாரணமாகக் காட்டியும், அனுபவம் லக்ஷணம் இவைகளையனுசரித்துத்தம் கருத்தை நன்கு விளக்கியும் கூறியிருக்கிறார்கள்.

இச்சிறந்த நூல் இசையுலகத்திற்கு மிகவும் பயன்படுமென்று நம்புகிறேன்.

திருவனந்தபுரம்,
20-7-1947.

இங்ஙனம்,
செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸ அய்யர்.



GAYAKASIKHAMANI SANGITAKALANIDHI
Dr. L. MUTHIA BHAGAVATHAR

முன்னுரை

ஸங்கீதரத்னாகரம், ஸங்கீதமகரந்தம், ஸங்கீதபாரிஜாதம், ப்ருஹத்தேசி, இராகவிபோதம், ஸங்கீதஸுதா, ஸங்கீதஸமயஸாரம், சதுர்த்தண்டிப் பிரகாசிகை, மேளாதிகாரலக்ஷணம், ஸ்வரமேளகலாநிதி, ஸங்கீததாமோதரம், ஸங்கீததர்ப்பணம், ஸங்கீதஸர்வார்த்த ஸாரஸங்கிரஹம், ஸங்கீதஸாராம்ருதம் முதலிய பற்பல பழைய ஸங்கீதலக்ஷண நூற்களைப் பன்முறை மிகுந்த முயற்சியுடன் ஆராய்ச்சிசெய்து, அவைகளில் ஸாரமாயும், தற்காலஸங்கீதத்திற்கு அனுகூலமாயுமிருக்கின்ற அரியபெரிய விஷயங்களைத் தமிழ்ப்பாஷையில் நன்கு விளக்கியும், அவற்றிற்குச்சக்கரங்களும், சித்திரங்களும், உதாரணங்களும் அமைத்தும், பாலர் முதல் பண்டிதர்வரை யாவர்க்கும் எவ்விஷயமும் எளிதில் விளங்குமாறு பல பிரகரணங்களாக வகுத்துத் தொகுத்துள்ளேன்,

இதில் ஸங்கீதம் உண்டான விதத்தையும், ஸங்கீதத்தின் பெருமை, ஸங்கீதத்தைப் பிரசாரம் செய்தவர்கள், ஸங்கீதலக்ஷணம், அதன் உட்பிரிவு இவைகளையும் முதலில் சேர்த்திருக்கிறேன்.

சரீரத்தின் உற்பத்தி, நாதம் உண்டாகும் தத்வம், நாதத்தின் லக்ஷணம், நாதம்—பிரமம் இவற்றின் ஒற்றுமை, நாதம்—சூரியன் இவைகளின் ஒற்றுமை, நாதத்தின் உட்பிரிவு, நாதத்தின் பெருமை, நாதத்தை உபாஸிப்பதால் ஏற்படும் பயன், நாதோபாஸிகளின் சிறப்பு இவை நாதப்பிரகரணத்தில் கூறப்பட்டுள்ளன.

சுருதியின் லக்ஷணம், அவற்றின் எண்ணிக்கை, அவைகளுக்கு முன்காலத்தில் வழங்கப்பட்ட பெயர்கள், ஸ்வரநியமம், சுருதிகளின் உட்பிரிவுகள், அவைகளின்நியமம், அவற்றில் அபிப்பிராயபேதம், அவற்றிற்கு ஸமாதானம், சுருதிக்கும் காயத்ரீமந்திரத்திற்குமுள்ள ஒற்றுமை, சுத்தவிக்ருதஸ்வரநியம விளக்கம் இவைகளைச் சுருதிப்பிரகரணத்தில் கூறியுள்ளேன்.

நாதம் ஸ்வரமாக மாறும் சூக்ஷ்மம், ஸ்வரஸ்வரூபம், அவைகளின் உட்பிரிவுகள், ஸ்வரங்களின் ஸமானத்தொனிகள், ஸ்வரத்திற்கும் சுருதிக்குமுள்ள வேற்றுமை, அதனைக் கண்டறிவதற்கான கருவி வீணையாகையால் வீணையமைக்கும் விதம், அதன் ப்ரபேதங்கள், காத்திரவீணைக்கும் தாருவீணைக்குமுள்ள ஒற்றுமை, ஸப்தஸ்வரங்கள், அவைகளின் லக்ஷணங்கள், அவற்றின் உட்பிரிவுகள், ஸப்தஸ்வரங்கள் தோன்றின இராசிகள் முதலியவை, ஸ்வரங்களின் மற்றொருபிரிவினை, கமகவிசேஷமான காகு, கிராமம், மூர்ச்சனை, தானம், கண்டமேரு, அதன் ப்ரஸ்தாரம் இவைகளின் லக்ஷணங்கள், உட்பிரிவுகள் இவைகளை ஸ்வரப்பிரகரணத்தில் விளக்கியுள்ளேன்.

ஷட்ஜஸாதாரணம், மத்யமஸாதாரணம், ஜாதி (முன்காலத்தில் வழங்கி வந்த ராகங்கள்) ஸ்தாயி, அதனைக் கையாளும் அடையாளங்கள், கமகம், இவைகளின் லக்ஷணங்களை உட்பிரிவுகளுடன் ஸாதாரணப்பிரகரணத்தில் வரைந்துள்ளேன்.

வர்ணம், அதன் உட்பிரிவு, அலங்காரம், தற்காலம் உலகில் வழங்கப் படும் அலங்காரங்கள், இவைகளின் பலன்கள், இவைகளை லக்ஷணங்களுட னும், உட்பிரிவுகளுடனும் வர்ணலங்காரப்பிரகரணத்தில் நிரூபித்திருக்கிறேன்.

ஸ்வரங்களின் ப்ரஸ்தாரமுறை, உதாரணங்களுடன் ஸ்வரப்ரஸ்தாரப்பிர கரணத்தில் கூறப்பட்டுளது.

ஜாதி (ராகம்) அதன் லக்ஷணம், உட்பிரிவுகள், கபாலம், கம்பளம், கீதி இவைகளின் லக்ஷணங்களை உட்பிரிவுகளுடன் ஜாதிப்பிரகரணத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன்.

த்ருவம் மட்டம் முதலிய ஸூடாதி கீதிகள், ஸ்வரஜதி, வர்ணம், கீர்த்தனம், இராகமாலிகை, பதம், ஜாவளி, தில்லாணா இவைகளின் லக்ஷண லக்ஷ்யங்களை கீதப்பிரகரணத்தில் எழுதியுள்ளேன்.

* பிரபந்தம், டாயம் (தானம்), ஆலாபனம் இவைகளின் லக்ஷண லக்ஷ்யங்களை உட்பிரிவுகளுடன் பிரபந்தப்பிரகரணத்திலும், வாத்தியம், அதன் உட்பிரிவு, அவைகளின் லக்ஷணலக்ஷ்யங்களை வாத்தியப்பிரகரணத்திலும், தாளம், 108 தாளங்கள், அவைகளின் லக்ஷணம், பிரஸ்தாரம் தாளத்தைப் பற்றி முன்னோர்கள் கூறியிருக்கும் பற்பல பேதங்கள் இவைகளைத் தாளப் பிரகரணத்திலும் நன்கு விவரித்துள்ளேன்.

சுமார் 2400-க்கு மேலான இராகங்களுக்குத் தொன்றுதொட்டுப்பிரயோ கத்தில் காணப்படும் ஆரோஹண, அவரோஹண ஸ்வரங்களையும், அவைகளின் விசேஷ ஸஞ்சாரமுறைகளையும், அவற்றில் ஏற்பட்டிருக்கும் பாடபேதங்களை யும் குறிப்புரைகளுடன் அவைகளின் விளக்கத்தையும், இராகங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் காலம், ரஸம், பயன் இவைகளையும், இராகங்களைப் பற்றிய எல்லாவிவரங்களையும் இராகப்பிரகரணத்தில் வரைந்துள்ளேன்.

---

* இதிலிருந்து கூறப்படும் விஷயங்கள் இனி வெளிவரும் இரண்டாம் பாகத்தில் அடங்கியவை.

நர்த்தனம், அது உண்டானவிதம், அதன் அருமை பெருமைகள், நர்த்தனத்தில் பிரயோகிக்கப்படும் ஹஸ்தவிசேஷங்கள், அவைகளின் லக்ஷணங்கள், ஹஸ்தவிசேஷங்களின் உட்கருத்துக்கள் முதலிய பற்பல விஷயங்களை நர்த்தனப் பிரகரணத்தில் விளக்கியுள்ளேன்.

இறுதியில், வாக்கேயகாரர்களின் லக்ஷணங்களையும், பாடகர்களின் குணம், தோஷம், லக்ஷணம் முதலியவற்றையும், ஸங்கீதநூற்களைத் தாமே படித்துணர முயல்வோருக்கு உதவியாமாறு அவைகளிலுள்ள பாரிபாஷிகச் (ஸங்கேதச்) சொற்களுக்கு முறையே அட்டவணையெழுதி அவைகளின் பொருள் களையும், அனுபந்தத்தில் ஏழுஸ்வரப்பிரஸ்தாரங்களையும் சேர்த்திருக்கிறேன்.

இது உருவாவதற்கு என்னுடன் இருந்து உதவிய மீமாம்ஸா சிரோமணி யு. ஆர். ரங்கநாதாசாரிக்கும், நியாயசிரோமணி கெ. எ. கிருஷ்ணமாசாரிக்கும் எனது மனமார்ந்த ஆசீர்வாதத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இது, தற்காலத்தில் ஸங்கீதம்பயின்று பெயர்பெற்ற வித்துவான்களுக்கும், பயிற்சிபெற்றுவரும் மாணவர்களுக்கும் தகுந்தவாறு உபயோகிக்கப்படின், இதில் நான் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகள்யாவும் பயனுடையனவாகு மென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,
காயகசிகாமணி, ஸங்கீதகலாநிதி, டாக்டர்
எல். முத்தய்யா பாகவதர்,
திருவனந்தபுரம்.

பொருள் அடக்கம்

		பக்கம்
1	மங்களாசரணம் ..	i
2	ஆக்கியோன் சிறப்பு ..	iii
3	ஸங்கீத உற்பத்தி ..	1
4	ஸங்கீதத்தின் மஹிமை ..	3
5	ஸங்கீத சாஸ்திரப் பிரசாரகர்கள் ..	7
6	ஸங்கீதத்தின் பிரிவு ..	9
7	ஸங்கீத லக்ஷணம் ..	10
8	உடலின் உற்பத்தி முறை ..	11
9	நாதப்பிரகரணம் ..	28
10	நாதம் என்றால் என்ன? ..	28
11	நாதத்திற்கும் சூரியனுக்குமுள்ள ஒற்றுமை ..	29
12	நாதம் எப்படி உண்டாகிறது? ..	31
13	நாதப்பிரிவினை ..	34
14	ஆஹதநாதப்பிரிவினை ..	35
15	நாதமும் கலையும் ..	36
16	நாதத்தின் பெருமை ..	37
17	நாதத்தின் உட்பிரிவுகள் ..	38
18	ஸ்தான வேற்றுமையால் ஏற்படும் நாதவேற்றுமை ..	39
19	நாதோபாஸனையின் பயன் ..	39
20	நாதோபாஸகளின் சிறப்பு ..	40
21	சுருதிப் பிரகரணம் ..	41
22	ஸ்வரப்பிரகரணம் ..	57
23	ஸப்தஸ்வரங்களின் அங்கந்யாஸகரந்யாஸங்கள் ..	69
24	ஸப்த ஸ்வரங்களின் தியானசுலோகங்கள் ..	70
25	ஸப்தஸ்வரபீஜாக்ஷரஷட்கோணம் ..	71
26	ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் உற்பத்தி ஸ்தானங்கள் ..	73
27	ஸ்வரங்களின் உற்பத்தி ..	75
28	ஸப்தஸ்வரங்களிலிருந்து ஏற்படும் பன்னிரண்டு ஸ்வரங்கள் ..	77
29	ஸாமவேதத்தில் வழங்கப்படும் பன்னிரண்டு ஸ்வரங்கள் ..	78
30	பதினறு ஸ்வர ஸம்யோகங்கள் ..	78
31	த்வாதச (12) ஸ்வரஸ்தானங்கள் ..	79
32	பதினறு ஸ்வரங்கள் ஏற்படக் காரணம் ..	79
33	பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களுக்குக் காரணம் ..	80

		பக்கம்
34	பதினுறுஸ்வரஸம்யோகத்தின் வரிசைக்கிரமத்திற்குக் காரணம் ...	80
35	பதினுறுஸ்வரஸம்யோகங்களின் நாமதேயங்களுக்குக் காரணம் ..	81
36	ஷோடச பதினுறுஸ்வரங்களுக்கு ஆதாரம் ..	81
37	ஸ்வரங்களுளின் மற்றொரு பிரிவினை ..	84
38	வாதி முதலிய ஸ்வரங்களின் நிலைமை ..	87
39	வாதி ஸம்வாதி முதலிய ஸ்வரங்களின் இயல்பு ..	90
40	மேளாதிகாரலக்ஷணத்திற்கூறியபடி சுருதிகளும் அதன் பெயர்களும் வருமாறு ..	91
41	'கனகய்ய கவிசாதுர்யம்' என்னும் தெலுங்குநூலில் இருபத்திநான்கு சுருதிகளைப் பிரஸ்தரிதிருக்கும் முறை ..	92
42	ஸ்வரஸமூஹப் பெயர்கள் ..	93
43	காகுக்கள் ..	94
44	ஸ்வரவிவேகம் ..	96
45	கிராமங்கள் ..	96
46	கிராம விமரிசனம் ..	101
47	மூர்ச்சனைகள் ..	104
48	ஏகவிம்சதி (21) மூர்ச்சனைகளின் விளக்கம் ..	106
49	கிராமமூர்ச்சனைகளின் தேவதைகள் ..	110
50	மூர்ச்சனைகளின் விவரணம் ..	111
51	தானங்கள் ..	117
52	கண்டமேரு ..	122
53	சாதாரணப்பிரகரணம் ..	130
54	ஸ்தாயிகள் ..	132
55	கமகங்கள் ..	133
56	வர்ணலங்காரப் பிரகரணம் ..	138
57	'ஸங்கீத பாரிஜாத'த்தில் கூறப்பட்டுள்ள அலங்காரங்கள்	154
58	'சதுர்த்தண்டிப்ரகாசிகை'-யில் கூறியிருக்கும் அலங்காரங்கள்	169
59	தற்காலம் உலகில் வழங்கப்படும் அலங்காரங்கள் ..	173
60	தாளங்களின் அங்கங்களைக் காட்டும் சக்கரம் ..	174
61	ஸப்ததாள அலங்காரங்கள் ..	175
62	முப்பத்தைந்து (35) தாள அலங்காரங்கள் ..	179
63	அலங்காரங்களைப் பாடுவதால் ஏற்படும் பலன்கள் ..	197
64	ஸ்வரப்பிரஸ்தாரப் பிரகரணம் ..	198
65	பிரஸ்தாரமுறை ..	199
66	ஜாதிப் பிரகரணம் ..	205

		பக்கம்
67	ஜாதிகளின் அவயவங்கள் ..	210
68	'ஷாட்ஜீ' முதலிய ஜாதிகளின் லக்ஷணங்கள் ..	216
69	கபாலங்கள் ..	245
70	கம்பளம் ..	248
71	கீதிகள் ..	249
72	கீதப்பிரகரணம் ..	252
73	கீதங்கள் ..	260
74	லக்ஷணகீதங்கள் ..	295
75	ஸ்வரஜதி ..	309
76	ஜதிஸ்வரம் ..	309
77	வர்ணங்கள் ..	318
78	கீர்த்தனங்கள் ..	338
79	இராகமாலிகை ..	393
80	ஜாவளிகள் ..	420
81	தில்லானை ..	428
82	அனுபந்தம் (ஸ்வரப்ரஸ்தாரங்கள்) ..	1—75

ஸ்ரீ:

மங்க^{3}ளாசரணம்

யோநாத^{3}: ஸர்வபூ^{4}தாநாம் ஸர்வ வர்ணஸ்யசாங்குர:
யோபீ^{3}ஜம் மந்திரகோடீ நாம் தம் நித்யம் பிரணமாமியஹம் (1)

நாதே^{3}ாத்பத்திகரம் தே^{3}வம் நமாமி பிரணவாகிருதிம்
மூலாத^{4}ாரஸ்தி^{2}தம் ஜ்ஞ்ான மோக்ஷஸித்^{3}தி^{4}பிரத^{3}ம் க^{3}ஜம் (2)

நாத^{3}வித்^{3}யாபிரவிணும் தாம் ராக^{3}ப^{4}ாவலயாத்மிகாம்
தேவீம் வாகீ^{3}சுவரீம் வந்தே^{3} வீணுவாத^{3}ன தத்பராம் (3

அஜ்ஞானதிமிரக்^{4}நம்தமாநந்த^{3}ாம்பு^{3}தி^{4}வாஸிநம்
ஸுஜ்ஞானதத்பரம்வந்தே^{3} மத்ஜ்ஞானநய நாம்ஜநம் (4)

ஆதி^{3}ஸ்வரஸ்வபீ^{3}ஜம்தமந்த்யஸ்வரஸுஸேவிதம்
ஆத்^{3}யந்தரஹிதம் வந்தே^{3} ஹ்யம்பி^{3}காதனயம் கு^{3}ஹம் (5)

கிரந்த^{2}காரபரிசய:

ஸ்ரீமச்சிருங்க^{3}கி^{3}ரிஸ்த^{2}ஹூக்^{3}ளிஸுமட^{2}
பிராசுர்யநிர்வாஹகா:
ஸ்ரீஸ்ரீசங்கரபூஜ்யபாத^{3}மஹிதா: ஸ
ச்ச^{2}ாஸ்திரபாரங்கத^{2}ா:
ஹத்வாநாஸ்திகது^{3}ர்மதானிஸுஜநாநத்^{3}வெ-
தமுத்^{3}பே^{3}ாத^{4}கா:
யேfராஜந்தஹித^{3}க்ஷிணுபத^{2}தலே
லிங்க^{3}ார்ய நாம்னு சுருதா: (1)

தேஷாமஷ்டமஸந்ததே:பு^{3}த^{4}வரா
ல்லி^{3}ங்க^{3}ார்ய நாம்னோத்^{3}விஜ்ாத்
பூஜ்யாத் பிராஜ்யகலாவிலாஸிஹ்ருத^{3}யா-
ச^{2}ரீபளர்வகுத்ஸாந்வயாத்
ஸ[illegible]க்^{3}ராமேஹரீகேசநாம்நியமிம்
ஸாffநந்த^{3}வல்லீசுப^{4}ா
பிராஸூத, பிரகிருதி பிரபு^{3}த்^{3}த^{4}தி^{4}ஷணம்
புத்ரம் கலாலாலஸம் (2)

ஸோfஹம் முத்தய்யா நாமா கு3ருபரிசரணெ:
யாஜுஷிம் வேத3சாக2ாம்
ஸம்பூர்ணுமாச்வதீ4த்ய சுருதிலய
ருசிராம் ஸாமவேத3ாவதீர்ணும்
தெ3வீம் க3ாந்த4ர்வ வித்3யாம் கு3ருவர கருணு-
மாத்ர க3ம்யாம் ஸுரம்யாம்
பிராப்ய பிராபம் ஸுகீர்திம் ஹரிகு2ண-
கத2நெச்சாருக3ாநெ: ஸப4ாஸு (3)

விக்2யாதமேநம் ரஸிகாபிநந்த்3யம்
வாக்3கே3யகாரம் ரஸிகாக்ரக3ண்ய:
ஸ்ரீ கிருஷ்ணராஜேந்த்3ர மஹீச்வரோ மாம்
மெஸூர்ஸப4ாஸ்த2ாநபு3த4ம் வ்யதாநீத்- (4)

ஸ்ரீமச்சாமுண்டிகாம்ப3ாசிவபரநுதிபி4:
மத்கிருதாபி4: பிரதுஷ்ட:
ஸக்ஷோணீநாயகோமே பிரதிபத3மதுல-
தி3ரவ்ய பூ4ஷோபசாரான்
ஏவம் க3ாயச்சிக2ாமண்ய பி4த4பி3ருத3மப்யா-
த3ரேணபிரத3ாய
ஸ்ரீமாநத்3யாபிவித்3யாரஸிகபரிவிருதம்
ஸாநுக3ம்மாம் பிரபாதி
பூயோவஞ்சிமஹீச்வரேணஸுதி4யா (5)

சித்ரோத3யே நாத3ராத்
நெஜாஸ்த2ா நஸுதீ4பதே3fதிமஹிதே
ஸம்ஸ்த2ாப்யமாம்ரக்ஷதா
ஸங்கீ3தோத்த4ருதிகளதுகேனநிதராமா-
தி3ச்யமாநோfது4ஞ
குர்வேக3ாயகநாயகோப சிருதயே
ஸங்கீ3த கல்பது3ருமம் (6)

ஸமர்பணம்

தமேனம்நூதனம்கிரந்த2ம் ப3ஹுகிரந்த2 விமர்சஜம்
ஸ்ரீமச்செத்ரக்ஷிதீசாய ஸமர்ப்யாஸமஹம் கிருதீ

அநந்தசயனம்,
10-1-1118.

இதிவித்3வஜ்ஜநவிதே4ய:
க3ாயகசிக2ாமணி: முத்தய்யாப4ாக3வத

ஆக்கியோன்சிறப்பு

(1) ஸ்ரீமத் சிருங்ககிரி மடத்தைச்சேர்ந்த ஹூக்ளி மடமென்னும் ஸ்ரீமத் சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய மடத்தில் ஸர்வாதிகாரிபதவியை வஹித்து, அம்மடத்தைச் சிறப்புற நடத்திவைத்துப் புகழ்பெற்றவரும், ஷை மடத்தில் பீடஸ்தர்களாக விளங்கிய எல்லா சங்கராசாரிய ஸ்வாமிகளாலும் பெரிதும் கௌரவிக்கப்பட்டவரும், தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் முதலிய ஸச்சாஸ்திரங்களில் நன்கு தேர்ச்சிபெற்றவரும், அக்காலத்தில் இத்தென்னிந்தியாவில் எங்கும் பரவியிருந்த நாஸ்திகமதங்களை வேரோடழித்து, உத்தமமாகிய அத்வைதமதத்தை எங்கும் பரவச்செய்தவருமாய் தக்ஷிணதேசத்தில் ''லிங்கய்யர்'' என்ற பெயருடன் யாதொரு மகான் விளங்கினரோ,

(2) அவர்களுடைய 8-வது வம்சபரம்பரை (தலைமுறையில்) உதித்தவரும் ''லிங்கமய்யர்'' என்னும் பெயரால் பிரசித்திபெற்றவரும் பௌர்வகுத்ஸ கோத்திரத்தைச்சேர்ந்தவரும், மஹாவித்வத்சிகாமணியுமான அந்தணச்சிரேஷ்டரிடமிருந்து ஆனந்தவல்லி என்னும் ஓர் பதிவ்ரதாசிரோமணி எந்த ஓர் ஆண்மகவைப்பெற்றனளோ அம்மகன் சுபாவமாகவே பால்யத்திலேயே எல்லாக்கலைகளிலும் ஆர்வமும் அதனைப்பயிற்சி பெற்றோரிடத்தில் அன்பும் பூண்டிருந்தனனோ.

(3) அத்தகைய நான் முத்தய்யா (முத்துசுப்பிரமணியன்) எனப் பெயர்பெற்று எனது இளமைப்பருவத்திலேயே ''பஞ்சநதம்'' என்னும் 'திருவையாறு, க்ஷேத்திரத்தையடைந்து ஸாம்பசிவஸத்குருவை வெகு நாள் பயபக்த்தியுடன் சுச்ரூஷை செய்து எனது சாகையான யஜுர்வேதத்தை முறைப்படி அத்யயனம் செய்து முடித்துக்கொண்டு, பின்னர் ஸாமவேதத்திலிருந்து உண்டானதும், காந்தர்வவேதம் எனப்பெயர் பெற்று விளங்குவதுமான இந்த ஸங்கீதக்கலையையும் ஸத்குருவின் பரிபூர்ணானுக்ரஹத்தினால் அடையப்பெற்றுப்பற்பல பெரிய வித்வத்ஸபைகளிலும், ராஜஸபைகளிலும் ஸ்ரீபரமாத்மாவின் திவ்யகுணாதிசயங்களை இன்னிசையுடன் பக்தஜனங்களுக்கு எடுத்துச்சொல்வதின் மூலம் பரந்த கீர்த்தியையடைந்தேன்.

(4-5) இவ்வாறு புகழ்பெற்ற எனதாற்றலைக்கேள்வியுற்ற மைசூர் மகாராஜரான ஸ்ரீகிருஷ்ணராஜேந்த்ர ஒடையார் பஹதூர் அவர்கள் நான் இயற்றிய ஸ்ரீசாமுண்டேச்வரி அஷ்டோத்தரகீர்த்தனைகள், சிவாஷ்டோத்தர கீர்த்தனைகள் முதலிய பல அழகிய ஸங்கீதகிருதிகளை நான் நேரில் பாடக்கேட்டு என் உண்மையாற்றலையறிந்து எனக்குப்பலவகை ஸன்மானங்களுடன்

''நாயகசிகாமணி'' என்ற விருதும், பொருள், அணி, ஆடைகள், இரத்தினப் பதக்கம், இரத்னதோடா முதலிய பற்பல விலையுயர்ந்த மரியாதைகளும் அளித்து என்னேத்தன் ஆஸ்தான வித்துவானாக அமர்த்தி, இன்றைக்கும் அவர் ஸந்ததி அரசர்களால் நன்கு ஆதரிக்கப்பட்டு வருகின்றேன்.

(6-7) ஸ்ரீபத்மனுபஸ்வாம்மிக்கும் தொண்டுசெய்யவேண்டிய பெரும் பாக்கியம் எனக்கும் சிறிதமைந்திருந்தால், என்னே வஞ்சிநாட்டரசர் பெருமான் ஸ்ரீ சித்திரைத்திருநாள் மகாராஜா அவர்கள் தமது ஆஸ்தானத்திற் கழைத்து, ஸ்ரீஸ்வாதிதிருநாள் மஹாராஜா அவர்கள் இயற்றியுள்ள அழகிய பற்பல ஸங்கீதகிருதிகளையும் இப்பரதபூமி எங்கும் பரவச்செய்யும் பொருட்டும், அவற்றை ஸ்வரதாள அடையாளங்களுடன் புதிய முறையில் அச்சிட்டுப்பிர சுரம் செய்யவும், ஸ்ரீஸ்வாதிதிருநாள் மஹாராஜா அவர்கள் பெயரால் ஒரு ஸங்கீதகலாசாலே ஏற்படுத்தி, அதன்மூலமும் ஸங்கீதக்கலேயையும், ஸ்ரீஸ்வாதிதிருநாள் கிருதிகளையும் நன்கு பரிஷ்கரித்து உலகெங்கும் பரவச்செய்யவும் ஏற்பாடுசெய்து, இவைகட்கு என்னேத் தலேவனாக நியமித்தி ருப்பதுடன், ஸங்கீதசாஸ்திரத்தில் பற்பல வித்துவான்கள் அனேக விஷயங் களில் பல்வேறு லக்ஷணங்களையும் லக்ஷியங்களையும் அமைத்து, அபிப்பிராய பேதங்களுடன் வடமொழி தெலுங்கு முதலிய பல பாஷைகளில் எழுதிவைத் திருப்பதால் அவற்றை தற்காலத்தில் உலகவழக்கத்திலுள்ள ஸங்கீதானு பவத்திற்கேற்ப, ஸமரஸப்படுத்தி, ஆராய்ச்சிமுறையில் ஒரு உயர்ந்த ஸங்கீத லக்ஷண நூல் இயற்றித்தருமாறு கட்டளேயிடப்பட்டவனாக, நான் எல்லாப்பாட கர்களுக்கும் உபயோகப்படுமாறு ''ஸங்கீதகல்பத்ருமம்'' என்னும் இப்பெரும் நூலே பன்னிட்பேராராய்ச்சி செய்து இயற்றி இதனே நம் அரசர்பெருமான் ஸ்ரீசித்திரைத்திருநாள் மஹாராஜா அவர்கள் திவ்ய ஸமக்ஷமத்தில் ஸமர்ப் பித்து நான் கிருதார்த்தனாகின்றேன்.

திருவனந்தபுரம்,
10-1-1118.

இங்ஙனம்,
நூலாசிரியன்.

ஸங்கீத கல்பத்ருமம்

ஸங்கீத உற்பத்தி

சம்கரம் பார்வதீ நத்வா
த்ருஷ்ட்வா சேத³ம் வசோரி³தம்
ஸங்கீ³தசாஸ்த்ரம் ஹே நாத²!
மஹ்யம் வத³ ஸுக²ப்ரத³ம்

முன்னெரு காலத்தில் பார்வதியானவள் பரமேசுவரனே அன்புடன் நோக்கி, வணங்கி ''நாதா! இவ்வுலகத்தில் எல்லா ஜீவராசிகளுக்கும் ஒப்பற்ற இன்பத்தை யளிக்கக்கூடிய ஸங்கீத சாஸ்திரத்தின் நுட்பத்தை எனக்குத் தெளிவாக எடுத்து ரைப்பீர்களாக'' என்று கேட்க, அதற்கிணங்கிப் பரமசிவன் பின்வருமாறு கூறுகிறார்:—

''சுருணு பார்வதி பூர்வம் மே
ஸர்வலோகஸுக²ாய ச
ஸத்³யோ ஜாதமுகா²த் பிருத்²வீ
கான்த⁴ாரச்ச ஸ்வரோரி³வ⁴த்
பிருதி²வ்யாச்சர்மவராத்³யானி
ஜாதானி தத³நந்தரம்
வாமதேவமுகா²த்தா³ப:
தெ⁴வ தச்ச ஸ்வரோரி³வ⁴த்
அத்³ப்⁴யோ ஜாதானி சங்கா²தி³
வாத்³யானி ஸுப⁴க³ானனே
அகே⁴ராராத³்னல: ஷட்ஜ
ருஷப⁴ச்ச தத²ாரி³வ⁴த்
ஜாதானி ஹ்யக³்னிதோ லோகே
காம்ஸ்யவாத்³யானி பார்வதி
ததஸ்தத்புருஷ³ாத்வக்த்ருத்
வாத: பஞ்சம ஏவ ச
தஸ்மாத்வாதாத் ஸமுத்பன்னம்
வேணுவாத்³யம் ரந்த்⁴ரவாத்³யகம்.

ஈசாஞஸ்யாத்நிஷாத³ச்ச
மத்⁴யமச்ச ஸ்வரஸ்தத⁴ா
ஆகோசோரிபி ஸமுத்பன்ன:
தன்த்ரீவாத்³யம் ததோரிப்⁴வத்.

(ஸங்கீத த³ாமோத³ர:)

இவற்றின் பொருள் வருமாறு:—

''ஹேபார்வதி! ஸங்கீததத்துவத்தையுரைக்கின்றேன். கவனமாய்க் கேள். எல்லாவுலகங்களுக்கும் எளிதில் சுகமேற்படுவதற்காக நான் எனது ஐந்து முகங்களிலிருந்து பஞ்சபூதங்களையும், ஸங்கீதசாஸ்திரத்திற்கின்றியமையாத ஸப்த ஸ்வரங்களையும் ஸ்ருஷ்டித்தேன். அவற்றுள்:—'ஸத்யோ ஜாதம்' என்னும் முகத்திலிருந்து பூமியையும், காந்தார ஸ்வரத்தையும் படைத்தேன். அந்தப் பூமியிலிருந்து சர்மவாத்தியங்கள் அதாவது மிருதங்கம் முதலிய தோற் கருவிகள் உண்டாயின. பின்னர் 'வாமதேவம்' என்னும் மற்றொரு முகத்திலிருந்து நான் நீரையும், தைவதஸ்வரத்தையும் உற்பவிக்கச் செய்தேன். நீரிலிருந்து சங்கு முதலிய வாத்தியங்கள் தோன்றின. 'அகோர' மென்னும் எனது மற்றோர் முகத்திலிருந்து நெருப்பையும், ஷட்ஜம், ரிஷபம் என்னுமிரு ஸ்வரங்களையும் தோன்றச் செய்தேன். பிறகு நீயிலிருந்து தாளம் முதலிய காம்ஸ்ய (வெண்கல) வாத்தியங்கள் வெளிப்பட்டன. 'தத்புருஷம்' என்னும் எனது முகம் காற்றையும், பஞ்சம ஸ்வரத்தையும் பிறப்பித்தது. அக்காற்றிலிருந்து குழல் முதலிய ரந்திரவாத்தியங்கள் (துளைக்கருவிகள்) தோன்றின. 'ஈசானம்' என்னும் எனது ஐந்தாவது முகத்திலிருந்து ஆகாயமும், நிஷாதமும் மத்யமமும் வெளிப்பட்டன. அவ்வாகாயத்திலிருந்து வீணை முதலிய தந்த்ரீவாத்தியங்கள் (நரம்புக்கருவிகள்) உண்டாயின. எனவே ஸங்கீதசாஸ்திரத்திற்கு மூலகாரணம் நான் தான் என்றறிந்துகொள்.''

''ஏவம் ஸத்³ாசிவப்ரோக்தம் சாஸ்த்ரம் ஸங்கீதஸம்ஜ்ஞகம்
ப்⁴ரதாத்³யைஸ்து முனிபி⁴: ஸர்வத்ருத² ப்ரசாரிதம்.''

இத்தகைய ஸங்கீத சாஸ்திரத்தை சிவனிடமிருந்து பரதர், மதங்கர் முதலிய முனிவர்கள் உபதேசிக்கப்பெற்று இவ்வுலகமெங்கும் அதனைப்பிரசாரம் செய்தனர்.

ஸங்கீததர்பணமென்னும் நூலில்—

ருக்பி⁴: பாட்²யமபூ⁴த்கீதம் ஸாமப்ய: ஸமபத்³யத
யஜுர்ப்⁴யோரிபி⁴நயா ஜாதா ரஸாச்சாத²ர்வண: ஸ்மிருதா:

ருக்வேதத்திலிருந்து வசனங்கள் காவ்யங்கள் முதலியன உண்டாயின. ஸாமவேதத்திலிருந்து ஸங்கீதம் தோன்றிற்று. யஜுர்வேதமே அபிநயங்களுக்கு வழிகாட்டியாயமைந்தது. அதர்வண வேதத்தால் ரஸங்களின் பெருமை விளக்கமுற்றது என்று கூறப்பட்டிருக்கிறது.

சாரங்கதேவரும் தனது ''ஸங்கீதரத்னகரம்'' என்னும் நூலில்:—

ஸாமவேத³ாதி³த³ம் கீ³தம் ஸுஜக்³ராஹபிதாமஹ:

என்றார். பிரமன் ஸாமவேதத்திலிருந்து ஸங்கீதக்கலையைச் சேகரித்தார் என்று இதன் பொருள்.

இத்தகைய தத்துவங்களையுள்ளடக்கியே ஸ்ரீ நியாகராஜஸ்வாமிகளும் தமது 'நாததநுமநிஷம்' என்ற கீர்த்தனத்திலும் ''ஸ்வரராக ஸுதாரஸ'' என்ற கீர்த்தனத்திலும் ஸங்கீதத்தின் உற்பத்தி நுட்பத்தை விளக்கியுள்ளார்கள்.

இனி ஸங்கீதத்தின் மஹிமையைப்பற்றி ஆராய்வோம்:

ஸங்கீதத்தின் மஹிமை

ஜபகோடி கு³ணம் த்⁴யானம் த்⁴யானகோடி கு³ணோலய:
லயகோடிகு³ணம் க³ானம் க³ானாத்பரதரம் நஹி.

ஒரு தடவை கடவுளை மலமற்ற மனத்தால் தியானம் செய்தல் என்பது அக்கடவுளை ஒரு கோடித்தடவை மந்திரங்களால் ஜபித்து வழிபடுவதற்கொப்பாகும். அத்தகைய ஒரு கோடி தியானங்களைக்காட்டிலும் ஒரு தடவை லயமடைதல் சிறந்ததாகும். அதாவது பரம்பொருளான கடவுளுடன் இரண்டறக்கலப்பதாகும். அத்தகைய ஒருகோடி லயங்களுக்கு ஸமமாக ஒரு தடவை இனிமையாகப் பாடுதல் கருதப்படுகிறது. பாடுவதைக் காட்டிலும் சிறந்ததொரு செயலை யாம் இதுகாறும் எங்கும் கண்டிலேம் எனவே, கானமென்பது ஒப்பற்ற மோக்ஷத்திற்கு உயர்ந்த வழியாகும். இக்கருத்தையே யாக்ஞவல்கிய மஹர்ஷியும் கடைப்பிடித்துள்ளார்.

''வீணாவாத³னதத்வஜ்ஞ: ச்ருதிஜாதி விசாரத³:
தாளஜ்ஞச்சாப்ரயாஸேன மோக்ஷமார்க³ம் ச க³ச்ச²தி.

ஸங்கீதத்தின் பயனை விளக்கும் மற்றொரு பெரியார் மொழி வருமாறு:—

''பரமானந்த விவத்[4]னம் அபிமதப[2]லம் வசீகரணம்
ஸகல ஜன சித்தஹரணம் விமுக்திபீ[3]ஜம் பரம் கி[3]தம்
நாத[3]ப்தே[4]ஸ்து பரம் பாரமஜ்ஞாஞஸரஸ்வதீ
அத்[3]யாபி மஜ்ஜனப[4]யாத் தும்ப[3]ம்வஹதி வக்ஷஸி.''

(ஸம்கீததாமோதர:)

''க[3]ாயன்ஸு[4]த்ருணிரத[2]ாங்க[3]பாணே:
ஜன்மானிகற்மாணிச யானி லோகே
கி[3]தானிநாமானி தத[3]ற்த[2]கானி
கா[3]யன் விலஜ்ஜோ விசரேத[3]ஸந்த[3]:

வேதே[3] ததெ[2]வ ஸம்ப்ரோக்தம் க[3]ாயேதாம் பிராமணைவிதி
க்வணயந்தாவுப[4]ள வீணும் அச்வமேதே[4]fதிஸு[3]ஸ்வரம்.''

வேதவாக்கியங்களால் கூறப்பட்டிருக்கும் ஸங்கீத வித்தையை பிராமணர்கள் எப்பொழுதும் அப்பியாசம் செய்து, யாககாலங்களில் ஸாமகானம் பொழிந்து இம்மைப்பயனும், மறுமைப்பயனுகிய மோக்ஷத்தையும் அடைகின்றனர். அக்னிஹோத்திரம் முதலிய வைதிக காரியங்களைப் போலவே ஸங்கீதமும் வேதாந்தங்களாலும், ஸ்மிருதிகளாலும் கட்டளையிட்டிருப்பதால் அதனைப் பண்டிதர்களும், பாமரர்களும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். பவித்திரமான விஷ்ணு நாமங்களை ஸுஸ்வரத்துடன் பாடினால் அவை ஸாமகானத்திற்குச் சமமானவையென்று அறிஞர் பலர் கூறுகின்றனர். உலகங்களை மோஹிக்கச் செய்யும் சக்திவாய்ந்தவர்களான பிரமன், விஷ்ணு, மஹேச்வரன் என்னும் மும்மூர்த்திகளும் கூட ஸங்கீதானந்தத்தை யனுபவிப்பதில் எப்பொழுதும் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். பிரும்மஸாக்ஷாத்காரம் பெற்று எப்பொழுதும் பிரும்மத்தில் லயித்துக்கொண்டும், இம்மை மறுமைப் பயன்களை வெறுத்தும் விளங்குகின்ற நாரதமுனிவரும், ஸங்கீத இன்பத்தில் ஈடுபட்டவராய் வீணை வாசித்துக்கொண்டு ஸங்கீதத்தில் மூழ்கியிருக்கிறார். அசுரர்களை அழிப்பதற்கென்று உலகில் தோன்றிய துர்க்கா தேவியும் இசைச்சுவையில் இச்சை கொண்டிருக்கிறாள். மதங்கர், கச்யபர் முதலிய முனிவர்களும் ஸங்கீதத்தில் பற்றுதல் உள்ளவர்களாகி ஸங்கீத நூல்களை இயற்றியுள்ளார்கள். கபிச் சிரேட்டரும் ராமபக்தருமாகிய அனுமானும் ஸங்கீதசாஸ்திரத்தை வரைந்துள்ளார். சார்ங்கதேவர், கோஹலர் இவ்விருவரும் ஸங்கீத இலக்கண நூற்களை இயற்றியுள்ளார்கள். கம்பளர், அச்வதரர், வாயுபகவான், ஹாஹா ஹூஹூ முதலிய கந்தர்வர்கள், ராவணன், அரம்பை, பாணாசுரனின் பெண்ணான உஷை, அர்ச்சுனன், சேஷன் இன்னும் பலர் ஸங்கீத நூற்களுக்கு உரைகள் எழுதியிருக்கின்றனர்.

''அஜ்ஞாத விஷயாஸ்வாதே[3]ா ப[3]ால: பர்யங்கிகாக[3]த:
ருத[3]ன் கீதாமிருதம் பீத்வா ஹற்ஷோத்கர்ஷம் ப்ரபத்[3]யதே.''

மேலும் உலகானுபவமின்றி தொட்டிலில் படுக்கை வைக்கப்பட்டு அழுது கொண்டிருக்கும் குழந்தை கூட இனிய ஸங்கீதத்தின் சுவையைக் கேட்டு மகிழ்ந்து மெய்மறந்து உறங்கிவிடுகிறது.

''வனேசரஸ்திருணாஹார: ஸிக்[4]ரம் மிருகசிசு: பசு:
லுப்தே[4]ா லுப்த[4]கஸங்கி[3]தே கி[3]தே த்யஜதி ஜீவிதம்.''

காட்டில் புல்லைத்தின்று உயிர்வாழும் மான்கன்று கூட வேடனுல் தன்னைப் பிடிக்கும் சூட்சிக்காக இயற்றப்படும் இன்னிசையின் சுவைக்கு மயங்கி தன்னையே மறந்து அசைவற்று நின்றுவிடுகிறது. முடிவில் வஞ்சகனை அவ்வேடனுல் பிடிக்கப்பட்டு தனது உயிரையும் இழந்து விடுகிறது எனவே இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த ஸங்கீதத்தின் மஹிமையை யாரால் எடுத்துரைக்க இயலும். சுருங்கச்சொல்லின்

''த[4]ர்மார்த[2] காமமோக்ஷாணும் இத[3]மேவைகஸாத[4]னம்''

என சார்ங்கதேவர் கூறியதற்கிணங்க அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பயனையும் பெறுதற்குச் சிறந்த வழி ஸங்கீதமேயாகுமெனக் கூறுதல் மிகையாகாது.

பகுத்தறிவு இல்லாத பாம்பு கூட பாம்பாட்டியின் மகுடியினின்று எழும் இன்னிசையைச் செவியுற்றுத் தன் படத்தையாட்டிக் கொண்டு அதனை அனுபவிக்கிறதென்றுல் ஸங்கீதத்தின் பெருமையை விவரிக்கவும் வேண்டுமோ!

''நாஹம் வஸாமி வைகுண்டே[2] நயோகி[3]ஹ்ருத[3]யேரவெள
மத்[3]ப[4]க்தாயத்றக[3]ாயந்தி தத்றதிஷ்ட[3]ாமி நாரத[3]''

''ஹே நாரத! நான் ஸங்கீதச்சுவையற்ற வைகுண்டத்திலும் இன்னிசையின் மணமறியா யோகிகளின் இதயத்திலும், வெந்தணல் வீசும் செங்கதிரோனிடத்தும் வசிப்பதில்லை. ஆனுல் என்னுடைய உண்மையான பக்தர்கள் எங்கு என்னை செவிக்கினிய இன்னிசையால் பாடித் துதிக்கின்றனரோ, அவ்விடத்தில் தான் மகிழ்ச்சியுடன் நிலைநிற்கின்றேன்'' என திருமாலின் திருவாக்கு அறியற்பாலது.

இறைவனுடைய மங்களகரமான திருநாமங்களையும், திரு அவதாரங்களையும், திருவிளையாடல்களையும், எவன் ஒருவன் வெட்கத்தை விட்டு பொதுஜனக் கூட்டத்தில் செவிக்கினிய குரலில் பாடி மகிழ்கின்றனனே அவன் இவ்வுலகத் துன்பங்களினின்றும் விடுபட்டு நற்கதியடைகிறன் என யாக்ஞவல்கியர் முதலிய பெரியாருடைய கூற்றைக்காட்டினேம்.

'அசுவமேதமெ'ன்னும் சிறந்த யாகத்திலும் வீணை வாசிப்பதில் கைதேர்ந்த இருவர் ஸுஸ்வரமான நாதத்தை எழுப்பி அதற்கு அமையப் பாடுதல் அந்த யாகத்தின் ஒரு அங்கமென்று வேதம் வற்புறுத்துகிறது.

கலைமகளின் கருணையால் இசைப்பயிற்சி பெற்ற கம்பலர், அச்வதரர் என்னும் இரு நாககுமாரர்களும் இனிய ஸங்கீதத்தை இடைவிடாது கேட்டு மகிழ்வதற்கென்றே சிவனது இரு செவிகளிலும் குண்டலங்களாக (காதணிகளாக) விளங்குகின்றனர் என்னும் கருத்தை

''நாத^{3}வித்^{3}யாம் பரம் லப்^{3}த்^{4}வா ஸரஸ்வத்யா: பிரஸாத^{3}த:
கம்ப^{3}லாச்வதரௌ நாகௌ சம்பே^{4}ா: குண்ட^{3}லதாம் க^{3}தௌ.''

என்னும் சுலோகம் வெளிப்படுத்துகிறது.

கோவில்களிலும், வீடுகளிலும் கடவுளை அர்ச்சனை செய்து வழிபடுங்கால் அத்தெய்வத்தின் நாமாவளியை இன்னிசையுடன் உச்சரித்துப்பாடுவதால் அருகிலிருந்து கேட்கும் மெய்யன்பர்களுக்கும் சிறந்த பக்தியும் புத்துணர்ச்சியும் ஏற்படுகிறது. தெய்வமும் பெருமிதமான மகிழ்ச்சியையடைந்து பக்தனின் கோரிக்கையை நிறைவேற்ற தானாகவே முற்படுகிறது என்னும் திட நம்பிக்கையால்த்தான் எல்லா மதத்தினரும் அவரவரது தேவாலயங்களில் இன்னிசைக்கு இடங்கொடுத்துள்ளனர் போலும்.

ஸங்கீதத்தைப் பயின்ற ஒருவன் அதனுதவியால் பொதுஜனங்களின் பேராதரவையும் பெரும் பொருளையும் என்றுமழியாக் கீர்த்தியையும் பெறுவதால் ஸங்கீதம் இம்மைப்பயனை எளிதில் அளிக்கின்றது என்பது கண்கூடாகும்.

'தஸ்மாத்^{3}காயந்தம் ஸ்த்ரிய: காமயந்தே' என்று வேதத்தில் கூறியிருப்பதற்கிணங்க நன்றாகப்பாடும் புருஷர்களைப் பெண்கள் விரும்புகின்றனர். ஆகவே இன்பம் அளிக்கும் தொழில் ஸங்கீதமென்பது உலகமறிந்ததே. ''ஸ்வரராக^{3}ஸுத^{4}ா'' ''மொக்ஷமுகலத^{3}ா'' முதலிய கீர்த்தனங்களில் ஸ்ரீதியாகராஜ ஸ்வாமி அவர்கள் ஸங்கீதஞானத்தினால் மோக்ஷத்தையும் அடைய முடியும் என்று உறுதி கூறுகிறார்.

கீ^{3}தேனப்றீயதே தே^{3}வ: ஸர்வஜ்ஞ: பார்வதீபதி:
கே^{3}ாபீபதிரனந்தோf பிவம்சத்^{4}வனீவசம் க^{3}த:
ஸாமகீ^{3}திரதோ ப்ரஹ்மா வீணாஸக்தா ஸரஸ்வதீ
கிமன்யே யக்ஷக^{3}ந்த^{4}ற்வதே^{3}வத^{3}ானவமானவா:

எல்லாமறிந்த பார்வதியின் பதியான சிவனும் இன்னிசைக்கு ஈடுபடுகின்றான். ஸங்கீதத்தின் தத்வமும் இன்பமுமறிந்த ஸ்ரீ கண்ணனும் கோபியர்களையும், இடையர்களையும் பசுக்களையும் தனது இனிய குழலிசையினால் மகிழ்வித்து

தானும் ஸங்கீத ரஸத்தையனுபவித்தனன். ஸங்கீதத்தில் மனம் பரிகொடுத்ததினாலல்லவோ பிரமன் எப்பொழுதும் ஸாமகானம் செய்யவண்ணமாக இருக்கிறார். இன்னிசையின் சுவையறிந்த கலைமகள் தனது வீணையை கையிலிருந்து ஏன் அகற்றுவதில்லை! இன்னிசையின் ஏக்கத்தினால் தான். ஆகவே தான் யக்ஷர், கந்தருவர், தேவர், தானவர் முதலாக மனிதர்கள் வரை எல்லோரும் ஸங்கீதப் பேரானந்தத்தால் பெரும் மகிழ்ச்சியுறுகின்றனர்.

ஸங்கீதத்தில் ஓர் அங்கமாகிய நர்த்தனத்தைப் பரமசிவன் செய்யுங்கால் அதற்குதவி செய்வதின் மூலம் பிரமன் தாளம் போட்டுக்கொண்டும், திருமால் மத்தளம் வாசித்தும், ஸரஸ்வதி வீணை வாசித்தும், சூரிய சந்திரர்கள் குழல் ஊதியும், ஸித்தர்களும், அப்ஸரஸ்திரீகளும், கின்னரர்களும் சுருதி மீட்டியும், நந்தி பிருங்கி முதலியவர்கள் மற்ற வாத்தியங்கள் வாசித்தும், நாரதர் இனிமையாகப் பாடியும், அச்சிவனது திருநடனத்தை மிகுந்த ஆவலுடன் அனுபவிக்கின்றார்கள் என்று நாரதரே தமது 'ஸங்கீதமகரந்தம்' என்னும் நூலில்,

''பிரஹ்மா தாளத^{4}ரோ ஹரிச்ச படஹீ
வீணாகரா ப^{4}ாரதீ
வம்சஜ்ஞௌ சசிப^{4}ாஸ்கரௌ ச்ருதித^{4}ரா:
ஸித்^{3}த^{4}ாப்ஸர: கின்னரா:
நந்தீ^{3} ப்^{4}ருங்கிரிடாதி^{3}மற்த^{3}லதரா:
ஸங்கீ^{3}தகோ நாரத^{3}:
சம்பே^{4}ா: நிருத்தகரஸ்ய மங்களதனோ;
நாட்யம் ஸத^{3}ா பாதுந:''

எனக் கூறுதலால் ஸங்கீத விழாவில் தேவதைகளும் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர் என்பது தெளிவாகிறது. எனின் இக்காலத்து மானிடர் ஸங்கீதத்தை ஒரு அருங்கலையென்றறிந்து அதற்குப் பேராதரவு அளித்துப்போற்றி மகிழ்வதில் வியப்பென்னே!

ஸங்கீத சாஸ்திரப் பிரசாரகர்கள்

சென்ற எட்டு அல்லது ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னதாக ஸோமநாதர் என்ற பெரியார் ஸங்கீதப் பிரசாரத்திற்காகப் பெரிதும் தொண்டாற்றி வந்ததாக சார்ங்கதேவரே கூறுகிறார். சார்ங்கதேவரது 'ஸங்கீத ரத்னாகரமெ'னும் நூலுக்கு விரிவுரையிற்றிய கல்லிநாதரும், ஜெயதேவர், வித்யாரண்யர், ஸ்ரீபுரந்தர தாஸர், அகோபிலர், கோவிந்தமகி, வெங்கிடமகி, அச்யுதபூபாலர், ராமாமாத்யர், க்ஷேத்ரக்ஞர், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்

ஸ்ரீச்யாமா சாஸ்திரிகள், ஸ்ரீ ஸ்வாதிதிருநாள் மகாராஜா அவர்களும் மற்ற பெரியோரும் கர்நாடக ஸங்கீதத்தின் பிரசாரத்திற்காகப் பெரிதும் தொண்டாற்றியுள்ளார்கள். இவர்களேயன்றி கர்நாடக ஸங்கீதக்கலையைத் தமிழ் ஸாஹித்தியங்களால் பண்புறச் செய்யும் இராமநாடகக் கீர்த்தனைகள், திருவிளையாடற் கீர்த்தனைகள், பெரிய புராணக் கீர்த்தனைகள், முதலியனவுமுள. இது போன்றே கர்நாடக ஸங்கீதக்கலையின் புதுமலர்ச்சியை கன்னட பாஷைகளிலியற்றப்பட்ட ஸாஹித்தியங்களில் ஜகன்னாததாஸர், கோபாலதாஸர், கனகதாஸர் முதலிய பிற்காலத்து பக்தசிகாமணிகளும், விரிவுரச் செய்தனர். இவ்வாறு முன்னோர்களால் நல்வழியிலாரம்பிக்கப்பட்ட ஸங்கீதக்கலை பிற்காலத்து மகாவித்வான்களால் பெரிதும் சீர்திருத்தமும், புதுமலர்ச்சியும் பெற்று, இன்னும் நாளுக்குநாள் புதிய கவர்ச்சியுடன் விரிவடைந்து விளங்கிவருவதை நாம் கண்கூடாகக்காண்கிறோம்.

கலைகளிற் சிறந்த ஸங்கீதக்கலையை உலகத்தில் பரவச்செய்த பெரியோர்கள் பெயர் வருமாறு:—

ஸதாசிவ: சிவா பி^{3}ரஹ்மா ப^{4}ரத: கச்யபோ முனி:
மதங்கே^{3}ா யாஷ்டிகோது^{3}ற்க^{3}ா சக்தி: சாற்தூ^{3}லகோஹலௌ

விசாகி^{2} லோ த^{3}ன்திலச்ச கம்ப^{3}லோ ரச்வத^{4}ரஸ்தத^{2}ா
வாயுற்விச்வாஸு ரம்ப^{4}ா ரர்ஜுனநாரத^{3}தூம்புரா:

ஆஞ்ஜனேயோ மாத்ருகு^{3}ப்தோ ராவணோ நந்தி^{3}கேச்வர:
ஸ்வாதிற்குணோ பி^{3}ன்துராஜ: க்ஷேத்றராஜச்ச ராஹல:

ருத்^{3}ரடோநான்ய பூ^{4}பாலோ பே^{4}ாஜபூ^{4}வல்லப^{4}ஸ்தத^{2}ா
பரம்ற்தீச ஸோமேசோ ஜக^{3}தே^{3}கமஹீபதி:

வ்யாக்^{2} யாதாரோ ப^{4}ாரதீயே லொல்லடோத்^{3} ப^{4}ட சம்குகா:
ப^{4}ட்டாபி^{4}நவகு^{3}ப்தச்ச ச்றீமத் கீற்தித^{4}ரோரபர :

அன்யேச ப^{3}ஹவ : பூற்வே யேஸங்கீ^{3}த விசாரத^{3}ா :
அக^{3}ாத^{4}பே^{3}ாத^{4} மன்தே^{4}ன தேஷாம் மத^{3}பயோநிதி^{4}ம்.
நிர்மத்^{2}யஸ்ரீகாற்க^{3} தே^{3}வ: ஸாரோத்த^{4}ாரமிமம் வ்யத^{4}ாத்.

(ஸங்கீத ரத்னாகர:)

ஸங்கீதத்தின் பிரிவு

சிவனுடைய பஞ்ச முகங்களிலிருந்து உண்டானதும், பார்வதி, பிரமன் முதலிய தேவர்களாலும், மதங்கர், கச்யபர் முதலிய முனிவர்களாலும் பிரசாரம் செய்யப்பட்ட ஸங்கீதமானது லௌகிகமென்றும், வைதிகமென்றும் இருவகைப்படும். அவற்றுள் 'வைதிகஸங்கீதமெ'ன்பது யாககாலங்களில் ஸாமகானம் செய்வது. இதுவே மோக்ஷத்தைக் கொடுப்பதாகும். 'லௌகிக ஸங்கீதம்' என்பது ஜனங்களுக்கு மாத்திரம் மகிழ்ச்சியை யளிக்கவல்லது. வைதிகஸங்கீதம் 'மார்கம்' (மார்க்கீ) என்றும், 'லௌகிகஸங்கீதம்' 'தேசீ' என்றும் வழங்கப்பட்டுவருகிறது. இக்கருத்தை 'ஸங்கீத தாமோதரம்' என்னும் நூலிலுள்ள பின்வரும் சுலோகங்களால் அறியலாம்:—

வைதி^{3}கம் யாக^{3}கார்யேஷு பிரயோக^{3}ாத் மோக்ஷத^{3}ாயகம்
லளகிகம்ரக்தீ மாத^{4}ானாத் கேவலம் லோகரம்ஜகம்
வைதி^{3}கம் யத்தி^{4}ஸங்கீ^{3}தம் தன்மார்க^{3}மிதிகத்^{2}யதே
லளகிகம் கீ^{3}தமாத்^{2}யாதம் தே^{3}சீதிபு^{4} விக^{3}ாயகை:
மார்கே^{3}ா தே^{3}சீதி தத்^{3}த்^{3}வேத^{4}ா தத்றமார்க^{3}ஸ்ஸ உச்யதே
யோமார்கி^{3}தோ விரிம்சாத்^{3}யை: ப்றயுக்தோப^{4}ரதாதி^{3}பி^{4} ∴

(ஒரு சிலர் பிரமன் முதலிய தேவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதும் பரதர் முதலிய முனிவர்களால் பிரயோகத்தில் கொண்டுவரப்பட்டதுமான 'ஸங்கீதம்' 'மார்க்கம்' எனப்படும் என்றும்,

தே^{3}வஸ்யபுரத: சம்பே^{4}ா: நியதாப்^{4}யுதயப்றத^{3}ம்
தே^{3}சேதே^{3}சே ஜனானாம்யத் ருச்யாஹ்ருத^{3}யரம்ஜகம்
க்^{3}ானம்சவாத^{3}னம் நிருத்யம் தத்^{3}தேசீத்யபி^{4} தீ^{4}ய்தே.

பரமசிவனது முன்னிலையில் வெளிப்பட்டதும், பற்பல தேசங்களில் மாந்தர் மனதைக்கவரும் வண்ணம் கைதேர்ந்த வித்துவான்களால் பிரயோகிக்கப்பட்டதுமான ஸங்கீதம் 'தேசீ' எனப்படும், என்றும் கூறுவர்.)

'மார்கம்' என்னும் ஸங்கீதத்தை பிரமன் முதன்முதலில் பரதமுனிவருக்கு உபதேசித்தருளினார். பின்னர் பரதமஹாமுனிவரிடமிருந்து அப்ஸரஸ்த்ரீகளும் கந்தருவர்களும் அந்த ஸங்கீதத்தைப் பயின்று சிவன் முன்னிலையில் பாடி மகிழ்ந்தனர். பின்னர், சிவனிடமிருந்து 'தாண்டவம்' என்னும் நர்த்தனத்தையும், பார்வதியிடமிருந்து 'லாஸ்யம்' என்னும் நர்த்தனத்தையும் நன்கு கற்றறிந்து பரதமுனிவர் தமது சீடர்களுக்கு உபதேசித்தருளினார். அந்த

ஸங்கீதம் பற்பல தேசங்களிலும் பரவி 'தேசீ' என்னும் பெயரால் உலக வழக்கத்தில் கையாளப்பட்டு வருகிறது. இதற்கு ஆதாரமாக,

மார்க^{3}தே^{3}சீயபே^{4}தே^{3}ன த்^{3}வேத^{4}ா ஸங்கீ^{3}த முச்யதே
வேத^{4}ா: மார்க^{3}ாக்^{2}யஸங்கீ^{3}தம் ப^{4}ரதாயாப்^{3}ரவீத் ஸ்வயம்
பிரஹ்மணோரீத்ய ப^{4}ரத: ஸங்கீதம் மார்க^{3} ஸம்ஜ்ஞிதம்
அப்ஸரோபி^{4}ச்ச க^{3}ன்த^{4}ர்வை: சம்பே^{4}ாரக்ரே ப்ரயுக்தவான்
ததோரிபி தாண்டவம் ஜ்ஞாத்வா லாஸ்யம் ஜ்ஞாத்வோமயோகி^{3}நம்
தத்ஸர்வம் சிஷ்யஸம்கே^{4}ப்^{4}ய: ப்ரேக்தவான் ப^{4}ரதோமுனி:
தத்^{3}தே^{3}சீயமிதி ப்ரூஹு: ஸங்கீதம் தேசபே^{4}த^{3}த:
தத்^{3}த்^{3}வயம் ஸுஸ்வரை: ஸ்த^{2}ானை: உபேதம் ஸுக^{2}ஸாத^{4}னம்.

என்னும் ஸங்கீதபாரிஜாதத்திலுள்ள சுலோகங்களைக் காணலாம்.

ஸங்கீத லக்ஷணம்

'கீ^{3}தம் வாத்^{3}யம் தத^{2}ா நிருத்தம் த்றயம் ஸங்கீதமுச்யதே.

என்று சார்ங்கதேவர் கூறியிருத்தலால் கானமும், வாத்தியமும், நிருத்தமும் இம்மூன்றும் சேர்ந்தது 'ஸங்கீதம்' எனப்படும்.

இவற்றுள்:—

''நிருத்தம் வாத்யாநுக^{3}ம் ப்ரேக்தம் வாத்^{3}யம் கீ^{3}தாநுவிருத்திச
அதோ கீ^{3}தம் பிரத^{4}ானத்வாத் அத்ருத^{3}ாவ பி^{4}தீ^{4}யதே.

என்றபடி நர்த்தனம் வாத்தியத்தையும்,, வாத்தியம் கீதத்தையும் அதாவது வாய்ப் பாட்டையும் பின்பற்றுவதால் இம்மூன்றும் சேர்ந்துவிடின் மிகவும் மன மகிழ்ச்சியை யளிக்கவல்லது என்பதற்கு ஐயமில்லை.

இத்தகைய ஸங்கீதம் ஸங்கீதக்கலையில் நன்கு பயிற்சி பெற்ற வித்துவான் களால் கையாளப்படும்பொழுதுதான் ரஸிகர்களுக்கு மன மகிழ்ச்சியும் ஸங்கீதக் கலைக்கே புதுமலர்ச்சியும் ஏற்பட முடியும். இதற்கு மாறுக இக்கலையை ஐயமறக் கற்ற குருவினிடமிருந்து முறைப்படி பயிற்சி பெறுத ஒரு சிற்றறிவினன் பாடினால் ரஸிகர்களும், பெரும் மகிழ்ச்சியடைவதற்கில்லை. இக்கலையும் அபிவிருத்தியடை வதில்லை. எனவே ஸங்கீதத்தின் விரிவும் பெருமையும் அதனைக் கையாளும் காயகர்களுடைய வன்மையைப் பொருத்ததாகும்.

உடலின் உற்பத்தி முறை

'கீ^{3}தம் நாத^{3}ாத்மகம், வாத்^{3}யம்
நாத^{3}வ்யக்த்யா பிரசஸ்யதே.
தத்^{3}த்^{3}வயாநுக^{3}தம் நிருத்தம்
நாத^{3}ாதீ^{4}னமதோ ஜக^{2}த்.

நாதே^{3}னவ்யஞ்யதே வர்ண:
பத^{3}ம் வர்ணத், பத^{3}ாத்^{3}வச:.
வசஸோ வ்யவஹாரோரீயம்,
நாத^{3}ாதீ^{4}னமதோ ஜக^{3}த்.

ஆஹதோநாஹதச்சேதி
த்^{3}வித^{4}ா நாதெ^{3}ா நிக^{3}த்^{3}யதே.
லோகீயம் பிரகாசதே பிண்டே^{3}
தஸ்மாத் பிண்டே^{3}ாபி^{4}தீ^{4}யதே.

(ஸ. ரத்னாகரம்)

''கீ^{3}தம் வாத்^{3}யம் ச நிருத்தம் ச த்றயம் ஸங்கீ^{3}தமுச்யதே''

என்றபடி கீதமும் வாத்யமும் நிருத்தமுமாகிய இம்மூன்றும் சேர்ந்ததே ஸங்கீத மென்று முன்னர் கூறினேம். இம்மூன்றில் கீதம் நாதமயமாகும். அதாவது நாதமின்றி கீதமுண்டாகாது. இந்நாதம் நன்கு புலப்படுதலை வாத்தியங்களில் தெளிவாகக் காண்கிறோம். நிருத்தம் கீதத்தையும் வாத்தியத்தையும் பின்பற்றியே வழங்கப்படுகிறது. ஆகவே ஸங்கீதமே நாதத்தை யடிப்படையாகக் கொண்டு தோன்றும் கலையாகும்.

நாதத்திலிருந்து தான் அகாரம் முதலிய அக்ஷரங்கள் தோன்றுகின்றன. அக்ஷரங்களிலிருந்து சொற்களும், சொற்களிலிருந்து வாக்கியங்களும், வாக்கியங் களின் வழியே உலகப்பேச்சு என்னும் வியவஹாரமும் உண்டாவதால் உலகம் முழுவதுமே நாதத்திற்கு அதீனமாகவுளது எனில் மிகையாகாது.

ஆஹதம் என்றும் அனாஹதம் என்றும் இருவகையாகப் பிரித்துக் கூறப்படும் நாதம் முதன் முயற்சியினாலேயே சரீரத்தில் தான் உண்டாகிறது. ஆகவே நாதத்தை உற்பவிக்கச் செய்யவும், அதனை செவிக்கினியதாமாறு பண்படுத்தி பல்வேறு சுருதிகளிலமையப் பொருத்தி வெளியிடவும், சரீரத்தில் பற்பல உறுப்பு களின் இயற்கையமைப்பே காரணமாக இருக்கிறது. எனவே, நம் சரீரத்தில் எந்தெந்த நாடிகள், நரம்புகள், சக்கரங்கள், இணைப்புகள் முதலிய உறுப்புக்கள் நாதத்தின் பிறப்பிற்கும், வெளியீட்டுக்கும் காரணமாகவமைந்திருக்கின்றனவோ

அவைகளைப் பற்றி நாம் நன்கு அறிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். ஆகவே நம் மானுட உடலின் பிறப்பு முறையையும், இதிலுள்ள அவயவங்களின் அமைப்பு முறையையும், ''ஸங்கீத ரத்னாகரத்தில்'' ஸ்ரீ சார்ங்கதேவர் விவரித்திருப்பதைத் தழுவிச் சிறிது கூறுகிறோம்:—

மனிதர் முதலிய பிராணிகளுக்கு ஏற்படும் சரீரம் அந்தந்த ஜீவன்கள் முன் செய்த வினைப்பயனாக ஏற்படுகின்றது. அந்த ஜீவன் தான் பரப்பிரமத்தின் அம்சமாயிருப்பதையறியாமல் இவ்வுலகில் உடம்புடன் கூடி வாழ்ந்துவருகிறான். நானே பரப்பிரமம் என்ற தத்வக்ஞானத்தை யடைந்ததும், அந்த ஜீவன் தனது அம்சமான பரப்பிரமத்துடன் இரண்டறக்கலப்பது என்னும் மோக்ஷத்தையடைகிறான். எனவே ஸத், சித், ஆனந்தரூபியான பிரமத்தின் அம்சமாகவே ஜீவன் உலகத்திலும் பிறவி யெடுத்தலால் கானரஸாமிருதம் பருகும் ஞானமும், அனுபவிக்கும் ஆனந்தமும், அவனது ஸ்வரூபமாகவே எப்போதும் அமைந்திருப்பதாகும் என்று அறியற்பாலது.

இனி பரப்பிரமம் எத்தகைய குணமுடையதெனச் சிறிது ஆராய்வோம்:— க்ஞான, ஆனந்தமே வடிவாகவுள்ளதும், பிறபொருளின் உதவியின்றி ஸ்வயம் பிரகாசமாக விளங்குவதும், பாப, புண்ணியங்களின் பற்று அற்றதும், பிறருக்கு அடிமைப்படாததும், ஒப்புயர்வற்றதும், பிறவி முதலிய பிணிகள் அற்றதும், எங்கும் நிறைந்து நிற்பதும், பிறத்தல், இருத்தல், வளருதல், குறைதல், வேற்றுமையடைதல், அழிதல் என்னும் ஆறுவித விகாரங்களை (ஷட்பாவ விகாரங்களை) யடையாததும், ஒரு குறிப்பிட்ட வடிவமற்றதும், எல்லாவுலகிற்கும் ஆதிகாரணமாக விளங்குவதும், விருப்பம், அறிவு, செயல் இவைகளில் ஸம்பூர்ண சக்தி வாய்ந்ததும், எக்காலத்திலுமுள்ளவற்றை எளிதில் அறிந்திருப்பதுமான ஒரு தைவீகப் பொருளே பிரமம் என்று வேதாந்திகளால் குறிப்பிடப்படுகிறது. இதன் அம்சங்களாகவே ஜீவன்கள் கருதப்படுகின்றன. இவை அவித்யையாகிற உபாதியுடன் கூடியிருத்தலால் ஜீவன்கள் என்று வேறு பெயர் பெற்று தம் தம் முன்வினைப்பயனால் இக்கர்மபூமியில் பிறவி பெற்று சுகம், துக்கம் முதலியவைகளை யனுபவிப்பதற்காக மானுடம், பசு, பக்ஷி முதலிய சரீரங்களை யடைகின்றன.

நமது கண்ணுக்கு ஸ்தூலமாகத் (பருமனாக்) தெரியும் இச்சரீரத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டதாயும், அதிஸூக்ஷ்மமாயும் வேறொரு லிங்கசரீரம் ஜீவனுக்கு இருப்பதாகவும், இது கைக்கட்டை விரலளவுள்ளது என்று அம்கு²ஷ்ட மாத்ர: புருஷ:' என்ற வேதவாக்கியத்தினால் கூறப்படுவதாகவும், தனது அவித்யா வாஸனை முடிந்தவுடன் இந்த லிங்கசரீரமே பரப்பிரம ஸாக்ஷாத்காரமென்னும் மோக்ஷத்தையடையவல்லதென்றும், இது என்றும் அழிவின்றியிருக்கும் தன்மையதென்றும் வேதாந்திகள் கூறுவர்.

இத்தகைய லிங்கசரீரமே பூமி முதலிய ஐந்து பூதங்கள், கண் முதலிய ஐம்புலன்கள், பிராணன் முதலிய ஐந்து வாயுக்கள், உட்புலனான மனம் இவைகளுடன் சேர்ந்து ஸ்தூலசரீரமாக உலகில் கட்புலனாகிதம் நல்வினை தீவினைகளின் பயனான சுக, துக்கங்களை யனுபவிக்கிறது.

இதற்காகவே பரப்பிரமத்தினால் இவ்வுலகம் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது. பின்னர் ஜீவன்கள் களைப்பாறுவதற்காக ரக்ஷணத்தை (காப்பாற்றலை)யும், ஜீவப்பிரம ஐக்கியத்திற்காக, ஸம்ஹாரத்தை (அழித்தலை) யும், அந்த பிரமம் தானே செய்கிறது. இந்த ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமென்னும் முத்தொழில் பிரமத்திற்கு என்றும் அனாதியாக நடந்து வருவதாகும். ''ந கத³ாசித³ நீத்³ருசம் ஜக³த்'' என்பரறிஞர்.

இந்த ஜீவன்களை யாக்கலும், அளித்தலும், அழித்தலுமாகிய விகாரங்கட்கு உட்படுத்தி மகிழ்ந்திடினும், பரப்பிரமத்திற்கு இவைகளில் யாதொரு கட்டுப்பாடுமில்லை. அது மாத்திரம் இந்த பந்தங்களுக்கு உட்படாமல் தனித்து நீங்கி நிஷ்களங்க நிர்விகாரமாக இருந்து விளையாடிவருகிறது. இக்கருத்தையுள்ளடக்கியே

''உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
வலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே''

என்றார் கம்பரும்.

உலகில் தங்கம் எப்படி ஒரு கட்டியிலிருந்து தங்கமாக முதலில் வெளிப்பட்டுத் தேவைக்குத் தகுந்தவாறு குண்டலம், வளை, மோதிரம் முதலிய பல்வேறு வடிவங்களையும் பெயர்களையுமடையினும், பின்னர் உருக்கி அதே தங்கத்துடன் சேர்க்கும்போது ஒன்றுபட்டு விடுகிறதோ அதே போன்று ஜீவன்கள் தம் அவித்யை நீங்கினதும், பிரமத்துடன் இரண்டறக்கலந்து விடுகிறார்கள். எனினும் தங்கம் வளை, மோதிரம் முதலிய வடிவம் தரித்திருந்த காலத்தில் அம்சியான தங்கத்தின் பளபளப்பு முதலிய குணங்கள் அம்சமான அவைகளிலும் இருப்பதுபோலவே, பரப்பிரமத்திலுள்ள ஞானம், இச்சை, முயற்சி முதலிய குணங்களும் ஜீவனிலிருப்பதால்த்தான் அவன் நல்ல ஸங்கீதம் முதலிய கலைகளையறிய விரும்புகிறான், அறிந்து மகிழ்கிறான், தானும் அதைப்பயின்று இன்புறுகிறான் எனவே பரப்பிரமத்தின் குணங்கள் எல்லாம் ஜீவனில் இருக்குமென்பதையே விரித்துக் கூறினோம். இதுவே வேதாந்தத்தின் ஸாரமாகும்.

இனி ஸ்ருஷ்டியின் முறையை ஆராய்வோம்:—

''ஆத்மன: பூற்வமாகாச: ததோ வாயுஸ்ததோ f னல:
அனலாஜ்ஜலமேதஸ்மாத் பிருதி²வீ ஸமஜாயத
மஹாபூ⁴தான்யமூன்யேஷா விராஜோபி²ரஹமணஸ்தனு:

என்று ஸ்ரீ சார்ங்கதேவர் கூறியிருப்பதை யனுஸரித்து முதலில் ஆகாயமும், அதிலிருந்து காற்றும், காற்றிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து ஜலமும், அதிலிருந்து பூமியுமுண்டாயிற்று. இவ்வைந்துமே பஞ்சபூதங்கள் என்று கூறப்படுகின்றன. விராட்ஸ்வரூபனான பிரமத்திற்கு இப்பஞ்ச பூதங்களே சரீரமாகும்.

விராட் ஸ்வரூபமுள்ள பிரமத்தினுல், நான்முகப் பிரமன் முதலில் படைக்கப்பட்டான். அப்பிரமன் பரப்பிரமத்தினிடமிருந்து இருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் உபதேசிக்கப் பெற்று முன்கல்பங்களின் வரலாறுகளையதன் மூலமாக அறிந்துகொண்டு, அதன் முறைப்படி பௌதிக சரீரங்களைப் படைக்குமாறு பரப்பிரமத்தினுல் கட்டளையிடப்பட்டவனுய் பிரஜாபதி தேவர்களை நினைத்தவுடனேயே பிறக்கச் செய்தான். அவர்களிடமிருந்து பின் வரும் ரேதஸ்ஸம்பந்தமான உற்பத்தியுண்டாயிற்று.

இந்த உற்பத்தியானது பொதுவாக:—

(1) ஸ்வேதஜம் (வியர்வையிலிருந்து உண்டானவை)
(2) உத்பேதஜம் (பூமியைப் பிளந்துகொண்டு பிறப்பன)
(3) அண்டஜம் (முட்டையிலிருந்து பிறப்பன)
(4) ஜராயுஜம் (கருப்பையிலிருந்து பிறப்பன)

என நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இவைகள் முறையே (1) பேன் முதலியன (2) கொடி, செடி, மரங்கள் முதலியன (3) பறவைகள், பாம்புகள் முதலியன (4) மனிதர்களும், விலங்குகளும், என்றறியலாம்.

இந்த நான்குவித உற்பத்தியிலும் பேன் முதலியவைகள் மிக ஸூக்ஷ்மமாயும், பருத்தறிவற்று மிருப்பதாலும், கொடி, செடி முதலியவைகள் எவ்வித அறிவுமின்றியிருத்தலாலும், பறவைகளுக்கு நாதோத்பத்திக்குரிய நரம்புகளும், நாடிகளும் ஏற்றவாறு மிகுதியாக இல்லாமையாலும், பசு முதலிய மிருகங்களுக்கு அக்ஷர உச்சாரணம் செய்யப் போதிய உறுப்புகளும் வன்மையுமில்லாததாலும் எஞ்சி நின்ற மானிட சரீரம் ஒன்று தான் நாதோத்பத்திக்கு ஏற்ற உறுப்புக்கள் வாய்ந்ததாக அமைக்கப்பெற்றிருக்கிறது. ஆகவே மானுட சரீரத்தின் உற்பத்தியையே முக்கியமாகக் கொண்டு இங்கு அதனைச் சுருக்கி விளக்குகின்றேம்:—

முற்கூறிய குணங்களோடு கூடிய ஜீவன் முதன்முதலில் ஆகாயத்தில் இருக்கிறன். அங்கிருக்கும்போது ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் வாயுவிலும், அதிலிருந்து புகைக் கூட்டங்களிலும், மேகமண்டலங்களிலும் பிரவேசித்துக் கடைசியில் மேகத்துடன் ஒன்றுபட்டு லயித்திருக்கும்போது, பூமியில் அந்தணர் முதலியோரிடம் வேள்வியினுருதிகளைப் புஜித்து மகிழ்ச்சியுற்ற சூரியன் தனது வெப்பக் கிரணங்களால் பூமியிலிருந்து ஸாரமான ஜலத்தைக் கிரஹித்து, ஆவியாக்கி, அம்மேகங்களுடன் அதைக் கலக்கச் செய்கிறன். மேகம், மழை பொழியுங்கால் அத்துடன் கூட இருக்கும் ஆவி ரூபமான ஜீவனும் ஜலரூபமாக மாறி பூமியையடைந்து செடிகள், பயிர்கள், மரங்கள் முதலியனவாக உருவடைந்து வருகிறன். அந்த ஓஷதிகளிலிருந்து உண்டாகும் அன்னம், கனி முதலியவற்றை மனிதன் புஜிக்கிறன். அதன் ஸாரம் இவனது ரத்தத்தில் கலந்து வீரியமாக மாறுகிறது. இது ஸ்திரீயின் சுத்தமான சோணிதத்துடன் சேரும்போது கருக்குழியில் கருப்பமாக உண்டாகிறது.

சுக்லமானது கருப்பையை யடைந்தவுடனேயே கருப்பம் உண்டாகிவிடுவதில்லை. ஆனுல் அந்தந்த ஜீவன்களின் பிராரப்த கருமங்களின் பயனை யனுசரித்தே உண்டாகிறது. அதாவது எந்த ஜீவன் எந்த தேகத்தின் கருப்பையில் எத்துணை காலம் வசிக்கவேண்டுமென பிராரப்தகருமம் இருக்கிறதோ அதையனுசரித்தே கருப்பம் தரிக்கிறது.

இனி கருப்பையையடைந்த சுக்ல சோணிதங்களின் சேர்க்கை ஒவ்வொரு மாதத்திலுமடைந்து வரும் நிலைமை மாறுதல்களையாராய்வோம்:—

முதல் மாதத்தில், கலலம் என்று பெயருள்ள திரவமாய் (ஜலமாய்) இருக்கும் நிலைமையில் தான் அது இருக்கும். இரண்டாவது மாதத்தில், சிறிது கெட்டியாகி இலவம் மொட்டுப் போன்ற வடிவத்தையடைந்து அது வளர ஆரம்பிக்கிறது. மூன்றுவது மாதத்தில், கட்டியான அப்பிண்டத்திலிருந்து இருகைகள், இருக்கால்கள், தலை இவைகளுண்டாவதற்கான ஐந்து முளைகள் உண்டாகின்றன. இவை தாய், தந்தை இவர்களின் அவஸ்தைகளைப் பின்பற்றி முறையே ஏற்படுகின்றன.

தலையின் முளையில் கழுத்து, கண்கள், மூக்கு, காதுகள் முதலிய பாகங்களும், கைகளின் முளைகளில் தோள்கள், முழங்கை, மணிக்கட்டு, விரல்கள் இவையின் பாகங்களும், கால்களின் முளைகளில் துடைகள், முழங்கால், கணுக்கால், பாதக்குறடு, விரல்கள் இவைகளும் ஸூக்ஷ்மமாக உண்டாகின்றன.

பிறந்த பின் ஏற்படுகிற மீசை, பற்கள் இவைகளைத் தவிர முளையில் அவஸ்தையிலேயே உண்டாகிறவைகளும், ஸூக்ஷ்மமானவைகளுமான அவயவங்கள், அதன் உட்பிரிவுகள் இவைகளின் உற்பத்தி பிரகிருதி எனப்படும்.

பிறந்த பின் ஏற்படுகிற மீசை, பற்கள் இவைகளில் சில உண்டாவதில்லை. சில இடங்கள் மாறியமைந்திருக்கும். விரல்களின் குறைதல், அதிகம் இவைகள் 'விக்ருதி' எனப்படும்.

நான்காவது மாதத்தில் அவயவங்கள், அதன் உட்பிரிவுகள் இவை தனித்தனியாக உண்டாகின்றன. ஆண் குழந்தையாயிருப்பின், அந்த கருப்பம் சௌரியம் முதலிய குணங்களோடு கூடியதாகவும், பெண் குழந்தையாயிருப்பின் பயம் முதலிய குணங்களுள்ளதாகவும், அலியாயிருப்பின் அவ்விரண்டின் குணங்களுமுள்ளதாயும், அவைகள் வெளிப்படையாகத் தோன்றுவனவாயும் ஏற்படுகின்றது.

தாயினிடமிருந்து உண்டான கருப்பத்தின் இருதயம், தாயின் இருதயம் இவ்விரண்டும் இசை, ரஸம் முதலிய விஷயங்களை விரும்புகிறபடியால் கருப்பத்தின் முதிர்ச்சியை விரும்புவோன் கருப்பிணிக்கு இஷ்டமான வஸ்துக்களை அவசியம் தேடிக் கொடுக்க வேண்டும்.

கருப்பிணியானவள், கருப்பத்தின் இருதயமும் தன் இருதயமுமாகிய இவ்வி ரண்டையு முடையவளாக இருப்பதால் அவள் 'தௌஹ்ருதிநீ' என்று கூறப்படு கிறுள். கருப்பிணியின் எண்ணங்களோ நிறைவேற்றுவிடில், அவளுடைய ஆறுத லடையா விருப்பமனுசரித்து, அதற்குத் தகுந்த புத்திரர் பிறக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தாய்க்கு எந்தப் பொருளில் ஆவல் இருக்கிறதோ, புத்திரனும் அப்பொரு ளிலேயே விருப்பமுள்ளவனாக பிறக்கிறுன். கருப்பிணிக்கு இராஜதரிசனத்தில் விருப்பமிருப்பின் தனம், தான்யம் இவைகளோ நன்கு அனுபவிப்பதும், சுகமுள்ள துமான கருப்பம் உண்டாகிறது. அலங்காரங்களில் விருப்பமிருப்பின் அலங் காரமுள்ள புத்திரனுகவும் முனிவரின் ஆசிரமத்தில் வசிக்கவேண்டுமென்று விருப்பமிருப்பின் தர்மிஷ்டனுகவும், தேவதைகளைக் காண்பதில் ஆவலிருப்பின் பக்தியுள்ளவனுகவும், ஸர்ப்பத்தைப் பார்ப்பதில் ஆசையிருப்பின் துன்பம் விளைவிப்பவனுகவும், உடும்பு மாமிசத்தில் விருப்பமிருப்பின் நித்திரையுள்ளவனு கவும், பசுமாமிசத்தைத் தின்பதில் விருப்பமிருப்பின் பலமுள்ளவனுகவும், எருமை மாமிச போஜனத்தில் ஆசையிருப்பின் சூரனுகவும், சிவந்த கண்கள் உள்ளவனுகவும், அதிகமான உரோமமுள்ளவனுகவும் புத்திரன் ஜனிக்கிறுன்.

ஐந்தாவது மாதத்தில் அடங்கியிருந்த மனம் நன்கு வெளிப்படையாக உண்டாகிறது. மேலும் மாமிசம், ரத்தம் இவைகளினுல் கொஞ்சம் புஷ்டியு முண்டாகிறது.

ஆருவது மாதத்தில் சூக்ஷ்மமான நாடிகள், எலும்புகள், நகங்கள், தலே மயிர், தேகத்தில் சிறிய ரோமங்கள் இவை உண்டாகின்றன. இவை வெளிப்ப டையாகவும் தெரியும். நிறம், பலம் இவைகளும் இம்மாதத்திலேயே தோன்று கின்றன.

ஏழாவது மாதத்தில் அவயவங்கள் யாவும் நிரம்புகின்றன. கருப்பத்தில் இருக்கும் குழவி தன் இரு துடைகளால் மறைக்கப்பட்ட இரு கைகளினுல் இரு காதுகளையும் மறைத்துக் கொண்டு கீழ்நோக்கி சுருங்கின சரீரத்தையுடையதா யும், கருப்ப வாஸத்தில் வெறுப்பு உள்ளதாயும் இருக்கிறது.

மேலும் கருப்பாசயத்தில் இருந்துகொண்டு முன் ஜன்மங்களில் தான் அனுபவித்த பலவித வேதனைகளை நினைத்து நினைத்து வருந்தியும், இனி மோக்ஷத் தையடையத்தகுந்த உபாயத்தைத் தேடிக் கொண்டும், ஸம்ஸாரபந்தத்தை அறவே யொழிக்கவேண்டுமென்ற விருப்பத்தினுல் அடிக்கடி தன் ஆத்மசாந்தியில் சிந்தனையுடையதாகவும் இருக்கிறது.

ஏழாவது மாதத்தில் தோல், நினவு இவை ஏற்படுகின்றன. எட்டாவது மாதத்தில் தோலிற்கு நெருக்கம், பகுத்தறிவு இவை ஏற்படுகின்றன. சுக்லத்தின் ஸாரமும் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது. இந்த சுக்லஸாரமானது கெட்ட காற்றினுல் அடிபடாதபடி இருதயத்தில் இருந்துகொண்டும், சிவப்பு மஞ்சள் இந்நிறங்களுடன் கூடினதாயுமிருக்கிறது. இது பிராணனை தரிப்பதற்குக் காரண மாகும்.

ஓஜஸ் என்று சொல்லப்படும் இந்த சுக்லஸாரம் அசையும் சுபாவமுள்ள தாகையால் இது அடிக்கடி தாயின் கருப்பத்தை யடைகிறது.

வாக்படாசார்யரும் ஓஜஸ் என்ற இது 8-வது மாதத்தில், தாய், புத்திரன், தந்தை இவர்களை முறையே அடைகிறது என்று கூறுகிறுர். ஓஜஸ்ஸினுல் விடப் பட்டு, உண்டாகும் குழந்தை உயிருடன் இருத்தலரிது. ஓஜஸ், கருப்பத்தை விட்டுத் தாயையடைந்தபின் பிறந்த குழந்தையும் ஓஜஸ்ஸினுல் விடுபட்டதினு லேயே ஜீவிப்பதில்லை. இதே ஓஜஸ் தாயைவிட்டு கருப்பத்தையடைந்தபோது ப்ரஸவம் ஏற்படின் தாய் இறந்துபோகிறுள். இது கருப்பத்தையோ, தாயையோ, அடையும்போது ஓஜஸ் ஒரு இடத்தும் நில்லாதவரமல் இருத்தலால் அப்பொழுது பிரஸவம் ஏற்படின் தாய், புத்திரன் இவ்விருவரும் இறக்கின்றனர். உலகில் ஓஜஸ்ஸினுல் விடப்பட்ட கருப்பத்திற்கு பிறவி ஏற்பட்டபின் சிறிது காலம் வரை உயிர் உள்ளதுபோல் காணப்படுகிறதே எனில்—அதற்கு இவ்வாறு திருஷ்டாந்தத் துடன் சமாதானத்தைக் கூறுவோம்:—

வெட்டுண்ட ஒரு பிராணியின் அவயவத்தில் பிராணவாயுவின் ஸஞ்சார மில்லாவிடினும், வெட்டப்படுமுன் இருந்த பிராணனுடைய ஸஞ்சாரஸம்ஸ் காரத்தால் வெட்டுப்பட்ட அங்கம் எவ்வாறு அசைகின்றதோ, அதே போல் ஓஜஸ்ஸினுல் விடுபட்டு, பிறந்த குழந்தையும் முன் இருந்த ஓஜஸ்ஸின் ஸஞ்சார ஸம்ஸ்காரத்தினுல் சிறிது காலம்வரை ஜீவன் உள்ளதாகத் தோன்றுகிறதேயன்றி உண்மையாக அதில் உயிர் கிடையாது.

ஒன்பதாவது மாஸத்திலிருந்து பதினென்ருவது மாதம் வரையில் பிரஸ வத்திற்குரிய காலமாகும்.

கருப்பத்திலுள்ளதும் தாயின் ஆஹாரரஸத்தை தரிப்பதும் நாபியில் இருப்ப துமான 'பரா' என்று பெயருள்ள நாடி தாயின் ரஸத்தை தரிக்கும் நாடியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. தாயின் இடைப் பக்கத்தில் இக்குழந்தை நெற்றியில் கைகளைக் கூப்பிக்கொண்டும், சுருங்கிய உடலுடனும் இருக்கிறது. இது ஆணுக இருப்பின் வலது பக்கத்தில் தங்கியிருக்கும். பெண்ணுக இருப்பின் இடது பக்கத் தில் தங்கியிருக்கும். அலியாயிருப்பின் கொப்புழின் நடுதேசத்தில் தங்கியிருக்கும்.

பிரபலமான ப்ரஸூதக் காற்றுக்களால் அந்தப் பிண்டம் தலைகீழாகச் செய்யப்பட்டு, நெருங்கிய சரீரமுள்ளதாய் யந்திரத்தின் வழியாக தள்ளப்படு கிறது. பிறந்தவுடனேயே அக்குழந்தைக்கு முன் ஜன்மத்தின் ஸம்ஸ்காரத்தினுல் முலைப்பால் குடிப்பதில் விருப்பம் ஏற்படுகிறது. இக்காரணத்தைப் பின்பற்றியே ஜீவன் ஸத்யன் என்று கருதப்படுகிறது.

பிறந்த குழந்தைக்கு

(1) தாயாரிடமிருந்து உண்டானவை (2) தந்தையிடமிருந்து உண்டாகியவை (3) ரஸத்திலிருந்து உண்டானவை (4) ஆத்மாவிடமிருந்து உண்டாகியவை (5) (ஸத்வம்) மனம், பலம், ஸ்வபாவம் இவைகளிலிருந்து உண்டானவை (6) ஆத்மாவுடன் கூடியவைகளிலிருந்து உண்டாகியவை என்று ஆறு வித குணங்கள் (பாவா:) ஏற்படுகின்றன.

(1) அன்னையிடமிருந்து உண்டாகும் குணங்களாவன:—

மிருதுவாயிருத்தல், சோணிதம், கொழுப்பு (மதம்), ஊந்தண்ணீர், இருதயத்தின் இடது, வலது பக்கமுள்ள மாம்ஸங்கள், இருதயம், வயிறு;

(2) தந்தையிடமிருந்து உண்டாகும் குணங்களாவன:—

நகங்கள், மீசை, உரோமம், சிறிய நரம்பு, பெரிய நரம்பு, ஆமணக்குக் கட்டைக்கு ஸமமாயுள்ள நரம்புகள், பற்கள், சுக்கிரம்;

(3) ரஸத்திலிருந்து உண்டாகும் குணங்களாவன:—

சரீரத்தின் வளர்தல், நிறம், திருப்தி, பலம், நீலை, ஆசையின்மை, உற்சாகம்;

(4) ஆத்மாவிலிருந்து உண்டாகும் குணங்களாவன:—

விருப்பம், பகைமை, சுகம், துக்கம், தருமம், அதருமம், முயற்சி, ஸம்ஸ்காரம், க்ஞானம், ஆயுள், கண் முதலிய ஐம்புலன்கள்;

ஐந்து ஞானேந்திரியங்களாவன:—

1. கண் 2. காது 3. நாக்கு 4. தோல் 5. மூக்கு. இவைகளின் விஷயங்கள் முறையே ரூபம், சத்தம், ரஸம், ஸ்பரிசம், வாஸனை இவைகளாகும்.

ஐந்து கர்மேந்திரியங்களாவன:—

1. வாய் 2. கை 3. கால் 4. மலத்துவாரம் 5. குறி; இவ்விந்திரியங்களின் விஷயங்களாவன:—

முறையே 1. பேசுதல் 2. எடுத்தல் 3. நடத்தல் 4. மலங்கழித்தல் 5. சிற்றின்பம் என்பன;

1. மனம் 2. புத்தி இவ்விரண்டும் அந்தக்கரணம் எனப்படும். சுகம், துக்கம் இவ்விரண்டும் இதன் விஷயங்கள்.

(5) மனதின் செயல்களாவன:—

நினைத்தல், பயப்படுதல், தியானத்தில் மனதை ஒரே நிலையில் ஈடுபடுத்தல்;

சிலர் புலன்களை பிரமயோனிகள் என்றும் வேறு சிலர் பௌதிகங்கள் (பூத ஸம்பந்தம் பெற்றவை) என்றும் கூறுகின்றனர்.

ஸத்வம் என்று பெயருள்ள மனம் குணபேதங்களால் மூன்று விதத்தை யடைகிறது.

1. ஸத்வம், 2. ரஜஸ், 3. தமஸ் என்று மூன்று குணங்கள்.

ஸத்வகுணத்திலிருந்து உண்டான குணங்கள் ஸாத்விகங்கள் எனப்படும். அவை வருமாறு:—

அடியார்களிடம் அன்பு, தருமசிந்தனை முதலியவை.

'ரஜஸ்' என்ற குணத்திலிருந்து ஆசை, கோபம், முதலியவை உண்டாகின்றன. இவை ராஜஸம் எனப்படும்.

'தமஸ்' என்ற குணத்திலிருந்து உறக்கம், சோம்பேறித்தனம், துன்பம், பிழை, வஞ்சனை முதலியவை உண்டாகின்றன, இவை 'தாமஸமெ'னப்படும்.

ஆத்மாவினுடன் கூடியவைகளிலிருந்து உண்டான குணங்களாவன:—

நிர்மலமான புலன்களோடு கூடியிருத்தல், ஆரோக்கியம், சுறுசுறுப்பு;

ஆகவே பூதஸ்வரூபமுள்ள சரீரம் அந்த அந்த பூதங்களிலிருந்து அதன் அதன் குணங்களை எடுத்துக்கொள்ளுகிறது. அது வருமாறு:—

காது (ஸ்ரோத்திரேந்திரியம்) என்ற புலன். சொல் (சப்தம்), துவாரத்தன்மை, நன்றாய் விளக்கியறியும் திறமை, கூர்மையான புத்தி, பலம் இவைகளை ஆகாசத்திலிருந்து எடுத்துக்கொள்ளுகிறது.

த்வகிந்திரியம் (ஸ்பர்சனேந்திரியம்) ஸ்பர்சத்தையும், மேற்செல்லுதல், கீழ்ச்செல்லல், சுருங்குதல், பரப்புதல், நடத்தல் இவ்வைந்து செயல்களையும்,

கடினமாயிருத்தல், பிராணன், அபானன், வியானன், ஸமானன், உதானன் இவைகளையும், இவையின் உட்பிரிவுகளான நாகம், கூர்மம், க்ரகரம், தேவதத்தம், தனஞ்சயம் இவ்வைந்து காற்றுகளையும் வாயுவிடமிருந்து எடுத்துக் கொள்ளுகிறது.

இவைகளில் முக்கியமாகவுள்ளது பிராணன் என்ற வாயுவாகும். இது நாபிக்கிழங்கின் அடிபாகத்தில் இருந்து கொண்டும், வாய், மூக்கு, கொப்பழ், இருதயம் இவைகளில் ஸஞ்சரித்துக்கொண்டும், மூச்சையிழுப்பது, அக்காற்றை வெளியில் விடுவது இவைகளுக்கு அனுகூலமாயும், விளங்குவது.

அபானன்: இது மலத்துவாரத்திலும், இடையிலும் முழங்கால்களிலும், வயிற்றிலும், நாபியிலும், அதன் கிழங்கிலும், துடைகளிலும், கணைக்கால்களிலும் வியாபித்து நிற்கிறது. இந்த வாயுவின் உதவியால்த்தான் நீர், மலம் இவைகளைச் சரியாக வெளிப்படுத்த முடிகிறது.

வியானன்: இது கண், காது, இடை, மூக்கு இவைகளில் ஸஞ்சாரத்தையுடையது. பிராணன், அபானன் இவைகளின் தைரியம், தியாகம், அடைதல் முதலியவை இவனது செயல்களாகும்.

ஸமானன்: இது ஜாடராக்கினியுடன் 72000 நாடிகளில் ஸஞ்சரித்துக் கொண்டு இருப்பது. சாப்பிடப்பட்ட உணவு, குடிக்கப்பட்ட நீர், இவைகளை பாகுபாடு செய்து தேகத்திற்கு புஷ்டியையளித்தல் இதன் செயலாகும்.

உதானன்: இது கால்களிலும், கைகளிலும், அங்கங்களின் சேர்க்கைகளிலும் நிற்கிறது. உடலை மேல்வளைத்தல் உயரத்தில் (அதிகம்) தாண்டுதல் இவை இதன் செயல்.

நாகம், கிருகரம் முதலிய ஐந்து வாயுவிகாரங்களும் தோல் முதலிய தாதுக்களையடைந்திருக்கின்றன. துப்புதல், இமை கொட்டல் தும்புதல், கொட்டாவியிடுதல், வீங்குதல் இவை முறையே அவைகளின் செய்கைகளாகும்.

கண்: இது ரூபம், பித்தம், வேக்காடு, ஒளி, கூர்மையான பார்வை, வெப்பம், ஓஜஸ், தேஜஸ், வல்லமை, புத்திசாலித்தனம் இவைகளை அக்கினியிடமிருந்து கிரஹித்துக்கொள்கிறது.

நாக்கு: இது சுவை, குளிர்ச்சி, வழவழப்பு, திரவம், வியர்வை நீர், மிருதுத்தன்மை இவைகளை ஜலத்திலிருந்து கைப்பற்றிக்கொள்ளுகிறது.

மூக்கு: இது பூமியிலிருந்து மணம், நிலைத்தல், தைரியம், கௌரவம், மீசை, கேசம் (மயிர்), நகம், பற்கள், எலும்பு, கட்டியாயிருத்தல், வாதம் முதலிய தாதுப்பிரகிருதி, ஆகாயம் முதலிய பூதப்பிரகிருதி இவைகளை எடுத்துக்கொள்ளுகிறது.

ஸாத்விகம்: இது ஏழு விதம். இது பிரமன், இந்திரன், யமன், வருணன், குபேரன், ரிஷி, கந்தருவன் இவர்களது உருவங்களையுடையதாகவும் ஏழுவித முள்ளதாகவும் இருக்கிறது.

ராஜஸம்: இது, பிசாசு, அரக்கன், அசுரன், பாம்பு, பறவை, பிரேதம் இவர்களது உருவங்கள் உள்ளதாய் ஆறு விதத்தையுடையது.

தாமஸம்: இது பசு, மீன், மரம், இவைகளின் உருவங்களையுடையதாயும் இம்மூன்று விதமாகவுமிருக்கிறது.

கீழ் குறிப்பிட்டவைகளின் லக்ஷணங்களைக்கூறுதல் இந்நூலிற்கு விஸ்தாரத்தை செய்யுமென்று அவை இங்கு கூறப்படவில்லை.

இவ்வாறு பிறந்த குழந்தைக்குத் தாய் தந்தை இவர்களிடமிருந்து உண்டாகின்ற ஆறுவித குணங்களையும், பூதசம்பந்தம் பெற்ற உடலில் அந்த அந்த பூதங்களின் குணங்களையும், அவைகளின் காரணங்களையும் விளக்கிக் கூறினேம். இனி அவ்வுடலின் அவயவங்கள், அவைகளின் உட்பிரிவுகள், தாதுக்கள், நாடிகள் சக்கரம் இவை முதலியவைகளை முறையாகக் கூறுவோம்:

முன் கூறப்பட்ட அப்பிண்டம் (குழந்தை) தலை, இரு கைகள், இரு கால்கள், இடை இவ்வவயவங்களுடன் கூடியிருக்கிறது என்று சான்றோர் கூறுகின்றனர்.

இனி அவயவங்களின் உட்பிரிவுகள் கூறப்படுகின்றன :—காய்ச்சின ரத்தத்திலிருந்து ஏழு தோல்கள் உண்டாகின்றன.

அவைகளாவன:—

(1) பாலிநீ
(2) லோஹிதா
(3) ச்வேதா
(4) த்வக்தாம்ரா
(5) வேதிநீ
(6) ரோஹிணி
(7) மாம்ஸதரா

இதே கருத்தையுள்ளடக்கி ஆயுர்வேதத்திலும்,

இதி பூ[4]தமயோதே[3]ஹ: தத்ரஸப்தத்வசோரஸிருஜ:
பச்யமாஞ்ச் பிரஜாயன்தே ஜீவாம்ஸாந்தனிகா இவ.
ப[4]ாலிநீ லோஹிதாச்வேதா த்வக்தாம்ரவேதிநீதத[2]ா.
ஸ்யாத்[3] ரோஹிணீமாம்ஸத[4]ரா ஸப்தத[4]ா பரிகீர்திதா.

என்று கூறப்படுகிறது.

கலைகள் ஏழு. தாதுக்களின் ஸாரம் கோசத்திலிருக்கும் அக்கினியால் சமைக்கப்பட்டு தன் வெப்பத்தின் காரணமாக சிறுநரம்பு, கோமை, இரைப்பை இவைகளின் சேர்க்கையால் மறைக்கப்படின் அது 'கலை' என்ற பெயரையடையும். இது மரத்தின் ரஸம் போல் இருக்கும்.

மேற்கூறின ஏழு தோல்களும் ஏழு கலைகளும் 'த்வக்' முதலிய தாதுக்களுக்கு நடுவில் ஒன்றுக்கொன்று சேராமல் எல்கைகள் போல் அமைந்திருக்கின்றன.

அவைகளுள் முதல் தோலில் கலைக்கு மாம்ஸதரை என்று பெயர். இது மாம்ஸத்தைத் தரிக்கிறபடியால் இப்பெயர் பெற்றது.

இது சேற்றிலிருந்து உண்டாகும் தாமரைக் கிழங்கைப் போல் மாம்ஸத்திலிருந்து சிறிய நரம்புகள், பெரிய நாடிகள் கோழை இவைகளுடன் கூடியதாக இருக்கிறது. மற்ற தோலின் கலைகள் ஆறும் முறையே ரத்தம், கொழுப்பு, கோழை, மலம், பித்தம், சுக்லம் இவைகளை தரிக்கின்றன.

(1) த்வக் (தோல்)
(2) அஸிருத (ரத்தம்)
(3) மாம்ஸம் (இறைச்சி)
(4) மேத[3]ஸ் (கொழுப்பு)
(5) அஸ்தி[2] (எலும்பு)
(6) மஜ்ஜா (ஊந்தண்ணீர்)
(7) சுக்ரம் (வீரியம்)

இவ்வேழும் தாதுக்கள் எனப்படும்.

த்வக் என்பது ஜடராக்கினியினால் சிவந்துகொண்டும், பக்குவமுள்ள அன்ன ரஸத்திலிருந்தும் உண்டாகிறது. மற்ற ஆறு தாதுக்களும் அந்த அந்த கோசங்களில் உள்ள பக்குவமான ரத்தம் முதலியவைகளால் உண்டாக்கப்படுகின்றன. இவைகளுக்கு முறையே, ஆசயம் என்று பெயருள்ளதும், ரத்தம் சிலேஷ்மம் இவைகளுக்கு இருப்பிடங்களுமான ஏழு ஸ்தானங்கள் இருக்கின்றன.

சுத்தமான கபம், ரத்தம் இவைகளுடன் கூடிய பித்தாசயம், பக்வாசயம் இவைகளுக்கு நடுவில் ஸ்திரீகளின் கருப்பாசயம் இருக்கிறது.

மார்பின் இடது வலது பக்கத்து சதைகளின் நடுவிலுள்ளதும் கீழ்முக முள்ளதும், துவாரமுள்ளதும், பங்கஜத்தின் உருவமுள்ளதுமான ஒரு இடம் இருக்கிறது. இதனை இருதயம் என்பர். இது ஜீவனுக்கு இருப்பிடமாகும். இந்த இடம் அக்ஞானத்தால் சூழப்பட்டிருக்கும். இந்த மனத்தாமரையின் நடுவில் ஆத்மாவானவன் கண்களை மூடிக்கொண்டும் உறங்கிக்கொண்டும், விழித்துக்கொண்டும் விளங்குகிறான்.

உறக்கம் ஸ்வப்னம், ஸுஷுப்தி என இருவகைப்படும். வெளிப் புலன்கள் மனதுடன் சேர்ந்திருப்பின் அந்நிலைமையை 'ஸ்வப்னம்' என்று கூறுவர்.

சேதனனை பிரமம் அக்ஞானத்தினால் சூழப்பட்டிருக்கும் பொழுது, மனத்தாமரையும் மூடியிருப்பின் அப்பொழுது ஆத்மா உறங்குகிறான் என்றும் அது எப்பொழுது மலருகிறதோ அப்பொழுது ஜீவன் விழித்துக்கொள்கிறான் என்றும் அறிக. ஆத்மா விழித்துக்கொண்டிருக்கும் சமயத்தில்தான் நான் என்று அறியப்படுகிறது.

மனம் பிராணனுடன் எப்பொழுது சேருகிறதோ அப்பொழுது ஆத்மாவிற்கு ஸுஷுப்தி என்று அறிக.

ஆதாரசக்கரம்

நான்கு இதழ்களுடன் கூடினதும், ஆதாரமென்று சொல்லக்கூடியதுமான ஒரு சக்கரம் மலத்துவாரம், குறி இவைகளின் நடுவில் இருக்கிறது. இந்த ஆதாரசக்கரத்தின் கிழக்கிலிருந்து துடங்கும் நான்கு இதழ்களின் முறையே பரமம், ஸஹஜம், வீரானந்தம், யோகானந்தம் முதலிய படலங்கள் இருக்கின்றன. இதே ஆதார பங்கஜத்தின் குண்டலினீ என்று சொல்லக் கூடியதும், பாம்பு போல் உருவமுள்ளதுமான அவித்யாசக்தி இருக்கிறது. இது உருவத்தில் கோணலுள்ளதாக இருப்பதால் குண்டலினீ என்று கூறப்படுகிறது. இந்த அவித்யா சக்தியான குண்டலினீ, குருவின் உபதேசப்படி, யமம், நியமம் இவை முதலியவைகளால் வாயுவின் ஸஞ்சாரத்தை இடை, பிங்களை இவைகளில் நிறுத்தி, அந்தக் காற்றினால் ஸுஷும்நா என்று கூறப்படும் நாடியின் துவாரத்தை மூடிக்கொண்டிருக்கும் சதையைத் திறக்கும் படி செய்து, அங்கு சென்ற வாயுவினால் முறையே பிரமகிரந்தி, விஷ்ணு கிரந்தி இவைகள் திறக்கப்பட்டவுடன் இது எட்டுவித கோணலாயிருத்தலை விட்டு எப்பொழுது நேர்மையையடைகிறதோ அப்பொழுது அது நேர்மையாயிருத்தல் காரணமாக பிரமந்திரத்திலிருந்து வெளிக்கிளம்புகிற தன்நுனியால் அமுதைப் பெருக்கும் ஸஹஸ்ரஹதளங்கள் உள்ள சக்கரத்தையடைந்து மலரும்படிச் செய்கிறது. அதிலிருந்து அமிருதம் பெருக்கும்படிச் செய்யப்படுகிறது. இதுதான் இதன் பயனாகும்.

ஸ்வாதிஷ்டானம். இது கீழ்கூறப்பட்ட ஆதாரசக்கரத்தின் மேல் பாகத்தின் (குறியின் அடிப்பக்கத்தில்) ஆறு இதழ்களுடன் கூடியிருக்கிறது. இச்சக்கரத்தினுடைய இதழ்களின் பலன்கள் முறையே அன்பு, கொடுமை, கர்வமின்மை, மூர்ச்சையாகுதல், இகழ்தல், அவிச்வாஸம் (நம்பிக்கையில்லாமை) இவைகளாகும். இது க்ஷுமாசக்திக்கு இருப்பிடமாயுள்ளது.

இதற்கு மேல்	இந்தஸ்தானங்களின் முறையே
1. கொப்பூழ்	மணிபூரகம்
2. இருதயம்	அனாஹதம்
3. கழுத்து	விசுத்தி
4. நாவின் அடிபாகம்	லலனா
5. புருவங்களின் இடை	ஆக்ஞா
6. நெற்றி	மனம்
7. பின்கழுத்து	ஸோமன்
8. பிரமரந்திரம்	ஸஹஸ்ரபத்திரம்

என்கிற பெயர்களுடைய எட்டு சக்கரங்கள் இருக்கின்றன. இனிமேல் கூறப்பட்ட சக்கரங்களுடைய இதழ்களின் பலன்கள் கிழக்கு தளம் முதல் துடங்கி முறையே தனித்தனியாக விரித்துக் கூறப்படுகின்றன.

மணிபூரகம். இது பத்து இதழ்களுடன் கூடியது நாபியில் உள்ளது.

1. ஸுஷுப்தி	6. பயம்
2. விருப்பம்	7. தயவு
3. அசூயை	8. மோகம்
4. கோள் சொல்லுதல்	9. கலக்கம்
5. லஜ்ஜை	10. துக்கமின்மை.

இவை முற்கூறிய (10) இதழ்களின் பலன்கள். இது ஸூர்யனுக்கு இருப்பிடமாகும்.

அனாஹதம். இது பன்னிரண்டு இதழ்களால் ஆனதும் ப்ரணவ ஸ்வரூபனான சிவனுக்கு பூசையிடமாகவுமுள்ளது. இது இருதயத்தில்இருப்பது.

1. அசைதல்	7. சிந்தனை
2. நசித்தல்	8. விரும்புதல்
3. வஞ்சனை	9. பொதுவாயிருத்தல்
4. விதர்க்கம்	10. கர்வமின்மை
5. அனுதாபம்	11. விவேகம்
6. ஆவலின்மை	12. அகங்காரம்

இவை முறையே 12 இதழ்களின் பலன்களாகும். இவை ஆத்ம ஸம்பந்தம் பெற்றவை.

விசுத்தி. இது ஸரஸ்வதிக்கு இருப்பிடமாயமையப் பெற்றது. இந்தச் சக்கரம் கழுத்தில் உள்ளது. 16 இதழ்களால் ஆகியது.

1. பிரணவம்
2. ஹ்ரீம்
3. வஷட்
4. ஸ்வதா
5. ஸ்வாஹா
6. நம
7. அமிருதம்
8. பட்
9. ஸப்தஸ்வரங்களுக்குள் முதலான 'ஸ'
10. ,, ,, 2-வது 'ரி'
11. ,, ,, 3-வது 'க'
12. ,, ,, 4-வது 'ம'
13. ,, ,, 5-வது 'ப'
14. ,, ,, 6-வது 'த'
15. ,, ,, 7-வது 'நி'
16. விஷம்

இவை 16 இதழ்களின் பலன்கள்.

லலனு. இது நாக்கின் அடிபாகத்தில் உள்ளது. 12 இதழ்கள் அமையப் பெற்றது.

1. கொழுப்பு (கர்வம்)
2. மானம்
3. நட்பு
4. சோகம்
5. வேர்வை
6. உலோபித்தன்மை
7. ஆவல் இல்லாமை
8. பரபரப்பு
9. ஊர்மிகள்
10. சிரத்தை
11. ஸந்தோஷம்
12. தடுத்தல்

பசி, தாகம், சோகம், மோகம், கிழத்தனம், மரணம் இவ்வாறும் ஊர்மிகள் எனப்படும். மேற் கூறியவை லலனு சக்கரத்தினுடைய இதழ்களின் பலன்கள்:

ஆக்ஞை. இரு புருவங்களின்நடுவில் இரு இதழ்களுடன் கூடியது இது. ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் அபிவிருத்தி இச்சக்கரத்தினு டைய இதழ்களின் பலன்கள் ஆகும்.

மனம். இது ஆக்ஞை சக்கரத்துக்கு மேல் உள்ளதும், 6 இதழ்களுடன் கூடியதுமாகும்.

6 இதழ்களின் பலன்களாவன

1. ஸ்வப்நம்
2. சுவையறிதல்
3. வாஸனை
4. ரூபமறிதல்
5. ஸ்பர்சம்
6. சப்தத்தின் அறிவு.

ஸோமன். இது மனச் சக்கரத்திற்கு மேல் உள்ளது. 16 இதழ்களில் 16 கலைகளுடன் கூடியது. இதழ்களின் பலன்களாவன:—

1. தயை
2. பொறுமை
3. நேர்மை
4. தைரியம்
5. வைராக்கியம்
6. நிலைத்தல்
7. கொழுப்பு
8. வியப்பு
9. மயிர்க் கூச்சல்
10. தியானத்திலிருந்து உண்டா கும் கண்ணீர்
11. ஒற்றுமை
12. கம்பீரத்தன்மை
13. முயற்சி
14. மேன்மை
15. உதாரத்தன்மை
16. ஒரேநிலை

பிரமரந்திரத்தில் ஆயிரம் இதழ்களுடன் கூடியதும், அமிருதத்திற்கு இருப் பிடமானதுமான ஒரு சக்கரம் இருக்கிறது. அதிலுள்ள அமிருதப் பெருக்கினால் இந்த உடல் வளர்க்கப்படுகிறது.

'அஹத சக்கர'த்திலுள்ள 1, 8, 11, 12 இவ்விதழ்களில் தங்கியிருக்கின்ற ஜீவன் கீதத்தின் சுவையையறிகிறான். மற்றவிதழ்கள் கீதத்திற்கு நாசத்தைச் செய்பவையாகும்.

'விசுத்தி' என்கிற சக்கிரத்திலுள்ள எட்டாவது இதழ் துடங்கி எட்டு இதழ்கள் கீதத்தின் சித்தியைக் கொடுக்கின்றன. 16-வது இதழ் கீத நாசகாரியாக இருக்கிறது.

'லலனு' என்கிற சக்கரத்திலுள்ள 10, 11 இதழ்கள் கீதஸித்தியைக் கொடுக்கக் கூடியவை. மற்றவை கீதத்தின் சித்தியைச் செய்யா.

பிரமரந்திரத்திலிருக்கின்ற ஜீவன் எப்பொழுது அமுதப் பெருக்கினால் மூழ்கு கிறதோ, அப்பொழுது அவன் ஆனந்தமாக செவிக்கினிய உயர்ந்த கீதங்களைப் பாடும்படி தூண்டுகிறான். மேற் கூறிய சக்கரங்களினுடைய கூறப்படாத இதழ் களில் தங்கியிருக்கின்ற ஜீவன் கீதத்தின் ஸித்தியை ஒருபொழுதும் செய்வதில்லை.

ஆதார சக்ரத்திற்கு இரண்டு அங்குலங்கள் மேலும் குறிக்கு இரண்டு அங்குலங்கள் கீழும் உள்ள தேகத்தின் நடுவில் உருக்கிய ஸ்வர்ணத்தின் நிறமுள்ள தும், ஒரு அங்குல அளவு உள்ளதும், அக்கினிச் சுவாலை போல் உள்ள ஒரு முளை இருக்கிறது. இந்த சக்கரத்திலிருந்து 9-வது அங்குலத்தில் நான்கு அங்குல அளவுள்ள தேகத்தின் கிழங்கு இருக்கிறது. அந்தக் கிழங்கை பிரம்மக் கிரந்தி என்று கூறுகின்றனர்.

அதற்கு நடுவில் பன்னிரண்டு இதழ்களுடன் கூடிய நாபியின் சக்கரம் இருக்கிறது. இதில் ஜீவன் நூல் கூட்டத்திலுள்ள சிலந்திப் பூச்சி போல் சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்த கொப்பூழ கிழங்கு ஆதானம், விதானம் முதலிய சிறு நரம்புகளினால் பின்னப் பட்டிருப்பதால் 'நூல் கூட்டம்' என்று கூறியது மிகவும் தகுந்த திருஷ்டாந்தமாகும்.

நாபிக் கிழங்கிலிருந்து பிரமரந்திரம் வரையில் ஸுஷும்நாவென்கிற நாடியைச் சுற்றிப் பல நரம்புகள் இருக்கின்றன. இவை சரீரத்தின் வளர்ச்சிக்குக் காரணமானவை. இவைகளில் முக்கியமானவையாவன:—

1. ஸுஷும்நா
2. இடா
3. பிங்களா
4. குஹூ
5. ஸரஸ்வதீ
6. காந்தாரீ
7. ஹஸ்திஜிஹ்வா
8. வாரணீ
9. யசஸ்விநீ
10. விச்வோதரா
11. சங்கிநீ
12. பூஷா
13. பயஸ்விநீ
14. அலம்பூஸா

இவைகளில் முதலாவதாகக் கூறப்பட்ட மூன்றும் முக்கியமானவை. அவைகளில் ஸுஷும்நா மிகவும் முக்கியமானது.

நாபிக்கிழங்கின் நடுவில் இருக்கும் 'வைஷ்ணவீ' என்ற நாடி புருஷார்த்தமான மோக்ஷத்தை யளிக்கவல்லது. 'இடை' என்பது நாபிக்கிழங்கின் இடது பக்கத்தில் இருக்கிறது.

'பிங்களை' என்ற நாடி அதன் வலது பக்கத்தில் இருக்கிறது. இடை, பிங்களை இவ்விரண்டு நரம்புகளின் நடுவில் சந்திரசூரியர்கள் ஸஞ்சரிக்கின்றனர். ''ஸுஷும்நா'' என்ற நாடி, ஜீவனுக்கு, பிண்டமாயிருப்பதற்குக் காரணபூதங்களான உறக்கம், அசைதல் இவைகளுடைய கதிக்குக் காரணமாயுள்ளதும்,

மிருத்யுவைத் தடுக்கும் ஸ்வபாவமுள்ளதாயும் இருக்கிறது. இடையென்கிற நரம்பின் பின்பாகத்திற்கு மேல் காந்தாரீ, ஹஸ்திஜிஹ்வா வென்கிற இரு நரம்புகள் இருக்கின்றன.

பிங்களை நாடிக்குப் பின்பக்கத்தின் கீழாக பூஷா, யசஸ்விநீ இவைகள் இருக்கின்றன. குஹூ, ஹஸ்திஜிஹ்வா இவ்விரண்டு நாடிகளின் மத்தியில் 'விச்வோதரா' வென்ற நரம்பு இருக்கிறது. குஹூ, யசஸ்விநீ இவைகளில் நடுவில் 'வாருணீ' என்ற நாடி இருக்கிறது.

பூஷா, ஸரஸ்வதீ இவ்விரண்டு நரம்புகளின் நடுவில் 'பயஸ்விநீ' என்ற நரம்பும், காந்தாரீ, ஸரஸ்வதீ இவ்விரண்டின் மத்தியில் 'சங்கிநீ' யென்கிற நரம்பும் இருக்கின்றன. 'அலம்பூஸா' என்ற நரம்பு நாபிக்கிழங்கின் நடுவில் இருக்கிறது. இதிலேதான் இடை, பிங்களை இவைகள் முறையே இடமாகவும் வலமாகவும் இருக்கின்றன.

மூக்கின் இடது பாகத்திலும், வலது பாகத்திலும் 'குஹூ' என்கிற நாடியிருக்கிறது. 'ஸரஸ்வதீ' என்கிற நாடி நாக்கின் மேல் பாகம் வரையிலும், 'காந்தாரீ' பின் நாக்கிலும் இருக்கின்றன. இவைகள் இடது கண்ணையும், கால் கட்டை விரல்களையும் அடைந்திருக்கின்றன. 'ஹஸ்திஜிஹ்வா' என்ற நாடி தேஹத்தின் எல்லாவிடத்திலும் பரவியிருக்கிறது. 'வாருணீ', 'யசஸ்விநீ' இவ்விரண்டும் வலது பாகத்தின் கட்டை விரலில் இருக்கின்றன. 'விச்வோதரா' என்ற நாடி சரீரத்தின் எல்லா பாகங்களிலும் பரவியிருக்கிறது.

'சங்கிநீ' என்ற நரம்பு இடது காதுவரையிலும் நீண்டு இருக்கிறது. 'பூஷா' வென்பது வலது கண்வரையில் நீளமுள்ளது. 'பயஸ்விநீ' இது வலது காது வரையில் நீண்டு இருக்கிறது. 'அலம்பூஸா' வென்ற நரம்பு மலத்துவாரத்தை யடைந்து வியாபித்திருக்கிறது.

இவ்வாறு மலக்கூட்டங்கள் நிறைந்து நிற்கும் இவ்வுடலில், புத்திசாலிகள் ஸகுணப்பிரமத்தை உபாஸித்து எல்லாவித ஸுகங்களையும், நிர்குணப்பிரமத்தைத் தியானித்து மோக்ஷத்தையும் அடைகின்றனர். தியானம் என்பது ஒரே யிடத்தில் மனதையீடுபடுத்துவதாகும். அவ்வாறு தியானித்தல் என்பது மனிதருக்கு மிகுந்த துன்பத்தைத் தரத்தக்கதாயிருத்தலால், அனாஹதநாதத்தை உபாஸிப்பதுதான் இன்பமளிப்பதும், ஸுலபமானதுமான சிறந்த மார்க்கம். இந்த அனாஹத நாதத்தை குருவின் உபதேசப்பிரகாரம் இருஷிகள் உபாஸித்து வருகின்றனர். ஆயினும் இந்த அனாஹதநாதம் ரக்திமையில்லாத காரணத்தால் மனிதர்களது மனதைக் கவரக்கூடியதாக ஆவதில்லை. ஆகவே எல்லாவுயிர்களுக்கும் ஆனந்தத்தையளிப்பதும், ஸம்ஸாரபந்தத்தை யறவேயொழிக்கக் கூடியதும், கேட்போருள்ளம் களிக்கச் செய்வதுமான கானத்தையுடைய ஆஹத நாதமே நன்கு உபாஸிக்கப் பட்டுவருகிறது. இதிலிருந்து சிறந்த ஸங்கீதம் வளர்ந்து விளங்குகிறது.

நாதப்பிரகரணம்

நாதத்திற்கும் பரப்பிரமத்திற்குமுள்ள ஒற்றுமை

ஸ்ரீ சார்ங்கதேவர், முன்னர் கூறப்பட்ட நாதப்பிரமமே தனக்குப் பரதேவதை என்றும் கூறி அடியிற்கண்ட சுலோகத்தால் வணங்குகிறார்:—

''செதன்யம் ஸர்வபூ^{4}தானாம் விவிருதம் ஜக^{3}த^{3}ாத்மனா
நாத^{3}பிரஹ்மதத^{3}ானந்த^{3} மத்விதீயமுபாஸ்மஹே.

பரப்பிரமமானது எல்லாவுயிர்களிடத்திலும் ஞானஸ்வரூபமாகவுள்ளதும், சரம், அசரம் (ஸ்தாவரம், ஜங்கமம்) இவ்விரண்டின் ஸ்வரூபமுள்ள இப்பிரபஞ்சத்திற்குக் காரணமானதும், ஆனந்தஸ்வரூபமுள்ளதும், தனக்கு நிகராக வேறு வஸ்து இல்லாததாகவும் எவ்வாறு விளங்குகிறதோ, அதேபோல் நாதப்பிரமமும் எல்லா பதார்த்தங்களையும் பிரகாசிக்கும்படி செய்வதாகவும், சுருதி, வர்ணம் முதலிய எல்லா சத்தப் பிரபஞ்சங்களுக்கும் காரணமாகவும் தன் கார்யமான ஸ்வரக்கூட்டங்களுக்குக் காரணமாகவும் உலகப்பிரசித்தி வாய்ந்ததாகவும், ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் ஸ்போட உருவமுள்ளதாகவும் விளங்குகிறது. (ஸ்போட உருவமுள்ள சொல்லை இலக்கணவறிஞர் நித்யமாகக் கூறுவர்) ஸ்போட உருவமுள்ள இந்த நாதப்பிரமத்தை நான் வணங்குகிறேன் என்று முன்பு கூறின சுலோகத்தின் கருத்து. இந்த சுலோகத்தில் நாதத்திற்கும், பிரமத்திற்கும் ஒற்றுமை கூறப்பட்டிருக்கிறது.

மேலும் இந்த நாதப்பிரமத்தை யுபாஸிப்பதால் இது பரப்பிரமத்தின் சமீபத்தில் உபாஸிப்பவனைச் சேர்க்கிறது என்றும் அறிஞர் கூறுகின்றனர். ஒளியின் உதவியினால் மனிதன் எப்படி இரத்தினத்தையடைகின்றானோ, அதே போல் நாதோபாஸனையாகிற ஒளியினால் ஜீவன் பரப்பிரமத்தையடைகிறான் என்பது குறிப்பிடற்பாலது.

நாதம் என்றால் என்ன ?

ஸர்வலோகோத்^{3}ப^{4}வாத் பூர்வம் யே ன வ்யாப்தம் சராசரம்
நாத^{3}ாத்மகம் தத^{3}ாகாசம் பூ^{4}தானாமபி காரணம்:

(நூலாசிரியர்)

இவ்வுலகங்கள் யாவும் உண்டாவதற்கு முன்னமேயே எந்த ஓர் அரிய பொருளினால் ஸ்தாவரஜங்கம மயமான இவ்வுலகனைத்தும், இவ்வாகாயமனைத்தும் நிரம்பியிருந்ததோ, எது எல்லா உலகவியவகாரங்களுக்கும் மூலகாரணமாக விளங்கிற்றோ, அதுவே நாதமென்றறிக. ''ஆகாசஸம்ப^{4}வோ நாத^{3}:'' என்று நாரதமுனிவர் கூறிதயற்கிணங்க, ஆகாயத்திலிருந்து முதன் முதலுண்டாயகி வாயுவானது நாதத்திற்கு ஆதிகாரணமான 'ஸ்' என்ற சப்தத்தையுண்டாக்கியது. இதனை உதாஹரணவாயிலாக விளக்குவோம்:—

தோலினாற் செய்யப்பட்ட ஒரு துருத்தியில் காற்றை நன்றாய் அடைத்து, அத்துருத்தியில் ஒரு ஊசியாற் சிறிய துவாரமொன்று செய்துவிட்டால், அத்துருத்தியின் அந்த ஊசித் துவாரத்தின் வழியாக வெளிவரும் காற்று உண்டாக்கும் சப்தம் 'ஸ்' என்ற சப்தமாகவேயிருப்பதை நாம் யாவரும் கண்டிருக்கிறோம். அந்த 'ஸ்' என்ற சப்தத்துடன் 'அ' என்ற அக்ஷரத்தையும் சேர்த்து உச்சரித்தால் அது 'ஸ' என்ற அக்ஷரமாகவே தொனிக்கும். இதுவே ஆதி அக்ஷரம் என்று வியாகரண சாஸ்திரங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. 'பாணிநீய சிக்ஷை'யில்—

''உத^{3}ாத்தோ நிஷாத^{3}க^{3}ான்த^{4}ாரௌ அனுத^{3}ாத்த ரிஷப^{4} தெ^{3}வதௌ
ஸ்வரிதபிரப^{4}வாஹ்யேதே ஷட்^{3}ஜமத்^{4}யம பஞ்சமா:

என்றது இங்கு குறிப்பிடற்பாலது. இந்த 'ஸ' என்ற அக்ஷரமானது ஆதிசக்தியான பரமாத்மாவின் பீஜாக்ஷரமாகவே மந்திரசாஸ்திரங்களிலும் பெரியோர்களால் வர்ணிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த 'ஸ' என்ற அக்ஷரமே ஸங்கீதசாஸ்திரத்தில் ஷட்ஜம் என்று வர்ணிக்கப்பட்டு வருகிறது. இது கழுத்து முதலிய ஆறு இடங்களிலிருந்து பிறப்பதால் இப்பெயர் பெற்றது. மேலும் இந்த 'ஸ' என்ற ஸ்வரத்திலிருந்து 'ரிகம பதநி' என்ற ஆறு ஸ்வரங்களும் உற்பத்தியாவதால், இவ்வாறு ஸ்வரங்களையுமுண்டாக்குவதற்குக் காரணமாகவிருந்த இந்த 'ஸ' என்ற ஸ்வரமே ஷட்ஜமென்று கூறப்படுகிறது. மேலும் நாதமானது பற்பல சூக்ஷ்ம அணுக்களாகவும், பல ரூபங்களுடனும் பிரகாசித்தலால் இவைகளை யித்தனையணுக்கள் தானென்று நிச்சயித்துக் கூறல் இயலாத காரியம். இதனை விவரிப்பதற்கு சுக்லயஜுர் வேதத்திலிருந்து நாதத்திற்கும் சூரியனுக்குமிருக்கும் ஒற்றுமையை (நாதபாஸ்கரயோ: ஸாமியம்) குறிக்கும் கருத்தை மாத்திரம் இங்கு கூறுகிறோம்:—

நாதத்திற்கும் சூரியனுக்குமுள்ள ஒற்றுமை

திரிகாலங்களிலும் அந்தணர் முதலிய அறிஞர்களால் வழிபடப்பட்டுவரும் பிரத்தியக்ஷ தைவமாகிய ஸ்ரீ சூரியபகவானுக்கும், நாதப்பிரமத்திற்குமே ஒரு நெருங்கிய ஒற்றுமையிருந்து வருவது ஸூக்ஷ்மதரிசிகளான ஞானிகளுக்கு வெளிப்படையாகும். அது வருமாறு:—

ஆதித்யபகவான் என்றைக்கும் பிரகாசஸ்வரூபியாய் ஆகாயத்தில் விளங்குவது போன்றே நாதப்பிரமமும் விரிந்த ஆகாயத்தில் சப்தஸ்வரூபமாய் அரிய கலைகட்கிருப்பிடமாய் விளங்கி வருகின்றது. பாஸ்சரப் பெருமானுக்கு ஒவ்வொரு நாளைக்கும் உதயம், ஆரோஹணகதி, உச்சஸ்திதி, ஸஞ்சாரம், அவரோஹணகதி, காலப்பிரமாணம், ரக்திமை, லயம் முதலிய நிலைமைகள் அமைந்திருத்தல் போன்றே நாதத்தாலாகிய ஸங்கீதக்கலைக்கும் ஒவ்வொரு ராகத்திலும் உதயம்

ஆரோஹண அவரோஹண முறை, ரக்தி, ஸஞ்சாரம், காலப்பிரமாணம், லயம் முதலிய பலவித நிலைகள் அமைந்திருக்கின்றன. சூரியபகவான் தனது உதயம் முதல் அஸ்தமனம் வரை ஸகல ஜகத்தையும் தேஜோமயமாக்கிப் பிரகாசிக்கச் செய்வது போன்றே நாதப்பிரமமும் தனது கலைநிகழ்ச்சியின் ஆரம்ப முதல் முடிவுவரை ஜந்துக்களனைத்தையும் ஆனந்தவெள்ளத்தில் மகிழச் செய்கிறது.

திவாகரன் வருடந்தோறும் உத்தராயணம் தக்ஷிணையனம் என்னும் இரு விதமான மார்க்கங்களை வகுத்துக்கொண்டு அவ்வழியே ஸஞ்சரித்து முறையே வைதிக காரியங்களுக்கும் லௌகிகக் கொண்டாட்டங்களுக்கு முதவி, அண்டி ஞெரிருளை யகற்றி, யானந்தப்படுத்துவது போலவே நாதக்கலையும் மார்க்கம், தேசீ என்னும் இருவிதப் பிரிவுகளை யடைந்து, முறையே வைதிககாரியங்களாகிற யாக காரியங்களிலும் லௌகிக ஜனரஞ்சன முறையிலும் உபயோகப்படுவதால் மிகுந்த பிரசாரத்தையடைந்துள்ளது. சூரியன் பசுமை நிறம் படைத்த ஏழு குதிரைகளாலிழுக்கப்படும் ரதத்திலமர்ந்து ஆகாயம் முழுவதும் ஸஞ்சரிப்பது போன்றே நாதமும் ஸப்த ஸ்வரங்களால் அமைக்கப்படும் கீதம், வர்ணம், கீர்த்தனம், பதம் முதலிய பலவிதக் கிருதிகளாகிற இரதத்திலமைக்கப்பட்டு உலக ஸஞ்சாரம் செய்துவருகிறது. ஸஹஸ்ரகிரணன் எனப்படும் பிரபாகரனுடைய ஆயிரக்கணக்கான (கணக்கற்ற) கிரணங்களில் வெளுப்பு, சிவப்பு, மஞ்சள் முதலிய ஸப்தவர்ணங்கள் பிரதிபலிப்பது போலவே ''அனந்தா வைராகா[3]:'' என்றபடி கணக்கற்ற ராகங்களமைந்த ஸங்கீதக் கலையிலும் ஷட்ஜம் முதலிய ஸப்தஸ்வரங்கள் நிறைந்து கிடப்பதைக் காணலாம். சூரியபகவானைத் தரிசிப்போரும், தியானிப்போரும், ஏன்? பாம்பு, மான் முதலிய ஜந்துக்களும் கூட, சூரியனது ஒளிபட்ட மாத்திரத்தில் புத்துயிர் பெற்றவர் போல் மிகுந்த உத்ஸாஹத்துடன் தம் தம் கடமையைச் செய்வது போலவே ஸங்கீதக்கலையை அதாவது நாதப்பிரமத்தையுபாஸிப்போரும் அனுபவிப்போரும் மனக்கவலையை யொழித்து எப்பொழுதும் மனோவிலாஸத்துடனிருந்து கொண்டு அடுத்து வந்தோரையும் அக்கலையினுலேயே மனங்களிக்கச் செய்வர்.

சூரியபகவானை முக்கியமாகப் பிரதிபாதிக்கின்ற காயத்ரீ மஹா மந்திரத்தில்—

''க[3]ாயத்ரீ சதுர்விம்சத்யக்ஷிரா த்ரிபத[3]ா ஷட்குக்ஷி:''

என்றபடி 24 அக்ஷரங்களும், 3 பாதங்களும், 6 குக்ஷிகளும் அடங்கியிருப்பது போன்றே ஸங்கீதக்கலையிலும் 24 சுருதிகளும், ஷட்ஜ, மத்யம, பஞ்சமங்களாகிற 3 முக்கிய ஸ்வரங்களாலுண்டாகும் மந்த்ர, மத்ய, தாரமென்னும் மூன்று ஸ்தாயிகளும் அமைதல் குறிப்பிடத்தக்கதாகும். ''ஆரோக்[3]யம் ப[4]ாஸ்கராதி[3]ச்சே[3]த்'' என்றபடி நோயற்ற வாழ்க்கையும் கவலையற்ற மனதையுமடைய விரும்புவோர் சூரியபகவானை யுபாஸிப்பது போன்றே கவலைப்பிணியையு முத்ஸாஹமற்ற வாழ்க்கையையு மறவே யொழிக்க நாதப்பிரமத்தைத் தவிர வேறு கதியில்லையென்பது பிரத்யக்ஷமாகும். சூரியனுக்கு மேஷம், ரிஷபம் முதலிய 12 இராசிகளிலும் ஸஞ்சாரம் ஏற்பட்டிருப்பது போலவே ஸப்தஸ்வரங்களாகிய ஸங்கீதக் கலைக்கும் ஒவ்வொரு ஸ்தாயியிலும், 12 வீடுகள் (ஸ்வரங்கள்) அமைந்திருத்தலும் குறிப்பிடற்பாலது. விரித்துப் பயனென்ன! சூரியகிரணம் படாத இடம் எப்படி வெறும் இருட்டாகவும் அறுவருக்கத்தக்கதாயும், பற்பல பிணிகளின் உற்பத்திக்குக் காரணமாயுமிருக்குமோ அதேபோல் இனிய ஸங்கீதக் கலையின் அருள் பெரு இடமும் ஒரே அக்ஞானமயமாகவே ரஸிகர்களும், அனுபவசாலிகளுமான பெரியோர்களால் கருதப்பட்டு வருகிறது. எனவே எவ்வுலகத்திலும் லோகபந்துவென்று கொண்டாடப்பட்டுவரும் திவாகரனுக்கிணையான ஸங்கீதக் கலையும், எல்லாவுலகங்களிலும் அன்புடன் நல்வரவடைந்து பாராட்டும், முன்னேற்றமும் பெற்றுவருவதில் வியப்பென்ன இருக்கிறது?

நாதம் எப்படி உண்டாகிறது ?

நாபி[4]ளயத்[3]பி[3]ரஹ்மண: ஸ்தா[2]னம் பி[3]ரஹ்மகி[3]ரன்தி[4]ச்சயோ மத:
பிராணஸ்தன்மத்[4]யவத்தீஸ்யாத்[3] அக்[3]னே: பிராணத்ஸமு[3]த்ப[4]வ:
அக்[3]னிமாருதயோர்யோக[3]ாத் ப[4]வேந்நாத[3]ஸ்ய ஸம்ப[4]வ:
நகார: பிருணஇத்யுக்தோ த[3]காரோ வஹ்னிருச்யதே.

(ஸங்கீத ஸமயஸார:)

நாபிக்குக் கீழும் குறிக்கு மேலுமான திரிகோணவடிவமுள்ள மூன்று இதழ்களுடன் கூடிய பிரமகிரந்தி என்று சொல்லப்படும் மூலாதாரஸ்தானத்தில் எப்போதும் பிராணவாயு நிறைந்திருக்கிறது. அவ்வாயுவிலிருந்து ஜாடராக்னி என்ற அக்னியின் ஜ்வாலை எப்பொழுதும் உயிருள்ள தேகத்தில் எரிந்துகொண்டேயிருக்கிறது. நாம் சுவாசிக்கும் காற்று மூலாதாரத்திற் சென்று இந்த அக்னி ஜ்வாலையை மோதும்போது நாதம் உண்டாகிறது. ஆனால் நாம் காற்றை சுவாசிக்கும்தோறும் நாதம் உண்டாவதில்லை. நாதம் உண்டாவதற்காக ஒரு விசேஷ முயற்சியும் சாஸ்திரத்தில் கூறப்படுகிறது.

அதாவது:—

ஆத்மா விவக்ஷமாணேயம் மன: பிரேரயதே, மன:
தே[3]ஹஸ்த[2]ம் வஹ்னிமாஹந்தி ஸபிரேரயதி மாருதம்
பி[3]ரஹமகிரந்தி[4]ஸ்தி[2]த: ஸோரித[2] கிரமாதூ[3]ர்த்[4]வபதே[2] சரன்
நாபி[4]ஹிருத்கண்ட[2]முந்த்வாஸ்யே ஷ்வாவிர்ப[4]வயதித்[4]வனிம்

(ஸங்கீ[3]த ரத்னகர:)

ஒரு நாதத்தை எழுப்பவேண்டுமென்று ஆத்மா விரும்பும்பொழுது அதற்கேற்ற முயற்சியைச் செய்யுமாறு அது மனதைத்தூண்டுகிறது. அம்மனம் உடனே தேகமெங்கும் நிறைந்து நிற்கும் காற்றை யேவ, அது மூலாதாரத்திலுள்ள அக்னிஜ்வாலையைச் சென்று மோதுகிறது. பின்னர், அவ்வக்னிஜ்வாலையால் வேகத்துடன் வெளித்தள்ளப்படும் அக்காற்றே மேல் நோக்கி தொப்பூழ்,

நெஞ்சு, கழுத்து, தலை, வாய் என்னும் ஐந்து ஸ்தானங்களின் வழியாக வெளி வரும்போது நாதத்தையுற்பவிக்கச் செய்கிறது. நாபியிலுள்ள சக்ரம் அனாஹத சக்ரம், கழுத்திலிருப்பது விசுத்த சக்ரம், சிரஸிலிருப்பது ஸஹஸ்ரார சக்ரம். இவைகளில் முறையே மந்தர, மத்ய, தார நாதங்கள் உண்டாகின்றன. இதற்கு ஆதாரம்,

ஹிருத்³யாஜ்ஞக³த சக்ரேஸ்மின் நிலானலயோக³த:
ஆஹதஸ்தத்தநாத³: ஸ்பாதி³திசாஸ்த்ரே பிறகீர்திதம்.
கண்டே² விசுத்³த⁴ சக்ரம் ஸ்யாத் ஸஹஸ்ரூர்துமூர்தனி
மன்தி³ரமத்⁴யமதாராக்²யா ப⁴வேயுஸ்தேஷு சக்ரமாத:
பூர்வம் பிராணாக்³னிஸம்யோகா³த்யோநாத³ உதி³யோப⁴வேத்
ஸநாத்³ ஏவ ஓம்கார: ஸஏவ பிரணவாபி⁴த⁴:

(ஸங்கீ³தத³ாமோத³ரம்)

இதன் பொருள் வருமாறு:—

பிராணவாயுவினின்றும் ஜாடராக்னியினின்றும் இவ்வாறு உண்டாகின்ற நாதமே பிரணவமென்றும் ஓம்காரம் என்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய அதிஸூக்ஷ்மமான நாதங்கள் நான்கு வகையினவாக இதயத்தை வியாபித்திருக்கின்றன. பிராணவாயுவினின்றும் ஜாடராக்னியினின்றும் உண்டாகும் அதி ஸூக்ஷ்மமான நாதத்தை 'பரா' என்றும், நாபிக்கும் மூலாதாரத்திற்கும் மத்தியிலுண்டாகும் நுட்பமான நாதத்தை 'பச்யந்தீ' என்றும், மூலாதாரத்தில் வந்து மோதும் மெல்லிய நாதத்தை 'வைகரீ' என்றும், மூலாதாரத்திலிருந்து எழுந்து இருதயம் வரை வியாபிக்கும் நாதத்தை 'மத்யமா' என்றும் பெரியோர்கள் வருணித்திருக்கிறார்கள். இவைகளையே ''பராதி சத்வாரிவாகாத்மிகம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''தந்தாத³பஞ்சகம் சம்பே⁴ர: பஞ்சவக்த்ர ஸமுத்³ப⁴வம்''

(நூலாசிரியர்)

மேலும் இந்த நாதமானது ஐந்து இடங்களிலிருந்து வெளிப்படுகிறபடியால் பரமசிவனுடைய ஐந்து முகங்களிலிருந்து நாதத்தின் விகாரமான ஸப்தஸ்வரங்களும் உண்டாயினவென்று வேதங்கள் கோஷிக்கின்றன. ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் அவர்களும் ''ஸத்யோ ஜாதாதி பஞ்சவக்த்ரஜ ஸரிகமபதநி வரஸப்தஸ்வர' என்று வர்ணித்திருப்பதாகவும் முன்னர் கூறினேம். ஆனால் இதிற் பல ஆக்ஷேபங்கள் வரக்கூடும். அதாவது:—ஐந்து முகங்களிலிருந்து ஏழு ஸ்வரங்கள் எவ்வாறு தோன்றின வென்பதுவே. இதற்கு ஆதிபுருஷனை ஸ்ரீ சங்கரர் தம் ஸர்வ வல்லமை நிறைந்த இச்சையினால் உலகங்களனைத்தையும் படைத்து அவைகளுக்குரிய ஸகல ஸாதனங்களையும், தன்னிச்சையினாலேயே யுண்டாக்கினர். அதில் இப்பிரபஞ்சத்தின் மானிடவர்க்கத்திற்கேற்படும் வாழ்வு தாழ்வுகளின் காரணங்களை விளக்குவதற்கென்றே நவக்கிரஹங்களை யுத்பத்தி செய்யவேண்டியதாயிற்று.

அப்பொழுது தன் ஐந்து முகங்களின் வல்லமையால் சூரியன், சந்திரன், அங்காரகன், குரு, சுக்கிரன் என்ற இவ்வைந்து கிரஹங்களையுமே படைத்தா இவ்வைந்து கிரஹங்களும் நமக்கு ஐந்து ஸ்வரங்களாக அமையப் பெற்றன. மேற் கூறிய ஐந்து கிரஹங்களின் சூரியனுடைய புத்திரனாக சனியும், சந்திரனுடைய புத்திரனாக புதனும் உற்பவித்தார்கள். அவ்விருவருக்கும் ஒவ்வொரு கிரஹஸ்தானம் கொடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஏழு கிரஹங்கள் எனக் கொள்ளப்பட்டது. இவ்வாறே ஸங்கீதத்திலும் ஷட்ஜமாகிற சூரியனிடத்திலிருந்து, அந்தர காந்தாரமாகிற சனியும், சந்திரனாகிற பஞ்சமத்திலிருந்து, சதுச்ருதி ரிஷபமாகிற புதனும் உற்பத்தியானபடியால் ஸங்கீதத்திலும் கிரஹங்களைப் போலவே ஏழு ஸ்வரங்கள் வழங்கத் தலைப்பட்டன. புராதனமாகவுள்ள ஸாமவேதத்திலமைந்துள்ள 'நிதபமகரிஸ' என்ற அவரோஹணகதியான ஸாமஸப்தகம் என்ற ஸைந்தவீராகத்திலில்லாத தீவ்ரஸ்வரமான பிரதிமத்தியமத்தையும், காகலி நிஷாதத்தையுமே ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் ராஹு, கேதுக்கள் என்று ஷட்ஜத்தின்கீழும் பஞ்சமத்தின் கீழுமிருக்கிற காகலிநிஷாத, பிரதிமத்தியமங்கள் போல் சூரியனுக்குக்கீழும் சந்திரனுக்குக் கீழுமாக ராகு கேதுக்கள் அமைக்கப் பெற்றிருக்கிறார்கள். ராகுகேதுக்கள் எப்படி ஸ்வந்த இடமின்றி சாயாகிரகங்களாகவே இருக்கின்றனவோ அது போலவே காகலிநிஷாதமும், பிரதி மத்தியமமும் வேண்டிய இடங்களில் சாயாஸ்வரங்களாகவே அதி ஸூக்ஷ்மமாய் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும். ''காகளீ தூ களே ஸூக்ஷ்மே''என்ற வாக்கியத்தினால் இதன் கருத்தையறிந்து கொள்க. நவக்கிரகங்கள் என்று எப்படி அமைக்கப்பெற்றிருக்கின்றனவோ அப்படியே ஸங்கீதத்திற்கும் 9 ஸ்வரங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. நவக்கிரகங்கள் எப்படி மேஷராசியிலிருந்து மீனராசிவரையிலுள்ள 12 ராசிகளிலும் ஸஞ்சரிக்குமோ அவைகளைப்போல இந்த 9 ஸ்வரங்களும் 12 கிரகங்களில் ஸஞ்சரிக்கும். எப்படி நவக்கிரஹங்களைப் பிரஸ்தரிக்கும் போது அளவிலடங்காத எண்ணிக்கை யுண்டாகிறதோ அதுபோல் இந்த ஸ்வரங்களைப் பிரஸ்தரிக்கும் பொழுதும் மட்டிற்கடங்காத ராகங்கள் உண்டாகின்றன. ஜ்யோதிஷசாஸ்திரத்திற் கூறியபடி ஸங்கீத சாஸ்திரத்திற்கும் நஷ்ட உத்திஷ்டங்களும், 'கடபயாதி' ஸங்கியைகளும் கிரஹ, ஸ்வரஸ்புடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளை நன்கு ஆராய்ந்து பார்ப்போருக்கு ஸங்கீத சாஸ்திரத்தின் உண்மைகள் எளிதிற் புலனாகும்.

பூ⁴தாத்மக: பிரபஞ்சோயம் விசுவம் ஜீவாத்மகம் தத³ா
ஜீவஸ்யாந்தர்க³தோ நாத³: ஸப்ரேக்தோரக்ஷரஸம்ஜ்ஞக:
அகாராதி³ஹதாரான்தெ: வர்ணைரேவகிருதோமனு:
தெ³வநாத³ஸ்வரூபாஸ்தே த⁴ாயாயந்தேமுனிபி⁴ ஸத³ா

(நூலாசிரியர்)

இப்பிரபஞ்சம் பஞ்சபூதமயமானது. இதிற் பற்பல ஜீவன்கள் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு ஜீவனிலிருந்தும் ஒவ்வொருவிதமான நாதம் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இத்தகைய நாதத்திலிருந்தே அகாரம் முதல் ஹகாரம் வரையிலுள்ள அக்ஷரங்கள் உண்டாகியிருக்கின்றன.

வர்ணபூர்வகமேதத்^{3}தி^{4} பத^{3}ம்ஜ்ஞேயம்ஸத^{3}ா பு^{3}தெ^{4}:
பதெஸ்து நிர்மிதம் வாக்யம் கிரியாதாரதஸம்யுதம்
ததோவாக்யான்மஹாவாக்யம் வேத^{3}ா: ஸாங்க^{3}ாஹ்யனுக்றமாத்
வயக்தாஸ்தேத்^{4}வனித: ஸர்வே ததோ க^{3}ாந்த^{4}ர்வஸம்ப^{4}வ:

(பிரஹத்^{3} தே^{3}சீ)

அக்ஷரங்களின் சேர்க்கையால் பதங்களும் பதங்களால் ஸ்மஸ்தமான வௌகிக வைதிகவாக்யங்களும் வேதத்தினுட்பொருளான காயத்ரீ முதலிய மஹாமந்திரங்களும், ஸகலசாஸ்திரங்களுமுண்டாயின. எனவே நாதத்திலிருந்தே உலகவியஹாரம் முழுவதும் இந்த காந்தருவக்கலையாகிற ஸங்கீதமும் உண்டாயிற்று என்பது தெளிவாகும்.

நகார: பிராணஇத்யாஹு: த^{3}காரச்சானலோமத:
ஜாத: பிராணாக்^{3}னிஸம்யோக^{3}ாத் தேன நாதே^{3}ாfபி^{4}தீ^{4} யதே.

(ஸம்கீதரத்னாகர)

என்றபடி பிராணாக்நிஸம்யோகத்தாலுண்டாவதால் இது நாதமென்று பெயர்பெற்றது.

நாதப்பிரிவினை

அனாஹதோ ஹதச்செவ ஸநாதே^{3}ா த்^{3}வி விதே^{4}ாமத:
ஆகாசஸம்ப^{4}வோ நாத^{3}: ய: ஸோfனாஹதஸம்ஜ்ஞித:
தஸ்மின்னனாஹதே நாதே^{3}விராமம் பிறாப்ய தே^{3} வதா:
யோகி^{3}னோfபி மஹாத்மான: தத^{3}னாஹத ஸம்ஜ்ஞகே
மனோநிக்ஷிப்யஸம்யாந்தி முக்திம் பிரயதமானஸா:

(ஸம்கீத மகரன்த^{3}:)

ஆஹதம், அனாஹதம் என நாதம் இருவகைப்படும், அவற்றுள்—

ஆகாயத்திலுண்டாகும் நாதமானது அனாஹதம் என்று கூறப்படுகிறது. (எவ்வித அடி, மோதல், மீட்டல் முதலிய தாக்குதலின்றி நித்யமாயிருப்பது) இது தைவீக நாதமாகையால் இதனை தேவதைகளும் இயம, நியம, பிராணாயாமாதி யோகஸித்திகளினால் தெய்வத்தன்மை பெற்ற மகரிஷிகளுமே அந்தரங்க

மாயுபாஸித்து, பரம ரகஸ்யமாகத்தனக்குள்ளேயே அனுஸந்தாநம் செய்து ஆத்மானந்தத்தை யனுபவிப்பார்கள். எனவே தைவிகமான இந்த அனாஹத நாதத்தைப் பற்றிய விவரத்தை இத்துடன் முடித்துக் கொண்டு, நம் ஸங்கீத கலைக்கு மூலகாரணமான ஆஹதநாதத்தைப் பற்றி இனி ஆராய்வோம்;—

ஆஹதஸ்துமனுஷ்யாணா மெஹிகாமுஷ்மிகபிரத^{3}:
தேனத்வாஹதநாதே^{3}ன நிர்விருதிர்லப்^{4}யதே பரா.

(நூலாசிரியர்)

ஆஹதநாதமோ வென்றால்—இதுதான் ஸர்வஸாதாரணமாக பண்டிதர் முதல் பாமரர்வரை எல்லாமனிதர்களுக்கும் ஏன், பசு பக்ஷிகளுக்கும் கூட இம்மையிலின்பத்தையளிக்கவல்லது. இதனை முறைப்படி பயின்று, உபாஸிப்போரும், யாகம், தெய்வபூஜை முதலியவைகளில் விநியோகிப்போருமாகிய காயகர்கள் மோக்ஷத்தையும் அடைகிறார்கள்.

ஆஹதநாதப்பிரிவினை

நாதோ^{3}fயம்நத^{3}தேர்த^{4}ாதோ: ஸச பஞ்கவிதோ^{4} ப^{4}வேத்
ஸூக்ஷ்மச்செவாதிஸூக்ஷ்மச்சவ்யக்தோf வியக்தச்சகிருத்ரிம:

(பி^{3}ருஹத்^{3}தே^{3}சீ)

'நத' என்ற வினைச்சொல்லிலிருந்து 'நாத:' என்ற பதம் உண்டாயிருக்கிறது. இதற்கு ஓசை என்பது தான் பொருள். இந்த ஓம்கார நாதத்தையே ஆதியான பிரணவம் என்று சொல்லுவார்கள். எப்படி பிரமத்தினிடத்தில் மாயையானது எப்போதும் வியாபித்திருக்குமோ அதுபோல நாதத்தோடுகலை எப்போதும் விலகாமலிருக்கும். உதாரணமாக 'ஓ' என்பது ஒரு நாதம் 'ம்' என்பது பிந்து. இந்த நாதமும், பிந்துவும் சேர்ந்து உச்சரிக்கப்படும் 'ஓம்' என்பது என்ற பதத்தில் ஒரு இனிய கலை தானாக வந்து சேர்ந்து கொள்ளுகிறது. இதனையே பிரணவஸ்வரூபியான பரப்பிரமமெனக் கருதி, ''நாத^{3}பிந்துகளாதீ^{3} நமோ நமோ'' என்று குறிப்பிட்டிருக்கிறார் அருணகிரியாரும். எனவே த்வனித்தல் காரணமாக நாதம் என்னும் பதம் உண்டாயிற்று என்று மதங்க முனிவர் கூறியிருக்கிறார். ஆனால் நகாரம் பிராணனையும் உகாரம் அக்நியையும் குறிக்கும் பீஜாக்ஷரங்களாகையால் இவ்விரண்டின் சேர்க்கையாலும் உண்டாகும் ஓசை, நாதம் என்ற சொல்லால் லக்ஷணாவிருத்தியால் ஸூசிக்கப்படுகிறதென்று பார்ச்வதேவர், சார்ங்கதேவர், முதலியோர் கருதினர். இத்தகைய நாதம் கலைக்கு இருப்பிடமாக இருத்தலாலேயே நாம் அதனைக் கேட்டு இன்புறமுடிகிறது. நாதமும், பிந்துவும் சேரும்பொழுது கலை தானாக வந்து சேர்ந்துகொள்ளுகிறது.

நாதமும் கலையும்

ஸஒம்கார த[4]வனிஸ்த்வேக: தத்[3]வ்யாப்தமகி[2]லம் ஜக[3]த்
பரே[3] பிரஹ்ம மணி மாயேவ கலாபி[4]ன்னஸ்திஸார்லதா[3]
தஸ்மான்ன தா[3]தம்க ஒம் காராத் நாத[3]ான்தர முதே[3]திஹி
ஸநாத[3]ஸ்து கலா பி[4]க்[2]யா சக்திரான ந்த[3]தா[3]யினீ

(நூலாசிரியர்)

பொதுவாக சப்தத்தை (ஓசையை) நாதம் என்று சொல்லுவார்கள். ஆனல், கலையோடு சேராத சப்தம் நாதமென்று பெயர் பெறுது. காதுக்கு இனிமையையளிக்கும் சப்தமே கலையோடு கூடியதாயிருக்கும். கல்லையுடைப்பதினலும், மரத்தை வெட்டுவதினலும் உண்டாகும் சத்தத்தில் கலையின் சம்பந்தம் ஏற்படாதிருப்பதால் அவைகள் நாதமாகா. காதில் ஒரு ஸ்வரூபமாய் கேட்கக் கூடிய சத்தமே கலையுடன் கலந்த நாதமாகும். சிவசக்திகளின் சேர்க்கையால் செயல் உண்டாவதுபோல் கலையோடு சேர்ந்த சப்தத்திற்கே நாதத்தின் ஸ்வரூபம் ஏற்படுகிறது.

பஞ்சஸ்த[2]ானேத்[3]ப[4]வ: நாத[3]: பஞ்சத[4]ா பரிகி[3]ருஹ்யதே.

ஐந்து ஸ்தானங்களிலிருந்து நாதம் உண்டாவதால் இது ஐந்து விதமாகப் பிரிக்கப்படுகிறது. அது வருமாறு:—

ஸூக்ஷ்மோ நாதே[3]ாகு[3]ஹாவாஸீ ஹிருத[3]யே சாதி ஸூக்ஷ்மக:
கண்ட[2] மத[4]யேஸ்தி[2]தோவ்யக்த அவ்யக்த ஸ்தாலுதே[3]சகே
கிருத்ரிமோ முக[2]தே[3]சேது ஜ்ஞேய: பஞ்சவிதே[4]ாபுதை[3]:

(பி[3]ருஹத்[3]தே[3]சி)

மதங்கமுனிவர் நாதத்தை ஸூக்ஷ்மம், அதிஸூக்ஷ்மம், வ்யக்தம், அவ்யக்தம், க்ருத்ரிமம், என ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறார். ஆனல் பார்ச்வதேவர், சார்ங்கதேவர் முதலியோர் வ்யக்தம், அவ்யக்தம் என்பதிற்குப் பதிலாக புஷ்டம், அபுஷ்டம் என்றே பிரித்திருக்கிறார்கள். அதுவே சரியென்று கல்லிநாதர் முதலிய பிற்காலத்து வித்துவான்களும் அங்கீகரித்திருக்கின்றனர்.

அதிஸூக்ஷ்மச்சஸூக்ஷ்மச்ச புஷ்டோ[f] புஷ்டச்ச கிருத்ரிம:

(ஸ. ஸ. ஸார:)

இவ்வைந்துவித நாதங்கள் பிறக்குமிடம் வருமாறு:—

ஸூக்ஷ்மமென்பது நாபியிலிருந்தும், அதிஸூக்ஷ்மம் என்பது ஹிருதயத்திலிருந்தும், புஷ்டமென்பது கழுத்திலிருந்தும், அபுஷ்டமென்பது சிரஸிலிருந்தும், கிருத்திரிமம் என்பது முகத்திலிருந்தும் உண்டாகின்றன. ஆனல்—

கெச்சித்யத்பூர்வமுக்தம் தன்னேபபத்[3]யதே
பி[3]ந்துருத்பத்[3]யதே நாத[3]ாத் நாத[3]ான்நிகி[2]ல வாங்மயம்.

என்று கூறி பார்ச்வதேவர் தம் நூலாகிய ஸங்கீதஸமயஸாரத்தில் நாதத்திலிருந்து பிந்துவும், அந்த பிந்துவிலிருந்து எல்லாவித நாதமும் உண்டாவதால் ஸ்தான வேற்றுமை காரணமாக நாதத்தை ஐவகையாகப் பிரிக்கவேண்டியது அவசியமில்லை என்று கருதி மதங்கரது மதத்தைக் கண்டித்திருக்கிறார்.

தந்நாத[3]பஞ்சகம் சம்பே[4]ா: பஞ்சவக்த்ரஸமுத்[3]ப[4]வம்
தந்நாத[3]ாத் ஸ்வரநிஷ்பத்தி: ஸப்தத[4]ா பிரத[2]தே புவி.

(நூலாசிரியர்)

எனவே இத்தகைய உற்பத்திவாய்ந்த நாதத்திலிருந்துதான் ஏழு விதமாகப் பிரிக்கப்படும் ஸ்வரங்கள் உண்டாகின்றன.

நாதத்தின் பெருமை

ந நாதே[3]ன விநாகி[3]தம், ந நாதே[3]னவிநாஸ்வர:
ந நாதே[3]ன விநாநிருத்தம் தஸ்மாத்[3] நாத[3]ாத்மகம் ஜக[3]த்.
நாத[3]ரூப: ஸ்மிருதோ பிரஹ்மா நாத[3]ரூபோ ஜநார்த[3]ன;
நாத[3]ரூபாபராசக்தி: நாத[3]ரூபோமஹேசுவர:

(பி[3]ருஹத்[3]தே[3]சி)

நாதே[3]ாபாஸனயா தே[3]வா பி[3]ரஹ்ம விஷ்ணு மஹேசுவரா:
ப[4]வன்த்யு பாஸிதா நூனம் யஸ்மாதே[3] தே தத[3]ாத்மகா:

நாதமில்லாமல் கீதமில்லை. நாதமில்லாமல் ஸ்வரங்கள் இல்லை. நாதத்தினுதவியின்றி நர்த்தனமுமில்லை. எனவே கீதம், வாத்யம், நிருத்தம் என்னும் இம்மூன்றும் சேர்ந்த ஸங்கீதமே நாதத்தை மூலகாரணமாகக் கொண்டதாகும். மேலும் பராசக்தியான ஈசுவரியும், மகேச்வரனை பரமசிவனும் பிரமனும், திருமாலும் நாதப்பிரமத்திற்கு வசப்படுகிறார்கள். அதாவது நாதமயமான ஸாமவேதத்தை பிரமன் எப்போதும் கானம் செய்துகொண்டிருக்கிறன். முரளி வாத்தியமென்னும் வேணுகானப் பிரியனை விஷ்ணு விளங்கிறார். லாஸ்யமென்னும் நர்த்தனத்தில் பார்வதியும், தாண்டவமென்னும்

நர்த்தனத்தில் சிவனும் எப்போதும் ஈடுபட்டிருக்கிறார். நர்த்தனமென்பது கீதத்தையும், வாத்தியத்தையும் பின்பற்றியே நிகழ்வதென முன்னரே கூறியுள்ளோம். எனவே திரிமூர்த்திகளும், யக்ஷ, கின்னர, கந்தருவர்களும் மற்ற தும்புரு நாரதாதி மகரிஷிகளும் கூட நாதப்பிரமத்தில் ஈடுபட்டிருத்தலால் நாதத்தின் மகிமையை முற்றிலுமுரைப்பது முடியாத காரியம்.

நாதத்தினுட்பிரிவுகள்

இனி இந்த ஆஹத நாதத்தையே வேறொரு முறையில் **ஐந்துவிதமாக** நாரதர் பிரித்துக் காட்டுகிறார். அவை:—

1. நக²ஜம்
2. வாயுஜம்
3. சர்மஜம்
4. லோஹஜம்
5. சாரீரஜம் என்பன.

ஸோர்வ்யாஹத: பஞ்சவிதே¹ர்நாத³ஸ்து பரிகீர்தித:
நக²வாயுஜ சர்மாணி லோஹசாரிரஜாஸ்ததா²ர.
நக²ம்வீணுத³ய: ப்ரோக்தா: வம்சத³ர்யா: வாயுபூரகா:
சர்மாணிச மிருத³ங்க³ாத³யா: லோஹாஸ்லாத⁴ாத³யஸ்ததா²ர
தே³ஹநாதே³ன தேயுக்தா: நாத³ர்: பஞ்சவித⁴ர்: ஸ்மிருதா;

(ஸம். மகரன்த³:)

மேற்கூறிய ஆஹதமானது.

(1) நகஜம்—தந்திகளுடன் நகங்கொண்டு மீட்டப்படுவதால் ஏற்படுகிறது. இது நகஜமான நாதம் என்றறிக. வீணை முதலியன இவ்வகுப்பைச் சேர்ந்தவை.

(2) வாயுஜம்—அதாவது காற்றின் தாக்குதலால் ஏற்படும் நாதம். சங்கம், புல்லாங்குழல், நாகஸ்வரம் முதலியன இப்பிரிவைச்சேர்ந்தவை.

(3) சர்மஜம்—தோற்பரப்பில் கை அல்லது கோல் தாக்குதலால் ஏற்படும் நாதம். மிருதங்கம், பேரி முதலியன இதற்கு உதாஹரணமாகும்.

(4) லோஹஜம்—வெண்கலம் முதலிய உலோஹங்களில் தாக்குதலால் ஏற்படும் நாதம் இது. ஜாலரா, சேகண்டி முதலியன இதற்கு உதாஹரணமாகும்.

(5) சாரீரஜம்—மனிதனது சரீரத்திலிருந்து எழும் நாதம் சாரீரஜம் எனப்பட்டது. ஸூக்ஷ்மம் அதிஸூக்ஷ்மம் முதலிய முற்கூறிய 5 பிரிவுகளும் இந்த சாரீரஜமான ஆஹதநாதத்தின் பிரிவுகளேயாகும்.

ஸ்தான வேற்றுமையாலேற்படும் நாதவேற்றுமை

சார்ங்கதேவரும் பார்ச்வதேவரும் ஆஹதநாதத்தை ஸ்தானமுறையில் மூன்றுவிதமாகப் பிரித்து காட்டுகின்றனர். அது வருமாறு:—

வ்யவஹாரேத்வஸளத்ரேத⁴ர்ா ஹ்ரிருதி³ மன்தி³ரோரஸி²தி⁴யதே
கண்டே² மத⁴யோமூர்த்⁴னிதாரோ ‘த்³விகுணச்சோத்தரோத்தரா:

(ஸம். ரத்னகர:)

சங்கீதசாஸ்திர வியவஹாரத்தையொட்டி இந்த ஆஹதநாதம் மூவகைப்படும். இதயத்திலுண்டாகும் நாதம் மந்தரநாதமென்றும், கழுத்திலுண்டாவது மத்யமென்றும், சிரஸிலுண்டாவது தாரநாதமென்றுமறிக. இவைகளில் ஒன்றைக் காட்டிலும் மேலுள்ள மற்ற நாதம் இருமடங்கு முயர்சியுடன் வெளிப்படுத்தப்படுவது. அதாவது:—மந்திரஷட்ஜத்திலிருந்து ஆரோஹணமுறையில் எட்டாவது ஸ்வரம் மத்யஷட்ஜமாயும் அதிலிருந்து மேலே எட்டாவது ஸ்வரம் தாரஷட்ஜமாயுமமையுமென்றறிக.

நாதோபாஸனையின் பயன்

இத்தகைய பெருமை வாய்ந்த நாதத்தையுபாஸனை செய்வதினால் நாதரூபிகளான திரிமூர்த்திகளையும் உபாஸித்த பலனையடையலாமென்கிறார் சார்ங்கதேவர் இம்மொழியில்.

நாதே³ர்பாஸனயாதே³வா பி³ரஹ்மவிஷ்ணுமஹேசுவரா:
ப⁴வன்த்யுபாஸிதாநூனம் யஸ்மாதே³தே தத³ர்த்மகா:

இதன் உண்மையை யறிந்தவரான ஞானிசிரேஷ்டரான ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் அவர்களும் ‘‘நாத³தனுமனிசம்’’ என்ற கீர்த்தனத்தால் நாதரூபியாகவே பரமாத்மாவையநுஸந்தானம் செய்து, தான் வழிபட்டுவந்த விதத்தை விளக்கியிருக்கிறார். மேலும் அவர் கூறியிருப்பதும் நாம் முற்கூறிய நாதோத்பத்தி முறைக்கு ஆதாரமாக்க விருத்தலால் அதனையும் இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.

பிராணனலஸம்யோக³முவல்ல பிரணவநாத³முஸப்தஸ்வரமுலெ ப³ரக³ம்.
வீணுவாத³னலோலுட³ளிவமனோ வித⁴மேருங்க³ருத்யாத³ராஜவினுத.

(ஸாரமதிராக³கீர்த்தனம்)

இப்பெரியார் நாதப்பிரமத்தையுபாஸிப்பதின் மூலம் பிரமானந்த நீலயமாகிற மோக்ஷத்தையடையலாமென்பதையும்

''ஸ்வாது^{3} ப^{2}லபிரத^{3}ஸப்தஸ்வர ராக^{3}நிசயஸஹித
நாத^{3} லோலுடெ^{3} பிரஹ்மானன்த^{3} மன்த^{3}வே; மனஸா

என்று கல்யாணவஸந்த ராகக் கீர்த்தனையிற் பாடியிருக்கிறார்.

நாதோபாஸிகளின் சிறப்பு

எனவே நாதப்பிரமரூபமாகவே த்ரிமூர்த்திகளுமிருப்பதாகவே முன்னர் கூறினேம். இதனை முற்றிலும் அங்கீகரித்த மஹா தத்வஞானியாராகிய ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் நாதப்பிரமமாகிற பரப்பிரமத்தையுபாஸிப்போராகிய ஸங்கீதவித்துவான்களும் பகவத்பக்தர்களுக்கு ஒப்பாவார் எனக் கருதி, தனது நமஸ்காரத்தை காயகோத்தமர்களாகிய எல்லா நாதோபாஸிகளுக்கும் இக்கீர்த்தனையாலறிவிக்கிறார்.

மாயாமாளவ கௌளை-தேசாதி

பல்லவி:

விது^{3}லகும்ரோக்தேத^{3}—ஸங்கீதகோ (விது^{3})

அனுபல்லவி:

முத^{3}முன, சங்கரகிருதஸாமநிக^{3}ம விது^{3}லகு, நாத^{3}ாத்மகஸப்தஸ்வர (விது^{3})

சரணம்

கமலக^{3}ளரி, விதி^{4}, க^{3}ருட^{3}த்^{4}வஜ, சிவ, நாரது^{3}லு, அமரேச, ப^{4}ரத,
காசயப, சண்டீசாஞ்சனேய குஹக^{3}ஜமுகு^{3}லு
ஸுமிருக^{3}ண்டு^{3}ஜ, கும்ப^{4}ஜ, தும்பு^{3}ரு, வரஸோமேசுவர,
சார்ங்க^{3}தே^{3}வ, நன்தி^{3}

பிரமுகு^{2}லகு^{3}த்யாக^{3}ராஜவன்த^{3}ய லுகு—
பிரஹ்மானன்த^{3} ஸுத^{2}ாம்பு^{3}த^{4}ாமர்ம
(விது^{3}லகு)

எனவே நாதோபாஸிகளான பெரியோர் விருப்பு, வெறுப்பற்ற மகாஞானிகளான ஸ்ரீ தியாகராஜர் முதலானவரும் கூட வணங்குதற்குரியவரென்றால் இவரது சிறப்பை யெடுத்துரைக்கவும் இயலுமோ!

சுருதிப் பிரகரணம்

சுருதியின் லக்ஷணம்:—

சிரவணேன்தி^{3}ரிய கி^{3}ராஹ்யத்வாத் த்^{4}வனிரேவசுருதிர்ப^{4}வேத்.

காற்றின் அடியினால் உடனே ஏற்பட்டதும், முதலாவது க்ஷணத்தில் கேழ்க்கப் படுகிறதுமான தொனியே சுருதி எனப்படும். முன்பு கூறின 22 நாடிகள் நான்கு பக்கங்களிலும் பின்னப்பட்டவையாகவும், காற்றினால் அடிக்கப் பட்டவையாகவும் இருக்கின்றன. அவைகளுள் மந்த்ரஸ்தானத்திலிருக்கிற முதல் நாடியிலிருந்து உண்டான ச்ருதி, சிறிய நாதமுள்ளதாக விருக்கிறது. அதனைக் காட்டிலும் முறையே அடுத்து அடுத்து இருக்கின்ற நாடிகளால் சிறிது அதிக சத்தமுள்ள சுருதிகள் உண்டாகின்றன. இதே போல் மற்ற இரு ஸ்தாயிகளிலும் அறியவேண்டும்.

தேதுத்வாவிம்சதிர்நாத^{3}ா நகண்டேனபரிஸ்பு^{2}டா:
சக்யா த^{3}ர்சயிதும் தஸ்மாத் வீணயாம் தன்நித^{3}ர்சனம்.
(ஸ. ர.)

இவ்வாறு சரீரத்திலுள்ள மூன்று ஸ்தானங்களிலும், நாடிகளின் பேதங்களால் உண்டாகிற நாதம் கண்ணுக்குப் புலப்படாமையால் 'நாதம்' என்கிற ஒன்று இருப்பதிலேயே ஸந்தேஹம் வருமாயின், அச்சந்தேஹத்தை நீக்குவதற்காக, பரத்யக்ஷமாகவே வீணையில் அந்த நாதத்தை நிரூபித்துக் காட்டுகிறோம்.

இரண்டு வீணைகள் ஸமானநாதமுள்ளவைகளாக எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகள் ஒவ்வொன்றிலும் இருபத்திரண்டு மெட்டுகள் அமைக்க வேண்டும். அவைகளுள் முதலாவது மெட்டு மந்த்ரநாதமுள்ளது. (மிகவும் மெல்லிய நாதமுடையது) அதற்கு அடுத்தது முன் தொனியைவிட சிறிது அதிகமான தொனியையுடையது. இவ்வாறு மற்றவைகளையும், கெட்டியாகவும், வரிசையாகவும், முன் தொனியை விட அதிகத் தொனியுள்ளவைகளாகவும் அமைக்கவேண்டும்.

முன்பு கூறப்பட்ட இரு வீணைகளிலும், ஷட்ஜம் நான்கு சுருதிகள் உள்ளதாக வமைத்தல் வேண்டும். அதற்கு நான்காவது மெட்டில் ரிஷபம் மூன்று சுருதிகள் உள்ளதாகவும், பஞ்சமத்திலிருந்து மூன்றுவதில் காந்தாரம் இரு சுருதிகள் உள்ளதாகவும் எட்டாவதிலிருந்து இரண்டாவதில் மத்யமம நான்கு சுருதிகள் உள்ளதாகவும், பத்தாவதிலிருந்து நான்காவதில் பஞ்சமம் சதுச்ருதியாகவும், 14—வதிலிருந்து 4—வதில் தைவதம் த்ரிச்ருதியாகவும் 18-வதிலிருந்து மூன்றுவதில் நிஷாதம் இரு சுருதியுள்ளதாகவும் அமைக்க வேண்டும்.

இவ்வாறு மெட்டுகள் அமைத்த பின்னர், தாழ்ந்திருக்கின்ற மெட்டுகள் வரிசையாக சிறிது, சிறிது. அதிக தொனிகள் உள்ளவைகளாக இருக்கின்றன. மனிதனின் சரீரத்திலிருக்கின்ற சுருதிகள் முறையே அதிகத் தொனியுடையனவாக எப்படி இருக்கிறனவோ, அதே போல் வீணையிலும் தாழ்ந்திருக்கின்ற மெட்டுகள் முறையே சிறிது சிறிது அதிகத் தொனியுள்ளவைகளாக இருக்கின்றன. அந்த மெட்டுகளில் மீட்டுவதால் உண்டாகிற நாதம் 'சுருதி' என்று கூறப்படுகிறது.

த்^{3}வாவிம்சதிம் கேசது^{3}த^{3}ாஹரன்தி சுருதி: சுருதிஜ்ஞானவிசாரத^{3}க்ஷா
ஷட்ஷஷ்டி^{2} பி^{3}ன்னு: க^{4}லுகேசிதாஸாமானன்த்யமேவ பிரதிபாத^{3}யன்தி.
(ஸ. ர)

'சுருதி' என்கிற சொல்லின் பொருளையும், அது ஒன்றா அல்லது பலவா? என்கிற விஷயத்தில் மதங்கமுனிவர் கூறியபடி மதங்களின் பேதங்களைக் கூறுவோம்:—

ஸ்ரீஸ்ரீவணே என்ற தாதுவுடன் 'தி' என்ற விகுதி சேர்ந்தபின் சுருதி ச்ருதி என்கிற சொல் ஏற்படுகிறது. ஆகவே கேழ்க்கப்படுவதால் இதற்கு சுருதி என்கிற பெயர் உரித்தாயிற்று.

சிரவணேன்தி^{3}ரியகி^{3}ராஹ்யத்வாத் த்^{4}வனிரேவ சுருதிர்ப^{4}வேத்
ஸாசெகாபித்^{3} வித^{4}ாஜ்ஞேயா சுருதய: சுருதிவேதி^{3}பி^{4} :
(பிருஹத்^{3}தே^{3}சீ)

மதங்க முனிவர்: இவருடைய மதத்தில் ச்ருதி ஒன்றுதான். எப்படியெனில்:—

ஆகாயம், காற்று இவைகளின் சேர்க்கையாலும், ஆத்மாவின் முயற்சியினாலும் தொனி ஏற்படுகிறது. இது கொப்பூழின் மேல் பாகத்தை வியாபித்து அங்கு இருக்கிற நரம்புகளாகிறபடிகளிலும் பரவுகின்றது. இது ஒரு சுருதியாயிருந்து கொண்டே பின்பு பல நரம்புப்படிகளில் பரவுவதால் சுருதி ஒன்றுதான் என்று மதங்க முனிவரின் கருத்து. இது நான்காவது சுருதி முதலிய பேதங்களைக் காட்டிலும் மாறுபாடு உள்ளதாக இருக்கும்.

சிலர் ஸ்வரம் அந்தரம் எனப் பிரித்து சுருதி இருவகையானது என்று கூறுகின்றனர். இதையே விச்வாவஸு என்ற முனிவர் கூறுகிறார்:—

''நியதசுருதிஸம்ஸ்த^{2}ானாத் கீ^{3}யதேஸப்தகீ^{3}திஷு.
தஸ்மாத்ஸ்வரக^{3}தாஜ்ஞேயா: சுருதய: சுருதிவேதி^{3}பி^{4} :''

தொனியே காதுகளால் கேழ்க்கப்படுவது காரணமாக சுருதி என்ற பெயரை யடைகிறது. சுருதி பொதுவில் ஒன்றாயினும், ஸ்வரம், அந்தரம் என்கிற பிரிவால் இருவகைப் படுகிறது. அதாவது:—சுத்தமான சுருதி,

ஸ்வரம் எனவும், விகிருத (மாறுபடும்) சுருதி, அந்தரமெனவும் கருத்தப்படுகிறது. இவைகள் குறிப்பிட்ட சுருதிகளுடன் சேர்ந்து ஏழு கீதிகளிலும் பாடப்படுகின்றன. எனவே இவைகள் தான் ஸ்வரங்களையடைந்திருக்கின்றன என்று சுருதிக்களானமுள்ளவர்களால் அறியத்தக்கது.

''அன்தரஸ்வரவர்தின்யோ ஹயன்தரசுருதயோமதா:

அந்தர ஸ்வரங்களிலிருப்பவை அந்தர சுருதிகள் எனப்படும். ஆகவே மேல் குறிப்பிட்ட சுருதிகளின் வித்தியாஸங்கள் அவைகளின் கிரியை, கிரமம் இவைகளின் பிரிவுகளால் அறியற்பாலன.

''மன்தி^{3}ரமத்^{4}யமதாராக்^{2}யா ப^{4}வேயுஸ்தேஷுது கிரமாத்
சுருதய: ஸ்யு: ஸ்வராபி^{4}ன்னு: சிராவணத்வேனஹேதுனு''.
(ஸம். பாரிஜாதம்)

அஹோபிலர் தமது நூலில் சுருதிகள் மந்த்ரம், மத்யம், தாரம் என்ற மூன்று ஸ்தாயிகளிலும் சம்பந்தப்படுவது காரணமாக மூன்று பிரிவையடைகின்றன என்று கூறியிருக்கிறார்.

தும்புரு என்ற முனிவர் சுருதிகளின் பிரிவைப்பற்றி கீழ்வருமாறு கூறுகிறார்:—

''உச்செஸ்தரோ த்^{4}வனீரூக்ஷோ விஜ்ஞேயோ வாதஜோ பு^{3}தெ^{4}:
க^{3}ம்பீ^{4}ரோ க^{4}னலீனஸ்து ஜ்ஞேயோfஸள வித்தஸோ பு^{3}தெ^{4}:
ஸ்நிக்^{3}த^{4}ஸ்து ஸுகுமாரச்ச மது^{4}ர: கப^{2}ஜோத்^{4}வனி:
திரயாணாம் குணஸம்யுக்தோ விஜ்ஞேய: ஸன்னிபாதஜ:
(தும்பு^{3}ரு:)

இதன் பொருள்:—

இந்திரியங்களின் பலக்குறைவு காரணமாக சுருதி மூன்றுவிதமாகப் பிரிக்கப்படலாம். இங்கு இந்திரியமென்று மனம் குறிப்பிடப்படுகிறது. பலக்குறைவு என்பது ஸஹஜம், தோஷஜம், அபிகாதஜம் என மூவகைத்து. அவற்றுள் 'ஸஹஜ' மென்பது ஸத்வ குணத்தோடு மனம் கூடியிருக்கும் நிலையாகும். மனம் ரஜோ குணத்தோடும் தமோகுணத்தோடும் கூடியிருப்பின் 'தோஷஜம்' எனப்படுகிறது. புளிப்பு முதலிய சுவைபலத்தால் குன்றியிருப்பின் அம்மனம் 'அபிகாதஜம்' எனப்படுகிறது.

வேறு சிலர் வாதம், பித்தம், கபம், ஸன்னிபாதம் இவைகளின் நிமித்தமாகவும் சுருதி நான்கு விதமாகப் பிரிக்கப்படலாமெனக் கருதுகின்றனர். வேணவர் முதலிய வேறு சில முனிவர்கள் சுருதியை ஒன்பது விதமாகப் பிரிக்கின்றனர்.

அதாவது:—

த்^{3}விசுருதிஸ்திரிசுருதிச்செவ சது: சுருதிக ஏவச
ஸ்வரபிரயோக^{3}: கர்தவ்ய: வம்சசி^{2}த்^{3}ரக^{3}தோ பு^{3}தெ^{4}:

மேற்கூறிய பிரிவில் 'வாதஜம்' என்பது மேல் ஸ்தாயியிலுள்ளதும், கடுமையுமான தொனியாகும். 'பித்தஜம்' என்பது கம்பீரமாயும், இனிமையுடையதுமாகும். 'கபஜம்' என்பது செவிக்கினியதும், மெல்லியதுமாகும். மேற்கூறிய வாதம், பித்தம், கபம் என்னும் முக்குணங்களுடன் கூடிய நாதம் 'ஸன்னிபாதஜம்' எனப்படுகிறது.

'ஸங்கீத தாமோதரம்' என்னும் பழைய நூலில் சுருதிக்கும் ஸ்வரத்திற்கும் நுட்பமான வேற்றுமை உண்டு என்பது கீழ்க்கண்ட சுலோகங்களால் விளக்கப்பட்டிருக்கிறது.

சுருதிஸ்த^{2}ானே ஸ்வரான்வக்தும் நாலம் பி^{3}ரஹ்மாபி தத்வத:
ஜலே ச ஸுதராம் மார்கே^{3}ா மீனானாம் நோபலக்ஷ்யதே
க^{3}க^{3}னே பக்ஷிணாம் யத்^{3}வத் தத்^{3}வத் ஸ்வரக^{3}தா சுருதி:
சுருதிர்நாத^{3}வசா பிரோக்தா தத^{3}ாட்^{4}யா ச கலா மதா
யத^{2}ா தெலகரதம் ஸர்பி: யத^{2}ாகாஷ்ட^{2}க^{3}தோfனல்:
ஜ்ஞாயதேத்ரோ பதே^{3}சேன தத^{2}ா ஸ்வரக்^{3}தாசுருதி:
வீணாதே^{3}ஸ்து சுருதிஜ்ஞானம் ஸ்வரஜ்ஞானம் து வம்சஜம்
அசுவினள வஸவோ ருத்ராஸ்ஸஹெணாங்கேனசு சுருவு:
பிரசசம்ஸு: ஹரேர்நாத^{3}மதோ த்^{3}வாவிம்சதி: சுருதி:

(ஸங்கீதத^{3}ாமோத^{3}ர:)

சுருதியையே ஸ்வரமென்று சொல்வதற்குப் பிரமனாலும் இயலாது. ஏனெனில்; சுருதியிலிருந்து தோன்றும் ஸ்வரங்கள் சுருதிகளிலிருந்து வேறுபட்டவைகளாகவே இருக்க முடியும். எனவே இவைகளுக்கிடையே நுட்பமான பேதம் இருப்பது மறைக்கமுடியாததாகும். வெளிப்படையாகத் தெரியாத பொருள்களும் உலகத்தில் உள்ளன. எவ்வாறெனில் ஜலத்திலேயே ஸஞ்சரித்துக் கொண்டிருக்கும் மீன்களுக்கும், வானத்திலேயே ஸஞ்சரித்துக்கொண்டு இருக்கும் பக்ஷிகளுக்கும் கூட புலப்படாத வழிகள் ஸூக்ஷ்மமாக உள்ளன. அதுபோலவே பெரியோர்களின் உபதேசத்தினால் மாத்திரம் அறியத்தக்கதான சுருதிஸ்வரபேதம் தைலத்தில் நெய்போலவும், விறகில் நெருப்பு போலவும், மறைந்து நிற்கிறது. வீணை முதலிய வாத்தியங்களின் உதவியால் சுருதிஞானத்தையும், குழல் முதலிய வாத்தியங்களிலிருந்து ஸ்வரஞானத்தையும் அடையலாம் என்பது இதன் கருத்து.

பரதமுனிவரும்:—

த்^{3}விஸ்திரிகச்சதுஷ்காஸ்து ஜ்ஞேயா: வம்சக^{3}தா: ஸ்வரா:
கம்பமானார்த^{4}முக்தாச்ச வ்யக்த முக்தாங்கு^{3}லிஸ்வரா:
இதி தாவன்மயா ப்ரோக்தா: ஸமீச்ய: சுருதயோ நவ.

என்ற சுலோகங்களால் சுருதிகளின் ஒன்பதுவிதப் பாகுபாட்டை ஒப்புக் கொள்ளுகிறார். மேற்கூறிய ஆறு மதங்களும் சுருதியும் ஸ்வரமும் ஒன்றே என்ற மதத்தைத் தழுவிய கொள்கைகளாகும்.

சுருதி, ஸ்வரத்தைத் தோன்றச் செய்வதால் தோன்றல், தோன்றுவித்தல் என்னும் இந்த பேதத்தை மறைத்து அவ்விரண்டையும் ஒன்றாகவே மேற்கூறிய ஆறு மதங்களும் கருதுவதால் அவை கல்லிநாதருடைய மதத்திற்கு விரோதமானவை. கல்லிநாதர் சுருதிக்கும், ஸ்வரத்திற்கும் இடையே நுட்பமாக இருக்கும் பேதத்தை மறைக்க விரும்பவில்லை.

ஸங்கீத பாரிஜாதத்தில் அஹோபிலர் சுருதி, ஸ்வரம் இவைகளின் அபேதத்தைப் பின்வருமாறு கூறுகிறார்:—

சுருதய: ஸ்யு: ஸ்வராபி^{4}ன்னா: சிராவணத்வேன ஹேதுனா
அஹிகுண்ட^{3}லிவத்தத்ர பே^{4}தே^{3}ாக்தி: சாஸ்திரஸம்மதா
ஸர்வாச்ச சுருதயஸ்தத்தத்^{3}ராகே^{3}ஷு ஸ்வரதாம் க^{3}தா:
ராக^{3}ாஹேதுத்வ ஏதாஸாம் சுருதிஸம்ஜ்ஞெவஸம்மதா
கேசாக்^{3}ர வ்யவத^{4}ானேன ப^{3}ஹ்வ்யோfபிசுருதய: சுருதா:
வீணாயாம் ச தத^{2}ா க^{3}ாத்திரே ஸங்கீதஜ்ஞானினாம் மதே
மத்^{4}யே பூர்வோத்தராப^{3}த்த^{4}வீணாயாம் க^{3}ாத்ரா ஏவ வா
ஷட்^{3}ஜ பஞ்சமப^{4}ாவேன சுருதீர்த்^{3}வாவிம்சதிம் ஜகு^{3}:

சுருதியும் ஸ்வரமும் வேறுபட்டவையல்ல. கேழ்க்கப் படுதல் என்னும் காரணம் பற்றி சுருதி எனப் பெயர் வழங்குகிறது. ஆயினும் இவைகளுக்கு பேதம் சாஸ்திரங்களில் கூறப்படின் அது மிகவும் நுட்பமாக கவனிக்கத்தக்கதாகும். உதாரணமாக: ஸாதாரணமாக இருக்கும் போது பாம்பு என்று குறிப்பிடப்படும் அதே பொருள் வளைந்து சுருண்டு வளைவடிவாக இருந்தால் அதையே குண்டலீ என்று உலகவழக்கில் வேற்றுமைப் படுத்தி வழங்குவது போல் இந்த சுருதிகளே அந்த அந்த ராகங்களில் வரும்போது ஸ்வரங்களாக அமைகின்றன.

கூந்தல் இழை நுனி அளவு வித்தியாஸத்தில் வேற்றுமைப் படுவனவாக எண்ணற்ற சுருதிகள் இருக்கின்றன. இவற்றை வீணையிலும், நுட்பமான சாரீரத்திலும் ஞானிகள் கண்டுகொள்ளலாம். அகோபிலர் இருபத்திரண்டு சுருதிகளை 'ஸங்கீத மகரந்த'த்தில் கூறிய முறைப்படி பெயரிட்டு குறிப்பிடுகிறார்.

ஆராய்ச்சி சாஸ்திரமறிந்தவர்களில் சிலர் இருபத்திரண்டு சுருதிகள் என்று கூறுகின்றனர். வேறு சிலர் அறுபத்தாறு சுருதிகள் என்று கூற, மற்றும் சிலர் சுருதிகள் எண்ணற்றவை யென்று கூறுகின்றனர். இந்த அபிப்பிராயபேதத்தை பண்டைக் காலத்து இசைவாணராகிய கோஹலர்:—

த்³வாவிம்சதிம் கேசிதுதாஹரன்தி சுருதி: சுருதிஜ்ஞான விசாரத³க்ஷா
ஷட்ஷஷ்டி² பி⁴ன்னு: க²லு கேசித³ாஸாம் ஆனன்த்யமேவ பிரதிபாத³யன்தி
என்று கூறி

சுருதிகள் எண்ணற்றவைகளாக இருத்தலைப் பின் கண்ட உதாரணத்திலும் விளக்குகிறார்:—

ஆனன்த்யம் ஹி சுருதீனும்ச ஸுசயன்திவிபச்சித:
யத²ா த்⁴வனி விசேஷாணும் அமானம் க³க³னேத³ரே
உத்தாலபலனேத்³வேலல்ஜ்ஜலராசி ஸமுத்³ப⁴வா:
இயத்ய: பிரதிபத்³யன்தே நதரங்க³ பரம்பரா:

ஆகாயத்தில் உண்டாகிற தொனிவிசேஷங்கள் எப்படிக் கணக்கிடமுடியாதவையோ, புயற்காற்றினால் அடிக்கப்பட்ட ஸமுத்திர அலைகள் எப்படி எண்ணற்றவைகளாக இருக்கின்றனவோ அவ்வாறே சுருதிகளும் ஒரு கணக்கில் அடங்காமலே இருக்கின்றன.

நாரதர் தமது நூலாகிய ஸங்கீதமகரந்தத்தில் சுருதிகள் 22 என்பதை:—

சதுச்சதுச்சதுச்செவ ஷட்ஜமத்⁴யம பஞ்சமா:
த்³வேத்³வே நிஷாத³ க³ான்தாரள திரிஸ்திரி ரிஷப⁴தைவதள.

என்று கூறியிருக்கிறார்.

மதங்கர் முதலிய முனிவர்களால் கூறப்பட்ட ஒன்பது மதங்களிலும் சுருதிகள் இருபத்திரண்டு என்ற கொள்கையைத் தழுவும் மதம் சுருதிஸ்வரம் இவைகளின் பேதங்களைத் தெரியப் படுத்துவதாலும், ஸப்தஸ்வரங்களையும் அப்பியாஸத்தினால் வியவஹாரத்திற்கு தகுந்தவைகளாக அமைக்கமுடிவதினாலும் 'துருவவீணை' 'சலவீணை' என்ற இரு வீணைகளிலும் நிச்சங்க சார்ங்கதேவர் இருபத்திரண்டு சுருதிகளையே விளக்கிக் காட்டியிருப்பதாலும் இம்மதமே சிறந்தது என்று அறிக.

அவர் குறிப்பிடும் வீணைகளில் 'துருவா' என்பது 22 மெட்டுக்களுடனும், 'சலவீணை' என்பது 21 மெட்டுக்களுடனும் அமைக்கப்படுவது. இவ்விரண்டிலும் ஸாரணைகள் அமைக்கவேண்டும். சுருதி, ஸ்வரம் இவைகளின் கணக்கையறிவதற்காக சலவீணையில் ஸாரணைகள் அமைக்கவேண்டும். முதல் ஸாரணையில் ஸப்தஸ்வரங்களையும் தனக்கு ஸமீபமாக அமைக்கவேண்டும். இவ்வாறு அமைத்தபின்னர் ஸாரணையிலிருந்து வெவ்வேறு சுருதிகளும் உண்டாவதால் வெவ்வேறு ஸ்வரங்களும் ஏன் ஏற்படா என்றால் அதற்கு சமாதானம் வருமாறு:—

துருவ வீணையில் எவ்வளவு ஸ்வரங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு ஸ்வரங்கள் தான் சலவீணையிலும் இருக்கின்றன. ஆயினும் அதனைக் காட்டிலும் இதில் ஒரு சுருதி இல்லாததால் சிறிது வேற்றுமை யென்று மாத்திரம் அறிக.

துருவவீணைக்குச் சொன்ன சதுச்சுருதிகளான ஷட்ஜம் முதலியவைகள் இந்தச் சலவீணையில் ஏற்படினும் ஒரு சுருதியினுடைய குறைவால் விசேஷமாக வேறு ஸ்வரம் உண்டாவதில்லை. மற்ற ஸாரணைகளிலும் இது போலவே கண்டுகொள்க.

இரண்டாவது ஸாரணை முதலிய தந்திகளில் ஸ்வரங்களின் அமைப்புப் பின் வருமாறு கூறப்படுகிறது.

சலவீணையின் இரண்டாவது ஸாரணையில் தனக்கு அடுத்ததும், கடைசிக்கு ஸமீபத்திலுள்ளதுமான தந்திகளிலிருக்கிற காந்தார நிஷாதங்கள் துருவ வீணையில் அதன் ஆதாரச் சுருதிகளான ரிஷபம் தைவதம் இவைகளில் முறையே பிரவேசிக்கின்றன. அவை தனித்தனியே தமக்குள்ள இரண்டு சுருதிகளை விட்டுவிடுவதால் அதாவது ஒரே சுருதி போல் லயமடைவதால் ஒற்றுமையுள்ள நாதத்தையடைகிறது.

இவ்வாறே மூன்றாவது ஸாரணையில் ஷட்ஜம், பஞ்சமம் இவைகளில் முறையே ரிஷபம், தைவதம் இவைகளும், நான்காவது ஸாரணையிலுள்ள நிஷாத, காந்தார, மத்தியமங்களில் ஷட்ஜ. மத்தியம், பஞ்சமங்களும் லயத்தை யடைகின்றன.

இங்கு ஒரு ஆக்ஷேபம் உண்டாகலாம்; அதாவது:—

நான்காவது ஸாரணையில் மந்த்ர ஷட்ஜத்திற்கு நிஷாதத்தில் பிரவேசம் கூறப்பட்டிருக்கிறதே! 'காரியா மந்திரதலா' என்றபடி ஷட்ஜத்தையே முதல் சுருதியாகக் கொண்டு ஆரம்பிப்பதாலும், அதற்கு முன் யாதொரு தொனியும் இல்லாததாலும், தொனியுண்டாவதற்குப் போதிய தந்தியில்லாததாலும், ஸப்த தொனிகள் உண்டாவது பொருந்தாதாகையால் மேற் கூறியது எப்படிப் பொருந்தும்? என்ற ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் பின் வருமாறு:—

அப்படியிருந்த போதிலும் மந்த்ரஸ்தாயியிலுள்ள ஏழு ஸ்வரங்களை ஆவ்ருத்தி செய்வதால், ஷட்ஜ நிஷாதங்கள் ஸமீபத்திலிருக்கிற படியால் நிஷாதத்தின் ஆதார சுருதியை கடைசிக்கு ஸமீப சுருதியாகக் கல்பித்து பிரவேசம் செய்வதால் மேற் கூறிய ஆக்ஷேபத்திற்கு இடமில்லை. அல்லது வேறு ஒரு ஸ்தானத்திலிருந்து ஆவ்ருத்தி செய்யப்படும் அந்த ஷட்ஜத்திற்கே முன்னதாக நிஷாதமிருப்பதால் அதில் பிரவேசம் கூறுதல் தகுதியுள்ளதாகும்.

இனி ஸாரணைகளின் பலனை யாராய்வோம்:—

முன்னர் நான்கு ஸாரணைகளிலும் 22 சுருதிகளின் அமைப்பைக் கூறினோம். துருவவீணை'யின் சுருதிகளில் சுருதிலயம் ஏற்படும்போது அதன் கணக்கு நன்றாக அறியப்படுகிறது. ஆகவே ஸாரணைகளின் பலன் சுருதிகளின் நுட்பமான ஞானமே யென்று அறிக.

சிலர் 5-வது ஸாரணை அமைக்கவேண்டுமென்று கருதுகின்றனர். அவ்வாறு அமைத்தால் ராகங்களின் இனிமை ஏற்படுவதில்லையாகையால் இதற்கு மேல் ஸாரணைகள் அமைக்க வேண்டியதில்லையென்று கல்லிநாதர் கருத்து.

இனி சுருதிகளைப் பற்றி ஸ்ரீ வெங்கிடமகி அவர்கள் தமது நூலாகிய 'சதுர் தண்டிபிரகாசிகை'யில் கூறியதைப் பற்றி சற்று ஆராய்வோம்:—

'சுருதி' என்றால் ஸ்வரத்திற்குக் காரணமாக இருக்கும் ஒருவித நாதமேயாகும். ஆனால் நாதத்தின் ஸ்வரூபமாகிய ஸ்வரத்திற்கும், சுருதிக்கும் ஒருவித வேறுபாடும் வெளிப்படையாகத் தெரியவில்லையாயினும் ஒன்று மற்றொன்றாக மாறுபாட்டையடைகிறதென்று மட்டும் கூறலாம். தங்கத்திற்கும் அதனால் ஆகிய கிரீடத்திற்கும் எவ்வித வேற்றுமையோ அவ்வித வேற்றுமையே இங்குமென்று அறிக.

பரதர் முதலிய ஸங்கீத ஞானிகளால் சுருதிகள் 22 என்று வரையறுக்கப் பட்டிருக்கிறது. அந்த சுருதிகளை வீணையில் பிரசித்தமாயிருக்கும் சுத்தம் விக்ருதம் என்ற இருவகையால் ஏற்படும் 12 ஸ்வரங்களில் தெளிவாகப் பிரித்துக் காட்டலாம். இது எப்படியெனில் சுத்த ரிஷபத்தில் மூன்று சுருதிகளும், சுத்த காந்தாரத்தில் இரண்டு சுருதிகளும், சுத்த மத்தியமத்தில் நான்கு சுருதிகளும், கூறப்பட்டிருக்கின்றன. அதன் முதல் சுருதியை ஸாதாரண காந்தாரம் தழுவியிருக்கிறது. அதனுடைய இரண்டாவது மூன்றுவது சுருதிகளைத் தழுவியே அந்தரகாந்தாரம் இரண்டு சுருதிகள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஸாதாரண காந்தாரத்திற்கு முதல் சுருதியையும், அந்தரகாந்தாரத்திற்கு இரண்டாவது மூன்றுவது சுருதிகளையும் கொடுத்துப் பாடுகின்றார்கள். ஒரே சுருதியோடு கூடிய மத்தியமம் நான்கு சுருதிகள் உள்ளதாகவும், அத்தகைய பஞ்சமமும் நான்கு சுருதிகள் உள்ளதாகவும் ஸங்கீதம் அறிந்தவர்களால் வழங்கப்படுகிறது. அதன் முதல், இரண்டாவது, மூன்றுவது சுருதிகளைக் கொண்டு மூன்று சுருதிகளுள்ள 'வராளிமத்யமம்' அமைகிறது. பஞ்சமமானது வராளி மத்தியமத்திற்கு மூன்று சுருதிகளைக் கொடுத்துவிட்டு தான் ஒரு சுருதியோடு கூடியிருப்பினும், சுத்த தைவதத்தில் மூன்று சுருதிகள் ஸங்கீதமறிந்தவர்களால் அங்கீகரிக்கப்படுகின்றன. சுத்த நிஷாதத்திற்கு இரண்டு சுருதிகள் கூறப்பட்டுள்ளன. ஷட்ஜத்தில் நான்கு சுருதிகள் இருக்கின்றன. அவற்றுள் முதல் சுருதியை வைத்துக் கொண்டு கைசிக நிஷாதமானது ஒற்றைச் சுருதியுள்ளதாகக் கூறப்படுகிறது. அதன் இரண்டாவது மூன்றுவது சுருதிகளோடு சேர்ந்து காகலிநிஷாதம் இரண்டு சுருதிகள் உள்ளதாக வித்துவான்களால் கூறப்படுகிறது. எனவே ஷட்ஜமானது கைசிக நிஷாதத்திற்கு ஒரு சுருதியையும், காகலி நிஷாதத்திற்கு இரண்டு சுருதிகளையும் கொடுத்துவிட்டுத் தான் ஒரே சுருதியுள்ளதாக இருக்கிறது. இவ்விதமாக 22 சுருதிகளிலிருந்து ஸ்வரங்கள் உண்டாவதைப் பிரித்துக் காட்டினோம்.

இந்த சுருதிகள் சுருதிவீணையில் தனித்தனியே பிரகாசிக்கின்றன. சுருதி வீணையின் சொரூபத்தை மத்திய மேளவீணையில் நிரூபிக்கிறோம். சுத்த மேளவீணையை விட்டுவிட்டு மத்திய மேளவீணையை சுருதிவீணையென்று நாம்

குறிப்பிடும் காரணம் யாதெனில்; சுத்தமேளவீணையில் சுருதி வீணையின் சொரூபத்தை மந்தரஸ்தானத்திலோ, அல்லது மத்தியமஸ்தானத்திலோ அல்லது தாரஸ்தானத்திலோ தான் முடியும். ஆனால் மந்த்ரஸ்தானத்தில் எல்லா ஸ்வரங்களும் இருக்க இடமில்லையாகையால் அங்கு சுருதிவீணையை நிரூபிப்பது இயலாது. ஏனெனில் ஒரே தந்தியில் 12 ஸ்வரங்களும் ஏறி நிற்பதில்லையன்றே! ஆகையால் தான் சுத்த மேளவீணையில் மந்த்ரஸ்தானத்திற் போலவே மத்யஸ்தானத்திலும் சுருதிவீணையை நிரூபிக்க முடியாது. தாரஸ்தானத்திலோ வென்றால் ஒரே தந்தியில் 12 ஸ்வரங்களும் ஏறி நிற்கலாமாயினும் அவிடத்திலும் மெட்டுகளை யமைப்பதற்குப் போதிய இடமின்மையால் அவைகளுக்கு இடையே சுருதிகளுக்கு வேண்டிய மெட்டுகளை வைக்க இடம் கிடைக்காது. ஆகவே சுத்தமேளவீணையில் சுருதிவீணையை நிரூபிக்கும் முயற்சி வீணாகும். இவ்வாறே ரகுநாதேந்திர வீணையிலும் அது பொருந்தாது. ஆனால் மத்யமேளவீணையில் அது சரியாகப் பொருந்துகிறதாகையால் அதிலேயே நாம் சுருதி வீணையை நிரூபித்துக் காட்டினோம்.

மத்யமேளவீணையில் மத்யஸ்தானத்திலுள்ள மெட்டுகள் 12-லும் சுருதியை யறிவிக்கும் மெட்டுக்களை அமைக்கும் முறையைக் கூறுகிறோம்:—

மேருவுக்கருகிலுள்ள சுத்த ரிஷபத்திற்கு உரிய இடத்தை மூன்றாகப் பிரித்து ரிஷபத்தின் மெட்டை விட்டுவிட்டு மற்ற இரண்டு மெட்டுக்களை வைத்தால் சுத்த ரிஷபத்திலுள்ள மூன்று சுருதிகளும் தெளிவாகப் புலப்படும். இவ்வாறே சுத்தகாந்தாரத்திற்குரிய இடத்தையும் இரண்டாகப் பிரித்து நிலைமைக்குத் தகுந்தபடி காந்தாரத்தைத் தோற்றுவிக்கும் மெட்டை விட்டு விட்டு இடையில் ஒரு மெட்டு சேர்த்தால் அப்போது காந்தாரத்தின் இரண்டு சுருதிகளும் நன்கு புலப்படும்.

மத்தியமத்திற்கு நான்கு சுருதிகள் உண்டு என்பது எல்லோருமறிந்த விஷயம். அவற்றுள் ஸாதாரண காந்தாரத்தில் ஒரு சுருதி உண்டாகிறது. அந்தர காந்தாரத்திற்குரிய பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து ஒரு மெட்டினிடையே அவ்விரண்டையும் சேர்த்தால் இரண்டு சுருதிகள் ஸ்பஷ்டமாக உண்டாகின்றன. மத்தியமத்தில் ஒரு சுருதியுள்ளதாகவே நான்கு சுருதிகளும் புலப்படுகின்றன. மத்தியமத்திற்கு நான்கு சுருதிகள் உண்டு. அவற்றுள் மூன்று சுருதிகளை வராளி மத்யமம் பெற்றுள்ளது என்று முன்னர் கூறினோம். வராளிமத்தியமத்திற்குரிய இடைவெளியே மூன்றாகப் பிரித்து வராளிமத்யமத்தின் மெட்டை விட்டுவிட்டு அதனிடையில் இரண்டு மெட்டுக்களை யமைத்தால் தனித்தனியாக இரண்டு சுருதிகள் புலப்படுகின்றன. தன்னிடத்திலேயே ஸ்பஷ்டமாக ஒரு சுருதி இருக்கிறது. அத்துடன் முற்கூறிய மூன்றையும் சேர்க்க மொத்தம் பஞ்சமத்தில் நான்கு சுருதிகள் ஸ்பஷ்டமாகக் கிடைக்கின்றன.

இனி தைவதம் மூன்று சுருதிகளைப் பெற்றது எவ்வாறு எனில்:—சுத்த தைவதத்திற்குரிய இடைவெளியை மூன்றாகப் பிரித்து அங்கே தோன்றும் சுத்த தைவதமெட்டை விட்டுவிட்டு இரு மெட்டுக்களையமைத்தால் மூன்று சுருதிகளும்

நன்கு புலப்படும். இவ்வாறே சுத்த நிஷாதத்தின் பிரதேசத்தையும் இரண்டாகப் பிரித்து கட்புலனுகும் மெட்டை விடுத்து இடையில் ஒரு மெட்டு அமைப்போமானுல் அப்பொழுது அதன் இரண்டு சுருதிகளும் ஸ்பஷ்டமாகக் காணக்கிடைக்கின்றன. ஷட்ஜத்திற்கு நான்கு சுருதிகள் என்று முன்னர் கூறினேம். அது எவ்வாறு எனில் கைசிக நிஷாதத்தில் அதன் ஒரு சுருதி தோன்றுகிறது. காகலி நிஷாதத்தினுடைய இடத்தை இரண்டாகப் பிரித்து இடையில் ஒரு மெட்டை அமைத்தால் அதன் இரு சுருதிகளும் ஸ்பஷ்டமாக புலப்படுகின்றன. தன்னுடைய சுருதி ஒன்று. ஆகவே ஷட்ஜத்திற்கு மொத்தம் நான்கு சுருதிகள் ஏற்பட்டன. இவ்வாறுக மத்தியமேள வீணையில் சுருதிவீணையின் இயல்பையனுசரித்து 22 சுருதிகள் காட்டப்பட்டன.

முதலிலுள்ள ஷட்ஜத்தை விட்டுவிட்டு ரிஷபத்தை முதலாகக் கொண்டு சுருதிவீணைக்காக மெட்டுக்களேயமைக்கும் முறை ஏன் கூறப்பட்டது எனில்— ஷட்ஜத்திற்கு மெட்டு இல்லே. ஏனென்றுல்; ஷட்ஜமானது மெட்டைத் தொடாமல் ஸாரணை மீட்டுவதினுலேயே உண்டாவதினுல் மெட்டுக்கள் இல்லாத ஷட்ஜத்தில் சுருதிகளே அறிந்து கொள்வது இயலாதன்றே! எனவே அந்த சுருதிகளே உட்சுருதி மெட்டை அமைப்பதினுல் தான் அறிய முடியும். ஷட்ஜத்தையே முதலாவதாக வைத்துக் கொண்டு சுருதிவீணையைக் காட்டவேண்டுமென்று யாரேனும் விரும்பினுல் அதன் உபாயத்தையும் மத்தியமேள வீணையில் காட்டுவோம். மத்தியமேளமென்னும் வீணேதியில் ஷட்ஜத்தை முதலாகக் கொண்டு சுருதி வீணையை காட்டுதல் எல்லாம் வல்ல பிரமனுலும் இயலாது. ஏனெனில் மத்தியமேளத்திலுள்ள மந்த்ர ஸ்தானத்தில் 12 ஸ்வரங்களும் ஒரே தந்தியில் ஏறி நிற்கவில்லேயன்றே! மத்திய மேள வீணையில் தாரஸ்தானத்திலோ என்றுல் ஒரே தந்தியில் எல்லா ஸ்வரங்களும் ஏறி நிற்கமுடியும். ஆயினும் அங்குள்ள மெட்டுக்களுக்குப் போதிய இடைவெளியின்றி நெருங்கியிருப்பதால் அவைகளினிடையே சுருதியைத் தோற்றுவிக்கும் மெட்டுக்களே அமைக்க இடமில்லே. எனவே 12 நீண்ட மெட்டுக்களிலும் ரிஷபம் முதலாகிய ஸ்வரங்களே முன்னிட்டு இந்த சுருதிவீணை ஸ்ரீ வெங்கடமகி அவர்களால் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் சுத்த மேளவீணையில் தாரஸ்தானத்திலே ஷட்ஜத்தை முதலாகக் கொண்டு ஒருவிதமாக சுருதிவீணை காட்டப்பட்டது. தாரஷட்ஜத்தை முதலாகக் கொண்டு கைசிக நிஷாதம் முதலான 12 ஸ்வரங்களுக்கும் முன்புறத்தில் சுருதி மெட்டுக்களே அமைக்கவேண்டும். இவ்வாறு 22 சுருதிகள் தோன்றும் விதத்தை ஸ்ரீ வெங்கடமகி அவர்கள் தம் நூலில் விளக்கியிருக்கிறர்.

இனி சுருதியின் நுட்பமான ஸ்வரூபத்தையும் அவைகளின் எண்ணிக்கை விஷயத்தில் இதுவரை ஏற்பட்டிருக்கும் அபிப்பிராயபேதங்களின் கருத்தையும் பற்றி நாம் சிறிது கூறுகிறோம்:

ஸ்தாயி அமைப்புக்கு சுருதி என்று பெயர். இது அந்த அந்த வாத்தியத்திற்குத் தக்கபடி அமைக்கப்பட்டிருக்கும். பற்பல வாத்தியங்களின் அமைப்பைப் பின்பற்றி தந்திகள் சேர்க்கப்படுகின்றன. அவைகளுக்குத் தனித்தனி பெயர்களும்

கொடுக்கப்படுகின்றன. உதாரணமாக தம்பூருக்கு நான்கு தந்திகள் அமைக்கப்பட்டு மீட்டுக்கு முதல் தந்தி பஞ்சமம் என்றும், அதற்கு அடுத்தது ஸாரணை என்றும், அதற்கடுத்தது அனுஸாரணை என்றும், அதற்கடுத்த கடைசித் தந்தி மந்திரமென்றும் பெயர்பெற்றிருக்கிறது. அவைகளேச் சரியாக மீட்டினுல் அவை முறையே ஒரு பஞ்சமமாகவும், இரண்டு ஹெச்சு ஷட்ஜங்களாகவும், ஒரு நக்கு ஷட்ஜமாகவும் இசைந்து நிற்கும்.

வீணைக்கு ஏழு தந்திகள் அமைக்கப்பட்டு தம்பூரைப் போல் மீட்டு வரிசைக்கிரமத்தில் முதல் தந்திக்கு அனுமந்திரமென்றும், இரண்டாவதற்கு மந்த்ரமென்றும், மூன்ருவதற்கு பஞ்சமமென்றும், நான்காவதற்கு ஸாரணை என்றும், ஐந்தாவதற்கு அனுஸாரணை அல்லது தாளமந்த்ரமென்றும், ஆருவதற்கு ஹெச்சு பஞ்சமம் அல்லது தாள பஞ்சமம் என்றும் ஏழாவதற்கு ஹெச்சு ஸாரணை அல்லது தாலஸாரணை என்றும் பெயரிடப்பட்டிருக்கிறது. அவை முறையே (1) அனுமந்திர பஞ்சமம் (2) மந்த்திரஷட்ஜம் (3) மந்த்ரபஞ்சமம் (4) மத்ய ஷட்ஜம் (5) மத்ய பஞ்சமம் (6) தாரஷட்ஜம் (7) தாரபஞ்சமம் என இசைந்து நிற்கும். முதல் நான்கு தந்திகளே வாசிப்புத் தந்திகள் என்றும், மற்ற மூன்று தந்திகளேத் தாளத்தந்திகள் என்றும் கூறுவர்.

இதன்றியும், நடவடிக்கையில் பஞ்சம சுருதியென்றும், மத்யம சுருதியென்றும் சுருதி இருவகையாக வழங்கப்பட்டு வருகிறது. பஞ்சம சுருதி ஹெச்சாகவும், மத்தியம சுருதி தக்கு ஆகவும் இருக்கும்.

பொதுவாக புருஷர்கள் பாட்டிற்கு அமையும் சுருதியை பஞ்சம சுருதியென்றும், ஸ்திரீகள் பாட்டிற்கு அமையும் சுருதியை மத்தியம சுருதியென்றும் சொல்வார்கள். பஞ்சம சுருதியின் பஞ்சமத்தை சுத்த மத்தியமமாக்கிக் கொண்டால் அது மத்தியம சுருதியாகும்.

ஸங்கீத சாஸ்திரத்தில் பிரசித்தமாகவுள்ள சுருதிகளின் மொத்த எண்ணிக்கையைப் பற்றிப் பல அறிஞர்கள் பலவாருகக் கூறியுள்ளார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் சுருதிகள் 22 தான் என்கின்றனர். ஸ்ரீ வெங்கிடமகி அவர்கள் சுத்த ஷட்ஜ சுருதியையும் கடைசி பஞ்சம சுருதியையும் சேர்த்துக் கொண்டு மொத்தம் சுருதிகள் 24 ஆக முடியும் என்கிறர். ஆகவே பழைய நூல்களில் 'த்வாவிம்சதி: சுருதய:' என்று கூறியிருப்பதற்கிணங்க சுருதிகள் 22 என்னும் நிர்மானம் முதற் கடைசிச் சுருதிகளேக் கணக்கில் சேர்க்காமல் இடையிலுள்ள 22 சுருதிகளே மட்டும் கருதிக் கூறியதாகுமென்று அறிய வேண்டும். அவைகளேயும் இந்த சுருதிகளேப் போலவே கருதி இந்த 22 சுருதிகளுடன் சேர்த்துக்கொள்வதால் சுருதிகள் மொத்தம் 24 ஆகின்றன என்ற கொள்கையில் யாதொரு மறுப்புக்கும் இடமில்லே. இதற்கு ஆதாரமாக பல பெரிய வாக்கேய காரர்களின் அபிப்பிராயங்களேயும் இங்கு குறிப்பிடுகிறேன்.

ஸ்ரீ வெங்கடமகி அவர்கள் இயற்றிய குண்டக்ரியா ராகத்திலுள்ள லக்ஷண கீதத்தில் 'சுருதி சதுர்விம்சதி' என்று கூறுறியிருத்தலும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் அவர்கள் இயற்றிய 'ஸோபி³ல்லு ஸப்தஸ்வர' என்ற கீர்த்தனத்தில் 'வர க³ாயத்ரீ ஹிருத³யமுன' என்று குறிப்பிடுதலும், இதற்குப் போதிய சான்ருகும். இதன் பொருள் யாதெனில்: எப்படி காயத்ரீ மந்திரமானது 'க³ாயத்ரீ சதுர் விம்சத்யக்ஷரா திலபத³ா ஷட்குக்ஷி:' என்னும் வாக்கியத்திற்கிணங்க

24 அக்ஷரங்களுடனும் மூன்று பாதங்களுடனும் 6 குக்ஷிகளுடனும் (பதப் பிரிவி னைகளுடனும்) அமைந்திருக்கிறதோ, அப்படியே ஸங்கீதசாஸ்திரத்திலுள்ள சுருதிகளும் ஷட்ஜம், மத்யமம், பஞ்சமம் என்ற மூன்று ஸ்தாயிகளிலுமாக மொத்தம் 24 என்று குறிப்பாகக் கூறியுள்ளார்கள். இதுவுமன்றி 'ஸங்கீத ஸாரஸங்கிரஹம்' என்ற பழைய நூலிலும் 24 சுருதிகள் தான் கூறப்பட்டிருக் கின்றன.

72 மேளகர்த்தாப்பிரகாரம் ஒரு சக்கரத்திற்கு 6 ராகம் வருவது போல் இந்த 24 சுருதிகளை மேளகர்த்தா முறையாகச் சேர்த்துப் பார்க்கும்போது சக்கரம் ஒன்றிற்கு ராகங்கள் 34 வீதம் ஒரு மத்யமத்திற்கு ராகங்கள் 1156 ஆகின்றன. இவ்வாறு 4 மத்யமங்களும் கூட்டி 4624 மேளகர்த்தாக்கள் ஏற்படுகின்றன. அந்த மேளகர்த்தாக்கள் தோறும் உபாங்க, பாஷாங்க, ராகங்களாக எண்ணிக்கை யற்ற ராகங்கள் ஏற்படுவதன் ரஹஸ்யத்தையே 'அனந்தா வை ராகா:' என்ற வாக்கியம் வெளிப்படுத்துகிறது.

'மேளாதிகார லக்ஷண'த்திலும் இந்த 24 சுருதிகளின் முறைப்படியே தான் மேளகர்த்தாக்கள் நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. என்னுடைய சொந்த அனுப வத்திலும் இரண்டு வீணைகளை வைத்துக் கொண்டு ஒரு வீணையை ஷட்ஜமாகவும், மற்றொரு வீணையில் பிரதிசுத்த ரிஷபத்தைச் சுருதியாகவும் சேர்த்துக் கொண்டு வீணைகளிலுள்ள 12 மெட்டுக்களிலும், வீணைகளை ஒன்று மாற்றி ஒன்று மெட்டுக்க ளில் விரல் வைத்து மீட்டினால் சுத்த ஷட்ஜம் முதல் நிஷாதம் வரை 24 சுருதிகள் தெளிவாகப் புலப்படுவதைக் கண்கூடாகக் காணலாம். ஆகவே 24 சுருதிகள் என்ற கொள்கையில் யாதொரு மறுப்புக்கும் இடமில்லையென்பது என் கருத்து.

22 சுருதிகளுக்கு 'ஸங்கீதநாமோதரம்' என்னும் பழைய நூலில் கூறப்பட் டிருக்கும் பெயர்களைக் கீழ் வரும் சுலோகங்கள் குறிப்பிடுகின்றன.

நான்தீ³ சாலனிகாரஸா ச ஸுமுகீ²
சித்ரா விசித்ரா க⁴ணே
மாதங்கி ³ஸரஸாமிருதா மது⁴கரீ
மைத்ரீசிக³ா மாத⁴வீ
ப³ாலா சார்ங்க³ரவீ கலா கலரவா
மாலா விசாலா ஜயா
மாத்ரேதி சுருதய: புராணகவிபி⁴
த்³வாவிம்சதி: கீர்திதா:

ஷட்³ஜ:

நான்தீ³ விசாலா ஸுமுகீ² விசித்ராஸம்ப⁴வ: ஸதா³
ஷட்³ஜோ மதோ முனீன்த்³ரண பர⁴தேன சிவனே ச

ரிஷப⁴: க³ான்த⁴ாரச்ச

சித்ராக⁴ணே சாலனிகா நிவேசாத்
ஸஞ்ஜாயதே ர்ஷள ரிஷப⁴ஸ்ததை²வ
ஸ்வரோரிபி மாலா ஸரஸா நிவேசாத்
க³ாணத⁴ார நாமா பிரதி²த: பிருதி²வ்யாம்

மாதங்கீ³ மாத⁴வீ மைத்ரீ சிவா ஜாதஸ்து மத்⁴யம:
கலா கலரவா ப³ாலா சார்ங்கர³வ்யாம்து பஞ்சம:
ஜாயாமிருதாரஸாஞ்சு ஸம்யோகாத் தை⁴வத: ஸ்வர:
மாத்ரா மது⁴கரீயோக³ாத் நிஷாத³: ஸம்பிரஜாயதே

22 சுருதிகளுக்கு முன் காலத்தில் வழங்கப்பட்ட பெயர்களும் ஸ்வர நியமமும்

1.	நான்தீ	ஷட்³ஜ:	நாந்தீ
2.	விசாலா		விசாலா
3.	ஸுமுகி²		ஸுமுகி
4.	விசித்ரா		விசித்ரா
5.	சித்ரா	ரிஷப⁴	சித்ரா
6.	க⁴ணே		கணே
7.	சாலனிகா		சாலநிகா
8.	மாலா	க³ான்த⁴ர:	மாலா
9.	ஸரஸா		ஸரஸா
10.	மாதங்கி³	மத்⁴யம:	மாதங்கீ
11.	மாத⁴வீ		மாதவீ
12.	மைத்ரீ		மைத்ரீ
13.	சிவா		சிவா
14.	கலா	பஞ்சம:	கலா
15.	கலரவா		கலரவா
16.	ஸாலா		பாலா
17.	சார்ங்க³ரவி		சார்ங்கரவீ
18.	ஜயா	தை⁴வத:	ஜயா
19.	அமிருதா		அம்ருதா
20.	ரஸா		ரஸா
21.	மாத்ரா	நிஷாத³:	மாத்ரா
22.	மது⁴கரீ		மதுகரீ

22 சுருதிகளின் ஸ்வர நியம விளக்கம்

எண்	சுருதிகளின் பெயர்கள்	ஸப்த ஸ்வரங்கள்	சுத்த சுருதிகள்	விக்ருதசுருதிகள் (ஷட்சுருதி தைவதம்)	அதிஸூக்ஷ்ம விக்ருத சுருதிகள்
1	தீவ்ரா	..	..	கைசிகநிஷாதம்	..
2	குமுத்வதீ	..	..	காகலீநிஷாதம்	..
3	மந்தா	..	..	..	ச்யுதஷட்ஜம்
4	சந்தோவதீ	ஷட்ஜம்	சுத்த ஷட்ஜம்	..	..
5	தயாவதி	..	..	..	அச்யுத் ஷட்ஜம்
6	ரஞ்ஜநீ	..	..	..	ஸம்பூர்ண ஷட்ஜம்
7	ரதிகா	ரிஷபம்	சுத்தரிஷபம்	..	..
8	ரௌத்ரீ	..	..	..	சதுசுருதிரிஷபம்
9	க்ரோதி	காந்தாரம்	சுத்த காந்தாரம்	பஞ்ச சுருதிரிஷபம்	..
10	வஜ்ரிகா	..	..	ஷட்சுருதி ரிஷபம் ஸாதாரண காந்தாரம்	
11	ப்ரஸாரிணீ	..	..	அந்தரகாந்தாரம்	
12	ப்ரீதி	..	..	..	ச்யுதமத்யமம்
13	மார்ஜனீ	மத்யமம்	சுத்த மத்யமம்	..	..
14	க்ஷிதி	..	..	..	அச்யுதமத்யமம்
15	ரக்தா		..	பிரதிமத்யமம்	..
16	ஸந்தீபிநீ	..	..	..	ச்யுத பஞ்சமம்
17	ஆலாபிநீ	பஞ்சமம்	சுத்த பஞ்சமம்	..	..
18	மதந்தீ	..	..	..	த்ரிசுருதிபஞ்சமம்
19	ரோஹிணி	..	..	..	கைசிக பஞ்சமம்
20	ரம்யா	தைவதம்	சுத்த தைவதம்	..	..
21	உக்ரா	..	..	..	சது சுருதிதைவதம்
22	க்ஷோபிணீ	நிஷாதம்	சுத்த நிஷாதம்	பஞ்ச சுருதி தைவதம்	..

த்வாவிம்சதி (22) சுருதிகள்

ஷட்ஜத்திற்கு 4 சுருதியும், ரிஷபத்திற்கு 3 சுருதியும், காந்தாரத்திற்கு 2 சுருதியும், மத்தியமத்திற்கு 4 சுருதியும், பஞ்சமத்திற்கு 4 சுருதியும், தைவதத்திற்கு 3 சுருதியும், நிஷாதத்திற்கு 2 சுருதியும், ஆக 22 சுருதிகளுக்கும் தீப்தா, ஆயதா, கருணை, ம்ருது, மத்யா என்ற 5 ஜாதிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவை களுடைய விவரம் அடியிற் கண்ட சக்கரத்தில் காண்க.

ஸ்வரம்	லக்கம்	சுருதி	ஜாதி	ஸ்வரம்
ஸ	1	தீவ்ரா	தீப்தா	ஸ
	2	குமுத்வதீ	ஆயதா	
	3	மந்தா	ம்ருது	
	4	சந்தோவதீ	மத்யா	
ரி	5	தயாவதீ	கருணை	ரி
	6	ரஞ்ஜநீ	மத்யா	
	7	ரதிகா	ம்ருது	
க	8	ரௌத்ரீ	தீப்தா	
	9	க்ரோதி	ஆயதா	
ம	10	வஜ்ரிகா	தீப்தா	ம
	11	ப்ரஸாரிணீ	ஆயதா	
	12	ப்ரீதி	ம்ருது	
	13	மார்ஜநி	மத்யா	
ப	14	க்ஷிதி	ம்ருது	ப
	15	ரக்தி	மத்யா	
	16	ஸந்தீபிநீ	ஆயதா	
	17	ஆலாபிநீ	கருணை	
த	18	மதந்தி	கருணை	த
	19	ரோஹிணீ	ஆயதா	
	20	ரம்யா	மத்யா	
நி	21	உக்ரா	தீப்தா	நி
	22	க்ஷோபிணீ	மத்யா	

சுருதிகளின் எண்ணிக்கையும்

சுத்த விக்ருதஸ்வரநியம விளக்கமும்

(ஸங்கீத மகரந்தத்திற் கூறியபடி)

சுருதிகளின் எண்ணிக்கை	சுருதிகளின் பெயர்கள்	சுத்தஸ்வரங்களின் பெயர்கள்	சுத்த ஸ்வரசுருதிகளின் எண்ணிக்கை	விக்ருத ஸ்வரங்களின் பெயர்கள்	விக்ருத ஸ்வரங்களின் காரணமான சுருதிகளின் எண்ணிக்கை
1	ஸித்தா	..	..	கைசிகநிஷாதம்	த்ரிசுருதிகம்
2	ப்ரபாவதீ	..	..	காகலிநிஷாதம்	சதுச்ருதிகம்
3	காந்தா	..	..	ச்யுதஷட்ஜம்	த்விச்ருதிகம்
4	ஸுப்ரபா	ஷட்ஜம்	சதுசுருதிகம்	அச்யுதஷட்ஜம்	..
5	சிகா	..	..	..	..
6	தீப்திமதீ	..	..	..	..
7	உக்ரா	ரிஷபம்	த்ரிசுருதிகம்	..	..
8	ஹ்லாதி	..	..	விகிருதரிஷபம்	சதுச்ருதிகம்
9	நிர்விரீ	காந்தாரம்	த்விசுருதிகம்	..	..
10	திரா	..		ஸாதாரண காந்தாரம்	த்ரிச்ருதிகம்
11	ஸர்ப்பஸஹா	..	..	அந்தரகாந்தாரம்	சதுச்ருதிகம்
12	க்ஷாந்தி	..	..	ச்யுதமத்யமம்	த்விசுருதிகம்
13	விபூதி	மயமம்	சதுச்ருதிகம்	அச்யுதமத்யமம்	..
14	மாலீநீ	..	..	..	..
15	சபலா	..	..	..	..
16	பாலா	..	..	த்ரிசுருதி பஞ்சமம் அல்லது கைசிக பஞ்சமம்	த்ரிச்ருதிகம்
17	ஸர்வரத்நா	பஞ்சமம்	சதுச்ருதிகம்	..	..
18	சாந்தா	..	..	..	..
19	விகலிநீ	..	..	..	..
20	ஹ்ருத-யோன்-மாலிநீ	தைவதம்	த்ரிச்ருதிகம்	..	..
21	விஸாரிணீ	..	..	விக்ருததைவதம்	சதுச்ருதிகம்
22	ப்ரஸன்நா	நிஷாதம்	தவிச்ருதி-கம்	..	..

ஸ்வரப் பிரகரணம்

ஸ்வரமென்றால் என்ன?

தம் நாத³ம் ஸப்தத⁴ாகிருத்வா தத²ா ஷட்³ஜாதி³பி⁴: ஸ்வரை:
நாபி⁴ஹிருத்கண்ட²தாலுஷு நாஸாத³ந்தோஷ்ட²யோ: கிரமாத்
ஷட்³ஜச்சர்ஷப⁴க³ான்த⁴ாரள மத்⁴யம: பஞ்சமஸ்தத²ா
தை⁴வதச்ச நிஷாத³ச்ச ஸ்வரா: ஸப்த பிரகீர்தி:

(ஸங்கீதமகரன்த³ம்)

முன்னர் நாம் கூறிய இயல்பு வாய்ந்த நாதமே நாபி, இருதயம், கழுத்து, நாக்கு, மூக்கு, பல், உதடு இவ்வவயவங்களின் வழியாக வெளிப்படும்போது முறையே ஷட்ஜம் முதலிய ஏழுஸ்வரங்களையும் தோன்றச் செய்கிறது என்பதை நாரதர் மேற்கூறிய இரு சுலோகங்களிலும் தெரிவித்திருக்கிறார். எனவே ஆஹதநாதமே இந்த ஸப்தஸ்வரங்களாகப் பிரதிபலிப்பதால் இதிலிருந்தே கீதம், வாத்தியம், நிருத்தம் இம்மூன்றும் சேர்ந்ததாகிய ஸங்கீதம் உண்டாயிற்று. இக்கருத்தை யுள்ளடக்கியே நாரதர்:

ஏவம் ஸ்வரான் ஸமாகிருஷ்ய வீணாதி³ஷு நித⁴ாயச
தேன சாஹதநாதே³ன ஸங்கீதமகரோத்தத³ா.

என்ற சுலோகத்திலும் நாதத்திலிருந்து ஸ்வரோத்பத்தியை விளக்கியிருக்கிறார்.

ஆனால் வீணை முதலிய வாத்தியங்களிலிருந்தும் ஷட்ஜம் முதலிய ஸ்வரங்கள் பிறக்கின்றனவே! அவற்றுள் நாபி, கழுத்து முதலிய ஸ்வரோத்பத்திக்குக் காரணமான அவயவங்கள் இல்லையே என்று ஸந்தேஹித்தால் அதற்கு சமாதானம் வருமாறு:

காத்திர வீணைக்கும் தாருவீணைக்குமுள்ள ஒற்றுமை

தாருவீணையிலும், காத்திரவீணையிற் போலவே ஸ்வரங்களையெழுப்ப வல்ல உறுப்புக்கள் அமைந்திருக்கின்றன என்பதை அந்த நாரதரே தமது ஸங்கீத மகரந்தத்தில்—

ஸரஸ்வத்யாச்ச வீணாயாம் ஷட்³ஜாதிஸ்வரஸம்யுதம்
பாட²யாமாஸ ஸர்வேஷாம் ஹிருத்³யம் சுருதிமனோஹரம்.

என்று குறிப்பாகக் கூறியிருக்கிறார்.

மேலும் 'ஐதரேய ஆரண்யக'த்திலும் ஆரண்யகம் 3 அத்தியாயம் 2 கண்டம் 5 (ஆனந்தாச்ரம புஸ்தகத்தில் 222-ாவது பக்கத்தில் கண்டபடி) இதற்கு ஆதாரமாக விளங்கும் வேதவாக்கியங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

''அத[2] க[2]ல்வியம் தெ[3]வீ வீணுபவ[4]தி, ததனு[3]கிறுதிரஸள மானுஷ்மவீணு ப[4]வதி. யத[3]ஸ்யா: சிர: ஏவமமுஷ்யா: சிர: யத[3]ஸ்யா: உத[3]ரமேவ மமுஷ்யா: அம்ப[4]ணம் யத[3]ஸ்யெஷிஹ்வாஏவமமுஷ்காயவாத[3]னம். யத[2]ாஸ்யா: தன்திரய: ஏவமமுஷ்ய யா அங்குலய: யத[3]ாஸ்யா: ஸ்வரா: ஏவமமுஷ்யா: ஸ்வரா:, யதா[3]ஸ்யா: ஸ்பர்சா: ஏவமமுஷ்யா: ஸ்பர்சா:, யத[2]ாஹயேவேயம் சப்[3]த[3]வதீ த[4]ர்மவதீ ஏவமஸளசப்[3]த[3] வதீ, த[4]ர்மவதீ, யத[2]ாஹ்யேவேயம் லோமசேன சர்மணு விஹிதாப[4]வதி ஏவம ஸளலோமசேனசர் மணுவிஹதா. லோமசேன ஹஸ்மவெசர்மணு புரா வீணு அபித[3]த[4]தி. ஸயோ ஹெதாம் தெ[4]வீம் வேத[3] சுருதவத[3]னே ப[3]வதி பூ[4]மி பிராஸ்ய கீர்திர்ப[4]வதி யத்ர க்வசார்யாவாசோ பாஷன்தேவிது[3]ரேன்ம் தத்ர''

இத்துடன் அடுத்த பக்கத்தில் காண்பித்திருக்கும் சித்திரத்திலிருந்தும் காத்திர வீணைக்கும், தாருவீணைக்கும் உள்ள ஒற்றுமையை வாசகர்கள் எளிதில் அறிந்து கொள்ளலாம். நம் சரீரத்திலிருக்கும் முதுகெலும்பும் கூட வீணையுடன் நெருங்கிய உறுப்பு—ஒற்றுமை பெற்றிருத்தலால் தான் அதற்கு வீணைதண்ட மென்றே பெயர் வழங்குகிறது. காயத்ரீ மந்திரத்திலடங்கியிருக்கும் அக்ஷரங்களுக்கும் வீணையில் அமைந்திருக்கும் மெட்டு வரிசைக்கும் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமையையும் அந்தச் சித்திரத்தில் விளக்கியிருத்தல் காண்க.



காயத்ரீமந்திரம், ஓம் —

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24
தத்	ஸ	வி	துர்	வ	ரே	ணி	யம்	பர	கோ	தே	வ	ஸ்ய	தீ	ம	ஹி	தி	யோ	யோ	நஃ	ப்ர	சோ	த	யாத்
	ஸ்ருஷ்டி			ஸ்	தி	தி	(ல்	யா	பரம்)			ஸம்	ஹார	ரம்	(லயம)					மோக	ஷ்	ம்	
		ம	ந்	த்	ர	ம்			ம	த்	தி	ய	ம	மீ				தாரம்					
		அ	வ	ரோஹணம்								ஆரோஹணம்											

மேலும் நாரதர் கூறுவதாவது:—

ஸப்தஸ்வரான் ஸமுத்[3]த[4]ருத்ய வீணுதி[3]ஷு நிதா[4]யச
ஸாமவேத[3]தி[3]த[3]ம் கி[3]தம் ஸஞ்ஜகி[3]ரா ஹபிதாமஹ:

(ஸங்கீதமகாந்த[3]:)

அதாவது நாதத்திலிருந்து ஏற்படும் ஸப்தஸ்வரங்களை சாரீரத்தில் போலவே வீணையிலும் அமைத்து பிரமதேவன் ஸாமவேதத்திலிருந்து இந்த ஸங்கீதக் கலை யைச் சேகரித்திருக்கிறார் என்று இதன் கருத்து.

ஸ்வரங்களின் லக்ஷணம்

சுருத்யனன்தரமுத்பன்ன: ஸ்நிக்[3]த[4]ஸ்வரணஸ்து மகா:
ரஞ்ஜயன்திஸ்வத: ஸ்வான்தம் சிரோதுரூணமிதிதேஸ்வரா:

(ஸங்கீத பாரிஜாதம்)

சுருதி தோன்றிய மறுகணமே தோன்றுவதும், இனிமையும், கார்வையும் வாய்ந்ததாய் எந்த நாதமானது கேட்போர் மனதைத் தானுகவே இன்புறச் செய்கின்றதோ, அது ஸ்வரமெனப்படுகிறது. எனவே எந்த தொனியைக் கேட்டவுடனேயே ரஸிகனுடைய உள்ளம் களிக்கின்றதோ அது ஸப்தஸ்வரங்க ளுக்குள் ஏதாவதொரு ஸ்வரமாகவே இருக்குமென்பது துணிபு.

''ஸ்வத: ரஞ்ஜயதி (சிரோதுரு சித்தம்) இதி ஸ்வர:''

என்ற பதப்பிரிவினையால் ஸ்வரம் என்ற பதம் மேற்கூறிய பொருள் பெற்றதென அஹோபிலர் கூறியிருக்க, மதங்க முனிவர் ஸ்வரம் என்ற சொல்லின் பொருளை வேறு விதமாகக் கூறியிருக்கிறார்.

ராஜ்ருதீப்தாவஸ்ய த[4]தோ: ஸ்வசப்[3]த[3]பூர்வகஸ்யச
ஸ்வயமு ஹ்ராஜதே யஸ்மாத் தஸ்மாத் ஸ்வர இதி ஸ்மிருத:

—பி[3]ருஹத்[3]தே[3]சி

எந்த நாதம் பிறிது ஒன்றின் உதவியின்றி தானே செவிக்கினியதாய் விளங் குமோ அதெல்லாம் ஸ்வரமென்கிறார் அவர். எனவே அடித்தல் அல்லது மீட்டல் ஏற்பட்டவுடனே உண்டாகும் டட், டப், டக், என்பன போன்ற தொனிகள் கார்வையற்றிருத்தலால் இவை சுருதி என்றும் இந்த சுருதியிலிருந்து தொடர்ந்து ஏற்பட்டு கார்வையோடு ஒலிக்கக் கூடியதும், செவிக்கு இனிமை பயப்பதுமான டண், டம், டங் முதலிய நாதத்தொடர்பே ஸ்வரங்களுக்கு மூலமென்றறிக. அது தானே இனிய தாக இருப்பதால் கேட்போரையும் இன்புறச் செய்கிறது. இம்மதம் சுருதியும், ஸ்வரமும் ஒன்றே என்ற கொள்கையை மறுப்பதாகும் என்றறிக.

இவ்வாறு உண்டாகும் 7 ஸ்வரங்கள் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தி யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற பெயர்களால் விளங்குகின்றன. ஸங்கீதலக்ஷணக் கிரந்தங்களியற்றிய பெரியோர்கள் இந்த ஸ்வரங்களின் பெயர் களைக் குறிப்பிடும்போது முழுப் பெயரையும் சொல்லுவதால் ஏற்படும் விரிவுக்கு

அஞ்சி சுருக்கப் பெயராக 'ஸ, ரி, க, ம, ப, த, நி' என்ற ஸங்கேதப் பெயர்களால் இவைகளைக் குறிப்பிடத் தலைப்பட்டனர். பின்னர் ஸ்வரம் பாடும்பொழுது காயகர்கள் அந்த அந்த ஸ்வரஸ்தானங்களைப் பிரயோகத்தில் காட்டும்பொழுது அந்த அந்த ஸ்வரங்களின் முதல் எழுத்தையே கையாண்டனர். இவ்வழக்கம் மிகமிகப் பழமையானதென்பதை 'ஸங்கீதமகரந்த[3]த்தில் நாரதர் குறிப்பிடுவதி லிருந்தும் உணரலாம்.

சார்ங்கதேவரும் சுருதிகளிலிருந்தே ஸ்வரங்கள் உண்டாகின்றன என்பதை யும், அவைகளுக்கு முற்கூறிய 'ஸரிகமபதநி' என்ற ஸங்கேதப் பெயர்கள் பிர யோகத்திலிருந்து வருவதையும்,

சுருதிப[4]ய: ஸ்யு: ஸ்வரா: ஷட்[3]ஜர்ஷப[4] க[3]ன்த[4]ரமத்[4]யமா:
பஞ்சமோ தைவ[4]வதச்சாத[2] நிஷாத[3] இதி ஸ்ப்ததே
தேஷாம் ஸம்ஞ்ஞா: ஸரிக[3]மபத[4]னீத்யபராமதா:

(ஸ. ரத்னகரம்)

என்ற சுலோகங்களில் கூறியிருக்கிறார்.

ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யார்களும் தமது நவரத்னமாலா ஸ்தோத்திரத் தில்

'ஸரிக[3]மபத[4]னி' ரதாம் தாம் வீணஸம்கிரான்த கான் தஹஸ்தாம் தாம்
சான்தாம் மிருது[3]லஸ்வான்தாம் குசப[4]ரதான்தாம் நமாமி சிவதான்தாம்

என்ற சுலோகத்தில் ஸப்த ஸ்வரங்களுக்கு மேற்கூறிய ஸம்ஞைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஸ்வரங்களின் உற்பத்தி ஸ்தானங்கள்

நாபியிலிருந்து ஷட்ஜமும், மார்பிலிருந்து ரிஷபமும், கழுத்திலிருந்து காந்தா ரமும், உள் நாக்கிலிருந்து மத்யமமும், மூக்கிலிருந்து பஞ்சமமும், பற்களிடையே தைவதமும், உதடுகளின் வழியே நிஷாதமும் பிறக்கின்றன. இவைகள் இன்றி யமையாத முதன்மை ஸ்தானங்கள் என்றறிக. ஏனெனில் ஷட்ஜமே 6 ஸ்தானங் களிலிருந்தும் பிறக்கிறதாகையால் ஒவ்வொரு ஸ்வரமும் ஒரு ஸ்தானத்திலிருந்து மாத்திரமே பிறந்துவிடாது.

'பிராத[4]ன்யேன வ்யபதே[3]சா ப[4]வன்தி'

என்ற நியாயத்தைத் தழுவி ஸ்தானங்கள் இவ்விதம் கூறப்பட்டன.

ஸ்வரங்களின் பிரிவினை

சுத்[3]த[4]ச்ச விகிருதாச்சேதி பிரத[2]மம் த்[3]வித[4]: ஸ்வரா:

(ஸங்கி[3]த பாரிஜாதம்)

முதலில் ஸ்வரங்களைப் பொதுவாக சுத்த ஸ்வரங்கள் அல்லது பிரகிரு ஸ்வரங்கள் என்றும், விக்ருத ஸ்வரங்கள் அல்லது விக்ருதி ஸ்வரங்கள் என்று இருவிதமாகப் பிரிக்கலாம்.

இருவகை ஸ்வரங்களின் எண்ணிக்கை

சுத்³த⁴த்வவிகிருதத்வாப்⁴யாம் ஸ்வரா த்³வேதா⁴ பிரகீர்திதா:
சுத்³த⁴ா: ஸப்த, விகாராக்²யா: த்³வ்யதி⁴காவிம்சதிர்மதா:

(ஸங்கீ³த பாரிஜாதம்)

'ஸரிகமபதநி' என்பவை ஏழும் சுத்த ஸ்வரங்கள். சதுச்ருதிரிஷபம் முதலான 22 ஸ்வரங்கள் விகிருதி ஸ்வரங்கள் என்று அஹோபிலர் கூறியிருக்கிறார்.

சுத்த ஸ்வரங்களின் லக்ஷணம்

நியத சுருதிஸம்பன்ன: ஸ்வரா: சுத்³த⁴ா: இதி ஸ்மிருதா:

தம்தமக்கென்று வகுக்கப்பட்டுள்ள சுருதியுடன் மாத்திரம் கூடியிருக்கும் ஸ்வரங்கள் சுத்த ஸ்வரங்களாகும். எந்த எந்த சுருதிகளுடன் ஷட்ஜம் சேர்ந்திருக்கலாமென்று சாஸ்திரகாரர்கள் வகுத்திருக்கின்றனரோ அந்த அந்த சுருதிகளுடன் மாத்திரம் அவை சேரும்போது மற்ற ஸ்வரங்களுக்குக் கீழேயோ அல்லது மேலேயோ உள்ள சுருதிகளுடன் கலக்காமல் சுத்தமாயிருப்பதையே சுத்தஸ்வரமென்று கூறினர்.

விகிருதஸ்வரங்களின் லக்ஷணம்

சுருத்யுத்கிருஷ்டாபகிருஷ்டாஸ்து விகிருதா: பிரதிப்³ாதிதா:.

தன் சுருதியிலிருந்து மேலோ அல்லது கீழோ உள்ள ஸ்வரத்தின் சுருதியைத் தழுவி வரும் ஸ்வரம் விக்ருத ஸ்வரமெனப்படுகிறது. எனவே சுத்த ஸ்வரங்களின் சுருதிகளுக்குக் குறைந்த சுருதிகளோயோ அல்லது உயர்ந்த சுருதிகளோயோ தழுவும் ஸ்வரங்கள் விக்ருத ஸ்வரங்கள் என்று பொருள் படுதலால் சுத்த ஸ்வரங்களைக் காட்டிலும் விக்ருதமான (வேறுபாட்டையடைந்த) இந்த ஸ்வரங்கள் இப்பெயர் பெற்றன.

மதபேதம்

ஒரு சிலர் 'ஸரிகமபதநி' என்னும் இவ்வேழு ஸ்வரங்களில் 'ஸகமபத' என்ற இவ்வைந்தையும் பிரக்ருதி ஸ்வரங்கள் என்றும் 'ரிநி' என்னுமிவ்விரண்டையும் விக்ருதி ஸ்வரங்கள் என்றும் கூறுகின்றனர்.

வேறு சிலர் ஸப்தஸ்வரங்களை ஸி, ரி, கு, மி, பொ, தெ, நெ, ஸு, ஸை, நி, து, பி, மு, கி, ரு, ஸோ என கேட்போருக்கு அஸஹ்யமாயிருக்கும்படி விகாரமாகப் பாடுவதால் இவைகளே விக்ருத ஸ்வரங்கள் ஆகுமென்று கருதுகின்றனர். இவை குறிப்பிட்ட சில ஸங்கேதங்களின் வாயிலாக சில லக்ஷணங்களைத் தெரியப்படுத்துவதற்காக இவ்வாறு விகாரமாக உபயோகப்படுத்தப்பட்டிருப்பினும், தற்காலத்து இம்முறை இல்லாததால் இம்மதம் ஆதரிக்கத்தக்கதன்று.

ஸப்த ஸ்வரங்கள் பிறந்த வாரங்கள்

ப்³ரஹ்மவாரே ஸ்வர: ஷட்³ஜ: ரிஷப⁴: ஸோமவாரக:
க்³ரான்த⁴ார: குஜவாரே ச மத்⁴யமோ பு³த⁴வாரக:
பஞ்சமோ கு³ருவாரே ச சுக்ரவாரே ச தை⁴வத:
நிஷாதே³ா மன்த³வாரே ச சுருணு தே³வி! ஸ்வரோத்³ப⁴வ:

(ஸங்கீ³த தா³மோத³ர:)

ஷட்ஜம் முதலிய 7 ஸ்வரங்களும் முறையே ஞாயிறு முதலிய ஏழு கிழமைகளிலும் உண்டானதாகப் பரமசிவன் பார்வதிக்கு உபதேசித்திருக்கிறார்.

ஸப்த ஸ்வரங்கள் பிறந்த நக்ஷத்திரங்கள்

ஷட்³ஜ: சதபி⁴ஷக்³ஜச்ச சித்ரா சர்ஷப⁴ஸ்ய ச
க்³ரான்த⁴ாரஸ்ய த⁴னிஷ்டா²ப⁴ம் மத்⁴யமஸ்ய மக⁴ாஸ்மிருதா
பஞ்சமஸ்யோத்தராப⁴ம் ஸ்யாத் பூர்வாஷாடா⁴ா து தை⁴வத:
அனுராதா⁴ம் நிஷாத³ஸ்ய ஷட்³ஜாதீ³னும் து தாரகா:

(ஸங்கீ³த மகரன்த³:)

ஷட்ஜம் முதலிய ஸ்வரங்கள் ஏழும் முறையே சதயம், சித்திரை, கேட்டை, மகம், உத்தரம், பூராடம், அனுஷம் என்ற நக்ஷத்திரங்களிற் பிறந்தன.

ஸப்த ஸ்வரங்கள் பிறந்த தீவுகள்

ஜம்பு³சாகுசகிரௌஞ்ச சால்மலீச்வேத நாமஸு
த்³வீபேஷு புஷ்கரே சைவ ஜாதா: ஷட்³ஜாத³ய: ஸ்வரா:

(ஸங்கீத மகரந்தம்)

ஜம்புத்வீபம், சாகத்வீபம், குசத்வீபம், க்ரௌஞ்சத்வீபம், சால்மலீத்வீபம், ச்வேதத்வீபம், புஷ்கரத்வீபம் என்னுமிந்த த்வீபங்களில் ஷட்ஜம் முதலிய ஏழு ஸ்வரங்களும் முறையே பிறந்தன.

ஸப்த ஸ்வரங்களின் இராசிகள்

கும்ப⁴ஸ்துலான்த⁴ஷ்சைவ ஸிம்ஹ: கன்யா த⁴னுஸ்ததா²ா
விருச்சிகச்ச ததா²ா ராச்ய: கிரமாத் ஜ்ஞேயா: புதை⁴ :ஸதா³ா

(ஸங்கீத மகரந்தம்)

ஷட்ஜம் முதலிய ஏழு ஸ்வரங்களும் முறையே கும்பம், துலாம், மீனம், ஸிம்ஹம், கன்யா, தனுசு, விருச்சிகம் என்னும் இந்த ராசிகளில் தோன்றின.

ஸப்தஸ்வரங்களின் இராசிவீடுகள்

சனிர்பி⁴ருகு: சசீசைவ ஸூர்யச்சன்தி³ர ஸுதஸ்ததா²ா
கு³ர்பூ⁴மிஸுதச்சைவ ஹ்யேதா ராச்யதி⁴தே³வதா:

(ஸங்கீத மகரந்தம்)

ஷட்ஜம் முதலிய ஏழு ஸ்வரங்களுக்கும் முறையே சனி, சுக்கிரன், சந்திரன், ஸூரியன், புதன், குரு, அங்காரகன், இந்த கிரஹங்கள் ராசிக்கு அதிதேவதைகளாக இருக்கின்றன.

ஸப்தஸ்வரங்களின் ஜாதிகள்

ஸ்வரா: ஸ்ரிக^{3}மாச்செவ சத்வாரோ ராக்ஷஸா: ஸ்மிருதா:
பத^{3} மானுஷஸம்ஜ்ஞள ச நிஷாத^{3}ம் தை^{4}வதம் விது^{3}:

(ஸங்கீத மகரந்தம்)

ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம் இந்நான்கு ஸ்வரங்களும் ராக்ஷஸ ஜாதியையும், பஞ்சமம், தைவதம் இவ்விரண்டும் மனித ஜாதியையும், நிஷாதம் தேவஜாதியையும் சேர்ந்தனவாகும்.

ஸப்தஸ்வரங்களின் வம்சங்கள்

தே^{3}வவம்சாஸ்து ஸக^{3}மா: பஞ்சம: பிதுருவம்சஜ:
ரிதை^{4}ள ரிஷிகுலே ஜாதௌள நிஷாதே^{3}ர்ஸுரவம்சஜ:

(ஸங்கீத மகரந்தம்)

ஷட்ஜம், காந்தாரம், மத்யமம் இம்மூன்றும் தெய்வகுலத்தையும், பஞ்சமம், பித்ரு வம்சத்தையும், ரிஷபம், தைவதம் இவ்விரண்டும் ரிஷிகுலத்தையும், நிஷாதம் அஸுரகுலத்தையும் சேர்ந்தவை.

ஸப்தஸ்வரங்களின் வருணங்கள் (ஜாதிகள்)

ப்ரு^{3}ஹ்மஜாதீ ஸமௌள ஜ்ஞேயௌள ரிகே^{4}ள க்ஷத்ரியஜாதிகௌள
நிகே^{3}ள வைச்யாவிதிப்ரோக்தௌள பஞ்சம: சூத்^{3}ரஜாதிக:

(ஸங்கீத மகரந்தம்)

ஷட்ஜமும், மத்யமமும் பிராம்மணவர்ணத்தைச் சேர்ந்தன. ரிஷபமும் தைவதமும் க்ஷத்ரிய ஜாதியைச் சேர்ந்தவை. நிஷாதமும், காந்தாரமும் வைசிய ஜாதியின. பஞ்சமம் சூத்ர ஜாதியைச் சேர்ந்ததாகும். அந்தரகாந்தாரமும், காகலிநிஷாதமும் கூட சூத்ரஜாதியைச் சேர்ந்ததாக சார்ங்கதேவர் கூறுகிறார்.

ஸப்தஸ்வரங்களின் இருஷிகள்

தக்ஷோ ர்த்ரி; கபிலச்செவ வஸிஷ்டோ^{2} ப^{4}ார்க^{3}வஸ்ததா^{2}
நாரத^{3}ஸ்தும்புருச்செவ ஷட்^{3}ஜாதீனும் ரிஷீசுவரா:

(ஸ. மகரந்தம்)

தக்ஷர், அத்ரி, கபிலர், வஸிஷ்டர், ப்ருகு, நாரதர், தும்புரு இவ்வேழு ரிஷிகளும் ஷட்ஜம் முதலிய ஏழு ஸ்வரங்களுக்கும் முறையே ரிஷிகளாவர்.

ஸப்தஸ்வரங்களைக் கண்டுபிடித்த தேவர்கள்

வஹ்னிர்வேத^{4}ா: சசாங்கச்ச லக்ஷ்மீகாந்தச்ச நாரத^{3}:
ரிஷயோ த^{3}த்^{3}ருசு: பஞ்ச ஷட்^{3}ஜாதீன், தும்புருத்^{4}வனி

(ஸ. ரதனகர:)

ஷட்ஜம் முதலிய ஐந்து ஸ்வரங்களையும் முறையே அக்னி, பிரமன், சந்திரன், விஷ்ணு, நாரதர் இவ்வைவரும் கண்டுபிடித்தனர். தைவதத்தையும், நிஷாதத்தையும் தும்புரு மகரிஷியே முதலில் கண்டார்.

ஸப்தஸ்வரங்களின் அபிமானி தேவதைகள்

வஹ்னிர்பி^{3}ருஹ்மா சாரத^{3}ா ச சர்வச்ரீ நாத^{2}ப^{4}ாஸ்கரா:
க^{3}ணேசுவராத^{3}யோ தே^{3}வா ஷட்^{3}ஜாதீனும் து தே^{3}வதா:

அக்னி, பிரமன், ஸரஸ்வதி, சிவன், விஷ்ணு, சூரியன், கணபதி இவர்கள் ஏழு ஸ்வரங்களுக்கும் அதிஷ்டான தேவதைகள் எனக் கூறப்பட்டிருக்கின்றனர்.

ஸப்தஸ்வரங்களின் சந்தஸ்ஸுகள்

கிரமாத^{3}னுஷ்டுப்^{3} க^{3}ாயத்ரீ திரிஷ்டுப் ச பி^{3}ருஹதீ தத^{2}ா
பங்க்த்யுஷ்ணிக^{3}ள ச ஜக^{3}தீ ச^{2}ன்த^{3}ாம்ஸி பரிகீர்திதா;

(ஸ. மகரந்த^{3}ம்)

அனுஷ்டுப், காயத்ரீ, த்ரிஷ்டுப், ப்ருஹதி, பங்தி, உஷ்ணிக், ஜகதீ இவை முறையே ஏழு ஸ்வரங்களுக்குமுள்ள சந்தஸ்ஸுகள் (விருத்தங்கள்) ஆகும்.

ஸப்தஸ்வரங்களின் கோத்திரங்கள்

ஷட்^{3}ஜஸ்யஜமத^{3}க்^{3}ன்யச்ச ஆத்ரேய ரிஷப^{4}ஸ்ய ச
க^{3}ான்த^{4}ாரஸ்ய கௌ^{3}தமஸ்து வஸிஷ்டோ^{2}ா மத்^{4}யமஸ்ய ச
ஸ்ரீவத்ஸ: பஞ்சமஸ்யெவ தை^{4}வதஸ்ய பராசர:
சாலங்காயோ நிஷாத^{3}ஸ்ய கௌ^{3}த்ராணி க^{2}தி்தானிச

(ஸ. மகரந்த^{3}ம்)

ஏழு ஸ்வரங்களும் முறையே ஜமதக்நி, ஆத்ரேயர், கௌதமர், வஸிஷ்டர் ஸ்ரீவதஸர், பராசரர், ஸாலங்காயர், இவர்களுடைய கோத்திரங்கள் உடையனவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ஸப்தஸ்வரங்களின் நிறங்கள்

ஷட்^{3}ஜ: கமலவர்ணஸ்யஸ்யாத்ரிஷப^{4}: பிஞ்ஜரஸ்ததா^{2}ா
க^{3}ான்தார: ஸ்வர்ணவர்ணஸ்ஸ்யாத் மத்^{4}யம: குன்த^{3}வர்ணக:
பஞ்சமோ ர்ஜிதவர்ணஸ்ஸ்யாத் தை^{4}வத: பீதவர்ணக:
நைஷாத^{3}: கர்பு^{3}ரோவர்ண: ஸப்தவர்ணு: நிரூபிதா:

ஸ. மகரந்த^{3}ம்.

தாமரைமலரின் நிறம்போன்ற (சிவப்பு) நிறமுடையது ஷட்ஜமாகும். சிறிது வெளுப்புக்கலந்த மஞ்சள் நிறமுடையது ரிஷபம். நல்ல மஞ்சள் நிறமுடையதாய்ப் பொன் போல் விளங்குவது காந்தாரமாகும். மல்லிகை மலர் போல் வெண்ணிறமுடையது மத்தியமமாகும். பஞ்சமம் கறுநிறமுடையது. மஞ்சள் நிறமுடையது தைவதம். எல்லா நிறமும் கலந்த சித்திரவர்ணமுடையதாக நிஷாதம் கூறப்பட்டிருக்கிறது.

ஸப்தஸ்வரங்களின் ஆடை நிறங்கள்.

ச்வேதபீதே ரக்தநீலே ஹரித்ராவர்ணகம் தத²ா
சித்ரவஸ்திரம் ச்யாமவஸ்திரம் ஷட்³ஜாதீனுமலம்கிரியா:

ஷட்ஜம் முதலிய ஏழு ஸ்வரங்களுக்கும் முறையே வெண்மை, மஞ்சள், சிவப்பு, நீலம் (கறுப்பு) மஞ்சள், சித்திரவர்ணம், கறுப்பு இந்நிறங்களுள்ள ஆடைகள் கூறப்பட்டிருக்கின்றன.

ஸப்தஸ்வரங்களின் இரத்ன ஆபரணங்கள்

முக்தாப²லம்நீலவஜ்ரே வைடூ³ர்யம் மரகதம்தத²ா
கோ³மேதக: புஷ்யராக³ ஷட்³ஜாதீனும்து பூ⁴ஷணம்
(ஸ. மகரன்த³ம்)

முத்து, நீலம், வைரம், வைடூர்யம், மரதகப்பச்சை, கோமேதகம், புஷ்யராகம் இவைகள் ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களின் இரத்தினபரணங்களாகும்.

ஸப்தஸ்வரங்களின் விலேபனங்கள் (பூச்சுக்கள்)

குங்குமா க³ருகஸ்தூரீகர்பூரம்ரோஜனம் தத²ா
சன்த³னம் ச கத³ம்ப³ம் ச ஷட்³ஜாதீனும் விலேபனம்

குங்குமம், அகரு, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், கோரோஜனம், சந்தனம், கதம்பப் பொடி இவைகள் ஸப்த ஸ்வரங்களால் முறையே பூசிக்கொள்ளப்படுகின்றன.

ஸப்தஸ்வரங்களின் ஆயுதங்கள்

க²ட்³க³: குந்தம் கீ³தா³ சக்ரம் பி⁴ண்டி³பாலம் ததை²வ ச
நாராசமங்குசம் சேதி ஸ்வராணுமாயுத⁴ா: ஸ்மிருதா:

ஸப்தஸ்வரங்களுக்கு முறையே கத்தியும், குந்தமும், கதையும், சக்கரமும், ஈட்டியும், பாணமும், மாவெட்டியும் ஆயுதங்களாகும்.

ஸப்தஸ்வரங்களின் புஷ்பங்கள்

ஜாதீ சம்பகபுன்னாக³மல்லிகாகேதகீ ததா
கரவீரம் பத்³மபுஷ்பம் ஷட்³ஜாதீனும் பிரஸூனகம்

ஜாதி, சண்பகம், சுரப்புன்னை, மல்லிகை, தாழம்பூ, கரவீரம், தாமரைப் புஷ்பம் இவைகளே ஸப்தஸ்வரங்களுக்கு அலங்காரமாகும் மலர்கள்.

ஸப்தஸ்வரங்களின் உணவுப்பொருள்

தத்⁴யன்னம் பாயஸம் ப⁴க்ஷ்யும் சித்ரான்னம் பிஷ்டயுக்தய:
சுத்³த⁴ான்னம் தண்டுலம் செவ ஷட்³ஜாதீனும் து பே⁴ாஜனம்

தயிரன்னம், பாயஸம், பலஹாரங்கள், சித்திரான்னம், மாவு, சுத்தமான சோறு, அரிசி இவைகளே ஸப்தஸ்வரங்களுக்கு முறையே உண்ணத்தகுந்த பொருள்களாகும்.

ஸப்தஸ்வரங்களின் ரஸங்கள்

ஷட்³ஜஸ்யாத்³பு⁴தவீரள ச ரிஷப⁴ஸ்ய ச ரளத்³ரக:
க³ான்தா³ரஸ்ய ச சான்தச்சஹாஸ்யாக்³²யம் மத்⁴யமஸ்ய ச
பஞ்சமஸ்ய ச சிருங்கா³ரோ பீ³ப⁴த்ஸோ தை⁴வதஸ்ய ச
(ஸ. மகரந்த³ம்.)

ஷட்ஜஸ்வரத்திற்கு அத்புதமும் வீரமும் ரஸங்களாகும். ரௌத்ரரஸம் ரிஷபத்தினுடையதாகும். சாந்த ரஸத்தை காந்தாரமும், ஹாஸ்யரஸத்தை மத்யமமும், சிருங்காரரஸத்தைப் பஞ்சமமும், பீபத்ஸ (பய) ரஸத்தை தைவதமும், கருணரஸத்தை நிஷாதமும் பெற்றுள்ளன.

ஸப்தஸ்வரங்களுக்கு ஸமமான தொனியைச் செய்யும் பிராணிகள்

ஷட்³ஜம் மயூரோ வத³தி, க³ாவோ ரிஷப⁴ம்ப⁴ாஷிண:
அஜோ விரௌள தி க³ான்த⁴ாரம், கிரௌஞ்ச: க்வணிதிமத்⁴யமம்
புஷ்பஸாதாரணேகாலே பிக: கூஜதி பஞ்சமம்
தை⁴வதம் ஹேஷதே வாஜீ, நிஷாத³ம் பி³ரும்ஹதே க³ஜ:

ஷட்ஜ ஸ்வரத்தை குதூகலமாக மயில் கூவும்போது கண்டறியலாம். எருதுகள் ரிஷபம் போன்ற ஸ்வரத்தை வெளிப்படுத்துகின்றன. ஆடு காந்தார ஸ்வரத்திற்கிணையாகக் கத்துகிறது. கிரௌஞ்ச பக்ஷிமத்தியமஸ்வரத்திற்கு ஸமமாய் சப்திக்கிறது. புஷ்பம் நிறைந்த வஸந்த ருதுதில் களிப்பையுடைய குயில்கள் இயற்கையாகக் கூவும் ஸ்வரம் பஞ்சமமேயாகும். குதிரைகள் கனைக்கும் போது தைவதஸ்வரம் தோன்றுகிறது. யானையின் கர்ஜனையிலிருந்து நிஷாத ஸ்வரம் ஏற்படுவதைக் காணலாம்.

ஸப்தஸ்வரங்களின் வாஹனங்கள்

ஹம்ஸச்ச ஸிம்ஹபே⁴ருண்ட³ள ஹரிண: ஸிதஸாலுக²:
சுகசாரீக்ரமாத் தேஷாம் ஷட்³ஜாதீனும் துவாஹக:
(ஸ. ஸ. ஸா. ஸ.)

ஹம்ஸமும், சிங்கமும், கண்டபேருண்டப் பக்ஷியும், மானும், வெள்ளைத் தவளையும், கிளியும் முறையே ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களுக்கு வாஹனங்களாகும்.

ஸப்தஸ்வரங்களின் மனைவிகள்

க³ான்த⁴ர்வீ கின்னரீ யக்ஷீ கிம்பூர்ஷீ நாக³கன்யகா
ஸுரஸ்த்ரீ ராக்ஷஸீத்யேஷாம் ஷட்³ஜாதீ³னும் ஸ்திரியோ மதா:
(ஸங்³கீதஸர்வார்த²ஸாரஸங்க்ரஹம்)

ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களுக்கு முறையே காந்தர்வ ஸ்த்ரீயும், கின்னர ஸ்த்ரீயும், யக்ஷஸ்த்ரீயும், கிம்புருஷ ஸ்த்ரீயும், நாககன்னிகையும், தேவதா ஸ்த்ரீயும், ராக்ஷஸ ஸ்த்ரீயும் மனைவிகளாவர்.

ஸப்தஸ்வரங்களின் ஆயுட்காலம்

அசீதிஸ்ஸப்ததிஷ்ஷ ஷ்டி² சத்வாரிம்சத் த்ரித³ச்யபி
விம்சதிர்த³ச வர்ஷாணி ஷட்³ஜாதீ³னும் வய: க்ரமாத்
(ஸ. ஸ. ஸா. ஸ.)

ஷட்ஜம் முதலிய ஸ்வரங்களின் ஆயுட்காலம் முறையேதேவவருஷங்களில் 80, 70, 60, 40, 30, 20, 10 வருஷங்களாகும்.

ஸப்தஸ்வரங்களின் வடிவங்கள்

ஸ்தூ²லஸுஷ்மம் ஸ்தூ²லதீ³ர்க⁴ம் ஸமபுஷ்டி ததை²வ ச
தீ³ர்கா⁴திஸ்தூலதே³ஹச்ச ஷட்³ஜாதீ³னும் வபு: க்ரமாத்
(ஸ. ஸ. ஸா. ஸ.)

ஸப்தஸ்வரங்களின் தேக அமைப்பு முறையே பெருத்ததாயும், மெல்லியதாயும், பெருத்ததாயும், உயர்ந்ததாயும், ஒரே மாதிரியான புஷ்டியுடையதாயும், உயர்ந்ததாயும், மிகப் பருத்ததாயும் இருக்கும்.

ஸப்தஸ்வர்ங்களின் வாஸவிருக்ஷங்கள்

சூதக²ர்ஜுர கத³ளீஜம்பீ³ரா த³ாடி³மா தத²ா
தி³ராக்ஷா புன்னாக³விருக்ஷாச்ச ஷட்³ஜாதீ³னும் த்³ருமா: க்ரமாத்
(ஸ. ஸ. ஸா. ஸ.)

ஸப்தஸ்வரங்களுக்கு வாஸவிருக்ஷங்கள் முறையே மாமரம், பேரீச்சை மரம், வாழை, எலுமிச்சை, மாதுளை, திராக்ஷை, புன்னை இவைகளுமாகும்.

ஸப்தஸ்வரங்களின் அங்கந்யாஸ கரந்யாஸங்கள்

ஷட்²ஜ: ஷட்³ஜகி³ராமஹிருத³யாய நம: மத்³யமகி³ராமசிரஸே ஸ்வாஹா க³ான்தா⁴ர கி³ராமசிக²ாயை வளஷட் ஷாட³வ: கவசாய ஹும் த³ளட³வ: நேத்ரத்ரயாய வளஷட் ஸம்பூர்ண: அஸ்திராய ப²ட் ஸன்கரிஷி: ஸுபிரதி ஷ்ட²ாசன்னத்³: க³ளரீ தே³வதா ஏவம் ஹ்ரீம்ச்ரீம் ஸம் நம:

ரிஷப⁴: த³க்ஷிண ஹிருத³யாய நம: பாகசிரஸேஸ்வாஹா. சித்ரச்சிக²ா யைவளஷட். து⁴ருவம் கவசாயஹும். சித்ரதா: நேத்ரத்ரயாய வளஷட். சித்ரதம்: அஸ்திராயப²ட். ஸன்னத³ரிஷி:. பிரதிஷ்ட²ாச²ன்த³: ஸரஸ்வதீ தே³வதா. ஏம்க்லீம் ஸள: ரிம் நம:

க³ான்தா⁴ர: சதுரஸ்ரஹிருத³யாய நம:. திஸ்ரச்சிரஸே ஸ்வாஹா. மிச்ரச்சி க²ாயை வளஷட். க²ண்ட³: கவசாயஹும். ஸம்கர: நேத்ரத்ரயாய வளஷட். சதுரச்ர திரியச்ர மிச்ரக²ண்ட³ ஸம்காரா: அஸ்திராயப²ட். ஸனத்குமார ரிஷி: அத்யுக்தம் ச²னத³: து³ர்காதே³வதா. ஏம் ஹ்ரீம் ச்ரீம் க³ம் நம:.

மத்⁴யம: தத்வம் ஹிருத³யாய நம:. ஓக⁴: சிரஸேஸ்வரஹா. அனுக³ச்சி க³ாயை வளஷட். ஸம: கவசாயஹும். உபரி நேத்ரத்ரயாய வளஷட். உபபத³: அஸ்திராயப²ட். மித்ரரிஷி:. ஸுபிரதிஷ்ட²ாச²ன்த³:. ஸாவித்ரீ தே³வதா. ஏம் க்லீம் ஸள: மம் நம:.

பஞ்சம: த்³ருத: ஹிருத³யாய நம: மத்⁴ய: சிரஸே ஸ்வாஹா. லம்பி³த: சிக²ாயை வளஷட். த்³ருதலம்ப³: கவசாயஹும். த்³ருத மத்⁴ய: நேத்ரகாயாய வளஷட். மத்⁴யலம்ப: அஸ்தராய ப²ட். வருணரிஷி:. ஸுபிரதிஷ்ட²ாச²ன்த³:. ஜாஹ்னவீதே³வதா. ஏம் ஹ்ரீம் ச்ரீம் பம் நம:.

தை⁴வத: கோ³புச்ச² ஹிருத³யாய நம: ச்ரோத்ரோக்³ச்சிரஸே ஸ்வாஹா. ஸம: சிக²ாயை வளஷட். விஸம: கவசாயஹும். அதீத: நேத்ரத்ரயாய வளஷட். அனுக³த: அஸ்த்ராய ப²ட். ஹாஹா ரிஷி:. பிரதிஷ்ட²ா ச²ன்த³: சசீதேவதா. ஏம் க்லீம் ஸள: த⁴ம் நக:.

நிஷாத³: மூர்ச²ஹிருத³யாய நம:. தானச்சிரஸே ஸ்வாஹா. வாதி³ச்சி க²ாயை வளஷட். ஸம்வாதி³கவசாய ஹும். அனுவாதி³ நேத்ரத்ரயாய வளஷட். விவாதீ அஸ்த்ராய ப²ட். ஹுஹூ ரிஷி:. அத்யுத்தம் ச²ன்த³: மஹா லக்ஷ்மீ: தே³வதா. ஐம் ஹ்ரீம் சிரீம் ஐம் க்லீம் ஸள: நிம் நம:.

ஸப்தஸ்வரங்களின் தியானச்லோகங்கள்

1. வீணைக்வணச்சிரவணஜாதகு தூஹலேன
தே³வேன காமரிபுணு பரிரப்⁴யமாணும்.
பாசாங்குசாங்கிதகராமருணுவப்⁴ாஸம்
ஷாட்³ஜீம் ஸமஸ்த ஜனனீமனிசம் நமாமி.

2. நிஸ்ஸீமவாங் மனஸயோரதி தூரவர்தீ
யஸ்யாம ஹத்வமவத⁴ாரயிதும் பிரவிருத்த:.
பத்³மாஸனேஃபிபரஹாஸ்யத³சாம் பிரயாதி
தாமார்ஷபீ⁴ன்துக (சுக) நிப⁴ாமனிசம் நமாமி.

3. ஸ்வர்ணுபி⁴ராமருசிமு(தோ)ஜ்வல ரூபவேஷாம்
வீணுவினேதகுதுகாம் மிருது³ மீலிதாக்ஷீம்.
தே³வீம் த³யார்தி்³ர ஹிருத³யாம் பிரணதிம்க³தேஷு
க³ான்த⁴ாரமாஸ்தி்²தவதீம் அனிசம் நமாமி.

4. மன்த³ார குன்த³குமுத³ பிரதிரூப ரூபாம்
இன்தி்³வராயதவிசால வீலோல நேத்ராம்.
சன்தி்³ராவதம்ஸ பரிசும்பி³தபாத்³ பத்³மாம்
தாம் மத்⁴யம ஸ்வரமயீம் அனிசம் நமாமி.

5. வாணீந கேவல மஹாரியயாவிஜித்ய
பிரீதிபிரத³ா பிகுலாத்ஸ சவர்ணபே³த³:.
தே³வேன்தி்³ர சேக²ரிதபாத³ ஸரோஜரேணு:
தாம் பஞ்சமஸ்வரமயீம் அனிசம் நமாமி.

6. யஸ்யா வபுர்நவஸுத⁴ாரஸ நிர்விசேஷம்
பீதம் தத³ப்யதிதராம் நயனெர்மஹேச:
(மஹேன்த்ர)
ஆபீயமானமஹிதோபி த³த⁴ாதி தே³வ:
தாம் தெ⁴வதீ மனுகி³ரணன்னனிசம் நமாமி.

7. வர்ணெரசேஷஜனதாஹிருத³யம் க³மாப⁴ாம்
ஸர்வெஸ்ஸமஸ்த கு³ணநிர்ப⁴ர விப⁴ரமாங்கீ³ம்.
சர்வபிரியாம்ச சிகலாகலிதாவதம் ஸாம்
நெஷாதி³தே³வி ப⁴வதீ மனிசம் நமாமி.

ஸப்தஸ்வர பீஜாசஷரஷட்கோணம்



மேற் குறிப்பிட்டவாறு கேவலம் தொனிஸ்வரூபமாக
களுக்குப் பிறந்த நாள், நக்ஷத்திரங்கள், ஆடை, அணி
உணவு முதலியவைகள் உண்டு என்பது எப்படிப் பொருந்தும
ஆராய்ச்சியாளர்கள் பரிஹாஸமாக ஆக்ஷேபிக்கலாம். இத்தகைய மறுப்புகள்
'தனக்குத் தெரியாததெல்லாம் தவறு' என்று பிதற்றுகின்ற மூடமதத்தைத்
தழுவும் கொள்கையேயாகும். ஏனெனில் குருமுகமாகவும், உபாஸனைகளின்
முறைப்படியும், ஸங்கீத சாஸ்திரத்தையும், பரதசாஸ்திரத்தையும், அப்பியா
ஸம் செய்து அதனை ரஸித்து அனுபவித்த நிபுணர்களான முன்னோர்களும்,

அவர்களது சிஷ்ய பரம்பரைகளும், இந்த ஸங்கீத சாஸ்திரத்தின் ஸூஷ்மங்களை யறிவார்களேயன்றி சிற்றறிவு உடைய நாகரீக இளைஞர்கள் எங்ஙனம் அறிவர்? பூர்வாசாரியர்களான கலைஞர்கள் தான் மந்த்ர சாஸ்திர விதியைக் கற்று, பீஜாக்ஷரங்களுடனும் தேவதாதிஷ்டானம், யந்திரம், சக்கரம், அர்ச்சனை, தியானம் முதலிய அங்கங்களுடனும், காயத்ரீ முதலிய சந்தஸ்ஸுகள், தியானம் ஆவாஹனம் முதலிய உபாஸனையின் முறைகள் இவைகளுடனும், மற்ற யாதொரு அங்கமும் குறைவின்றி அந்த அந்த ஸ்வர தேவதைகளை ஷோடசோபசாரங்களால் பூசித்து அதன் பயனாகச் சிறந்த ஸ்வரக்ஞானம் சித்திக்கப் பெற்ற மகான்களாயினர். அத்தகைய பெரியோர் 'தீபகம்' (தீபகளிகா) என்னும் ராகத்தைப் பாடினால் விளக்கு தானே தீப்பற்றி எரியும். அம்ருதவர்ஷிணீ ராகத்தைப் பாடினால் மழை தானே பொழியும். மேகரஞ்ஜனி ராகத்தைப் பாடுவதால் காருண்ட மேகங்கள் கர்ஜித்துக் கொண்டு ஒரே இடத்தில் குவிந்து மழை பொழியும். தோடி ராகம் பாடி மான்களையும், மலயமாருத ராகம் பாடித் தென்றலையும், வரவழைத்த மகான்களைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன். இது போன்ற பற்பல அத்புதச் செயல்களை இன்னிசையின் வாயிலாகச் செய்து காட்டியிருக்கும் பல பெரியோர்களின் திறமையைப் பற்றி நாம் இன்றும் நம் செவியாரக் கேட்பதே அவர்கள் செய்து வந்த நாதோபாஸனைகளின் மகிமையை விளக்கச் சிறந்த அத்தாக்ஷியாகும்.

தெ^{3}வாதீ^{4}னம் ஜக^{3}த்ஸர்வம் மன்திராதீ^{4}னம் து தெ^{3}வதம்

என்றபடி மந்திரோபாஸனையால் அடைய முடியாததும் உலகத்திலுண்டோ?

ஸ்தூலதிருஷ்டிகளான பாமர ஜனங்களுக்கு மாத்திரம் இவ்வுண்மை புலப்படாதிருப்பினும், மந்திரங்களின் உண்மையின் நிலையை அறிந்து ஸித்தியடைந்த பெரியோர்கள் இக்காலத்தும் சிலர் இருக்கின்றனர்.

முன்வினைப் பயனால் சில நாஸ்திகர்களுக்குக் கூட சிற்சில சித்திகள் அடைய ஆற்றல் ஏற்பட்டு விடுகிறது. ஆயினும் அவர்கள் அதைத் தம் முன்னோர்களின் நல்வினைப்பயனால் தமக்குக் கிடைத்தது எனக்கருதாமல் தானே தன் முயற்சியினாலும், வல்லமையினாலும் அடைந்ததாகக் கருதி கர்வங்கொள்வர்.

அமெரிக்கா கண்டத்தில் ஒரு காட்டில் வேட்டையாடிக் திரிந்துகொண்டிருந்த ஹூணஜாதியைச் சேர்ந்த ஒரு பாடகன் வீணையைப் போன்ற 'பியானோ' வென்ற வாத்தியத்தை இன்னிசையாக வாசித்து, புலி, யானை முதலிய கொடிய விலங்குகளையும் தன் வசப்படுத்திப் கொண்டு, அவைகளின் உதவியால் தனக்கு உண்டான பல ஆபத்துகளிலும் தப்பித்துக் கொண்டதாகப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாயிற்றாம். அன்று முதல் இனிய ஸங்கீதத்திற்குள்ள இத்தகைய மகிமையை யுணர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கட்டுக்கடங்காத கொடிய விலங்குகளையும், நாகரீகமற்ற சில பாமரஜனங்களையும், இன்னிசையின் சுவையால் மயக்கி வேலை வாங்குகிறார்களாம்.

ஆனால் இத்தகைய ஸங்கீதத்தைச் சாஸ்திர ஸம்மதமான ஸங்கீதமென்று கூற வியலாது. அவ்வேடன் ஒருக்கால் தன்னையறியாமலேயே அவனுடைய வாத்தியத்தில் 'கௌளிபந்து' என்ற ராகத்தைச் சாஸ்திர லக்ஷணப்படி வாசித்திருக்க வேண்டும். இல்லையேல் அவனுடைய ஸங்கீதப்பகட்டிற்கு மயங்கி கொடிய விலங்குகள் எவ்வாறு துன்புறுத்தாமல் இருந்திருக்கமுடியும்?

நவீன ஆராய்ச்சியாளருக்கு ஸந்தேகம் தீர்க்கும் வண்ணம் தற்காலத்தில் ஸங்கீதத்தைத் தொழிலாகவோ, கலையாகவோ கைக்கொண்ட யாராவது அறிஞர்கள் முற்கூறிய நாதோபாஸனை முறைப்படி ஸ்வர தேவதைகளைத் தன் வசப்படுத்தி அதனால் கிடைக்கும் ஸித்திகளைப் பொறுமையுடனும், பொறாமையற்ற பெருந்தன்மையுடனும், இக்காலத்து இளைஞர்களுக்கு எடுத்துக் காட்ட முன் வருவார்களாக.

ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் உற்பத்தி ஸ்தானங்கள்

ஷட்^{3}ஜம்

'நாஸாகண்ட^{2} உரஸ்தாலு ஜிஹ்வாத^{3}ன்தாஸ்தெதெ^{2}வச
ஷட்^{3}பி^{4}: ஸஞ்ஜாயதே யஸ்மாத் தஸ்மாத் ஷட்^{3}ஜ இதி ஸ்மிருத:
ஸங்கீ^{3}த மகரன்த^{3}ம்.

மூக்கு, கழுத்து, மார்பு, உள்நாக்கு, பற்கள், நாக்கு (தாலு) இந்த 6 உருப்புக்களிலிருந்து உண்டாவதாலும், ரிஷபம் முதலிய 6 ஸ்வரங்களுக்குக் காரணமாயிருப்பதாலும் இது இப்பெயர் பெற்றது.

ரிஷப^{4}ம்

'நாபே^{4}ஸ்ஸமுத்தி^{2}தோ வாயு: கண்ட^{2}சீர்ஷ ஸமாஹத:
நத^{3}திரியஷப^{4}வத் யஸ்மாத் தஸ்மாத் ரிஷப^{4} ஈரித:.

நாபியிலிருந்து எழும் காற்று கழுத்து, சிரஸ்ஸு இவைகளால் மோதப்பட்டு எருதின் கர்ஜனை போல் ஒலித்துக் கொண்டு வெளிவருவதாலும், கேழ்போருடைய உள்ளத்தைச் சீக்கிரம் கவருவதாலும் இது இப்பெயர் பெற்றது.

காந்த^{4}ாரம்

'நாபே^{4}: ஸமுத்தி^{2}தோ வாயு: கண்ட^{2}சீர்ஷஸமாஹத:
க^{3}ன்த^{4}ர்வஸுக^{2}ஹேது: ஸ்யாத் க^{3}ான்தாரஸ்^{4}தேன ஹேதுனா'.
(வாசம் க^{3}ானாத்மிகாம் த^{4}த்தே இதி க^{3}ான்த^{4}ார ஸம்ஜஞக:)

கானரூபமான வாக்கை தரிப்பதாலும், கந்தருவ வித்தேக்கு முக்கிய ஸ்வர மானதாலும், இது காந்தாரமென்று பெயர் பெற்றது.

மத்^{4}யமம்

'வாயு: ஸமுத்தி^{2}தோ நாபே^{4}: ஹிருத^{3}யே சஸமாஹத:
மத்^{4}யஸ்த^{2}ானோத்^{3}ப^{4}வத்வாத்து மத்^{4}யமோ^{4} f ஸள பிரகீர்தித:
(ஸ்வராணாம் மத்^{4}யமத்வாச்ச மத்^{4}யம: ஸ்வர உச்யதே)

நாபியிலிருந்து உண்டாகும் காற்று இருதயத்தில் மோதி வெளிவரும்போது மத்தியமம் என்ற ஸ்வரமாக வெளிவருகிறது. ஸ்வரங்களுக்குக் காரணமான கழுத்து முதல் நாபி வரையுள்ள உறுப்புக்களில் மத்தியிலுள்ள மார்பிலிருந்து வெளிப்படுவதாலும், 'ஸரிக' என்ற கீழ் மூன்று ஸ்வரங்களுக்கும், 'பதநி' என்ற மேல் மூன்று ஸ்வரங்களுக்கும் மத்தியில் இருப்பதாலும் இதனை மத்தியமம் என்பர்.

பஞ்சமம்

'வாயு: ஸமுத்தி^{2}தோ நாபே^{4}: ஓஷ்ட^{2}கண்ட^{2} சிரோஹிருதி^{3}
பஞ்சஸ்த^{3}ான ஸமுத்^{3}பூத: பஞ்சமஸ்தேன கத்^{2}யதே'
(ஸ்வரான்தராணாம் விஸ்தாரம் யோ மிமீதே ஸ பஞ்சம:
பாட^{2}கிரமேண க^{3}ணனே ஸம்க்^{2}யா பஞ்சமோfத^{2}வா)

நாபியிலிருந்து எழும் காற்று இருதயம், கழுத்து, தலை, உதடு இவ்வைந்து ஸ்தானங்களிலிருந்து உண்டாவதாலும், ஸ்வர வரிசையில் ஐந்தாவதாக இருத்த லாலும், ஸ்வரங்களின் விஸ்தாரத்திற்கு இது அனுகூலமாக இருத்தலாலும், ஐந்து என்ற எண்ணிக்கையைக் குறிக்கும் பஞ்ச என்ற பதத்தை முற்பகுதியாகத் தன் பெயரில் பெற்றிருப்பதாலும் இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று.

தை^{4}வதம்

நாபே^{4}: ஸமுத்திதோ வாயு: கண்ட^{2}தாலுசிரோஹிருதி^{3}
தத்தத்ஸ்த^{2}ானதி^{4}ருதோ யஸ்மாத் ததோf ஸள தை^{4}வத: ஸ்மிருத:.
(ஷஷ்ட^{2}ஸ்த^{2}ானே தி^{4}ருதோ யஸ்மாத் ததோfஸள தை^{4}வதோ மத:)

புத்திமான்களால் மாத்திரம் அறியப்படும் ஸூக்ஷ்ம ஸ்வரமாதலால் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. 6-வது ஸ்தானமாகிற மார்பில் மோதி ஒலிப்ப தாலும் இதற்கு தைவதம் எனப் பெயர் வழங்கலாயிற்று.

நிஷாத^{3}ம்

நிஷீதே^{3}ன்திஸ்வரா: ஸர்வே நிஷாத^{3}ஸ்தேன கத்^{2}யதே.

இந்த ஸ்வரத்தில் மற்ற ஸ்வரங்கள் வந்து அடங்குவதாலும் 6 ஸ்வரங்களாகிற அறுசுவையோடு கூடிய உணவுப்பொருளைப் பசியுடையவன் போன்ற பாடகன் நிஷாதமாகிற அன்னத்துடன் கலந்து அனுபவிப்பதாலும் இதை நிஷாதம் எனக் கூறுவர்.

ஸ்வரங்களின் உற்பத்தி

நான்கு சுருதிகள், மூன்று சுருதிகள், இரண்டு சுருதிகள் இவைக் ளிலிருந்து தக்கவாறு ஏழு ஸ்வரங்களும் உண்டாகின்றன. இவ்விஷயத்தில் ஐந்து மதங்கள் தோன்றியுள்ளன. அவையாவன:—

(1) செவியினால் மாத்திரம் அறியப்படுவதால் ஸ்வரம், சுருதி, இவைகள் ஜாதி, வ்யக்தி இவைகளைப் போல் வேற்றுமையில்லாதவை.

(2) கண்ணாடியில் முகம் பிரதிபலிப்பதுபோல் சுருதிகளில் ஸ்வரங்கள் பிரதிபிம்பிக்கின்றன.

(3) மண், தண்டம் (கம்பு) இவைகளிலிருந்து குடங்கள் உண்டாவது போல் சுருதிகளிலிருந்து ஸ்வரங்கள் உண்டாகின்றன.

(4) பால் தயிராக மாறுவது போல் சுருதிகளை ஸ்வரங்களாக மாறு தலையடைகின்றன.

(5) இருட்டில் புலப்படாமலிருந்த குடம் தீபத்தின் ஒளியால் எவ்வாறு புலப்படுகிறதோ அதுபோலவே சுருதிகளின் மறைவாக இருக்கும் ஸ்வரங்கள் விசேஷகாரணத்தால் தெளிவாகப் புலப்படுகின்றன.

முற்கூறிய ஐந்து மதங்களில் முதல் மூன்று மதங்களும் பொருந்து வனவல்ல. ஏனெனில்:

(1) ஸ்வரம் என்றும், சுருதி என்றும் வெவ்வேறாக அறியப்படுவதினா லும், ஆச்ரயம், ஆச்ரயி இவைகளுக்கு வேற்றுமை உலகில் பிரசித்தமான தாலும் இவைகள் இரண்டையும் ஒன்றே எனக் கருதும் கொள்கை சரியல்ல.

(2) கண்ணாடியில் முகம் பிரதிபிம்பத்தையடைவது போல் சுருதிகள் ஸ்வரங்களாகப் பிரதிபலிக்கின்றன என்ற கொள்கையிலும் பிரதிபிம்பம் பொய்யானதாகையால் அதனை ஸ்வரங்கள் என்று கருதும் மனிதன் பிராந்தன் ஆகவேண்டும். ஆனால் ஸ்வரங்கள் உண்மையாக இருக்கின்றன. இவற்றைப் பொய்யென்று சொல்லுதல் பொருந்தாது.

(3) சுருதிகளைத் தவிர வேறுபட்டதான ஸ்வரங்கள் இல்லையென் பதற்கு ஆதாரமில்லாததாலும், ஒரு சுருதி இல்லாமல் அதன் நாதத்தொடர்பு ஏற்படுவதற்குக் காரணமில்லாததாலும், சுருதியிலிருந்து கார்வை யுடன் கூடிய வேறொரு நாதம் செவிப்புலன் ஆவதாலும், மண்ணே குடம்

என்று சொல்வதற்கு இயலாததுபோல சுருதிகளே ஸ்வரங்கள் என்று கூறுவதும் பொருந்தாததாகும். மேலும் மண்குடமாக மாறிய பிறகு அக்குடத்தை மண் என்று யாரும் சொல்லவதில்லை. குடம் என்றே சொல்கிறார்கள். குடத்திலிருந்து மண்ணை மாத்திரம் பிரித்துக்காட்டமுடியாது. ஆனல் சுருதிகள் ஸ்வரங்களாக மாறுபட்டுங்கூட கார்வையோடுகூடிய நாதத்தை ஸ்வரமென்றும் கார்வையற்ற நாதத்தை சுருதி என்றும் பிரித்துக்காட்ட் இயலுகிறது.

ஆகவே முற்கூறிய மூன்று மதங்களும் முன்னோர்கள் கருத்துக்கு முரண்படுவதால் அவை ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல. ஆனல் நான்காவது, ஐந்தாவது மதங்களே மதங்கர் முதலானவர்கள் ஆதரித்திருப்பதால் அவ்விரண்டுமே பொருந்தத்தக்கவை, அதாவது: பால் தயிராக மாறுவது போல சுருதியே விசேஷ காரணத்தால் ஸ்வரமாக மாறுகிறது என்றும், இருட்டிலிருக்கும் குடம் விளக்கின் உதவியால் தெளிவாகக் காணப்படுவது போல் சுருதிகளில் மறைந்திருக்கும் ஸ்வரங்களே விசேஷ காரணத்தால் தெளிவாகப் புலப்படுகின்றன என்றும் அவர்கள் கருதினர்.

மதங்கமுனிவரின் மதத்தைத் தழுவி, ஸப்தஸ்வரங்களின் ஸம்ஜ்ஞைகளே எடுத்துக் கையாண்டதின் நுட்பத்தைக் கூறுவோம்:

அ, க, ச, ட, த, ப, ய, ச இவ்வெட்டு அக்ஷரங்களும் எட்டு வர்கங்களின் முதலக்ஷரங்களாக இருக்கின்றன.

1. ஸ. இது எட்டாவது வர்கத்தின் மூன்றுவதும் **ஹரிபீஜமான அ** என்ற உயிரெழுத்துடனும் கூடியது.
2. ரி. இது ஏழாவது வர்கத்தின் இரண்டாவதும் **காமபீஜமான இ** என்ற உயிரெழுத்துடன் கூடியதுமாக இருக்கிறது.
3. க. இது இரண்டாவது வர்கத்தின் மூன்றுவது எழுத்தும் ஹரி பீஜமான அகாரத்துடனும் கூடியிருக்கிறது.
4. ம. இது ஆறுவது வர்கத்தின் ஐந்தாவது எழுத்தும் **ஹரிபீஜமான** அகாரத்துடன் கூடியதாயுமிருக்கிறது.
5. ப. இது ஆறுவது வர்கத்தில் முதல் எழுத்தும் ஹரிபீஜமான அகாரத்துடன் சேர்ந்ததாயுமிருக்கிறது.
6. த. இது ஐந்தாவது வர்கத்தில் நான்காவதும் அ என்ற ஹரிபீஜா க்ஷரத்துடனும் கூடியது.
7. நி. இது ஐந்தாவது வர்கத்தில் 5-வது எழுத்தும், **காமபீஜமான இ** என்ற உயிரெழுத்துடன் கூடியதுமாகும்.

மேற்கூறிய எட்டு வர்கங்களிலிருந்து ஸ்பத ஸ்வரங்களின் ஸம்ஜ்ஞைகள் எடுக்கப்பட்டன என்பது மதங்கமுனிவரின் கருத்து.

ஸப்தஸ்வரங்களிலிருந்து ஏற்படும் 12 ஸ்வரங்கள்

ஸப்தஸ்வரங்கள் ஸ்தான வேறுபாடு காரணமாக மந்த்ரம், மத்யம், தாரம் என மூவகைப்படுகின்றன. இவைகளே பன்னிரண்டு ஸ்வரங்களாக மாறுதலையடைகின்றன. அவையாவன;—

1. ஷட்ஜம். இது ச்யுதம், அச்யுதம் என இரு வகைப்படும். இவற்றுள் இரு சுருதிகளையுடையது விகிருதி என்றும் நான்கு சுருதிகளையுடையது விகாரமற்றதென்றும் அறிக.

2. ரிஷபம். இது எப்பொழுது ஷட்ஜசுருதியை யடைகிறதோ அப்பொழுது சதுச்சுருதியை யடைகிறது. அப்பொழுது அவற்றில் ஒன்று மாறுதல் அடைகின்றது.

3. காந்தாரம். இது ஸாதாரண காந்தாரம், அந்தர காந்தாரம் என இருவகைப்படும். மத்யம ஸாதாரணமாக இருக்கும்பொழுது இது மூன்று சுருதிகள் உள்ளதாகவும், அந்தர காந்தாரம் நான்கு சுருதிகள் உள்ளதாகவுமிருக்கும்.

4. மத்யம்ம. இது அந்தர ஸாதாரணத்தை யடைந்திருப்பதால் ஷட்ஜத்தைப் போல் இருவகைப் பிரிவினையுடையது. ஷட்ஜத்தைப் போல் என்று கூறுவதால் விகாரமுள்ள ஷட்ஜம் எவ்வாறு இரு சுருதிகளையுடையதோ அதுபோலவே மத்யமமும் என்று கண்டுகொள்க.

5. பஞ்சமம். இது (1) மத்யமகிராமத்தில் த்ரிசுருதியை யடைதல் (2) கைசிகத்தில் மத்யம சுருதியையடைந்து சதுச்சுருதியாயிருத்தல் என இரு நிலைமைகளையுடையது.

6. தைவதம். இது ஷட்ஜத்தைப் போலவே மத்யமகிராமத்தில் விகாரத்தையடைந்து சதுச்சுருதிகள் உள்ளதாயிருக்கிறது.

7. நிஷாதம். இது காகலி, கைசிகி என இரு பிரிவுகளையுடையது. இவைகள் முறையே சதுச்ருதி, த்ரிசுருதிகளுடன் கூடியவை. காகலி நிஷாதம் அச்யுத ஷட்ஜமெனப்படும். ஆக மொத்தம் விக்ருத ஸ்வரங்கள் பன்னிரண்டு சுத்தஸ்வரங்கள் ஏழுடனும் சேர்ந்து மொத்தம் ஸ்வரங்கள் பத்தொன்பது.

ஸாமவேதத்தில் வழங்கப்படும் 12 ஸ்வரங்கள்

ஸாமவேதத்தைப் பற்றிய லக்ஷணக் கிரந்தமாகிய பிராதிசாக்கியத்தில் கூறப்படும் ஸாமகானத்தில் வழங்கிவரும் 12 ஸ்வரங்களின் பெயர்கள் வருமாறு.

(1) பிரத[2]ம:
(2) த்[3]விதீய:
(3) திருதீய:
(4) சதுர்த[2]:
(5) பஞ்சம:
(6) ஷஷ்ட[2]
(7) ஸப்தம: (வினக:)
(8) அபி[4]கா[4]த:
(9) நவன:
(10) உச்சாகர்ஷண:
(11) பிரேங்க[2]:
(12) ஸம்பிரத[3]ான:

---

16 ஸ்வர ஸம்யோகங்கள்

ஸ்வர ஸம்ஜ்ஞைகள்		ஸ்வர விவரம்
ஸ.	ஷட்ஜம்	
ரி.	1. சு. ரி.	(1-வது ரிஷபம் அல்லது சுத்த ரிஷபம்)
	2. ச. ரி.	(2-வது ரிஷபம் அல்லது சதுச்சுருதி ரிஷபம்)
	3. ஷ. ரி.	(3-வது ரிஷபம் அல்லது ஷட்சுருதி ரிஷபம்)
க.	1. சு. க.	சுத்த காந்தாரம் (1-வது காந்தாரம்)
	2. சா. க.	சாதாரண காந்தாரம் (2-வது ,,)
	3. அ. க.	அந்தர காந்தாரம் (3-வது ,,)
ம.	1. சு. ம.	சுத்த மத்யமம் (1-வது மத்யமம்)
	2. ப்ர. ம.	பிரதிமத்யமம் (2-வது ,,)
ப.	பஞ்சமம்	
த.	1. சு. த.	சுத்த தைவதம் (1-வது தைவதம்)
	2. ச. த.	சதுச்சுருதி தைவதம் (2-வது ,,)
	3. ஷ. த.	ஷட்சுருதி தைவதம் (3-வது ,,)
நி.	1. சு. நி.	சுத்த நிஷாதம் (1-வது நிஷாதம்)
	2. கை. நி.	கைசிக நிஷாதம் (2-வது ,,)
	3. கா. நி.	காகலி நிஷாதம் (3-வது ,,)

த்வாதச (12) ஸ்வரஸ்தானங்கள்

	1	2	3	4	5	6	7	8	9	10	11	12
		சு ரி	ஷ ரி		சு	ப்ர	ப	சு	ச துசு	ஷ துகை	கா நி	*ச்
ச	சு ரி	சு	சா	க	ம	ம		த				
		க	க						நி	நி		

குறிப்பு:—ஸ்வரஸ்தானங்களை விவரித்துக் காட்டுவதற்கு வாத்தியங்களைத்தவிர வேறு ஸாதனமில்லாததாலும், வாத்தியங்களுக்குள் வீணையென்னும் வாத்தியமொன்றே முதன்மை பெற்றிருப்பதாலும் மேற்கூறிய ஸ்வரஸ்தான விளக்கம் வீணையில் அமைப்பை யனுசரித்துக் கூறப்பட்டது. தந்தியே தக்கு ஷட்ஜமாய் நின்றபடியால் அதற்கு ஸ்வரஸ்தானம் காட்டாமல் சுத்த ரிஷபம்முதல் ஹெச்சு ஷட்ஜம் வரையிலுள்ள 16 ஸ்வரங்களில் 12 ஸ்வரஸ்தானங்கள் காட்டப்பட்டன. ஹெச்சு ஷட்ஜத்துக்கு உபரி ஷட்ஜம் என்றும் பெயருண்டு.

---

16 ஸ்வரங்கள் ஏற்படக் காரணம்

உலகில் செவிப்புலனுகும் எவ்விதத் தொனியும் மயிலின் தொனியிலிருந்து ஆரம்பித்து யானையின் தொனிவரையிலுமுள்ள ஸ்தாயிக்குட்படுவதாகவே இருக்கும். இந்த ஸப்தவிதப் பாகுபாட்டையுடைய தொனிக்குட்படாமல் யாதொரு தொனியுமிருக்க முடியாது. ஆகையால் தான் இந்த ஐந்துக்களின் தொனிகளையே ஒரு எல்லையாக வைத்துக்கொண்டு ஸப்த ஸ்வரங்கள் என்ற நியமம் முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் அந்த ஸப்த ஸ்வரங்களுக்குள்ளேயே சிறிது சிறிது வித்தியாசத்துடன் நுட்பமான

---

*ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் மந்தரம், மத்யம், தாரம் (ஹெச்சு) என 3 ஸ்தாயிகளிருப்பதால் மொ. ஸ்வரஸ்தாயிகளை எழுத்தில் குறிப்பிட வேண்டிய அவசியத்திற்காக ஸங்கீதசாஸ்திர அறிஞர்களால் கீழ் கூறப்படும் ஸம்ஜ்ஞை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு ஸ்வரத்திற்குமேல் *இதுபோன்ற ஒரு புள்ளியிருந்தால் அது ஹெச்சு ஸ்தாயி ஸ்வரமென்றும் மொ. புள்ளி ஒரு ஸ்வரத்தின் கீழிலிருந்தால் அது மந்தர ஸ்தாயி ஸ்வரமென்றும் அத்தகைய புள்ளி மேலோ அல்லது கீழோ இல்லாமலிருந்தால் அது மத்யஸ்தாயி ஸ்வரமென்றும் வழக்கத்தில் அறியப்பட்டுவருவது காண்க.

உட்பிரிவுத் தொனிகளும் செவிப்புலனுவதால் அவற்றையும் நுட்பமாகக் கணக்கிட்டு ஸ்வரங்களை 16 என்று கருதினர். அது எப்படியெனில் மயிலின் தொனிக்குள் வேறு வித்தியாசமுள்ள தொனி இல்லாததால் ஷட்ஜம் ஒன்றே என்றும், ரிஷபத்தின் (காளையின்) தொனிக்குள் ஏற்றத் தாழ்வுடன் கூடிய மூன்று தொனிகளும் ஆட்டின் தொனிக்குள் மூன்று பிரிவுகளும், அன்றில் பறவையின் தொனியில் இரண்டும், குயில் கூவுதலில் ஒன்றும், குதிரையின் கனைப்பின் மூன்றுவிதத் தொனிகளும், யானையின் தொனியில் மூன்று வித தொனிகளும் அடங்கியிருப்பதால். ஸ்வரஸம்யோகங்கள் பதினாறு என்று முன்னோர் வகுத்திருக்கின்றனர்.

---

12 ஸ்வரஸ்தானங்களுக்குக் காரணம்

ஒரு ஸ்தாயி என்பது 12 ஸ்வரங்கள் அடங்கியது. இதிலேயே 16 ஸ்வர ஸம்யோகங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் 12 ஸ்வர ஸ்தானங்கள் என்று கணக்கிடப்பட்டது.

---

16 ஸ்வரஸம்யோகத்தின் வரிசைக் கிரமத்திற்குக் காரணம்

மேற்கூறிய 12 ஸ்வரஸ்தானங்களின் வரிசைக் கிரமம் பிரத்தியக்ஷமாய் அறியக் கூடியதாயிருப்பினும் 12 ஸ்வரஸ்தானங்களில் 16 ஸ்வரங்கள் அடங்கியிருப்பதால் இந்த 16 ஸ்வரங்களின் வரிசைக் கிரமத்தையும் அறிய வேண்டிய ஆவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதில் 4 ஸ்வரங்கள் 4 ஸ்தானங்களில் அதிகமாக அடங்கியிருக்கின்றன. அதாவது சுத்த காந்தாரமும் சதுச்சுருதி ரிஷபமும் ஒரு வீட்டிலும் ஸாதாரண காந்தாரமும் ஷட்சுருதீ ரிஷபமும் ஒரு வீட்டிலும் சுத்த நிஷாதமும் சதுச்சுருதி தைவதமும் ஒரு வீட்டிலும், கைசிக நிஷாதமும் ஷட்சுருதி தைவதமும் ஒரு வீட்டிலும் அமைந்திருக்கின்றன.

மேலே நாம் விவரிக்கப் போகும் முறைப்படி ஒரு ராகத்தில் ஸப்தஸ்வரங்களுக்கு அதிகமான ஸ்வர ஸஞ்சாரமில்லாமையாலும், அம்முறையை யனுசரித்தே 72 மேளகர்த்தாக்கள் ஏற்படுகிற படியாலும், அந்த மேளகர்த்தாக்களின் வரிசைக் கிரமத்தை யனுசரித்து, சுத்த காந்தாரத்துக்குப் பின் சதுச்சுருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரத்திற்குப்பின் ஷட்சுருதி ரிஷபம், சுத்த நிஷாதத்திற்கு பின் சதுச்சுருதி தைவதம், கைசிகி நிஷாதத்திற்குப்பின் ஷட்சுருதி தைவதம் என்ற முறை ஏற்படுகிறது. அதனை விளக்கும் சக்கரம் பின்வருமாறு :

16 ஸ்வர வரிசைக் கிரமம்

சுருதி எண்	ஸ்வரஸம்ஜ்ஞைகள்	ஸ்வரங்களின் பெயர்	எண்
1.	ஸ.	ஷட்ஜம்	1
2.	சு. ரி.	சுத்த ரிஷபம்	2
3.	சு. க.	சுத்த காந்தாரம்	3
4.	ச. ரி.	சதுச்சுருதி ரிஷபம்	4
5.	ஸா. க.	ஸாதாரண காந்தாரம்	5
6.	ஷ. ரி.	ஷட்சுருதி ரிஷபம்	6
7.	அ. க.	அந்தர காந்தாரம்	7
1.	சு. ம.	சுத்த மத்யமம்	8
2.	ப்ர. ம.	பிரதி மத்தியமம்	9
1.	ப.	பஞ்சமம்	10
2.	சு. த.	சுத்த தைவதம்	11
3.	க. நி.	சுத்த நிஷாதம்	12
4.	ச. த.	சதுச் சுருதி தைவதம்	13
5.	கை. நி.	கைசிக நிஷாதம்	14
6.	ஷ. த.	ஷட்சுருதி தைவதம்	15
7.	கா. நி.	காகலி நிஷாதம்	16

குறிப்பு:—மேலே விவரிக்கப்படும் பஞ்சம, மத்தியம சுருதிகளுக்கு ஷட்ஜமும், சுத்தமத்தியமமும், பஞ்சமமும் சுருதிஸ்வரங்களாயிருப்பதால் இந்தச் சக்கரத்தில் அவைகளை முதலிலிருப்பவைகளாகக் கருதி சுருதிக்கிரம எண்ணிக்கை எழுதப்பட்டது.

---

16 ஸ்வரஸம்யோகங்களின் நாமதேயங்களுக்குக் காரணம்

1. ஷட்ஜம்: இதற்கு இப்பெயர் வருதற்குரிய காரணங்களை முன்னரே கூறியிருக்கிறோம்.

2. சுத்த ரிஷபம்: ரிஷபங்களில் மூன்று வகையிருப்பதால் அவற்றுள் முதல் ரிஷபமாயிருப்பதால் இது சுத்தரிஷபமெனப்பட்டது.

3. சுத்த காந்தாரம்: மூவகை காந்தாரங்களில் இது முதலாகவிருப்பதால் இது சுத்தகாந்தாரம் எனப்பட்டது.

4. சதுச்சுருதி ரிஷபம்: சுருதி ஸ்வரமாகிய ஷட்ஜத்தை யாரம்பித்து இது நான்காவதானபடியால் இதற்கு இப்பெயர் வந்தது.

5. ஸாதாரண காந்தாரம்: ரிஷபத்துடன் இது ஸாதாரணமாக கலந்துகொண்டிருக்கும் தன்மையுடையதாதலால் இதற்கு இப்பெயர் வழங்கலா யிற்று.

6. ஷட்சுருதி ரிஷபம்: ஷட்சுருதி முதற்கொண்டு இது ஆறுவது சுருதியாவதால் இது ஷட்சுருதிரிஷபம் எனப்பட்டது.

7. அந்தர காந்தாரம்: மற்ற இரண்டு காந்தாரங்களைப்போல் ரிஷபத்துடன் கலந்து நிற்காமல் இது அந்தரமாய் (தனிமையாக) நிற்பதால் இது அந்தரகாந்தாரமெனப்படுகிறது.

8. சுத்த மத்யமம்: மத்தியமங்களிலிரண்டிலும் இது முதல் மத்யமமாவதால் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது.

9. பிரதிமத்யமம்: சுத்த மத்யமத்திற்கு இது (பிரதி) எதிரியாக இருப்பதால் இது பிரதிமத்யமமென்னும் பெயரை யடைந்தது.

10. பஞ்சமம்: இதற்கு இப்பெயர் ஏற்படக் காரணம் முன்னரே கூறப்பட்டுளது.

11. சுத்த தைவதம்: மூன்று தைவதங்களில் இது முதன்மை பெற்றி ருத்தலால் இது சுத்த தைவதமென்று அழைக்கப்பட்டது.

12. சுத்த நிஷாதம்: நிஷாதங்கள் மூன்றினுள் இது முதல் நிஷாத மாகையால் இது சுத்தநிஷாதம் என வழங்கப்பட்டது.

13. சதுச்சுருதி தைவதம்: சுருதிஸ்வரமாகிய பஞ்சமத்திலிருந்து இது நான்காவது சுருதியாக இருத்தலால் இது சதுச்சுருதி தைவதம் எனப் பெயர் பெற்றது.

14. கைசிக நிஷாதம்: இது தைவதத்திற்கு (கைசிகமாகிய) உச்சஸ் தானமாகிய ஷட்சுருதி தைவதத்தில் தங்கி நிற்றலால் கைசிக நிஷாதம் என்று பெயர் பெற்றது.

15. ஷட்சுருதி தைவதம்: பஞ்சமசுருதியை யாரம்பித்து ஆறுவது சுருதியானபடியால் இது ஷட்சுருதி தைவதம் எனப்பட்டது.

16. காகலி நிஷாதம்: மூன்று நிஷாதங்களுக்குள் இது மிகவும் இனிய ஸ்வரமாகையால் இதனை காகலி நிஷாதமென்று கூறுகின்றனர்.

ஷோடச (16) ஸ்வரங்களுக்கு ஆதாரம்

ஸாம ஸம்ப்ரதாயம் முதலிய லக்ஷணநூல்களில் கூறப்படும் பிரமாண வாயிலாகவும், சார்ங்கதேவர் முதலிய பல சாஸ்திரகாரர்கள் கூறியிருக்கும் நிர்ணயங்களை யனுஸரித்தும் ஸ்ப்தஸ்வரங்களை முக்கியமாகப் பிரயோகத்தில் வந்திருப்பினும் பிற்காலத்து ஸ்ரீ வெங்கடமகி அவர்கள் தாம் வகுத்திருக்கும்

72 மேளகர்த்தாக்களுக்கு ஆதாரமாகக் கொண்ட ஸ்வரங்கள் 16 தானிருக்க முடியுமென்று தெளிவாகத் தெரிவதால் அந்த 16 ஸ்வரங்களுக்கு ஆதாரம் யாதாக இருக்கலாமென ஆராய்ச்சி செய்து பார்த்ததில், மிகப் புராதனமான 'மந்த்ர ரத்நாகரம்' என்னும் நூலில் அம்பிகையின நவாவரண பூஜாவிதான முறையைக் கூறும் தறுவாயில் இரண்டாவது ஆவரணத்தைப் பற்றிய அங்கங் களை விவரிக்கையில்:—

ஸர்வாசா பூரகே சக்ரே ஷோட^{3}ச ஸ்வரஸம்யுதே
குப்தா ஏதாஸ்து யோகி^{3}ன்ய; பூஜிதா: ஸன்த்வித^{3}ம் வதே^{3}த்:

என்ற சுலோகம் காணப்படுகிறது. இதில் 16 ஸ்வரங்களோடு கூடிய 'ஸர்வாபாபூரகம்' என்னும் சக்கரத்தில் ஸங்கீதகலாபிமானினி யாகிய ஸ்ரீதேவி யை ஆவாஹித்துப் பூஜிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. சக்தி உபாஸகரும், ஸகலமந்த்ர, தந்த்ரநிபுணரும், அத்வர்யுவு (யாகங்கள் செய்தவரு) மான ஸ்ரீவேங்கடமகி அவர்கள் இந்த விதமான மந்த்ரத்தைக் கண்டபின்னரே இதிற் கூறப்படும் 16 ஸ்வரங்களை முற்கூறியவாறு ஊஹித்துக் கொண்டு இதனையே யாதாரமாகக் கொண்டு, 72 மேளகர்த்தாக்களை வகுத்திருக்க வேண்டுமென்று புலப்படுகிறது. இதைத் தவிர ஷோடச ஸ்வரங்களின் பிரிவினைக்குப் போதிய ஆதாரம் எதுவும் இதுவரை காணக் கிடைக்கவில்லை. ஸ்ரீவேங்கடமகி அவர்களும் இந்த 16 ஸ்வரங்களின் முறைப்படியே தான் 72 மேளகர்த்தாக்களை நிர்ணயித்திருக்கிறார். அவர் மே 72 மேளகர்த் தாக்களை வகுப்பதற்காக, சதுச்சுருதி ரிஷபத்தைச் சுத்த காந்தாரமாகவும் ஸாதாரண காந்தாரத்தை ஷட்சுருதி ரிஷபமாகவும், சதுச்சுருதி தைவதத்தை சுத்த நிஷாதமாகவும், கைசிக நிஷாதத்தை ஷட்சுருதி தைவதமாகவும் இவ்வாறு ஒரே ஸ்வரத்தில் இரண்டு ஸ்வரங்களின் பெயர்களை அமைத்துக் கொண்டிருக்கிறார். இப்படி யமைத்துகொண்டதினால் தான் 72 மேளங்களாக அவருக்குப் பிரிக்க முடிந்தது. இதற்கு முன்னுள்ள எந்த கிரந்தத்திலும் இந்த 16 ஸ்வரங்களின் அமைப்பும் அதனாலேற்படும் 72 மேளகர்த்தாக்களின் பிரிவினையும் காணப்படவில்லை. ஸ்ரீ வேங்கடமகி அவர்களது இந்த 72 மேளகர்த்தாக்கள் சுமார் முன்னூறு வருஷகாலமாகப் பிரயோகத்தில் அனுஷ் டிக்கப் பட்டுவருகின்றன. அதற்கு முன்னுள்ள ஸங்கீதசாஸ்திரக்காரர்கள் எழுதியுள்ள நூல்களில் அவரவர்கள் கொள்கைக்குத்தகுந்தவாறு 6 மேளங்க களென்றும், 19 மேளங்கள் என்றும், 20 மேளங்களென்றும் மேளங்கள் இத்தனை தான் என்று நிர்ணயிக்க முடியாதவாறு எழுதியிருக்கிறார்கள். ஆயினும் ஸ்ரீ வேங்கடமகி அவர்களால் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் 72 மேளகர்த்தாக்களையே ஆதரிப்பதிலும், அனுஷ்டிப்பதிலும் யாதொரு பாதகமுமில்லை யென்பதையும், இவைகட்கு ஆதாரம் மேற்கூறிய மே ஷோடக ஸ்வரங்களையாகுமென்றும் அந்த 16 ஸ்வரங்களுக்கு ஆதாரம் மேற்கூறிய மந்திரரத்னகரத்தின் சுலோகமாகத் தானிருக்க முடியும் என்பதும் எனது துணிபு.

ஸ்வரங்களின் மற்றொரு பிரிவினை

சதுர்வித[4]ா: ஸ்வரா: வாதீ[3] ஸம்வாதீ[3]ச விவாத்[3]யபி
அனுவாதீ[3]ச, வாதீ[3]து பிரயோகே[3] ப[3]ஹு:ள: ஸ்வர:

—ஸங்கீதரத்னகரம்.

ஸ்வரங்கள் வாதீ, ஸம்வாதீ, விவாதீ, அனுவாதியென நான்கு வகைப் படும்.

வாதீ: இது க்ரஹமாகவும், அம்சமாகவும், அடிக்கடி பிரயோகம் பெறுவதாயும், ராகத்தின் சாயையைத் தோற்றுவிப்பதாகவும் இருக்கும்.

ஸம்வாதீ[3]:

சுருதயோத்[3] வாத[3]சாஷ்டளவா யயோரன்தரகோசரா:
மித[2]: ஸம்வாதி[3]னள தளஸ்த: நிக[3]ாவன்ய விவாதி[3]னள:

—ஸங்கீதரத்னகரம்.

எந்த இரு ஸ்வரங்கள் பன்னிரண்டு அல்லது எட்டு சுருதிகளுக்கிடையில் ஸமசுருதியுள்ளவைகளாக இருக்கின்றனவோ, அவ்விரண்டு ஸ்வரங்களும் ஒன்றுக் கொன்று ஸம்வாதிஸ்வரங்களாக ஆகின்றன.

உதாஹரணம்:

ஷட்ஜத்திற்கு	—மத்யமம் பஞ்சமம் இவை	ஸம்வாதிகள்.
ரிஷபத்திற்கு	—தைவதம்	ஸம்வாதி ஸ்வரம்.
காந்தாரத்திற்கு	—நிஷாதம்	,,
மத்யமத்திற்கு	—ஷட்ஜம்	,,
பஞ்சமத்திற்கு	— ,,	,,
தைவதத்திற்கு	—ரிஷபம்	,,
நிஷாதத்திற்கு	—காந்தாரம்	,,

ஆகவே, எந்த ராகத்தில் ஷட்ஜம் அம்சமாகப் புறப்படுகிறதோ அங்கு அதன் ஸம்வாதியான மத்யமம், பஞ்சமம் இவைகளை அம்சங்களாக எடுத்துக் கொண்டால் ராகத்தின் இனிமை கெடாது என்பது அறிஞரின் கருத்து. இவ்வாறு எல்லா இடங்களிலும் கண்டுகொள்க.

ஸங்கீதரத்னகரத்தில் ஸம்வாதிஸ்வரத்தை யறிவதற்கு உபாயமான மண்டலப்பிரஸ்தார முறையும், வீணைப்ரஸ்தாரமுறையும் பின்வருமாறு விளக்கப் பட்டிருக்கின்றன.

மண்டலப் பிரஸ்தாரம் எழுதும் முறை:—

மேலும் கீழும் சிறிதளவு நீண்டிருக்கும் நுனிகளோடுகூடிய 6 கோடுகளை மேலிருந்து கீழ்நோக்கியிருக்கும்படி வரைந்து, பின்னர் அவ்வாறே குறுக்காக 5 கோடுகளை அவைகளினிடையே வரைந்து அவ்வைந்து கோடுகளின் இருபக்கத்து நுனிகளையும் வெளியிற் சிறிது நீண்டிருக்கும்படி செய்து விட்டு, இப்போது வெளியில் நீட்டிக்கொண்டிருக்கும் நுனிகளை மாத்திம் கணக்கிட்டால் இவைகள் மொத்தம் 22 ஆகின்றன. அதனைக் கீழே காண்க.

இது மண்டலப் பிரஸ்தாரம்.



வீணையின் பிரஸ்தாரம் எழுதும் முறை:—

குறுக்காயுள்ள 22 கோடுகளையமைத்து, அவற்றுள் ஒரு சுருதி மண்டலத்தின் கோடுகளின் நுனிகளில் சுத்தமாயும், விக்ருத மாயுமுள்ள ஷட்ஜம் முதலியவைகளை அவையவைகளினுடைய சுருதி எண்ணிக்கையை யனுசரித்து எழுதவேண்டும். அவ்வாறு எழுதிய பின்னர், எந்தெந்த ஸ்வரங்களுக்கும், தம் தம் ஆதாரச்சுருதிகளை விட்டுவிட்டு. நடுவிலிருக்கின்ற சுருதிகள் 8-வதாகவோ 12-வதாகவோ காணப்படுகின்றனவோ அவைகள் ஒன்றுக்கொன்று ஸம்வாதி ஸ்வரங்களாக ஆகின்றன.

இது வீணையின் பிரஸ்தாரம்.



விவாதி.

ஒரு சுருதியினுல் இடைவெளியுள்ள இரு ஸ்வரங்கள் ராகத்தின் இனிமையைக் கொடுப்பதால் விவாதிகள் (விரோதிகள்) என்று கூறப்படு கின்றன. வாதி ஸம்வாதி ஸ்வரங்களால் ஏற்படும் ராகரக்திமையை இது கெடுப்பதால் இதனை விரோதிஸ்வரம் என்றும் கூறுவர்.

உதாஹரணம்:

ரிஷபத்திற்கு — காந்தாரம் விவாதி.
காந்தாரத்திற்கு — ரிஷபம் ,,
தைவதத்திற்கு — நிஷாதம் ,,
நிஷாதத்திற்கு — தைவதம் ,,

சுத்த மத்யமமும், சுத்த நிஷாதமும் ஒன்றுக் கொன்று ஸம்வாதி ஸ்வரங் களாக இருக்கிறபடியால் நிஷாத காந்தாரங்கள் மற்ற ஐந்து ஸ்வரங்களைக் குறித்து விவாதிகள் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? எனின்—ஸமசுருதி களுள்ள இரண்டு ஸ்வரங்களை ஸம்வாதி ஸ்வரங்களாயிருக்கத் தகுதியுள்ளவை என்ற மதத்தைத் தழுவிக் கூறப்பட்டதென்றறிக. ஆகவே வேறு மதத்தில் நிஷாதம், மத்யமம் இவைகள் ஒன்றுக்கொன்று ஸம்வாதி ஸ்வரங்களாயி ருத்தல் பொருத்தமுடையதேயாகும்.

''ரித^{4}யோரேவவாஸ்யாதாம் தளதயோர்வாரித^{4}ாவபி''

சுத்தாவஸ்தையில் ரி, க இவைகளும் த, நி இவைகளும் எவ்வாறு ஒன்றுக் கொன்று விவாதிஸ்வரங்களாக ஆகின்றனவோ அதுபோலவே க, ம இவை களும் நி, த இவைகளும் ஒன்றுக்கொன்று விவாதிஸ்வரங்களாக இருக்கின்றன வென்றறியற்பாலது.

அனுவாதி.

சேஷாஞ்மனுவாதி^{3}த்வம்

வாதி, ஸம்வாதி, விவாதி இவைகளினின்றும் வேறுபட்ட ஸ்வரங்கள் அனுவாதிகள் எனப்படும். இது வாதி, ஸம்வாதி இந்த ஸ்வரங்களால் ஏற்படுத் தப்பட்ட ராகரத்திமைக்கு அனுகூலமாக இருப்பதால் இதனை யனுவாதியென் றழைக்கின்றனர்.

உதாஹரணம்;

ஷட்ஜத்திற்கு — ரி, க, த, நி இவை அனுவாதிகள்.
ரிஷபத்திற்கு — ஸ, ம, ப, நி ,, ,,
காந்தாரத்திற்கு — ஸ, ம, ப, த ,, ,,
மத்யமத்திற்கு — ரி, க, ப, த, நி ,, ,,
பஞ்சமத்திற்கு — ரி, க, ம, த, நி ,, ,,
தைவதத்திற்கு — ஸ, க, ம, ப ,, ,,
நிஷாதத்திற்கு — ஸ, ரி, ம, ப ,, ,,

ஷட்ஜஸ்தானத்தில் ரி, க, த, நி இவை பிரயோகிக்கப்படின் ராகரக்திமை ஏற்படுமென்று கருத்து, வாதி, ஸம்வாதி, அனுவாதி இவைகள் தம் ஸ்தானங் களை மாறுபடுத்தப் பிரயோக்கிக்கப்படினும் ஜாதி, ராகம் இவைகளின் ரக்திமைக்குக் குறைவு ஏற்படுவதில்லை. விவாதியின் பிரயோகத்திலோவெனில் ராகத்தினிமை சிதைவுறுமென்பது உட்கருத்து.

வாதி முதலிய ஸ்வரங்களின் நிலைமை

வாதி^{3}ஸ்வரச்சராஜாஸ்யாத மன்திரீஸம்வாதி^{3}ரிஷ்யதே
விவாதி^{3}ஸ்வரவெரீஸ்யாத் அனுவாதி^{3}ச பி^{4}ருத்யவத்.

—ஸங்கீத மகரந்த^{3}ம்.

வாதி ஸ்வரம் அரசன் போலவும், ஸம்வாதி அவனையனுசரிக்கும் மந்திரிபோலவும், விவாதி சத்ரு போலவும், அனுவாதி வேலையாள் போலவும் பிரயோகத்தில் சுருதப்பட்டு வருகிறது.

''பிரோக்தோ ராஜாஸ்வராரோஹோ ப^{4}வேன் மன்திரியவரோஹிணீ
ஸ்வரஸங்க^{4}ட்டனம் வெரீ பி^{4}ருத்ய: பார்சுவஸ்வரோப^{4}வேத்.

இவைகட்கு முறையே உதாரணம் வருமாறு:—

1. வாதி. ஸரிகமபதநிஸ, ரிகமபதநிஸ, கமபதநிஸ, மபதநிஸ, பதநிஸ, தநிஸ, நிஸ, ஸ.

இவ்வாறு ஆரோஹணமுறையைப் பின்பற்றவது. இதுவே ராஜஸ்வர மென்றும் கூறப்படும். வத[3]னுத் வாதீ[3]தி கீர்த்யதே என்ரூர் பார்ச்வதேவர்.

2. ஸம்வாதி. ஸநிதபமகரிஸ, நிதபமகரிஸ, தபமகரிஸ, பமகரிஸ, மகரிஸ, கரிஸ, ரிஸ.

இவ்வாறு அவரோஹண முறையை அனுசரித்து வரும் ஸ்வரங்கள் இவைகளே மந்திரி ஸ்வரங்கள் என்றும் கூறப்படுகின்றன. ஸம்வத[3]னுத் ஸம்வாதீ[3] என்று பார்ச்வதேவர் கூறுகிரூர்.

3. விவாதி. ஸம்மகரிஸரிகம, ரிப்பமகரிகமப, கத்தபமகமபத, மந்நிதபமபதநி, பஸ்ஸநிதபதநிஸ.

இவ்வாறு வரும் இயல்புடையது. இதுவே விரோதி ஸ்வரமென்றும் கூறப்படும். விவத[3]னுத் விவாதீ[3] என்று பார்ச்வதேவர் கூறியிருக்கிரூர்.

4. அனுவாதி. ஸரிக, ரிகம, கமப, மபத, பதநி, தநிஸ, ஸநித, நிதப, தபம, பமக, மகரி, கரிஸ.

இவ்வாறு வரும் இதுவே ப்[4]ருத்ய ஸ்வரமென்றும் கூறப்படும். அனுவத[3]னுத்[3]னுவாதீ[3] என்று பார்ச்வதேவர் இதனைக் குறிப்பிட்டிருக்கிரூர்.

இனி ஒரு ஸ்வரம் ஸம்வாதியாயிருத்தல் அதாவது மந்திரிபோலிருத்தல் என்பதன் கருத்தைச் சிறிது ஆராய்வோம்.

வாதிஸ்வரங்கள் ஒரு ராகத்தின் ஸ்வரூபத்தை நிர்வகிக்கின்றன. அதற்கு அனுகூலமாக ஸம்வாதி ஸ்வரங்களிருக்கின்றன. அதன் மண்டலத்தை 'பிருஹத்தேசி' யில் பின் வருமாறு குறிப்பிட்டிருக்கிரூர்கள்:



ஏதாவது ஒரு கீதத்தில் அதன் அம்சமாகக் கல்பிக்கப்படும் ஷட்ஜத்திற்குப் பதிலாக அதன் ஸ்தானத்தில் மத்யமத்தை வைத்து நிர்வகிக்கும்பொழுது ஷ்டி ராகத்தின் ஸ்வரூபம் கெடாமலிருத்தலால் இந்த ஸ்வரம் ஸம்வாதியாகிறது. இதுபோலவே யாதொரு ஸ்தானத்தில் மூர்ச்சனை வசமாக மத்யமம் இருக்கையில் அதற்குப் பதிலாக ஷட்ஜத்தை வைத்துப் பாடினல் அந்த ஜாதியை இந்த ஷட்ஜம் கெடுக்காமலிருப்பதாலும் இது ஸம்வாதியாகிறது.

ஷட்ஜ பஞ்சமங்களின் ஸ்தானத்தில் பஞ்சம ஷட்ஜங்கள் பிரயோகிக்கப்படினும் ஜாதியையோ, ராகத்தையோ இவை கெடுக்காதிருத்தலால் இவைகள் ஒன்றுக் கொன்று ஸம்வாதியாகும். இவ்வாறே ரிஷப தைவதங்களுக்குப் பதிலாக தைவத ரிஷபங்களும் பிரயோகிக்கப்படின் ஜாதி அல்லது நாதத்தை இவை கெடுக்காதிருத்தலால் ' இவைகளும் ஸம்வாதிகளே யாகின்றன. இவ்வாறே காந்தாரநிஷாதங்களுக்குப் பதிலாக நிஷாத காந்தாரங்களுமறிக.

இனி அனுவாதி ஸ்வரம் வேலியாள்போலிருத்தலின் கருத்து வருமாறு :

ஸம்வாதி ஸ்வரத்தினுலேற்படும் ராகஸ்வரூபத்தையே நன்கு இது வெளிப்படுத்துகிறது. இதன் மண்டலம் பிருஹத்தேசியில் குறிப்பிட்டிருப்பது பின்வருமாறு:



ஷட்ஜத்திற்குப் பதிலாக ரிஷபமோ, ரிஷபத்திற்குப் பதிலாக ஷட்ஜமோ பிரயோகிக்கப்படினும் ஒரு ராகஸ்வரூபத்தையடைவதாய், ஜாதியையோ ராகத்தையோ கெடுக்காமலிருக்கிறது. இவ்வாறே பஞ்சமத்திற்குப் பதிலாக தைவதமோ, தைவதத்திற்குப் பதிலாகப் பஞ்சமமோ பிரயோகிக்கப் படினும் ஜாதி மற்றும் ராகம் இவைகளின் ஸ்வரூபம் கெடுவதில்லை. இவ்வாறே ஷட்ஜத்திற்குப் பதிலாக தைவதமோ தைவதத்திற்குப் பதிலாக ஷட்ஜமோ அல்லது பஞ்சம ரிஷபங்களோ ஆகின்றன.

இனி விவாதி ஸ்வரத்தின் ச்த்துருத் தன்மையின் கருத்து வருமாறு:—

வாதி முதலிய ஸ்வரங்களால் ராகம் வாதியாகவோ, ஸம்வாதியாகவோ, அனுவாதியாகவோ ஆகும்பொழுது அதைக் கெடுத்து அதாவது விரஸபாவத்தை உண்டாக்குவதே விரோதியாயிருத்தல் என்றறிக. அதாவது ரிஷபத்திற்குப் பதிலாக காந்தாரமோ, காந்தாரத்திற்குப் பதிலாக பஞ்சமமோ ரிஷபமோ பிரயோகிக்கப்படின் அது ஜாதியையும், ராகத்தையும் நஷ்டப்படுத்துகிறது. இவ்வாறே தைவத ஸ்தானத்தில் நிஷாதமும் ஆகுமென்றறிக.

விவாதி மண்டலம்:



வாதி ஸம்வாதி முதலிய ஸ்வரங்களின் இயல்பு

வாதி என்ற ஸ்வரத்திற்கும் ஸம்வாதி என்ற ஸ்வரத்திற்கும் மத்தியில் ஒவ்வொன்றுக்கும் எட்டு சுருதிகளாவது பன்னிரண்டு சுருதிகளாவது இடை வெளியிருக்கவேண்டுமென்று ஸம்வாதி லக்ஷணம் கூறுமிடத்து ஸங்கீதரத்ன கரத்தில் கூறப்படுகிறது. அதில் ஷட்ஜத்திலிருந்து சுத்த மத்தியமமும், ஷட்ஜத்திலிருந்து பஞ்சமமும் ஷட்ஜத்திற்கு ஸம்வாதிஸ்வரங்களாகவும் ஷட்ஜத் திற்கும் மத்யம பஞ்சமங்களுக்குமிடையே வருகிற ஜீவஸ்வரங்கள் அதாவது காந்தாரரிஷபங்கள் அனுவாதிஸ்வரங்களாகவும், சுத்த ரிஷபத்திலிந்து சதுச்சுருதி ரிஷபம், ஷட்சுருதி ரிஷபத்திலிருந்து அந்தர காந்தாரம், இவை போன்று அடுத்தடுத்து வரும் ஸ்வரங்களே விவாதிகளென்றும் கூறப்பட்டி ருக்கிறது. இவ்வாறு வாதி ஸம்வாதிகளுக்கிடையில் வருகிற எட்டு சுருதி, பன்னிரண்டு சுருதி என்று சொல்வதில் சாஸ்திரத்திற்குச் சம்மதமில்லாத சிற் சில மாறுபாடுகள் காணப்படுகின்றன. 'ஸ்ங்கீதரத்ஞகர'த்திலும் ஸங்கீத

ஸமயஸாரத்திலும் ஸ்வரங்கள் 7-ம் சுருதிகள் 22-ம் சேர்ந்து மொத்தம் 29 என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் சில ஸந்தேகங்கள் தோன்றுகின்றன. 'ஸங்கீதஸங்கிரகசூடாமணி' என்ற கிரந்தத்தில் சுருதிகள் 23 என்று கூறப்படு கிறது. அவைகளின் விவரத்தைத் கீழ்க் கண்ட சுலோகத்தால் அறியலாம்.

"திரயோவிம்சத்[3] விகிருதய: ஸப்தபிரகிருதயஸ்ததா[2]
ஸ்வராஸ்திரிம்சத்ஸமுத்[3] பூ[4]தா: த[3]வாவிம்சதிக[3]தாஸ்ததா[2]: '

எனவே ஷி 'ஸங்கீதஸங்கிரகசூடாமணி' என்னும் நூலில் 23 சுருதிகளும் 7 ஸ்வரங்களும் சேர்ந்து மொத்தம் 30 சுருதிகள் என்று கூறப்பட்டிருக்கிறது. ஸங்கீதரத்ஞகரத்திலோவெனில் சுருதிகள் 22-ம் ஸ்வரங்கள் 7-ம் சேர்ந்து சுருதிகள் 29 என்று கூறப்பட்டிருக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று முரண்பாட்டுடன் காணப்படுகின்றன. 'மேளாதிகார லக்ஷண'த்திலும் ஷட்ஜம், பஞ்சமம் நீங்கலாக சுருதிகள் 22 என்றும் ஷட்ஜ பஞ்சமங்களைச் சேர்த்து சுருதிகள் 24 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

மேளாதிகார லக்ஷணத்திற் கூறியபடி சுருதிகளும் அதன் பெயர்களும் வருமாறு

1. பிரதிசுத்த ரிஷபம்.
2. சுத்த ரிஷபம்.
3. பிரதிசதுச்சுருதி ரிஷபம்.
4. சதுச் சுருதி ரிஷபம்.
5. பிரதி ஷட்சுருதி ரிஷபம்.
6. ஷட்சுருதி ரிஷபம்.
7. ச்யுத காந்தார ரிஷபம்
8. அந்தரகாந்தாரம்.
9. ச்யுத மத்தியமம்.
10. சுத்த மத்யமம்.
11. அப்ரதி மத்யமம்.
12. பிரதி மத்தியமம்.
13. ச்யுதபஞ்ச மத்யமம்.
14. பஞ்சமம்.
15. பிரதிசுத்த தைவதம்.
16. சுத்த தைவதம்.
17. பிரதி சதுச்சுருதி தைவதம்.
18. சதுச் சுருதி தைவதம்.
19. பிரதி ஷட்சுருதி தைவதம்.
20. ஷட்சுருதி தைவதம்.

21. ச்யுத நிஷாத தைவதம்.
22. காகலி நிஷாதம்.
23. ச்யுத ஷட்ஜம்.
24. நேத ஷட்ஜம்.

இந்த அபிப்பிராயத்தையே ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் அவர்களும் 'சோபில்லு ஸப்தஸ்வர' என்ற தம் கீர்த்தனத்திலும் வெளியிட்டிருக்கிறார்கள். இக்கருத்தைப் பின்பற்றியே ஸ்ரீ வேங்கிடமகி அவர்களும் குண்டக்ரியா ராகத்தில் செய்திருக்கிற ராகாங்கராகங்களடங்கிய லக்ஷண கீதத்தில் 12-வது பாகத்தில் சுதிராசதுற்வித்சதி என்று கூறியிருப்பதாலும், 'ரஸமஞ்சரி' என்ற நூலில் சுருதிகளை 24 என்றே கணக்கிட்டிருப்பதாகவும், கூறியிருக்கிறார்கள். கனகய்ய கவி சாதுர்யம் என்ற தெலுங்கு பத்யகாவ்யத்திலும், காயத்ரி மந்திரத்தின் மூன்று பாதங்களிலுள்ள 24 அக்ஷரங்களை 24 சுருதிகளாகவும், காயத்ரியின் ஜீவாதாரா அக்ஷரங்களை ஸ்பதஸ்வரங்களென்றும் அந்த 22 சுருதிகளையும், ரிஷபங்கள் 6, காந்தாரங்கள் 6. மத்யமங்கள் 4. தைவதங்கள் 6, நிஷாதங்கள் 6, எனப் பிரஸ்தரித்து மொத்தம் 4624 மேளகர்த்தாக்கள் உண்டா கின்றனவென்றும் கணித்திருக்கின்றனர். சுருதிகளின் நிர்ணயத்தைப் பற்றி முன்பே சுருதிப்பிரகரணத்தில் விவரமாகக் கூறியுள்ளோம்.

'கனகய்யகவிசாதுர்யம்' என்னும் தெலுங்கு நூலில் 24 சுருதிகளைப் பிரஸ்தரித்திருக்கும் முறை வருமாறு

1. பிரதி சுத்த ரிஷபம்.
2. சுத்த ரிஷபம்.
3. பிரதி சதுச்சுருதி ரிஷபம்.
4. சதுச்சுருதி ரிஷபம்.
5. பிரதி ஷட்சுருதி ரிஷபம்.
6. ஷட்சுருதி ரிஷபம்.

ஆக ரிஷபங்கள் 6.

1. பிரதிசுத்த காந்தாரம்.
2. சுத்த காந்தாரம்.
3. பிரதி ஸாதாரண காந்தாரம்.
4. ஸாதாரண காந்தாரம்.
5. பிரத்யந்தர காந்தாரம்.
6. அந்தர காந்தாரம்.

ஆக காந்தாரங்கள் 6.

1. பிரதிசுத்த மத்யமம்.
2. சுத்த மத்யமம்.
3. ப்ரத்யந்தர மத்யமம்.
4. பிரதி மத்யமம்.

ஆக மத்யமங்கள் 4.

1. ப்ரதிசுத்த தைவதம்.
2. சுத்த தைவதம்.
3. பிரதி சதுச்சுருதி தைவதம்.
4. சதுச்சுருதி தைவதம்.
5. பிரதி ஷட்சுருதி தைவதம்.
6. ஷட்சுருதி தைவதம்.

ஆக தைவதங்கள் 6.

1. ப்ரதிசுத்த நிஷாதம்.
2. சுத்த நிஷாதம்.
3. பிரதி கைசிக நிஷாதம்.
4. கைசிக நிஷாதம்.
5. பிரதி காகலி நிஷாதம்.
6. காகலி நிஷாதம்.

ஆக நிஷாதங்கள் 6.

ஸ்வரஸமூஹப் பெயர்கள்

ஸ ரி க ம ப த நி	இதில் 7 ஸ்வரங்களும் இருப்பதால் இது ஸம்பூர்ணம்.		
ஸ ரி க ம ப த	இதில் நிஷாதம்	வர்ஜ்யஸ்வரம்.	இது ஷாடவம்
ஸ ரி க ம ப	,, நி, த	இவை 2-ம் ,,	,, ஔடவம்
ஸ ரி க ம	,, நி, த, ப	,, 3-ம் ,,	,, ஸ்வராந்தம்
ஸ ரி க	,, நி, த, ப, ம	,, 4-ம் ,,	,, ஸாபிகம்
ஸ ரி	,, நி, த, ப, ம. க	,, 5-ம் ,,	,, காதிதம்
ஸ	,, நி, த, ப, ம, க, ரி	,, 6-ம் ,,	,, ஆர்ச்சிகம்

இப்பெயர்களையே இந்த ஸமூஹங்களடங்கிய ராகங்களுக்கும் வழங்கு கின்றனர். இவ்வாறே, ஸ்வரங்களின் வக்ரத்தன்மை காரண மாகவே சில ராகங்களும் வக்ர ராகங்கள் எனப்படுகின்றன.

காகுக்கள்

ஸ்வர காகு

நமது பிராசீன கிரந்தங்கள் சிலவற்றில் ஒரு ஸ்வரமானது தன் ஸ்தானத்திலிருந்து நழுவி கீழ் ஸ்வரத்துக்கு வராமல் கீழ்மேல் ஸ்வரங்களுக்கு மத்தியில் இனிமையாக ஒலிக்கும் நாதத்தைக் 'காகு' என்று வருணித்திருக்கின்றனர். மற்ற ஸங்கீத சாஸ்திர கிரந்தங்களிலும் இதனை நன்கு விவரித்திருக்கின்றனர். காகு என்ற சொல்லிற்கு ராகங்களுக்குரிய முக்கிய ஸ்தானம் என்று பொருள் கூறுதல் தகும். இதனைப் பற்றி 'ஸங்கீதஸமயஸார'த்திற் கூறியிருப்பதை இங்கு விளக்குகிறோம்.

''ராக³ காகு: க்ஷேதிர காகு: யன்திரகாகு: ஸ்வரோத்³ப⁴வ:
காகுச்ச தே³ச காகுச்ச காகு: ஸ்யாத³ன்யராக³ஜ:
கீ³தவித்³யா விசேஷஜ்ஞை: ஷோட³ாகாகுருதா³ஹிருத:
ராக³ஸ்யயா நிஜச்சா²யா ராக³ காகுரிதி ரிதா.
ஸாமுக்²யா பிரோச்யதே ப⁴ாஷா கீ³தலக்ஷணவேதி³பி⁴;
ஸ்வரஸ்யகஸ்யசிச்சா²யா விசேஷ: கச்சிதீ³க்ஷ்யதே:
ஸ்வர காகுரிதி பிரோக்தோ கா³னலக்ஷணகோவிதை³:
தே³சாக்²யாதே³ச காகுச்ச ராக³ச்சா²யா நிக³த்³யதே.
ராகே³ ராக³ான்தரச்சாயா காகு; ஸ்யாத³ன்ய ராக³ஜ:
ஸைவ உபராக³ பாஷா க்²யாதே இயமேவலோகே
டா²யேதிபிரஸித்³த⁴ா
கஸ்யசித்³ கா³யனஸ்யெஷா ராகே³ கஸ்மிம்ச்சிதீ³க்ஷ்யதே.
ரக்திஸ்வ ப⁴ாவதஸ்தஜ்ஞை: க்ஷேதிரகாகுர் மஹீதலே.
கின்னரீ வம்சவீணஸு ராக³ச்சாயேவதி³ருச்யதே
கத்²யதே யன்திரகாகு: ஸா கா³னலக்ஷணகோவிதை³:
ஸ்னிக்³த⁴கோமலசப்³த³ஸ்ய விஜயத்னேன கம்பனம்
லகு⁴த்வேன ஸஹோக்தம்தன்நமனம் கா³னகோவிதை³:
ஸைவநவணி:

ராக காகு

இது ராகத்தினுடைய பாவத்தை ஆதிசூக்ஷ்மமாக விளக்கிக் காட்டும் கமக ஸ்வரமாகும். இதனை பாஷை என்றும் அறிவாளிகள் கூறுகின்றனர்.

ஸ்வர காகு

ஸ்வரங்களைப் பாடும்பொழுது எந்த ஸ்வரம் கமகத்தினால் ஒரு ஸ்வரத்திலிருந்து கொஞ்சம் குறைந்தோ அல்லது கூடியோ ராகத்தினுடைய முக்கியமான சாயையைத் தெளிவாகக் காண்பிக்கின்றதோ அதனை ஸ்வரகாகு என்பர்.

தேச காகு

அந்நிய தேசராகங்களை நமது ராகங்களில் கலந்து பாடுங்கால் காதிற்கும் மனதிற்கும் இது ஆனந்தத்தையளிக்கக் கூடியது.

அன்னியராக காகு

நாம் பாடுகிற ராகத்தில் அந்நிய ராகத்தின் களை தோன்றின் அதனை அந்நியராக காகு என்று சான்றோர் வழங்குவர். இதனையே உபராக காகு வென்றும் கூறுகின்றனர். இது 'டாயம்' என்று உலகில் பிரஸித்தி பெற்றுளது.

க்ஷேத்திர காகு

ஒரு ராகத்தைப் பாடுங்கால் அதற்கு முக்கியமான கிரஹ, அம்சஸ்வரங்களையும் ஜீவஸ்வரங்தளையும் அடிக்கடி காண்பித்து ராகத்தின் களை தோன்றும்படி நன்றுய் பாடுவதாகும். (க்ஷேத்திரம்-சரீரம்)

யந்திர காகு

கின்னரீ முதலிய வாத்தியங்களில் கீழ் மெட்டிலிருந்து மேல் மெட்டுக்கள் வரை வாசிக்கும்பொழுது பல ஸ்வரங்கள் தோன்றும்படியாகவும் ராகச்சாயை நன்கு புலப்படும்படியாகவும் இனிமையாகவும் வாசிப்பது. இதனைவாத்யகாகு வென்றும் கூறுவர். இந்த கின்னரீ என்ற வாத்தியம் ஆதிகாலத்தில் ஸ்வரக்குடுக்கையில் குழல் மூங்கில்கள் பொறுத்தப்பட்டு அதன் மீது தந்திகளமைத்து வாசிக்கப்பட்ட படியால் இது வீணையென்ற வாத்தியத்திற்கும் முற்பட்டதாகக் கருதப்படுகிறது. இதனைப் பற்றி ஸங்கீத ரத்னாகரம், ஸமயஸாரம் முதலிய நூல்களில் விரிவாகக் கண்டு கொள்க.

நமன காகு

இது மிருதுவாய் கானம் செய்து முயற்சியில்லாமல் இனிய நாதத்தை யெழுப்புதலாகும். இதனையே நவணியென்றும் சிலர் கூறுவர்.

பாஷா காகு.

இது ஸங்கீதத்தில் உபயோகிக்கப்படும் பாஷைகளை அதற்குத்தகுந்த பாவங்களடங்கிய ஸ்வரங்களோடு சேர்த்துப் பிரயோகம் செய்வதாகும்.

ஸ்வரவிவேகம்

பரமசிவனுடைய பாஞ்ச பௌதிக சரீரத்தின் தன்மாத்திரைகளாகிய சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தங்களிலிருந்து சூரியன், சந்திரன், அங்காரகன், குரு, சுக்கிரன் என்னும் 5 கிரகங்கள் உண்டாயின. அவைகளே ஷட்ஜ. மத்யம, பஞ்சம, தைவத, நிஷாதங்களாக ஏற்பட்டன. இவைகளில் சூரியனுக்கு சனி என்ற புத்திரனும், சந்திரனுக்குப் புதன் என்ற புத்திரனும் பிறந்து ஏழு கிரஹங்களாக விளங்குகின்றனர். இது போல் முறையே ஷட்ஜத்திலிருந்து காந்தாரமும், பஞ்சமத்திலிருந்து ரிஷபமும் உண்டாகி ஏழு ஸ்வரங்களாக விளங்குகின்றன. அம்ருதப்ரதான காலத்தில் விஷ்ணுசக்கரத்தால் வெட்டுண்ட ஓரசுரன் இரண்டு துண்டங்களாகப் பிரிந்தும் ராகு, கேது என்ற இரு பெயர்களோடும் இரு கிரஹங்களாக மற்ற ஏழு கிரஹங்களுடன் சேர்ந்து கொண்டதால் மொத்தம் நவகிரஹங்கள் உண்டாயின. அந்த ராகுகேதுக்கள் போன்ற பிரதி மத்யமமும் காகலி நிஷாதமும் சந்திர சூரியர்கள் போன்ற ஷட்ஜ, பஞ்சமங்களுக்கு விரோதிகளாக அதாவது விவாதி ஸ்வரங்களாக அமைந் திருத்தலும் இங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். இதையே சார்ங்க தேவரும் 9 ஸ்வரங்கள் என்றும், 9 சுருதிகள் என்றும் குறிப்பிடுகிறார். ஸாமஸப்தத்திலும் அவரோஹன கதியான நிதபமகரிஸ என்ற ஸ்வரங்கள் ஸைந்தவி அல்லது கரகரப்பிரியா மேளமாக விளங்குகிறது. ஆதியில் ஏற்பட்ட ஸ்வரங்கள் காகலி நிஷாதம், ப்ரதிமத்யமம் இவ்விரண்டுமற்ற 7 ஸ்வரங்கள் தான் பழைய நூல்களில் காணப்படுகின்றன. இதோடு ஸப்தஸ்வரங்களே ஒரு ஸ்வரத்தி லிருந்து மற்ற ஸ்வரங்களுக்கிடையேயுள்ள ஆறு ஸ்தானங்களில் ஒவ்வொரு ஸ்தானமும், ஒவ்வொரு ஆதாரமாக ஷடாதாரங்களோடு கூடி 7 ஸ்வரங்க ளுக்கும் (7 × 6 = 42) 42 வீடுகள் கிடைப்பதால் ஒரு ஸ்தாயிஸபத் ஸ்வரங்களும் முடிந்து அடுத்த ஸ்தாயி மேல்ஷட்ஜத்தைப் பிடித்துப் பாடுவதே ஸ்வரா ஷ்டகம் என்றும், ஆதிதாளம் என்ற ஜோம்பட தாளத்திற்கும் அலங்காரமாக அமைந்திருப்பதால் இதனே ஸ்ரீசக்கர லக்ஷணமென்று பல நூல்களில் பெரி யோர்கள் ஐயமறக் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் ஆதாரங் களோடுகூட 42 கோணங்களுள்ள சக்கரமும் மேல் ஸ்தாயிஷட்ஜமாகிற பிந்துவும்கூடி நாற்பத்திமுக்கோண ஸ்ரீசக்கர மென்று பல நூல்களிலும் காணப் படுகிறது. இதே விஷயங்களே விஸ்தாரமாகவும், தெளிவாகவும், சுக்ல பரதத்திலும், மந்திர ரத்தினகரத்திலும் காணலாம்.

கிராமங்கள்

கி³ராம: ஸ்வரஸமூஹ: ஸ்யான்மூர்ச்ச²னுதே³: ஸமாசிரய:
தளத்³வள த⁴¹ராதலேததிர ஸ்யாத் ஷட்³ஜகி³ராம ஆதி³ம:
த்³விதீயோ மத்³யமம் கி³ராமஸ்தயோர்லக்ஷணமுச்யதே
ஷட்³ஜகி³ராம: பஞ்சமேஸ்வசதுர்த²² சுருதிஸம்ஸ்தி²தே

உலகில் ஜனங்களின் ஸமுதாயம் எவ்வாறு கிராமம் என்று சொல்லப்படு கிறதோ அவ்வாறே ஸ்வரங்களின் ஸமூஹமானது கிராமம் என்று ஸங்கீதசாஸ் திரங்களில் கூறப்படுகிறது. ஸ்வரங்களின் சேர்க்கை கிராமம் என்று மாத்திரம் கூறிவிடின் லௌகிக, வைதிக வாக்கியங்களிலும் ஸ்வரங்களின் சேர்க்கையிருப்ப தால் அங்கும் கிராமங்கள் என்று பெயர் வழங்கப்படுமே! எனில் மூர்ச்சனை, கிராமம், தானம், வர்ணம் இவைகளோடு கூடியவைகளாயிருக்கும் ஸ்வரக் கூட்டங்களுக்குத்தான் கிராமம் எனப் பெயர் வழங்கலாம் எனக் கூறப்பட்டிருக் கிறது. எனவே கீழ் கூறிய குற்றத்திற்கு இடமில்லை.

கிராமம் ஷட்ஜக்கிராமம், மத்யமக்கிராமம் என இருவகைப்படும். இவ்வி ரண்டும் தான் தற்காலம் பூமியில் வழக்கத்திலிருந்து வருகின்றன.

ஸ்வரங்களின் கூட்டமென்பது ஏழு ஸ்வரங்களுக்கும் ஏற்படலாமாகையால் கிராமங்கள் இரண்டுதான் என்று கூறுவது சிறிதும் பொருந்தாது எனின் அதற்கு ஸமாதானம் வருமாறு:—

சுத்தஸ்வரங்கள் விக்ருத ஸ்வரங்கள் இவைகளால் முறையே பிரயோகம் செய்யப்படுவதாலும், 'த்³வள கி³ராமள விச்ருதள லோகே ஷட்³ஜமத்⁴யமஸம் ஜ்ஞகள' என்று மதங்க முனிவரால் கூறப்பட்டிருத்தலாலும் இரு கிராமங்கள் மாத்திரமே உலக வழக்கத்திலிருக்கின்றனவென்றும், சுத்த ஸ்வரத்தை ஆசிர யித்திருப்பதால் ஷட்ஜக் கிராமம் முதலாகவும், விக்ருத ஸ்வரத்தை யாச்ரயித்தி ருப்பதால் மத்யமக்கிராமம் இரண்டாவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

ஷட்ஜக்கிராமத்தின் லக்ஷணம்:

பஞ்சமம் தன்னுடைய நான்காவது சுருதியான கருணை ஜாதியின் பதினே ழாவது பிரிவிலுள்ள ஆலாபினியிலிருக்கும் பொழுது இதனே ஷட்ஜக்கிராமம் எனக் கூறுவர்.

மத்தியமக் கிராமத்தின் லக்ஷணம்:

'ஸ்வோபான்த்ய சுருதிஸம்ஸ்தே²ऽஸ்மின் மத்⁴யமகி³ராம இஷ்யதே'

தனக்கு உபாந்தியமான சுருதி ஆயதா ஜாதியில் 16-வது பிரிவிலுள்ள ஸந்தீபினியில் சேர்ந்திருக்கும்பொழுது மத்தியமக்கிராமம் எனப்படும்.

காந்தாரக் கிராமத்தின் லக்ஷணம்:

யத்³வா த⁴ஸ்திரி: சுருதி: ஷட்³ஜே, மத்⁴யமேது சது: சுருதி:
ரிமயோ: சுருதிமேகெகாம் க³ான்த⁴ாரச்சேத்ஸமாசிரித:
பசுருதிம் தே³ா நிஷாத³ஸ்து த⁴சுருதிம் ஸசுருதிம் சிரித:
க³ான்த⁴ாரகிராமமாசஷ்டே ததே³ா தம் நாரதே³ா முனி:
பிரவர்ததே ஸ்வர்க³லோகே கி³ராமோऽஸள ந மஹீதலே

ஷட்ஜத்தில் தைவதம் த்ரிச்சுருதியாகவும், மத்யமத்தில் சதுச் சுருதியாகவும் ரிஷபம் மத்யமம் இவைகளில் காந்தாரமானது ஏகசுருதியுள்ளதாகவும் தைவதம் பஞ்சமத்தின் சுருதியையும், நிஷாதம் தைவதத்தின் சுருதியையும் ஷட்ஜத்தின் சுருதியையும் அடைந்திருந்தால் அதனை காந்தாரக் கிராமம் என்று கூறுவர். இந்த காந்தாரக்கிராமம் பூமியில் வழக்கத்திலில்லை யென்றும் தேவலோகத்தில்த் தான் வழங்கப்படுகிறதென்றும் நாரதர் கூறுகிறார். ஆகவே தற்காலம் வழக்கத் திலுள்ளவை ஷட்ஜ மத்யமக் கிராமங்களே என்று அறியற்பாலது.

முற் கூறிய மூன்று கிராமங்களுக்குள் ஷட்ஜக் கிராமத்தில் ஸம்வாதி ஸ்வ ரங்களே அதிகமாகப் பிரயோகிக்கிற படியாலும், முக்கியமாக இருப்பதாலும் இது முதலாவதாகக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது கிராமத்திலுள்ள மத்யமம் மற்ற ஸ்வரங்களுக்கு ஸம்வாதி ஸ்வரமாக ஆகாதபடியாலும், ஒன்றுகவேயிருப் பதாலும் இந்த மத்யமக்கிராமம் இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் சிலர் சுத்த தானங்களைக் கூறும் ஸந்தர்ப்பத்தில் 'ஷட்ஜம், ரிஷபம், நிஷாதம், பஞ்சமம், இவைகளல்லாத நான்குவிதத் தானங்கள்' என்று கூறியிருத்தலாலும், பரதர் முதலியவர்களால் மத்தியமத்தைத் தவிர மற்ற ஸ்வரங்கள் மாத்திரமே ஷாடவ ஔடவங்களில் லோபத்தை யடைகின்றனவென்று கூறப்பட்டிருப்பதா லும், மத்தியமம் நாசமடையாத படியால் இந்த கிராமம் இரண்டாவதாகக் கூறப்பட்டது என்று கருதுகின்றனர். காந்தாரக்கிராமமும் இவைகளின் குலத்தில் தான் உண்டாயிற்று. இம் மூன்று கிராமங்களுக்கும் முறையே பிரமன், விஷ்ணு, சிவன் இவர்கள் தேவர்களாவர். இம் மூன்று கிராமங்களும் முறையே பனி காலம், வேனிற்காலம், மழைகாலங்கள் பாடத்தகுந்தவை. நன்மையை விரும்புகிறவர்கள் இம்மூன்று கிராமங்களையும் முறையே முற்பகல், நடுப்பகல், பிற்பகல் இக்காலங்களில் பாடுகின்றனர்.

இனி சதுர்தண்டிப்பிரகாசிகையில் ஸ்ரீவேங்கடமகி அவர்கள் கூறியிருப் பதைப் பின்பற்றி கிராமத்தைப் பற்றிய வேறு சில விஷயங்களை இங்கு விளக்கு கிறோம்:

பொதுவாக, கிராமம் என்பது ஸ்வரங்களின் கூட்டம் தான். பல வீடுகளின் சேர்க்கையை கிராமம் என்று வழங்குவதுபோல் ஸ்வரங்களின் கூட்டத்தையும் கிராமம் என்று வழங்கத் தலைப்பட்டனர். ஆனால் 'பசுவைக் கொண்டு வா, குதிரையைக் கொண்டு போ' என்பன போன்ற வாக்கியங்களிற் கூட ஸ்வரங்க ளின் அதாவது உயிரெழுத்துக்களின் கூட்டமிருப்பதால் இந்த வாக்கியங்கள் கூட கிராமமாய்விடுமேயெனின்—மூர்ச்சனை, சுத்தகூடதானங்கள் முதலிய இசை யுறுப்புக்களுக்கு இருப்பிடமாகவமையும் ஸ்வரங்களின் சேர்க்கையைத் தான் நாம் கிராமமென்கிறோம். அத்தகைய கிராமங்கள் மூன்றினுள்—(1) எந்த ஸ்வர ஸமூஹத்தில், தனக்கு நான்காவதான சுருதியிலுள்ளதாகப் பஞ்சமம் அமை கிறதோ அது ஷட்ஜக்கிராமமாகும். (2) அதே பஞ்சமம் தன் கடைசிக்கரு கிலுள்ள சுருதியிலிருக்கும்போது மத்யமக்கிராமமாகிறது. (3) ரிஷபம் மத்திய மம் இவைகளின் ஒவ்வொரு சுருதியையும் அது அடுத்திருந்தால் அப்போது காந்தாரச்சுருதியாகும். இங்கு நாரதமுனிவர்; பஞ்சமச்சுருதியை தைவதமும்,

தைவதச்சுருதி, ஷட்ஜ சுருதி இவற்றை நிஷாதமும் ஆச்ரயித்திருக்குமாகில் அப்போது அது காந்தாரக்கிராமம் ஆகுமென்று கூறியிருக்கிறார். இம் மூன்று கிராமங்களுள் காந்தாரக்கிராமம் பூமியிலில்லை. இது ஸ்வர்க லோகத்திற்குப் போய்விட்டது என்ற உலகப்பிரஸித்தமான அபவாதம் ஸ்ரீவேங்கடமகி அவர் களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மத்தியமக்கிராமத்தையும் இல்லாததைப் போலவே கருதப்படுவதாக அவர் எழுதியிருக்கிறார். அதற்கு அவர் கூறும் காரணம்: மத்யமக்கிராமத்தில் ரிரிச் சுருதி பஞ்சமமே வராளி மத்யமமாக ஆவதால் லக்ஷ்யமார்க்கத்தை யனுசரித்துப் பார்க்கும்போது அதே பஞ்சமமானது மத்யமக் கிராமத்திலுண்டான மத்யமம் முதலாகவுள்ள ராகங்களில் காணப்படுவதல்லாமல் வராளீமத்யமம் காணப்படு வதில்லை. ஆகவே லக்ஷ்யமார்க்கத்திற்கு விரோதமேற்படுகையால் மத்யமக் கிராமமென்பது இங்கு பொருந்தாதாகவே இருக்கிறதென்று. எனவே ஷட்ஜக் கிராமம் ஒன்று தான் பூமியிலிருப்பதாக ஸ்ரீ வேங்கடமகி அவர்கள் எழுதியி ருக்கிறார்கள். (ஆனால் அஹோபலர் தான் எழுதிய 'ஸங்கீத பாரிஜாத'த்தில் மூன்று கிராமங்களுக்கும் தனித்தனி லக்ஷணங்கள் மாத்திரம் கூறி, இம் மூன்றுமே பிரயோகத்திலுள்ளதுபோல் விளக்கியிருக்கிறாரேயன்றி காந்தாரக் கிராமம் தேவலோகத்திற்குச் சென்ற விபரம் ஒன்றுமே பிரஸ்தாபிக்கவில்லை யென்பதை இங்கு குறிப்பிடுகிறோம்).

ஷட்ஜக் கிராமத்தில் வாதி மண்டலம்:

ஸ	ரி	க	ம	ப	த	நி
நி	ஸ	ரி	க	ம	ப	த
த	நி	ஸ	ரி	க	ம	ப
ப	த	நி	ஸ	ரி	க	ம
ம	ப	த	நி	ஸ	ரி	க
க	ம	ப	த	நி	ஸ	ரி
ரி	க	ம	ப	த	நி	ஸ

மத்தியமக் கிராமத்தில் வாதி மண்டலம்:

ம	ப	த	நி	ஸ	ரி	க
க	ம	ப	த	நி	ஸ	ரி
ரி	க	ம	ப	த	நி	ஸ
ஸ	ரி	க	ம	ப	த	நி
நி	ஸ	ரி	க	ம	ப	த
த	நி	ஸ	ரி	க	ம	ப
ப	த	நி	ஸ	ரி	க	ம

மதங்க முனிவரால் இயற்றப்பட்ட 'பிருஹத்தேசி' என்னும் நூலிலும் மூன்று கிராமங்களுக்கும், ஸங்கீத ரத்னகரத்தில் மேற் கோளாகக் கையாளப் பட்டிருக்கும் லக்ஷணங்கள் கூறப்பட்டிருப்பதுடன் மண்டலங்களின் வாயிலாகவும் அவை விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஷட்ஜக் கிராமத்தின் மண்டலங்களே ஸ்வரப்பிரகரணத்தில் வாதி, ஸம்வாதி, அனுவாதி ஸ்வரங்களுக்கு லக்ஷணம் கூறுமிடத்தில் உதாஹரணமாகக் கொடுத்திருப்பதால் அங்கு கண்டு கொள்க.

இப்போது மத்யமக்கிராமத்தின் மண்டலங்களே மாத்திரம் 'பிருஹத்தேசி' யிலுள்ளபடி இங்கு காண்பிக்கிறோம்.

இது மத்தியமக் கிராமத்தில் ஸம்வாதி மண்டலம்;



இது மத்தியமக் கிராமத்தில் அனுவாதி மண்டலம்:



இது மத்தியமக் கிராமத்தில் விவாதி மண்டலம்:



கிராமவிமரிசனம்

கிராமமென்பது ஸ்வரங்களுடைய சேர்க்கையாகும். பல மனிதர்கள் வசிக்கும் கிருஹக்கூட்டத்தை கிராமம் என்பதுபோலவே தான் ஸ்வரங்களின்கூட்டமும் இப்பெயர் பெற்றது. கிராமம் என்பது பல மூர்ச்சனைகளுடன் கூடியிருக்கும். மூர்ச்சனையென்பது ராகங்களுக்கேற்பட்ட ஆரோஹண அவரோஹண முறைகளையும், வர்ஜாவர்ஜ ஸ்வரங்களையும் காண்பிக்கக் கூடியதாகும். இந்த மூர்ச்சனை எல்லா ராகங்களுக்கும் பொதுவாகவும் முக்கியமானதாகவுமிருக்கும். மூர்ச்சனையில்லாமல் ஒரு ராகத்தின் ஸ்வரூபம் தெரிந்து பாட முடியாது. கிராமங்கள் மூன்றென முன்னரே கூறினோம். இப்பொழுது நாம் பாடுகிறதெல்லாம் ஷட்ஜக்கிராமமென்றும், இதில் ஆறு ஸம்பூர்ணராகங்களும்,

பஞ்சம மற்ற, இரண்டு மத்யமங்களுடன் கூடிய ஒரு ராகமும், ஆக ஏழு ராகங்கள் உண்டாகின்றன. அவற்றுள் முதலிற் கூறப்பட்ட ஆறு ராகங்களி லிருந்தே நமது கர்நாடகஸங்கீதம் பிரஸித்தியடைந்திருக்கிறது. இந்த ஆறு ராகங்களிலிருந்து மற்ற ஜன்யராகங்களும் அனேக வர்ணம், கீதம், கீர்த்தனங் களும் செய்யப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இந்த ஷட்ஜக்கிராமத்திலுள்ள கடைசியான இரு மத்யமங்களுள்ள ராகத்தையே அன்னிய தேசராகமென்றும், மத்யமக்கிராமராகமென்றும், வேங்டமகி முதலிய பெரியோர்கள், அதனை பாஷாங்கமென்றும் கூறியிருக்கின்றனர். இதற்கு உதாஹரணமாக வட தேசத்து ராகமான 'ஹமீர்கல்யாணி'யை எடுத்துக் கொள்ளுவோம். இதில் இரண்டு மத்தியமங்கள் வருவதையும், அவ்வாறு அவை வராவிட்டால் அந்த ராகத்தின் சாயையே இல்லாமல் போவதையும் அறிகிறோம். இதுபோல் பாஷாங்க ராகத்திற்கு உதாஹரணமாக 'த்விஜாவந்தி' ராகத்தை எடுத்துக் கொள்வோம். இந்த ராகம் வேங்டமகி அவர்கள் கூறியபடி ஹரிகேதார கௌளை (ஹரிகாம்போதி) ராகத்தில் ஜன்யமென்றும், அந்தர காந்தார ஸாதாரண காந்தாரங்களோடு கூடியதாகக் கலந்து பாடினால்தான் ராகச்சா யையை அறிந்துகொள்ள முடியுமென்றும் அறியற்பாலது. இவ்வாறு மத்தியமக் கிராம ராகங்களை நம் தென்னாட்டிலும், வடதேசங்களிலும் காலத்திற்கும் கற்பனைக்கும் தகுந்தவாறு உபயோகித்துப் பாடுகிறார்கள்.

காந்தாரகிராமத்தை பூலோகத்திலிருந்து நாரதர் கொண்டு போய் விட்டதாக ''ஸ்ங்கீதரத்னகரம்', 'சதுர்தண்டிப் பிரகாசிகை' முதலிய பழைய நூல்களிலேயே கூறப்பட்டிருக்கிறது.

நாரதே³ன தி³வம்நீதோ க³ான்த⁴ர்ரோ நாஸி பூ⁴தலே.

ஸங்கீத ரத்னகரம்.

ஆகவே ஸ்வர்கத்திற்குப் போன காந்தாரத்தை விட்டு விட்டு மற்ற இரண்டு கிராமங்களிலும் தான் பூலோகத்தில் ஸங்கீதம் பாடப்படுகிறதாகச் சில நூல்களிற் காண்கிறோம். சதுர்தண்டிப்பிரகாசிகையில் மூன்று கிராமங்க ளுக்கும் லக்ஷணங்களைக் கூறிவிட்டு, ஷட்ஜக்கிராமம் ஒன்றுதான் நம் கர்நாடக ஸங்கீதத்திற்கு அமைந்ததாக இருக்கிற தென்று விளக்கமாக எழுதப் பட்டி ருக்கிறது.

இன்னும் வடதேசங்களில் மற்றொரு கக்ஷி பேசப்பட்டு வருகிறது. அதாவது மேற்கூறிய மூன்று கிராமங்களுள் மந்த்ரத்திலிருந்து மத்யஸ்தாயி ஷட்ஜம் வரையில் பாடக் கூடிய 'ஸரிகமபதநி' என்ற ஏழு ஸ்வரங்களை ஷட்ஜக்கிராமம் என்றும், மத்யஷட்ஜத்திலிருந்து தாரஷட்ஜம் வரை பாடுகிற ஏழு ஸ்வரங்களை மத்தியமக்கிராமமென்றும் இவ்வாறேதார ஷட்ஜத்திலிருந்து மேற்பாடுகிற ஸ்வரங்களையுடையதைக் காந்தாரக் கிராமமென்றும் கூறு கின்றனர். ஆனால் ஷட்ஜக்கிராமம், மத்யமக்கிராமம் இவ்விரண்டை ஒப்புக்

கொண்டும், காந்தாரக்கிராமம் கவனக்குறைவு காரணமாக வந்திருக்கக் கூடுமென்றும், அதனைத் தாரக்கிராமம், என்று கூறுதல் பொருந்துமென்றும் வடநாட்டார்கள் கூறுகின்றனர். ஆனால் காந்தாரக் கிராமத்தை நாரதர் பூலோகத்திலிருந்து தேவலோகத்திற்குக் கொண்டுபோனதாகக் கூறுகிறார்களே யெனில்; அதற்கு மூன்றுவது ஸ்தாயியான தாரஸ்தாயியிலேயே ஒருவன் பாடவேண்டுமானால் அவன் தேவலோகத்தை சேர்ந்த கந்தர்வவம்சத்தவனாகவே இருந்தாகவேண்டுமென்றும், ஆகவே தாரக்கிராமமானது தேவதைகளால் மட்டுமே பாட ஸாத்யமானது என்பதைக் காட்டுவதற்காக, உபசாரமொழி யாக தேவலோகத்திற்குப் போய்விட்டதாக எழுதுகிறார்கள். இப் பொழுதும் காயகர்கள் தாரஸ்தாயியில் ஸஞ்சாரம் செய்து பாடுகிற காலத்தில் கேட்போர் மனதிற்குப் புதிய உணர்ச்சியும்., சரீரத்தில் மயிர்க்கூச்சலும் உண்டாவதை நன்கு அறியலாம். ஆகையால் காந்தாரக்கிராமம் என்ற தாரக்கிராமம் தைவாம்சம் பொருந்தியது என்றும் கூறுகின்றனர். இன்னும் மந்த்ரஷட்ஜம் முதல் ஆதாரஷட்ஜம் வரையுள்ள ஒரு ஸ்தாயியை பாதாள மென்றும், அஸுரலோகமென்றும், ஆதாரஷட்ஜத்திலிருந்து தாராஷட்ஜம் வரையிலுள்ள ஒரு ஸ்தாயியை மத்யலோகமென்றும். மனுஷ்யலோக மென்றும், தாரஷட்ஜத்திற்கு மேலுள்ள ஸ்தாயியை ஸ்வர்கலோக மென்றும், தேவலோகமென்றும் வருணித்திருக்கின்றனர். இதனாலேயே காந்தாரக்கிராமமென்பது தப்பிதமாய் வந்த வார்த்தையென்றும் தாரக்கிராமமென்பது தான் பொருந்துமென்றும் ஆராய்ச்சியாளர்கள் முடிவு கூறுகின்றனர். இந்த மூன்று கிராமங்களின் முக்கிய ஸ்வரூபத்தையும், இவை களை எளிதில் நாமறியக்கூடிய முறையிலுள்ள உதாஹரணத்தையும் விபர மாகவும், நிச்சயமாகவும் கூறக்கூடிய நூல் யாதையுமே காணும் என்பது மாத்திரம் நிச்சயம். இப்பொழுது கச்சேரி செய்கிறவர்கள், தான் பாடிக் கொண்டு வருகிற சுருதியை மாற்றி மத்யமச்சுருதி செய்துகொண்டு பாடு கிறார்கள். ஒருவேளை இவர்கள் பாடுகிற இரண்டு சுருதிகளையுமே (1) ஸாதா ரணமாகப் பாடக்கூடியதை ஷட்ஜக்கிராமமென்பதாகவும், மத்யமச்சுருதி செய்துகொண்டு பாடுகிறதை மத்யமக்கிராமமென்பதாகவும் சொல்ல இட மிருக்கிறது. ஆனால் வடதேசத்தில் காந்தாரக்கிராமமும் உபயோகப்படுகிற தாகத் தெரிகிறது. அது எவ்வாறெனில்:—

சிலர் சுத்த தைவதத்தை ஆதாரஷட்ஜமாகத் தம்பூரை சுருதி சேர்த்துக் கொண்டும், தபலா அல்லது மிருதங்கத்தை அந்தரகாந்தாரத்துடன் சேர்த்தும் பாடுகிறார்கள். இது அபூர்வமாகவும், பெரிய வித்வான்களாலுமே தான் அரிதாகப் பாடப்படுகிறது. இவ்வாறு பாடுவதை காந்தாரக்கிராமமென்று சிலர் வழங்குகின்றனர். நமது முறைப்படி கிராமங்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று ஸ்தாயிகளும் சேர்ந்து ஆரோஹணமாக 21 மூர்ச்சனைகளும், அவரோ ஹணமாக 21 மூர்ச்சனைகளும் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. கிராமம் என்று ஒன்று இருக்க வேண்டுமானால் அதில் பல கிருஹங்கள் இருக்கவேண்டு மல்லவா? ஷட்ஜத்திலிருந்து ஆரோஹணமான ஒரு மூர்ச்சனையை சங்கராபரண மாக வைத்துக்கொள்ளுவோம். அதாவது 'ஸரிகமபதநி' இதுவே முதல்

மூர்ச்சனை. இரண்டாவது மூர்ச்சனை ரிகமபதநிஸ. இதையே சங்கராபரணராகத்தின் ரிஷபஸ்வரத்தை ஷட்ஜமாக வைத்துக் கொண்டால் இதுவே கரகரப்பிரியா ராகமாகும். இதுபோலவே, 'கமபதநிஸரி' தோடியாகவும் 'மபதநிஸரிக' கல்யாணியாகவும், 'பதநிஸரிகம' ஹரிகாம்போதி யாகவும், 'தநிஸரிகம' நடபைரவியாகவும், 'நிஸரிகமபத' என்பது இரண்டு மத்யமங்களுள்ள பஞ்சம ஸ்வரமில்லாத தோடிராகமாகவும் ஆகிறது. இந்த க்ரஹஸ்வரங்களுக்கு சங்கராபரணத்தை முதலாக வைத்துக்கொள்வது மேல் நாட்டார்களுடைய கொள்கையாகும். நம் கொள்கைப்படி ஸாமவேதத்திலிருந்து ஏற்பட்ட ஸ்வரங்களை வைத்துகொண்டு வியவஹாரம் செய்வதாயிருந்தால் ஸாமவேதத்திலுள்ள 7 ஸ்வரங்களும் 'நிதபமகரிஸ' என்ற அவரோஹணகதியாகவும், 'ஸாமஸப்தகம்' என்ற பெயரோடு கூடியும், நமது (ஸைந்தவி) கரகரப்பிரியா ராகத்தையே ஆதியான ராகமென்றும், அதன் ஸ்வரங்களை வைத்து நிச்சயிக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறு கரகரப்பிரியா ராகத்தை ஆதியாக வைத்து, க்ரஹஸ்வர மூர்ச்சனைகளைப் பார்ப்போமானால் அதிலும் ஆறு ராகங்கள் சுத்தமாகவும், ஒரு ராகம் மாத்திரம் பஞ்சமமில்லாத இரண்டு மத்யமங்கள் வருகிற ராகமாக இருப்பதைக் காணலாம். ஆகவே ஆறு கர்த்தா ராகங்களும் ஒரு தேசிய ராகமும்தான் ஆதியிலுண்டானதாக எண்ண வேண்டியிருக்கிறது. இதனையே 'ஸங்கீததாமோதரம்' என்னும் நூலாசிரியரும் கூறியுள்ளார். ஸ்ரீவேங்டமகி என்ற பெரியார் ஸைந்தவி ராகத்தையே (கடபயாதி ஸங்கேயையனுஸரித்து) 72 மேளகர்த்தாக்களில் செய்யும் போது கரகரப்பிரியா என்று பெயர் வைத்தார்.

மூர்ச்சனைகள்

கிரமாத் ஸ்வராணும் ஸப்தானும் ஆரோஹச்சாவரோஹணம்
மூர்ச^{2}னேத்யுச்யதே கிராமத்^{3}யேதா: ஸப்தஸப்தச
ஷட்^{3}ஜோத்தரமன்தி^{3}ராத^{3}ள ரஜனீ சோத்த ராயதா
சுத்^{3}த^{4}ஷட்^{3}ஜாமத்ஸரீ கிருத^{3}ச்வகிரான்தா பி^{4}ருத்^{3}க^{3}தா
மத்யமேஸ்யாத்து ஸளவீரீ ஹாரிணைச்வா தத: பரம்
ஸ்யாத்கலோ பருதாசுத்^{3}த^{4} மத்^{4}யா மார்கி^{3}ச பளரவீ
ஹிருஷ்யகேத்யத^{2}தாஸாம்து லக்ஷணம் பிரதிபாத்^{3}யதே
மத்^{4}யஸ்த^{2}ானஸ்த^{2} ஷட்^{3}ஜேன மூர்ச^{2}னைffரப்^{4}யதேfகி^{3}ரிமா.

ஸப்த ஸ்வரங்களுடைய முறையோடுகூடிய ஆரோஹண அவரோஹணத்தையே மூர்ச்சனையென்று கூறுவர். ஒவ்வொரு கிராமத்திற்கும் 7 மூர்ச்சனைகள் வீதம் இரு கிராமங்களுக்கும் 14 மூர்ச்சனைகள். ஷட்ஜக்கிராமத்திலுள்ள மூர்ச்சனைகளின் பெயர்கள் வருமாறு:

1. உத்தரமந்தரை
2. ரஜநீ
3. உத்தராயதா
4. சுத்த ஷட்ஜை
5. மத்ஸரீக்ருத்து
6. அசுவக்கிராந்தா
7. அபிருத்கதா

மத்யமக்கிராமத்திலுள்ள மூர்ச்சனைகளின் பெயர்கள் வருமாறு:

1. ஸௌவீரீ
2. ஹரிணாச்வா
3. கலோபநதா
4. சுத்தமத்யா
5. மார்கீ
6. பௌரவீ
7. ஹ்ருஷ்யகை

மத்ய ஸ்தாயியிலுள்ள ஷட்ஜத்திலிருந்து முதல் மூர்ச்சனை ஆரம்பிக்கபடுகிறது. இவ்வாறு ஆரம்பிப்பதுதான் பரதர், மதங்கர் முதலியோருக்கு ஸம்மதமென்று தெரிகிறது. ஷட்ஜக்கிராமத்தில் உத்தரமந்தராமூர்ச்சனையின் சொரூபம் 'ஸரிகமபதநி' என்பதாகும். மற்ற மூர்ச்சனைகளையும் 'ரிகமபதநிஸரி' என்று ஆரம்பித்து இம்முறையாகவே பிரயோகித்தல் வேண்டும். மத்யமக்கிராமத்திலும் மத்ய ஸ்தானத்திலுள்ள ஸௌவீரீ மூர்ச்சனையின் சொரூபமான 'மபதநிஸரிக' என்பதை ஆரம்பித்து அம்முறைப்படியே மற்ற மூர்ச்சனைகளையும் பிரயோகித்தல் வேண்டும்.

சிலர் லக்ஷ்யத்தை யனுஸரித்து அவரோஹண முறையாகவும் இம்மூர்ச்சனைகளைப் பிரயோகிக்கின்றனர். அதாவது: 'உத்தரமந்தரா' மூர்ச்சனையின் சொரூபமான 'ஸரிகமபதநி' என்பதை 'நிஸரிகமபத' என்ற 'ரஜநீ' மூர்ச்சனையாகவும்; மத்ய ஸ்தாயியிலுள்ள 'ஸௌவீரீ' மூர்ச்சனையின் சொரூபமான 'மபதநிஸரிக' என்பதை 'கமபதநிஸரி' என்ற 'ஹரிணைச்வா' மூர்ச்சனையாகவும் பிரயோகித்தல் பொருந்தும் என்பதாகவும் கருதுகின்றனர்.

ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் ஒவ்வொரு மூர்ச்சனையுண்டு. ஆக மொத்தம் 72 மேளங்களும் ஸ்வரஸமூஹங்களாலமைவதால் ஒவ்வொரு மேளத்திற்கும் ஏழு மூர்ச்சனைகள் என்று ஸ்ரீவேங்டமகி அவர்களால் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

ஏகவிம்சதி (21) மூர்ச்சனைகளின் விளக்கம்

எண்	மூர்ச்சனைகளின் பெயர்கள்	உதாஹரணங்கள்	
(1)	(2)	(3)	
1.	உத்தரமந்தரா	ஸரிகமபதநிஸ்,	ஸ்நிதபமகரிஸ
		. .	. .
2.	ரஜநீ	ரிகமபதநிஸரி,	ரிஸநிதபமகரி
		. . .	. . .
3.	உத்தராயதா	கமபதநிஸரிக,	கரிஸநிதபமக
		. . . .	. . . .
4.	சுத்தஷட்ஜா	மபதநிஸரிகம,	மகரிஸநிதபம
		. . . . .	. . . . .
5.	மத்ஸரீக்ருத்	பதநிஸரிகமப,	பமகரிஸநிதபம
		. . . . .	. . . . .
6.	அசுவக்கிராந்தா	தநிஸரிகமபத,	தபமகரிஸநித
		. . . . .	. . . . .
7.	அபிருத்கதா	நிஸரிகமபதநி,	நிதபமகரிஸநி
8.	ஸௌவீரீ	ஸரிகமபதநிஸ,	ஸநிதபமகரிஸ
9.	ஹரிணீச்வா	ரிகமபதநிஸரி,	ரிஸநிதபமகரி
10.	கலோபநதா	கமபதநிஸரிக,	கரிஸநிதபமக
11.	சுத்தமத்யா	மபதநிஸரிகம,	மகரிஸநிதபம
12.	மார்கீ	பதநிஸரிகமப,	பமகரிஸநிதப
13.	பௌரவீ	தநிஸரிகமபத,	தபமகரிஸநிதப
14.	ஹ்ருஷ்யகை	நிஸரிகமபதநி,	நிதபமகரிஸநி
15.	நந்தா	ஸரிகமபதஸ,	ஸநிதபமகரிஸ
16.	விசாலா	ரிகமபதநிஸரி	ரிஸநிதபமகரி
17.	ஸுமுகீ	கமபதநிஸரிக,	கரிஸநிதபமக
18.	சித்திரா	மபதநிஸரிகம,	மகரிஸநிதபம
19.	சித்ரவதி	பதநிஸரிகமப,	பமகரிஸநிதப
20.	சுகா	தநிஸரிகமபத.	தபமகரிஸநித
21.	ஆலாபா	நிஸரிகமபதநி,	நிதபமகரிஸநி

குறிப்பு:—நந்தா முதலிய 7 மூர்ச்சனைகளும் பிற்காலத்திய சில நூல்களில் மாத்திரம் காணப்படுகின்றனவேயன்றி மற்ற முற்கால நூல்களில் விளக்கமாகக் காணப்படவில்லை.

மதங்கமுனிவர் தமது 'பிருஹத்தேசி' என்னும் நூலில் மூர்ச்சனைகளைப் பற்றிக் கூறுமிடத்து—

மூர்ச்²யதே யேன ராகே³ஹிமூர்ச்²னேத்யபி⁴ஸம்ஜ்ஞிதா
ஆரோஹணவரோஹண கிரமேணஸ்வரஸப்தகம்
மூர்ச்²னசப்³த்³வாச்யம் ஹி விஜ்ஞேயம் தத்³விசக்ஷணை:

என்ற சுலோகங்களால், மூர்ச்சனையென்பது ராகத்தின் ஸ்வரூபத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டத்தகுந்த ஒருவித ஆரோஹண அவரோஹண முறையோடுகூடியஸ்வரஸமூஹமாகுமென்று அவர் தன் கருத்தைக் குறிப் பிட்டிருக்கிறார்.

இனி, அம்மூர்ச்சனைகளின் பிரிவினையைப் பற்றிச் சிறிது கவனிப்போம். மூர்ச்சனை, ஸப்தஸ்வர மூர்ச்சனையென்றும், த்வாதசஸ்வர மூர்ச்சனையென்றும் இருவகைப்படும். அவற்றுள் ஸப்தஸ்வரமூர்ச்சனை (1) பூர்ணம் (2) ஷாடவம் (3) ஔடவம் (4) ஸாதாரணம் என நான்கு வகைப்படும்.

அவற்றுள் ஏழு ஸ்வரங்களும் நிறைந்த மூர்ச்சனையை பூர்ண மென்றும் ஆறு ஸ்வரங்களுள்ளதை ஷாடவமென்றும், ஐந்து ஸ்வரங்களோடு கூடியது ஔடவமென்றும், காகலி, அந்தர ஸ்வரங்களோடு கூடியது ஸாதாரண மென்றும் வழங்கப் படுகிறது. அவரது நூலில் கீழ்க்கண்ட மூர்ச்சனமண்ட லங்களால் மூர்ச்சனையின் ஸ்வரூபம் இவ்வாறு விளக்கப்பட்டிருக்கிறது.

இது ஷட்ஜக்கிராமத்தின் மூர்ச்சனை மண்டலம்

நி	த	ப	ம	க	ரி	ஸ	
த	ப	ம	க	ரி	ஸ	நி	
ப	ம	க	ரி	ஸ	நி	த	
ம	க	ரி	ஸ	நி	த	ப	
க	ரி	ஸ	நி	த	ப	ம	
ரி	ஸ	நி	த	ப	ம	க	
ஸ	நி	த	ப	ம	க	ரி	

இது மத்யமக்கிராமத்தின் மூர்ச்சனை மண்டலம்.

க	ரி	ஸ	நி	த	ப	ம		
ரி	ஸ	நி	த	ப	ம	க		
ஸ	நி	த	ப	ம	க	ரி		
நி	த	ப	ம	க	ரி	ஸ		
த	ப	ம	க	ரி	ஸ	நி		
ப	ம	க	ரி	ஸ	நி	த		
ம	க	ரி	ஸ	நி	த	ப		

இவ்வாறுக இரு கிராமத்திற்கு மேற்பட்ட 14 மூர்ச்சனைகள் முழுவதும் விளக்கப் பட்டன.

மேலும் இந்த மூர்ச்சனைகள், சுத்தமானவை, காகலிஸ்வரங்களோடு கூடியவை, அந்தர ஸ்வரங்களோடும் கூடியவை, காகலி, அந்தரம் இவ்விரு ஸ்வரங்களோடும் கூடியவை என்ற 4 பிரிவால் (14 × 4) மொத்தம் 56 எனப் பிரிகின்றன.

கிராம மூர்ச்சனைகளின் தேவதைகள்

ஷட்ஜக்கிராம மூர்ச்சனைகளின் தேவர்கள், முறையே (1) யக்ஷர், (2) ராக்ஷஸர், (3) நாரதர், (4) பிரமன், (5) சேஷன், (6) தும்புரு, (7) வருணன் இவர்களாவர். நாரதமுனிவர் ஷட்ஜம் முதலிய மூன்று கிராமங்களுக்கும் வேறு பெயர்களை வழங்கியிருக்கிறார். அவையாவன:

ஷட்ஜக்கிராமத்தில்
(1) உத்தரவர்ணை
(2) அபிருத்கதா
(3) அசுவக்கிராந்தா
(4) ஸௌவீரீ
(5) ஹ்ருஷ்யகா
(6) உத்தராயதா
(7) ரஜநீ

} இவை ஏழும் ரிஷிகளுக்கு உகந்தவை

மத்யமக்கிராமத்தில்
(1) ஆப்யாயநீ
(2) விசுவஹ்ருதா
(3) சந்திரா
(4) ஹேமா
(5) கபர்திநீ
(6) மைத்ரீ
(7) சந்த்ராவதீ (சாந்தரமதீ)

} இவை ஏழும் பித்ருக்களுக்கு உகந்தவை

மத்தியமக் கிராமத்திலுள்ள 7 மூர்ச்சனைகளுக்கும் முறையே (1) பிரமம் (2) இந்திரன் (3) வாயு (4) கந்தருவன் (5) நரஸிம்ஹன் (விஷ்ணு) (6) பிரமன் (7) சூரியன் இவர்கள் அபிமானிதேவதைகளாவர்.

காந்தாரக் கிராமத்திற்குள்ள மூர்ச்சனைகளின் பெயர்களாவன: (1) நந்தா (2) விசாலா (3) ஸுமுகீ (4) சித்ரா (5) சித்ராவதீ (6) ஸுகா (7) ஆலாபா இவைகள் 7-ம் ஸ்வர்க்கலோகத்திலேயே வழங்கப்படுவன வெனக்கருதியே முன்னோர்களும் இவைகளைப்பற்றி ஒன்றும் விளக்கமாகக் கூறவில்லை.

இனி ஸ்ரீவேங்கிடமகி அவர்கள் மூர்ச்சனைகளைப் பற்றிக் கூறியிருப்பதைச் சிறிது கூறுவோம்:—

மூர்ச்சனையென்பது ஏழு ஸ்வரங்களையும் முறையாக ஏற்றிச் சொல்லுதலும் இறக்கிச் சொல்லுதலும்; அதாவது ஆரோஹணமும் அவரோஹணமும் ஆகும். அவைகள் ஒவ்வொரு மேளத்திற்கும் ஏழு வகைப்படும். அது வருமாறு: ஷட்ஜத்திலிருந்து நிஷாதம் வரை ஆரோஹணம் செய்வதாலும், நிஷாதம் முதலாக ஷட்ஜம் வரை அவரோஹணம் செய்வதாலும் முதன் மூர்ச்சனையேற்படுகிறது. இவ்வாறே ரிஷபத்தை யாரம்பித்து ஷட்ஜம் வரை ஆரோஹணம் செய்வதாலும், ஷட்ஜம் முதல் ரிஷபம் வரை அவரோஹணம் செய்வதாலும், இரண்டாவது மூர்ச்சனையேற்படுகிறது. இவ்வாறே காந்தாரம் முதலிய ஸ்வரங்களிலும்

ஊஹித்தறிந்து கொள்க. ஆகவே ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் ஒவ்வொரு மூர்ச்சனையுண்டு. ஆக மொத்தம் 72 விதமான ஸப்தஸ்வரங்களின் ஸமூஹரூபமான மேளங்களில் ஒவ்வொரு மேளத்திற்கும் ஏழு ஏழு மூர்ச்சனைகள் என்று வேங்கடமகியால் கல்பிக்கப்பட்டிருக்கிறது.

மூர்ச்சனைகளின் விவரணம்

				முதல் மத்யஷட்ஜம் வரையுள்ள ஆரோஹண அவரோஹணம்				
1-வது மூர்ச்சனை	மந்தர	ஷட்ஜம்						
2-வது	—	—	ரிஷபம்	—	—	ரிஷபம்	—	—
3-வது	—	—	காந்தாரம்	—	—	காந்தாரம்	—	—
4-வது	—	—	மத்யமம்	—	—	மத்யமம்	—	—
5-வது	—	—	பஞ்சமம்	—	—	பஞ்சமம்	—	—
6-வது	—	—	தைவதம்	—	—	தைவதம்	—	—
7-வது	—	—	நிஷாதம்	—	—	நிஷாதம்	—	—
8-வது	—	மத்ய	ஷட்ஜம்	—	தார	ஷட்ஜம்	—	—
9-வது	—	—	ரிஷபம்	—	—	ரிஷபம்	—	—
10-வது	—	—	காந்தாரம்	—	—	காந்தாரம்	—	—
11-வது	—	—	மத்யமம்	—	—	மத்யமம்	—	—
12-வது	—	—	பஞ்சமம்	—	—	பஞ்சமம்	—	—
13-வது	—	—	தைவதம்	—	—	தைவதம்	—	—
14-வது	—	—	நிஷாதம்	—	—	நிஷாதம்	—	—

கணக்கிட்டுச் சொல்வதாயின் இவ்வாறே தாரஷட்ஜத்திலிருந்தும் ஆரோஹண முறை வகுக்க இயலும். ஆனால் இது நடைமுறையிலில்லாமையால் இத்தோடு விடுத்தோம். சில நூல்களில் தாரஷட்ஜத்திலிருந்து மேற்கூறிய முறைப்படியே தாரஸ்தாயியிலும் 7 மூர்ச்சனைகள் ஆரோஹண முறையே கூறப்பட்டிருக்கின்றன. உண்மையில் இவை வாய்ப்பாட்டுக் காரர்களிடம் எதிர்பார்க்க முடியாதவையாயினும், விஞ்ஞான சாஸ்திரத்தின் ஆராய்ச்சியாளர்கள் வாத்யங்களில் இத்தகைய மூர்ச்சனைகளைக் காட்ட முடியுமாதலின் இவற்றை அறிவின் விரிவுக்காகப் பிரித்துக் காட்டுதல் மிகையாகாதெனக் கருதுகிறேன். ஆயினும் இந்தப் பூவுலகில் த்ரிஸ்தாயிக்கு மேல் மனிதன் பாடுவது அஸாத்தியமாகையால் அந்த த்ரிஸ்தாயி வரையில் சம்பந்தப்பட்ட முதல் 14 மூர்ச்சனைகள் மாத்திரம் இந்த பூலோகத்திற்கு ஸம்பந்தப்பட்டவையென்றும், அந்த த்ரிஸ்தாயிக்கு மீறிய மற்ற 7 மூர்ச்சனைகளும் ஸ்வர்கலோகத்திற்கு சம்பந்தப்பட்டவையென்றும் சொல்லுகின்றனர். முதல் 7 மூர்ச்சனைகளும் மந்த்ரஸ்தாயி

ஆரம்பமாகையால் அவைகளுக்கு ஷட்ஜக்கிராம மண்டலமென்றும், இரண்டாவது 7 மூர்ச்சனைகளும் மத்ய ஸ்தாயியில் ஆரம்பிப்பதால் அவைகளுக்கு மத்யமக்கிராம மண்டலமென்றும், மூன்றுவது 7 மூர்ச்சனைகளும் தேவலோகத்திற்குப் பொருந்தினவையாகையால் அவைகளுக்கு காந்தாரக்கிராம மண்டலமென்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டன. இம்மூன்று கிராம மண்டலங்களுக்கும் முறையே நந்த்யாவர்த்தம் என்றும், ஜீமூதம் என்றும், ஸுபத்ரமென்றும் பெயர். மேற் கூறியவாறு இவ்வுலகத்திற்கு சம்பந்தப்பட்ட மூர்ச்சனைகள் 14-ல் ஒவ்வொன்றும் சுத்தமென்றும், காகலியென்றும், காந்தாரமென்றும், த்வயோபேதமென்றும் நான்கு பேதங்களை யடைவதுமுண்டு.

இனி ஸங்கீதபாரிஜாதத்தில் மூர்ச்சனைகளைப்பற்றிக் கூறியிருத்தலைச் சிறிது ஆராய்வோம்:

'விகிருத ஸ்வரங்களிலும் இவ்வாறே ஆரோஹண அவரோஹண ரூபமான மூர்ச்சனைகளைக் காண்க. ஷாடவம், ஔடவம் என்ற முறையறிந்து இவற்றுள்ளும் ஆரோஹண அவரோஹணங்களைக் கல்பிக்க வேண்டும். மத்ய ஷட்ஜத்திலிருந்து ஆரம்பித்து அந்தந்த ஸ்வரத்திற்கு மேல் ஸ்வரத்தைச் சொல்லிக்கொண்டு போதல் ஆரோஹணமெனப்படும். அவ்வாறு ஆரோஹணிக்கும் பொழுது முன்னுள்ள ஒவ்வொரு ஸ்வரத்தை விட்டுவிட்டு ஆரோஹணத்திலுமுண்டு. சுத்த ஸ்வரங்களைப் போலவே விகிருதி ஸ்வரங்களிலும் ஷட்ஜம் முதலிய பெயர்கள் வழங்கப்படுகின்றன. பூர்வ ரிஷபம், கோமள ரிஷபம், தீவ்ர ரிஷபம் இம் மூன்றுவகை ரிஷபங்களுடனும் சுத்த ஸ்வரங்கள் ஏழும் சேரும்பொழுது 21 பேதங்களோடு கூடியனவாக ஸ்வரங்கள் பிரிகின்றன. தீவ்ரதம ரிஷபத்தை யாரம்பித்து யாதொரு மூர்ச்சனையும் எங்கும் கூறப்படவில்லை. சுத்த காந்தாரம், சுத்த ஷட்ஜம் இவைகள் ஆரம்பம்காகும் மூர்ச்சனைகளும் பிரயோகத்திலில்லாதால் மீதியுள்ள கோமள காந்தாரம் முதலிய நான்கு விகிருத ஸ்வரங்களுடனும் ஏழு சுத்த ஸ்வரங்களும் சேரும்பொழுது 28 பேதங்கள் ஏற்படுகின்றன. பூர்வ காந்தாரமும் தீவ்ர காந்தாரமும் சுத்த ஸ்வரங்களுடன் சேரும் பொழுது சுத்த ரிஷபம், சுத்த மத்யமம், இவைகள் சேர்ந்து உண்டாவதில்லை. ஆகவே அவைகளால் உண்டாகும் பேதம் எதுவும் இல்லை. சுத்த ஸ்வரங்கள் ஏழுடன் தீவ்ர மத்யமம், தீவ்ரதர மத்யமம் தீவ்ர தம மத்யமம் இம்மூன்று விகிருத ஸ்வரங்கள் சேருவதால் உண்டாகும் பேதங்கள் 21. பூர்வ தைவதம், கோமள தைவதம், தீவிர தைவதம் இவை சுத்த ஸ்வரங்கள் ஏழுடன் சேருவதால் உண்டாகும் பேதம் 21. தீவ்ரதரமான தைவதத்தை ஆசிரயித்து யாதொரு மூர்ச்சனையும் கூறப்படவில்லை. சுத்த நிஷாதமில்லாமையால் மற்ற 6 ஸ்வரங்களுடன் கோமள தைவதம் முதலியவை சேரும்பொழுது 28 பேதங்கள் உண்டாகின்றன. பூர்வ நிஷாதத்தையாசிரயித்து யாதொரு மூர்ச்சனையும் கூறப்படவில்லை. சுத்த தைவதமில்லாமையால் மற்ற சுத்த ஸ்வரங்கள் ஆறுடனும் விக்ருத ஸ்வரங்களான காந்தார ரிஷபங்களின் பேதங்களால் ஏற்படும் 12 பேதங்களால் மொத்தம் 100 பேதங்கள் ஏற்படுகின்றனவென்று அறிஞர் கூறுவதாக ஸங்கீத பாரிஜாதத்தில் அஹோபலர் கூறுகிறார். ரிஷப தைவதங்கள் தீவ்ரமாயும், பூர்வமாயும்,

கோமளமாயும் இருக்கும் பொழுது அவைகளுக்கடுத்த ஸ்வரங்களான காந்தார நிஷாதங்களைக் கொண்டு யாதொரு பேதமும் ஏற்படுவதில்லை. பூர்வம் கோமளம், தீவ்ரம் என்னும் மூவகை ரிஷபவங்களாலும் அம்மூவகை மத்யமங்களாலும் விகிருத ஸ்வரங்களின் சேர்க்கையால் 63 பேதங்கள் ஏற்படுகின்றன. மூன்று ரிஷபங்களாலும் விகிருத ஸ்வரங்களுடனும் மூவகை தைவதங்களுடனும் மற்ற சுத்த ஸ்வரங்களுடன் சேர்ந்து 63 பேதங்கள் ஏற்படுகின்றன. பூர்வம், கோமளம், தீவ்ரம் முதலிய பேதங்களுள்ள ரிஷபங்கள் மூன்றுலும் சுத்த ஸ்வரங்களின் சேர்க்கையால் 84 பேதங்கள் ஏற்படுகின்றன. கோமளம் முதலிய பேதங்களுள்ள காந்தாரம் மத்யமம் இவைகளாலும் 3 விகிருத ஸ்வரங்களாலும் சுத்த ஸ்வரங்களின் சேர்க்கையால் 105 பேதங்கள் ஏற்படுகின்றன. கோமளம் முதலிய 4 காந்தாரங்களாலும் 3 விகிருத ஸ்வரங்களுடனும் விகிருதமான தைவதங்களுடனும் சேர்ந்து 84 பேதங்கள் ஏற்படுகின்றன. நான்கு விகிருத காந்தாரங்களாலும் 4 விகிருத நிஷாதங்களாலும் சுத்த ஸ்வரங்களால் உண்டாகும் பேதங்கள் 112. மூன்று மத்யமங்களாலும் 3 விகிருத தைவதங்களாலும் 5 சுத்த ஸ்வரங்கள் சேருவதால் 63 பேதங்கள் உண்டாகின்றன. மூவகை மத்யமங்களாலும் நிஷாதங்களாலும் 5 சுத்த ஸ்வரங்களும் 4 விகிருத ஸ்வரங்களும் சேருவதால் 84 பேதங்கள் உண்டாகின்றன. எல்லா விகிருத தைவதங்களாலும் எல்லா விகிருத நிஷாதங்களாலும் மற்ற எல்லா சுத்த ஸ்வரங்களாலும் ஏற்படும் பேதங்கள் 112. எல்லா விகிருத ரிஷபங்களாலும் எல்லா விகிருத காந்தாரங்களாலும் எல்லா விகிருத மத்யமங்களாலும் மற்ற சுத்த ஸ்வரங்களாலுமேற்படும் பேதங்கள் 336. எல்லா ரிஷபங்களாலும் 5 காந்தாரங்களாலும் 3 தைவதங்களாலும் மற்ற சுத்த ஸ்வரங்களாலும் ஏற்படும் பேதங்கள் 420. எல்லா விகிருத ரிஷபங்களாலும் 4 காந்தாரங்களாலும் 4 நிஷாதங்களாலும் மற்ற சுத்த ஸ்வரங்களாலும் 448 பேதங்கள் ஏற்படுகின்றன. 3 ரிஷபங்களாலும் 3 மத்யமங்களாலும் 3 விகிருத தைவதங்களாலும் 4 சுத்த ஸ்வரங்களாலும் ஏற்படும் பேதங்கள் 10189. மூன்று ரிஷபங்கள், 3 மத்தியமங்கள், 4 நிஷாதங்கள் மற்ற சுத்தங்கள் இவைகளால் ஏற்படும் பேதங்கள் 252. 3 ரிஷபங்கள் 4 தைவதங்கள், 5 நிஷாதங்கள், 4 சுத்த ஸ்வரங்கள் இவைகளாலேற்படும் பேதங்கள் 420. 5 விகிருத காந்தாரங்கள், எல்லா மத்தியமங்கள், 3 தைவதங்கள், 4 சுத்த ஸ்வரங்கள் இவைகளாலேற்படும் பேதங்கள் 315. 5 விகிருத காந்தாரங்கள், 3 மத்தியமங்கள், 4 நிஷாதங்கள் மற்ற சுத்த ஸ்வரங்கள் இவைகளாலுண்டாகும் பேதங்கள் 420. 4 காந்தாரம், 4 தைவதம், 4 நிஷாதம், மற்ற சுத்த ஸ்வரங்கள் இவைகளாலுண்டாகும் பேதங்கள் 448. 3 மத்தியமங்கள், 4 தைவதங்கள், 4 நிஷாதங்கள், 4 சுத்த ஸ்வரங்கள் இவைகளாலுண்டாகும் பேதங்கள் 336. எல்லாவித ரிஷபங்கள், காந்தாரங்கள், மத்தியமங்கள் 3 தைவதங்கள் இவைகளின் சேர்க்கையாலுண்டாகும் பேதங்கள் 1260. ரிஷபங்கள் காந்தாரங்கள், 4 தைவதங்கள் நிஷாதங்கள் இவைகளின் சேர்க்கையாலுண்டாகும் பேதங்கள் 1680. 3 ரிஷபங்கள், 3 மத்தியமங்கள், 4 தைவதங்கள் நிஷாதங்கள் இவைகளாலுண்டாகும் பேதங்கள் 1702. காந்தாரங்கள், மத்யமங்கள், தைவதங்கள், நிஷாதங்கள் இவைகளின் சேர்க்கையாலுண்டாகும் பேதங்கள் 1008. எல்லா ரிஷபங்கள், எல்லா காந்தாரங்கள்,

எல்லா மத்தியமங்கள், எல்லா நிஷாதங்கள், எல்லா தைவதங்கள் இவைகளின் சேர்க்கையாலேற்படும் பேதங்கள் 1680. இதுவரை ஸங்கீத சாஸ்திரங்களில் முனிவர்கள் கூறியிருக்கும் பேதங்கள் மொத்தம் 6127. மூர்ச்சனைகளின் உட்பிரிவுகள் ஸம்பூர்ணமானவை மொத்தம் 18648. இம் மூர்ச்சனைகளெல்லாம் ஷட்ஜக்கிரமத்தில் ஏற்படுகின்றன. இவ்வாறே காந்தாரக்கிராமம், மத்தியமக்கிராமம் இவைகளிலும் இந்த ஸம்பூர்ண மூர்ச்சனைகள் ஏற்படுவதுண்டு. மத்தியமக்கிராமத்தில் மத்தியமமும் காந்தாரக்கிராமத்தில் காந்தாரமும் பிரதானமாக இருப்பதால் இவைகளுக்கு விகிருதாவஸ்தை ஏற்படுவதில்லை. காந்தாரக்கிராம, மத்தியமக் கிராமங்களில் காந்தார மத்தியமங்களை விட்டுவிட்டு யாதொரு மூர்ச்சனையுமேற்படுவதில்லை. முதன் முதல் மூர்ச்சனைகளின் தானம் முழுவதிலும் பேதங்கள் மொத்தம் 5040 என்று அந்தத் தானங்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதே தானங்கள் உட்பிரிவுகளின் எண்ணிக்கையால் மொத்தம் பேதங்கள் 13426560 ஏற்படுகின்றன. நி, த, ப, ம, க, ரி இவைகளின் நடுவே ஒவ்வொரு ஸ்வரத்தை விட்டுவிட்டு ஆரோஹண அவரோஹணங்கள் செய்வதால் ஏற்படும் ஷாடவ மூர்ச்சனைகள் 36. இவ்வாறே ஷாடவ சுத்தங்களையுமறிக.

இனி விகிருத ஸ்வரங்களைப் பற்றிக் கூறுவோம்: 13 ரிஷபங்கள் 7 மத்தியமங்கள் இவைகளாலேற்படுவதும் நிஷாதமற்றவைகளுமான மூர்ச்சனைகளின் பேதங்கள் 78. இவ்வாறே தைவதமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 84. அவ்வாறே பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 102. மத்தியமமில்லாத மேற் கூறப்பட்ட மூர்ச்சனைகளின் பேதங்கள் 84. அவ்வாறே காந்தாரமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 78. ரிஷபமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 84. நான்கு ரிஷபங்களாலும் ஐந்துவித காந்தாரங்களாலும் நிஷாதமற்ற மூர்ச்சனைகளின் பேதங்கள் 96. மூன்று ரிஷபங்களாலும் மூன்று மத்தியமங்களாலும் உண்டாகும் பேதங்கள் 54. இவ்வாறே மூன்று ரிஷபங்களாலும் மூன்று தைவதங்களாலும் உண்டாகும் பேதம் 54. 5 காந்தாரங்களாலும் 3 மத்தியமங்களாலும் உண்டாகும் பேதங்கள் 90. காந்தாரங்கள், தைவதங்கள் இவைகளாலுண்டாகும் பேதங்கள் 72. மத்தியமங்கள் தைவதங்கள் இவைகளால் ஏற்படும் பேதங்கள் 54. இவ்வாறு நிஷாதஹீனங்களான மூர்ச்சனைகளின் மொத்த எண்ணிக்கை 420. அவ்வாறே தைவதமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் மொத்தம் 480. பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 756. மத்தியமமில்லாத மூர்ச்சனைகள் மொத்தம் 486. காந்தாரமில்லாதவை 402. ரிஷபமில்லாதவை 480. ரிஷபங்கள், காந்தாரங்கள், மத்தியமங்கள் இவைகளாலுண்டானதும் இவைகளினுட் பிரிவுகளுடன் கூடியனதும் நிஷாதம் மற்றவைகளுமான மூர்ச்சனைகளின் பேதங்கள் 360. ரிஷபங்கள், காந்தாரங்கள், தைவதங்கள் இவைகளாலுண்டாகும் பேதங்கள் 288. ரிஷபங்கள், மத்தியமங்கள், தைவதங்கள் இவைகளாலுண்டாகும பேதங்கள் 162. காந்தாரங்கள், மத்தியமங்கள், தைவதங்கள் இவைகளாலேற்படும் பேதங்கள் 270. இவ்வாறு நிஷாதமற்ற மூர்ச்சனைகளின் மொத்த பேதங்கள் 1080. தைவதமில்லாத பேதங்களின் மொத்தம்

1320. பஞ்சமமற்றவை 3000. மத்தியமமில்லாத மூர்ச்சனைகள் 138. காந்தாரமில்லாத மூர்ச்சனைகள் 450. ரிஷபமில்லாதவை 1312. ரிஷபம் காந்தாரம், மத்யமம், தைவதம் இவைகளின் சேர்க்கையால் நிஷாதமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 1180. ரிஷபம், காந்தாரம், மத்தியமம், நிஷாதம் இவைகளின் சேர்க்கையாலுண்டானவையும் தைவதமற்றவைகளுமான மூர்ச்சனைகள் 180. நி, க, ம, த இவைகளாலுண்டானவையும் பஞ்சமமற்றவையுமான மூர்ச்சனைகள் 1080. பஞ்சமமில்லாமல் ரிஷபம், காந்தாரம், மத்தியமம், நிஷாதம், இவைகளுடைய சேர்க்கையால், ஏற்படும் மூர்ச்சனைகள் 180. பஞ்சமமில்லாமல் ரிஷபம் காந்தாரம், தைவதம், நிஷாதம் இவைகளின் சேர்க்கையால் ஏற்படும் பேதங்கள் 1536. ரி, ம, த, நி இவைகளாலேற்படும் பஞ்சமமில்லாத மூர்ச்சனைகள் 864. க, ம, த, நி இவைகளின் சேர்க்கையால் ஏற்படுவதும் பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 180. இவ்வாறு பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் மொத்தம் 6312. ரி, க, த, நி இவைகளின் சேர்க்கையால் மத்தியமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 1536. ரி, ம, த, நி இவைகளின் சேர்க்கையால் காந்தாரமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 864. க, ம, த, நி இவைகளின் சேர்க்கையால் ரிஷபமற்ற மூர்ச்சனைகளின் பேதங்கள் 180. ரி, க, ம, த, நி இவைகளின் சேர்க்கையால் பஞ்சமமில்லாத மூர்ச்சனைகளின் பேதங்கள் 5760. ஷாடவங்களுடைய மூர்ச்சனைகளின் பேதங்கள் 31050. எந்த ஷாடவ மூர்ச்சனையில் எந்த ஸ்வரமில்லையோ அந்த ஸ்வரமில்லாமலே அம்மூர்ச்சனையில் பிரஸ்தாரங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஷாடவ மூர்ச்சனைகளின் எண்ணிக்கை 720-ஞல் பெருக்கப்படும்போது 3726000 பேதங்கள் ஏற்படுகின்றன.

இனி ஔடவ மூர்ச்சனைகளைப் பற்றிக் கூறுவோம்: சுத்த ஸ்வரங்களிலும் விகிருத ஸ்வரங்களிலும் இரண்டிரண்டு ஸ்வரங்களை விட்டுவிடுவதால் சுத்தமான ஔடவங்களின் பேதங்கள் 75 என்று அறிஞர் கூறியிருக்கிறார்கள்.

மேற்படி ஸ்வரங்களில் ரிஷபத்தின் பேதங்கள் முன்போலவே இரண்டிரண்டு ஸ்வரங்களை விட்டுவிடுவதால் ஏற்படும் பேதங்கள் 150. காந்தாரத்தின் பேதங்கள் 200. மத்தியமத்தின் பேதங்கள் 150. தைவதத்தின் பேதங்கள் 150. நிஷாதத்தின் பேதங்கள் 200. ரி, க இவைகளின் சேர்க்கையாலேற்படும் பேதங்கள் 480. ரிஷபம், மத்தியமம் இவைகளாலேற்படும் பேதங்கள் 270.

ரி, த	இவைகளின் சேர்க்கையாலேற்படும் பேதங்கள்			270
ரி, நி	,,	,,	,,	360
க, ம	,,	,,	,,	450
க, த	,,	,,	,,	360
க, நி	,,	,,	,,	480
ம, த	,,	,,	,,	270
ம, நி	,,	,,	,,	360
த, நி	,,	,,	,,	480
ரி, க, ம	,,	,,	,,	900
ரி, க, த	,,	,,	,,	720

ரி, க, நி	இவைகளின்	சேர்க்கையாலேற்படும்	பேதங்கள்	960
ரி, ம, த	,,	,,	,,	405
ரி, ம, நி	,,	,,	,,	540
ரி, த, நி	,,	,,	,,	720
க, ம, த	,,	,,	,,	675
க, ம, நி	,,	,,	,,	900
க, த, நி	,,	,,	,,	60
ம, த, நி	,,	,,	,,	720
ரி, க, ம, த	,,	,,	,,	900
ரி, க, ம, நி	,,	,,	,,	1200
ரி, க, த, நி	,,	,,	,,	1280
ரி, ம, த, நி	,,	,,	,,	720
க, ம, த, நி	,,	,,	,,	1200
ஔடவ மூர்ச்சனைகளின் மொத்த பேதங்கள்				17505

இந்த மூர்ச்சனையில் எந்த இரு ஸ்வரங்களில்லையோ, அவ்வாறே முறையாக ஔடவங்களின் பிரஸ்தாரங்களும் ஏற்படுகின்றன. ஷி மூர்ச்சனைகளின் பேதங்கள் 120-ஞல் பெருக்கப்படின் 420120 பேதங்கள் மொத்தம் ஏற்படுகின்றன. இவ்வாருக மூர்ச்சனைகளின் பிரிவுகளையும் உட்பிரிவுகளையும் மொத்த எண்ணிக் கையையும் விரித்து ஸ்ரீ அஹோபலர் தம் நூலாகிய ஸங்கீத பாரிஜாதத்தில் கூறியிருக்கிறார்.

இனிமேல் மூர்ச்சனைகளின் பிரஸ்தாரம், நஷ்டம், உத்திஷ்டம் இவைகளைப் பற்றி ஸ்ரீ அஹோபலர் முதலிய சாஸ்திரகாரர்கள் கூறியிருப்பதை யனுசரித்துச் சிறிது கூறுகிறேன்.

ஏழு ஸ்வரங்களில் முதல் ஸ்வரமான ஷட்ஜம், 2-வது ஸ்வரமான ரிஷபம் இவ்விரண்டு ஸ்வரங்களும் ஒரு ஆவிருத்தியையுடையவை. 3-வது ஸ்வரமான காந்தாரம் இரு தடவை ஆவிருத்தியையுடையது. 4-வது ஸ்வரம் ஆறு ஆவிருத்தி களையும் (திருப்புதலையும்) பஞ்சமம் முன் ஸ்வரத்தைக் காட்டிலும் 4 மடங்கு ஆவிருத்திகளையுமுடையது. 6-வதான ஸ்வரம் முன்னுள்ளதைக் காட்டிலும் 5 மடங்கு அதிக ஆவிருத்தியோடு கூடியதும், 7-வது ஸ்வரம் முன்னுள்ளதைக் காட்டிலும் 6 மடங்கு அதிகமுள்ளதாகவுமிருக்கிறது.

இவ்வாறு 7 ஸ்வரங்களைப் பெருக்குவதால் மொத்தம் 5040 பிரஸ்தாரங்கள் ஏற்படுகின்றன. ஷாடவ ஸ்வரங்களும் மேற் கூறியவாறு பெருக்கப்படின் 720 பிரஸ்தாரங்கள் ஏற்படுகின்றன. ஔடவங்களின் பேதங்கள் 120 என்று கூறப் படுகிறது. நான்கு ஸ்வரங்களின் பிரஸ்தாரங்கள் 24. மூன்று ஸ்வரங்களின் பேதங்கள் 6. இரண்டு ஸ்வரங்களின் பிரஸ்தாரம் 2. ஒரு ஸ்வரத்திற்குப் பிரஸ்தாரபேதம் ஒன்றுதான். இவ்வாருக ஸ்வரங்கள் கணக்கிடப்பட்டிருக் கின்றன. ஸ்வரங்களின் பிரஸ்தாரமுறையைப் பற்றி மேலே விரிவாக ஒரு பிரகரணத்தில் கூறப்போகிறோம்.

ஸ்வரப்பிரஸ்தாரத்தில் ஸம்பந்தப் படும் நஷ்டம், உத்திஷ்டம் இவைகளை யறிந்துகொள்வதன் பொருட்டு கண்டமேருவைக் கூறுகிறோம்:—

ஏழு முதல் ஒன்று வரையுள்ள கட்டங்களின் ஏழு வரிசைகளை ஒன்றின் கீழ் ஒன்ருக எழுதவேண்டும். முதல் வரிசையின் முதல் கட்டங்களில் ஒன்றும், மற்றவைகளில் 0 (பூஜ்யத்தை)யும் எழுத வேண்டும். இரண்டாவது வரிசையின் முதல் கட்டத்தில் ஒரு லக்கத்தை எழுத வேண்டும். குறுக்காக மேல் நோக்கிப் போகும் வரிசைகளில், கட்டங்களின் எண்ணிக்கைகளை எழுத வேண்டும். சூனிய மான (காலியான) கட்டங்களில் சிறிய கற்களை வைத்துப் பின்னர் மூலக்கிர மத்தின் எண்ணிக்கையை எழுத வேண்டும். அதற்கு கீழ் உத்திஷ்டத்தின் எண்ணிக் கையை எழுதிப் பின் கற்களை அசைத்து, உத்திஷ்டத்தின் கடைசி ஸ்வரம் மூலக் கிரமத்தைப் பின்பற்றிக் கடைசி ஸ்வரத்திலிருந்து எத்தனுவதாக இருக்குமோ அவ்வாறு அத்தனை எண்ணமுடைய கட்டத்தில் கல்லை வைக்கவேண்டும். கல்லை அசைத்தல் (பெருக்கல்) கடைசி ஸ்வரத்திலிருந்து ஏற்படும். கிடைத்ததை விட்ட பின் கிரமம் ஏற்படும். கடைசி இரு கட்டங்களும் ஒரு எண்ணிக்கையுடன் கூடியவை. ஆகவே அங்கு லோஷ்டத்தின் அசைவு கிடையாது. மூலத்திலுள்ள ஒரு எண்ணிக்கையுடன் லோஷ்டமிருக்கிற கட்டத்தின் எண்ணிக்கையைச் சேர்ப்ப தால் உத்திஷ்டத்தின் அளவு அறியப்படும். அந்த அள்வு தான் உத்திஷ்டமெனப் படுகிறது.

ஸ்வரூபமில்லாமல் எண்ணிக்கையை மாத்திரம் கணக்கிடின் அதனை நஷ்ட மென்று கூறுவர். மூலத்திலுள்ள ஒரு எண்ணிக்கையுடன் கூட எந்த அங்கங்க ளாலேநஷ்ட சங்கியை ஏற்படுமோ அந்த கட்டங்களில் லோஷ்டங்களை லோஷ்ட ஸ்தானத்தின் அளவுக்குத் தக்கவாறு வைக்கவேண்டும். அவரோஹண முறை யாக மூலத்தைவிட்டு கிரமம் ஏற்படும். இல்லையேல் லோஷ்ட எண்ணிக்கையின் கடைசியான ஸ்வரத்தின் லோஷ்டஸ்தானத்தை நஷ்டமென்றறிக.

தானங்கள்

முறையே மூர்ச்சனைகளின் கிரமங்களைக் கூறிய பின்னர் குறிப்பிட்ட சுத்த தானங்களை விளக்குகிறோம்:

காகலி, அந்தரம் இவைகளில்லாமலும் முறை தவறி உச்சரிக்கப்படாமலு மிருக்கும் ஸ்வரங்களுடன் கூடியிருத்தல் சுத்த தானத்தின் லக்ஷணமாகும். 'தானம்' என்ற சொல்லிற்கு விஸ்தரிக்கப்படும் பொருள் எனப்பொருள் கூறப் பட்டிருக்கிறது.

சுத்தமான மூர்ச்சனைகள் ஷாடவம் ஔடவம் இவைகளுடன் கூடினால் சுத்த தானங்களாக ஆகின்றன, ஷாடவம் என்றால் குறிப்பிட்ட ஒரு ஸ்வரம் குறைந்தது போக, மற்ற ஆறு ஸ்வரங்கள். ஔடவம் என்றால் குறிப்பிட்ட இரு ஸ்வரங்கள் குறைந்ததுபோக மற்ற ஐந்து ஸ்வரங்கள்.

ஷாடவம், ஔடவமென்றுகும் பொழுது ஒன்று அல்லது இரண்டு ஸ்வரங் களுக்குக் குறைவு ஏற்படுவதை பரதர் முதலிய முனிவர்கள் ஆதரித்தே பின் வருமாறு தானங்களின் எண்ணிக்கையையும் பிரிவுகளையும் நிச்சயித்திருக்கின் றனர்.

ஷட்ஜக்கிராமத்தில் ஷட்ஜம், ரிஷபம், பஞ்சமம், நிஷாதம், இந்த ஸ்வரங் களுடைய லோபத்தினுல் ஏற்படுகின்ற தானங்கள் 28. மத்தியமக் கிராமத்தில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம் இவைகளின் லோபத்தினுல் ஏற்படுகின்ற தானங்கள் 21. ஆகவே ஷாடவங்களுடன் கூடிய தானங்கள் 49. ஷட்ஜம், பஞ்சமம் இவைகளாலும் த்விசுருதிகளான ரி, ப இந்த ஸ்வரங்களாலும் விடப் பட்டவை 7. ஷட்ஜக்கிராமத்தில் தனியாக ஔடவதானங்கள் 21. மத்தியமக் கிராமத்திலும் த்விசுருதிகளான ரி, த இவைகளினுற் குறைந்தவை 14. ஆக மொத்தம் ஷாடவங்களுடன் கூடினவை 35. ஷாடவம் ஔடவம் இவைகளுடன் கூடினவை மொத்தம் 84 தானங்கள்.

சுத்த தானங்களில் சிலவற்றில் வித்தியாஸத்தைத் தெரியப்படுத்துகிற பஞ்சமம் லோபத்தை யடைவதால் அங்கு கிராமத்தை எப்படிக் கூறுவதென் றுல்—அங்கு கிராமத்தை விசேஷத்தை நிமித்தமாக வைத்து அந்த ஸ்வரத்தினுல் லோபமடைந்த தானத்தைக் கூறுவதால் பஞ்சமமில்லாமலிருப்பினும் தானங் களின் விசேஷத்தால் கிராம விசேஷங்களையறிவது எளிதென்றறிக.

முறையே வந்த கூடதானங்களைப் பற்றிக் கூறுகிறோம்: முன்னர் கூறப்பட்ட 4 வித மூர்ச்சனைகளும் ஸம்பூர்ணமாகவோ அல்லது ஸம்பூர்ணமல்லாமலோ, முறை தவறி யுச்சரிக்கும் ஸ்வரங்களையுடையதாகவோ இருந்தால் அது கூடதான மெனப்படும். ஸப்தஸ்வரங்களுடன் கூடினது ஸம்பூர்ணமெனப்படும். அவை களில் கடைசி ஸ்வரங்களை ஒவ்வொன்றுக விட்டுவிடுதல் அஸம்பூர்ணமெனப் படும்.

ஸ்வரங்களை ஆரோஹணக் கிரமமில்லாமல் முறை தவறி உச்சரித்தல் கூடதானமெனப்படும். ஸம்பூர்ண தானங்கள் 5040. கிராமங்களுடன் கூடின கூடதானங்கள் மொத்தம் 282200.

அபூர்ணங்களாவன:—ஒவ்வொரு மூர்ச்சனையிலும் கடைசியிலுள்ள ஒவ் வொரு ஸ்வரத்தினை விட்டுவிடுவதனுல் ஆறு பேதங்கள் ஏற்படுகின்றன. உதார ணமாக ஸம்பூர்ணக்கிரமமுள்ள உத்தரமந்த்ரா என்னும் மூர்ச்சனையில் கடைசி ஸ்வரமான நிஷாதத்தினை விட்டுவிடுவதால் மீதி 6 ஸ்வரமுள்ள 'ஸரிகமபத' என்ற ஒரு கிரமம் ஏற்படுகிறது. பின்னர் தைவதம், பஞ்சமம் இவைகளையும் முறையே விட்டுவிடுவதால் இருவித பேதங்கள் ஏற்படுகின்றன. இதுபோலவே மற்றவையும் கண்டு கொள்க.

உட்பிரிவில்லாத ஒரே ஸ்வரமுள்ள தானமானது நஷ்டம், உத்திஷ்டம், ஸங்கீர்ணை இவைகளில் உபயோகிக்கப் படுகிறது. கிரமங்கள் சுத்த தானங்களிலும் உபயோகப்படுகின்றன. அவை

ஷாடவங்கள் 720
ஔடவங்கள் 120
4 ஸ்வரங்களுள்ளவை 24
3 ஸ்வரங்களுள்ளவை 6
2 ஸ்வரங்களுள்ளவை 2
1 ஸ்வரமுள்ளது 1

இவ்வாறுக இருக்கின்றன.

தானமென்பது சுத்த தானமெனவும் கூடதானமெனவும் இருவகைப்படும். அவற்றுள் சுத்த தானமாவது ஒவ்வொரு ராகத்தின் மாத்திரையை வ்யக்த மாக்குவது. கூடதானமென்பது இரண்டு ராகங்களின் விஸ்தரிப்பில் இரண்டிற்கும் பொதுவாக இருப்பது. மூர்ச்சனை ஆரோஹண முறையையும் தானம் அவ ரோஹண முறையையும் பின்பற்றி வழங்குவதே இவற்றிற்குள்ள வேற்றுமை யென மதங்கமுனி கூறியிருக்கிறார். அவர் தானங்களுக்கெல்லாம் அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களின் பெயர்களை வைத்திருக்கிறார்.

ஷட்ஜக்கிராமத்திலுள்ள ஷாடவதானங்கள் 28. மத்தியமக்கிராமத்தி லுள்ள ஷாடவ தானங்கள் 21. ஆக மொத்தம் இரு கிராமங்களிலுமுள்ள தானங்கள் 49.

இனி ஏழு ஸ்வரங்களின் ஏழுவிதச் சேர்க்கைக்கும் ஸங்கீத உலகில் வழங்கும் சங்கேதப் பெயர்களை நாரதர் கூறியவாறு காரணங்களுடன் விளக்குவோம்:

''ஆர்சிகோ க^{3}ாதி^{2}கச்செவ ஸாமிகச்சஸ்வரான்தர:
ஔட^{3}வம் ஷாட^{3}வச்செவ, ஸம்பூர்ணச்சேதி ஸப்தம:.

——நாரத^{3}ர்

ஆர்ச்சிகம்.

இது ஒரு ஸ்வரத்தையுடையது. யாகங்களில் பிரயோகிக்கப்படும் இருக்குகள் சில ஒரே ஸ்வரத்தையுடையனவாக இருக்கின்றன. அதன் தொடர்பு காரணமாக இதற்கு இப்பெயர் வந்திருக்கலாம்.

காதிகம்.

இது இரு ஸ்வரங்களையுடைய ஸமூஹத்தின் பெயர். இது 'காதா' என்ற வடமொழிப் பிரபந்த வகையில் தொடர்புடையதாக இருத்தலால் இதற்கு இப்பெயர் வந்திருக்கவேண்டும்.

ஸாமிகம்.

ஸாமவேதத்தில் மந்த்ரம் முதலிய மூன்று ஸ்வரங்களை முக்கியமாகக் கூறு வதால் மூன்றுஸ்வரமுள்ளது ஸாமிகமென்றறிக.

ஸ்வராந்தரம்.

நான்கு ஸ்வரமுள்ள தானமானது ஒரு ஸ்வரமுள்ள தானம் முதல் 7 ஸ்வரங்களுள்ள தானங்களுக்குள் நடுவிலிருப்பதால் இது இப்பெயர் பெற்றது.

நிஷாதம், காந்தாரம் இவைகளோடுகூடிய மேற்கூறிய தான வகைகள் (1) சுத்தமானவை, (2) காகலியுடன் கூடியவை, (3) அந்தர ஸ்வரத்துடன் கூடியவை, (4) அவைகளிரண்டுடனும் கூடியவை என நான்கு வகையாகப் பிரிக்கப்படும். அவைகளில் நி, க இவைகள் ஒவ்வொன்று குறைந்தது என்று இருவிதமாக முன்னோர்கள் பிரித்திருக்கிறார்கள்.

ஷட்ஜக்கிராமத்தில் ஷட்ஜத்தை முதலாகவுடைய உத்தரமந்திரக்கிரமம், மத்தியமக் கிராமத்தில் ஷட்ஜத்தை முதலாகவுடைய சுத்த மத்தியமக்கிரமம், இவ்விரண்டும் ஷட்ஜாதிகள் என்றும், இதேபோல் மத்தியமக்கிராமத்தில் மத்திய மத்தை முதலாகவுடைய ஸௌவீரக்கிரமம், ஷட்ஜக்கிராமத்தில் மத்தியமம் முதலான மத்ஸரீக்ருத்கிரமம், இவ்விரண்டு கிரமங்களும் மத்தியமாதிகள் என்றும் கூறப்படும். இவைகள் தனித்தனியாக இரண்டுவிதமாக மொத்தம் நான்கு விதம். நி, க, இவைகள் இல்லாததாக இருவிதம். ஆக மொத்தம் 8 விதங்கள் ஆகின்றன. இதே போல் நி, க இவைகளுடன் கூடிய மற்றவை பத்தும் தனித்தனியே நான்கு விதங்களாகின்றன. ஆகவே மொத்தம் 48 கிரமங்கள். முன்பு 720 கிரமங்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இவைகளுடன் அவைகளின் எண்ணிக்கையையும் பெருக்கின் $(720 \times 48) = 34560$ கிரமங்கள் ஏற்படுகின்றன. இவை ஷாடவத்தின் எண்ணிக்கைகளாகும்.

முன்னர் பிரிக்கப்பட்ட ஔடவங்கள் மறுபடியும் 'க'வை முதலாக உடையவை, 'த'வை முதலாகவுடையவை, 'நி'யை முதலாகவுடையவை என ஆறு பிரிவுகளாகப் பிரிகின்றன. மற்றவை 8-ம் தனித்தனியே இருவிதமானவை. ஆக 40 கிரமங்கள். முன் எண்ணிக்கைகளுடன் இதைப் பெருக்கினால் மொத்தம் 4800 கிரமங்கள் ஆகின்றன. இதுவரை கூறப்பட்ட எண்ணிக்கைகள் ஔடவத்தைச் சேர்ந்தவை.

நான்கு ஸ்வரங்களில் நிஷாதத்தை முதலாகப் பெற்றவை இரண்டும் நான்கு விதம். மற்றவை 12. ஆக 32. மேற்கூறிய எல்லாம் சேர்த்து மொத்தம் நான்கு ஸ்வரங்களின் 768 கிரமங்கள் ஏற்படுகின்றன. மூன்று ஸ்வரங்களில் மொத்தம் 156 கிரமங்கள்.

இரண்டு ஸ்வரங்களில் மொத்தம் 968 கிரமங்கள். ஏகஸ்வரமுள்ளதிற்கு உட்பிரிவு ஏற்படாதாகையால் மூலத்திலுள்ளபடி 14 கிரமங்கள் தான்.

சுத்த மத்தியமத்திலுள்ள பஞ்சமமில்லாத மற்ற ஆறு ஸ்வரங்களும் நான்கு ஸ்வரங்களுள்ள 8 பேதங்களுடன் பெருக்கப்படுவதால் சதுஸ்வரத்தில் மொத்தம் 48 தானங்கள் ஆகின்றன. மூன்று ஸ்வரங்களில் 12 கிரமங்கள். இரண்டு ஸ்வரங்களில் 2. ஒரு ஸ்வரத்தில் ஒன்று. இவைகள் உத்தரமந்த்ரா முதலியவைகளுடன் கூட 63 ஆகின்றன.

இனி நிஷாதம் முதலாகப் பெற்ற மார்கீகிரமங்கள் கூறப்படுகின்றன:—

ஐந்து ஸ்வரங்களுள்ள தானங்கள் 480. நான்கு ஸ்வரங்களுள்ளவை 96. மூன்று ஸ்வரங்களில் 12. இரு ஸ்வரங்களுள்ள இரண்டில் 4. ஏக ஸ்வரத்தில் ஒன்று. ரஜனீ முதலிய தானங்களுடன் மொத்தம் 503.

தைவதத்தை முதலாகவுடைய பௌரவீ மூர்ச்சனைகள் முற்கூறியபடி நான்கு. ஆறு ஸ்வரங்களுடைய தானங்கள் 208. 5 ஸ்வரங்கள், 4 ஸ்வரங்கள், 3 ஸ்வரங்கள், ஒரு ஸ்வரம் இவற்றையுடையவைகளுக்கும் முன்பு சொன்னவைகளையே முறையே வரும் எண்ணிக்கைகளென்றறிக.

உத்தராயதம் முதலிய தானங்களுடன்கூட மொத்தம் 3425 எண்ணிக்கைகள். கிராமங்கள், பூர்ணங்கள், அபூர்ணங்களிவைகளுடன் கூட மொத்தம் 4081 எண்ணிக்கைகளாகும். இவைகள் முறையே குறைந்தால் கூடதானமெனப்படும். மொத்தம் இவைகளின் எண்ணிக்கை 317930.

முன்பு வகுக்கப்பட்ட ஸம்பூர்ண தானங்கள், அஸம்பூர்ணதானங்கள் இவைகளின் எண்ணிக்கையை யறிவதற்கான உபாயத்தைச் சார்ங்க தேவர் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

ஒன்று முதல் 7 வரையுள்ள எண்களை முறையாக மேல் மேலாக எழுத வேண்டும். ஏழு எண்களில், முதல் எண்ணால் 2-வது எண் பெருக்கப்படும்போது $1 \times 2 = 2$ என்ற எண் உண்டாகிறது. இதுபோலவே அந்த இரண்டாவது எண்ணை மூன்றாவது எண்ணால் பெருக்கும்போதும் $2 \times 3 = 6$ என்ற எண் உண்டாகிறது. இதை 4 என்ற எண்ணால் பெருக்கினால் $6 \times 4 = 24$ என்ற எண் உண்டாகிறது. இதை 5 என்ற எண்ணால் பெருக்கினால் $24 \times 5 = 120$ என்ற எண்ணும், இதை 6 என்ற மேல் எண்ணால் பெருக்கினால் $120 \times 6 = 720$ என்ற எண்ணும் இதை 7 என்ற மேல் எண்ணால் பெருக்கினால் $720 \times 7 = 5040$ என்ற எண்ணும் ஏற்படுகிறது. இவ்வாறு கணித்த பின்னர் ஒவ்வொரு மூர்ச்சனையிலும் முறையே ஒரு ஸ்வரத்தை முதலாகவுடைய தானங்களிருஸ்வரமும், மூன்று ஸ்வரங்களும், இவ்வாறே பல ஸ்வரங்களுள்ள தானங்களும் இவைகளின் எண்ணிக்கைகளும் உண்டாகின்றன.

இந்த எண்களைக் காண்பிப்பதற்காக முன் குறிப்பிட்டவாறு முறையே பிரஸ்தாரத்தைப் பின்வருமாறு நிரூபித்துக் காட்டியிருக்கிறார் ஸ்ரீ சார்ங்கதேவர்.

ஸம்பூர்ணம், அபூர்ணம் இவைகளின் 560 கிரமங்களில் உத்திர மந்தரையின் ஒரு கிரமத்தை முதலில் ஷட்ஜம், பின்னர் ரிஷபம் இவ்வாறுக எழுதவேண்டும். நான்கு ஸ்வரமுள்ள 'ஸரிகம' என்ற கிரமத்தில் ரிஷபத்திற்குக் கீழ் ஷட்ஜம் எழுத வேண்டும். பின்னர் இந்த வரியில் தனக்கு மேலிருக்கின்ற ஸ்வரங்களை அமைக்கவேண்டும். ஆகவே இந்தக் கிரமத்தில் ஷட்ஜத்திற்குப் பின் க. ம

இவைகளை எழுத வேண்டும். இடது பக்கமாக மற்ற ஸ்வரங்கள் மூலக்கிரமத்தைப் பின்பற்றி எழுதப்படல் வேண்டும். ஆகவே உத்தரமந்தரையில் ஷட்ஜத்தை முதலாகவுடைய 7 ஸ்வரங்களும் கிரமமாக அமைத்தல் வேண்டும். ஷட்ஜத்தை முதலாகவுடைய கிரமம் மூலக்கிரமத்தைப் பின்பற்றியது. ஆகவே மூலக் கிரமத்திலிருந்து விலகின ரிஷபம் ஷட்ஜத்திற்கு முன்னெழுதப்படல் வேண்டும். எழுதின பிறகு பிரஸ்தாரத்தில் 'ரிஸகம' என்பது முதலாவது கூடதானமாக ஆகிறது. இரண்டாவதாகக் கூறிய முறைப்படி 'ஸரிகம' என்பது 2-வது கூடதானமாக அமைகிறது.

இவ்வாறு மூலக்கிரமத்தின் அவரோஹணம் வரையில் பிரஸ்தரித்துப் பார்த்தால், அந்தந்தக் கிரமத்திற்குச் சொல்லப்பட்ட எண்களையுடைய கூடதானங்கள் உண்டாகின்றன. அதற்குப் பிறகு பிரஸ்தாரம் ஏற்படுவதில்லை.

கண்டமேரு

இவ்வாறு கூறப்பட்ட கூடதானங்களில் நஷ்டம், உத்திஷ்டம் இக்கணக்குகளின் வழியாகத் தானவகைகளை யறிந்துகொள்வதற்காக கண்டமேரு பின்வருமாறு ஸங்கீதரத்னாகரத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

7 முதலிலுள்ளதும், 1 கடைசியிலுள்ளதுமான ஏழு கட்டங்கள் அமைக்க வேண்டும். அவற்றின் கீழே ஏழு வரிசைகளை முறையாக அமைக்கவேண்டும். அதாவது 7 கட்டங்களுள்ள குறுக்கு வரிசையை முதலில் அமைக்கவேண்டும். அதற்குக் கீழ் கீழாக 6, 5, 4, 3, 2, 1 இவைகளையுடைய கட்டங்கள் குறுக்காக அமைக்கவேண்டும். அமைத்த பின் மேலும் கீழும் காணப்படும் ஏழு வரிசைகளில், 7 கட்டங்களுள்ளதும், குறுக்கு வரிசையிலுள்ளதுமான முதல் கட்டத்தில் ஒன்று என்ற லக்கத்தை எழுதவேண்டும். 2-வது முதலிய அந்தந்த வரிசைகளின் கட்டங்களில் 0 என்ற பிந்துவை எழுதவேண்டும். முதல் வரிசையிலுள்ள கட்டங்களில் நஷ்டமென்றே உத்திஷ்டமென்றே அறியத்தகுந்த ஸ்வரங்களை யளவாகக் கொண்ட லோஷ்டகங்களை (சிறு கற்களை) வைக்க வேண்டும்.

இரண்டாவது வரிசையில், முதல் வரிசையிலிருக்கிறதும், முதல் கட்டத்திலுள்ளதுமான ஒன்று என்ற லக்கத்தை எழுத வேண்டும். இதை 0 என்ற சூன்யத்திற்குக் கீழே எழுதவேண்டும். மூன்றுவது வரிசையில், முன் நிற்பதும் கடைசியிலிருப்பதுமான இரு எண்களையும் கூட்டி 2 என்று சூன்யத்திற்குக் கீழே எழுத வேண்டும். 4-வது வரிசையில், தனக்கு முன்னுள்ள வரிசையின் முதற்கடைசி எண்ணிக்கைகளைக் கூட்டி 6 என்ற எண்ணைச் சூன்யத்திற்குக் கீழே எழுதவேண்டும். அதற்கடுத்த கீழ் கட்டத்திலிருக்கும் எண்களை இரட்டித்து 12 என்றெழுதவும். அதற்கடுத்த கீழ் கட்டத்தில் 6 என்ற எண்ணை மூன்றினால் பெருக்கி 18 என்று எழுத வேண்டும். இவ்வாறு 5, 6, 7-வது வரிசைகளில் முன்முன் வரிசையிலுள்ள முதல், கடைசி இவைகளிலிருக்கிற எண்ணிக்கைகளைக் கூட்டிப் பின்வருமாறு எழுத வேண்டும்.

கண்டமேருப்பிரஸ்தாரம்

ஸ	ரி	க	ம	ப	த	நி
1	0	0	0	0	0	0
	1	2	6	24	120	720
		4	12	48	240	1440
			18	72	360	2160
				96	480	2880
					600	3000
						4320

இந்த கண்டமேருவில் நஷ்டம், உத்திஷ்டம் இவைகளையறியப் பின்வரும் உபாயம் சார்ங்கதேவரால் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்வரூபத்தைக் கூறி இந்தப் பிரஸ்தாரம் எத்தனைவது? என்று அதன் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுக் கணக்கிடுவது உத்திஷ்டம் எனப்படும். உத்திஷ்டதானத்தில் மூலக்கிரமத்தின் மூர்ச்சனையிலுள்ள முதல் ஸ்வரத்தைத் தொடங்கி வந்திருக்கும் 'உத்தரமந்திரா'விலுள்ள 'ஸரிகம' வென்னும் சதுஸ்வரக்கிரமத்தில் கடைசி ஸ்வரத்திற்கு அடுத்த தற்கடுத்ததாகவுள்ள ரிஷபம் மூன்றுவதாக இருப்பதால் மூன்றுவது கட்டத்தில் 12 என்ற எண்ணை எழுதவேண்டும்.

'மகஸரி' என்ற உத்திஷ்ட தானத்தில் கடைசியான மத்தியமத்தின் முன்பு கடைசியான ரிஷபம் எத்தனுவதாக இருக்கிறதென்று பார்த்தால் மூன்றுவதாக இருப்பதை யறியலாம். ஆகவே அதற்குக் கீழ் மூன்றுவது கட்டத்தில் 12 என்ற எண்ணை எழுதவேண்டும். இவ்வாறே அடுத்தடுத்துக் கீழுள்ள வரிசைகளிலும் செய்யவேண்டும். 4-வது வரிசையில், பிந்து கட்டத்திலுள்ள திரவிய விசேஷத்தை எடுத்து வைக்க வேண்டும். பின்பு கட்டத்திலிருக்கிற எண்ணிக்கையை யடைந்ததினுல் பலனையடைந்த ரிஷபத்தை விட்டு 'ஸகம' என்ற கிரமம் ஏற்படும். உத்திஷ்டத்தில் 'மகஸ' என்ற கிரமம் வருகின்றது. இப்பொழுது உத்திஷ்டத்தின் கடைசியிலிருக்கிற ஷட்ஜம் முன் சொன்னபடி மூன்றுவதானபடியால் அதற்குக் கீழுள்ள கட்டத்தில் 4 என்ற எண்ணை எழுத வேண்டும். பிறகு ஷட்ஜத்தை விட்டு 'கம' என்ற கிரமம் வரும். இது உத்திஷ்டத்தில் காந்தாரத்தைக் கடைசியாகவுடையது. இந்தக் கிரமத்தில் காந்தாரம் இரண்டாவதானபடியால் இரண்டாவது வரிசையிலிருக்கிறதும், பிந்துவையுடையதுமான கட்டத்திலுள்ள லோஷ்டத்தை அதற்குக் கீழிருக்கிற இரண்டாவது கட்டத்தில் 1 என்ற லக்கத்துடன் வைக்க வேண்டும்.

பிறகு மூலக்கிரமத்திற்கும், உத்திஷ்டத்திற்கும் மீதமான மத்தியம மானது ஒன்றுக இருக்கிறபடியாலும் முதல் வரிசையின் கீழ் கட்டங்களில்லாத படியாலும் மூலக்கிரமத்திலுள்ள கட்டத்தின் லோஷ்டம் அசைவதில்லை. மூலக்கிரமத்திலும் உத்திஷ்டதானத்திலுமிருக்கிற ஸ்வரங்களுக்கு கடைசி ஸ்வரங்களுடன் ஒற்றுமையிருப்பின் அப்பொழுதும் லோஷ்டத்திற்கு அசைவு கிடையாது. அச்சமயம் லோஷ்டத்தையடைந்திருக்கிற எண்ணிக்கைகளின் சேர்க்கையினுல் உத்திஷ்டத்தின் கணக்கை யறியலாம். மேலே குறிப்பிட்ட 'மகஸரி' என்ற கிரமம் 18-வது என்றறியலாம். இவ்வாறே மற்ற தானங்களிலும் கண்டு கொள்க.

இந்தப் பிரஸ்தாரம் இத்தனுவது என்ற எண்ணிக்கையை யறிந்த பின்பு இதன் ஸ்வரூபம் என்ன? என்ற கேள்விக்கு விடையளிக்கும் கணக்கே 'நஷ்டம்' எனப்படும்.

உத்தரமந்த்ரையில் சதுஸ்வரக்கிரமத்தில் 18 விதத்தானங்களைக் கூறிவிட்டு மூலக்கிரமத்திலுள்ள எண்ணிக்கைகளுடன் கூடிய வரிசைகளில் 7 கட்டங்களுள்ளது முதல் வரிசையாகும். அதன் முதல்கட்டத்தில் 1 லக்கமும், 4-வது வரிசையில் 12 என்ற லக்கமும் மூன்றுவதில் 4 என்ற லக்கமும், இரண்டாவதில் 1 லக்கமுமாக எழுதினுல் மொத்தம் 18 எண்ணிக்கைகள் ஆகின்றன. இந்த எண்ணிக்கைகளுள்ள கட்டங்களில் முறையே லோஷ்டங்கள் வைக்க வேண்டும்.

குறுக்கான முதல் வரிசையின் கீழ் கிரமமாக எத்தனுவது இடத்தில் லோஷ்டமிருக்கிறதோ முறையே கடைசி ஸ்வரத்தின் முன் அத்தனுவது ஸ்வரம் வரும். இங்கு 18-வது தானத்தில் கடைசியிலுள்ள லோஷ்டம் மூன்றுவது கட்டத்திலிருக்கிற படியால் முறையே கடைசி ஸ்வரத்திற்கு முன் மூன்றுவதாகவுள்ள ரிஷபம் நஷ்டதானத்தின் கடைசியாக இருக்கிறது. கூட்டல்

கழித்தால் இவற்றை உத்திஷ்டத்திற்குக் கூறிய முறைப்படி பார்த்துக் கொள்ளவேண்டும். அதே முறையாக இங்கும் ரிஷபம் போனுல் 'ஸகம' என்ற கிரமம் ஏற்படும். அதன் ஸமீபமாயும் கடைசியாகவுமுள்ள லோஷ்டம் மூன்றுவது கட்டத்திலிருக்கிற படியால் முறையான கடைசி ஸ்வரத்தின் முன்னிருக்கும் ஷட்ஜம் நஷ்டத்தின் கடைசிக்கு ஸமீபமாக இருக்கிறது, பிறகு 'கம' என்கிற கிரமம். இரண்டாவது லோஷ்டம், இரண்டாவது கட்டத்திலிருப்பதால் காந்தாரம் நஷ்டத்தினிரண்டாவதாக இருக்கிறது. பிறகு எஞ்சி நின்ற மத்தியமம் நஷ்டதானத்தின் முதலாவதாக இருக்கிறது. 'மகஸரி' என்பது நஷ்டதானத்தின் ஸ்வரூபம். மேலும், எந்தெந்தக்கிரமத்தில் கடைசியிலோ நடுவிலோ லோஷ்டத்தின் அசைவு இல்லையோ அந்தந்த இடத்தில் மூலக்கிரமத்தின் கடைசிஸ்வரத்திற்கு முன் ஸ்வரம் நஷ்டமாயிருந்தாலும் அத்தகையதாகிறதென்றறிக.

கண்டமேருவில் தானங்களின் எண்ணிக்கைகளையறிய உபாயம் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

தானங்களின் ஸ்வரங்களுக்கு ஸமானமானதும், மேல் வரிசை கீழ் வரிசை இவைகளின் கடைசியாகவுமுள்ள எண்ணிக்கைகள் தகுந்தவாறு 2, 3, முதலியவைகளுடன் சேர்வதால் ஏகஸ்வரம் முதலிய தானங்களின் எண்ணிக்கைகள் ஏற்படுகின்றன. அதாவது ஒரு ஸ்வரத்திற்கு ஒன்றும், இரு ஸ்வரங்களுக்கு 2-ம், மூன்று ஸ்வரங்களுக்கு 6-ம், 4 ஸ்வரங்களுக்கு 24 மான எண்ணிக்கைகள் ஏற்படுகின்றன. இரண்டு எண்ணிக்கைகளைச் சேர்த்தால் இரு ஸ்வரமுள்ளதான எண்ணிக்கை, மூன்று எண்களைச் சேர்த்தால் 3 ஸ்வர முள்ள எண் என்ற முறை ஏற்படுகிறது. இதனுல்த்தான் முன்னர் கூறிய முறைகளே ஏற்படுகின்றன. இத்தகைய முறையைப் பின்பற்றித் தான் ஏக ஸ்வரம் முதலிய தானங்களின் எண்ணிக்கைகள் ஏற்படுகின்றன.

கூடதானத்தின் உபயோகத்திற்காகக் கண்டமேருவைக் கூறினேம். சுத்த தானங்களுக்கு ஸ்வர்க்கம் முதலிய அதிருஷ்டபலன்கள் உண்டென்பதை நிரூபிப்பதற்காக அந்தந்தத் தானங்களுக்கு மதங்கர், சார்ங்கதேவர் முதலிய முன்னோர்கள் வழங்கியிருக்கும் யாகப்பெயர்களை இங்கு கூறுகிறேம். இதனுல் கீழ்வரும் அந்தந்த யாகங்களைச் செய்வதாலுண்டாகும் பயனை அந்தந்தத் தானங்களை முறை தவருமல் பாடி யடையலாமென்பது அம்முனிவர்கள் கருத்துப் போலும்.

ஷட்ஜமில்லாத சுத்த தானங்களின் யாகப்பெயர்களாவன—

1. அக்னிஷ்டோமம்
2. அத்யக்னிஷ்டோமம்
3. வாஜபேயம்
4. ஷோடசீ

5. புண்டரீகம்
6. அசுவமேதம்
7. ராஜசூயம்

ரிஷபமில்லாத தானங்களின் யாகப்பெயர்களாவன—

1. ஸ்விஷ்டக்ருத்
2. பஹுஸௌவர்ணம்
3. கோஸவம்
4. மஹாவ்ருதம்
5. விசுவஜித்
6. பிர்மயக்ஞம்
7. பிராஜாபத்யம்

பஞ்சமில்லாத தானங்களின் யாகப்பெயர்களாவன—

1. அசுவக்கிராந்தம்
2. ரதக்கிராந்தம்
3. விஷ்ணுக்கிராந்தம்
4. சூரியக்கிராந்தம்
5. கஜக்கிராந்தம்
6. பலிபித் ($ப^{3}லிபி^{4}த்$)
7. நாகயக்ஷகம்

நிஷாதமில்லாத தானங்களின் யாகப்பெயர்களாவன—

1. சாதுர்மாஸ்யம்
2. ஸம்ஸ்தம்
3. சஸ்திரம்
4. உக்தம்
5. ஸௌத்திராமணீ
6. சித்திரா
7. உத்பித் ($உத்^{3}பி^{4}த்$)

மேற்கூறிய 28 யாகப் பெயர்களும் ஷட்ஜக்கிராமத்திலுள்ள தானங்களின் யாகப் பெயர்களென்றறிக.

ஷட்ஜமில்லாத தானங்களின் யாகப்பெயர்களாவன—

1. ஸாவித்ரீ
2. அர்த்தஸாவித்ரீ
3. ஸர்வதோபத்ரம்
4. ஆதித்யாணுமயனம்
5. கவாமயனம்
6. ஸர்ப்பாணுமயனம்
7. கௌண்டபாயினுமயனம்

ரிஷபமில்லாத தானங்களின் யாகப் பெயர்களாவன—

1. அக்னிசித்
2. துவாதசாஹம்
3. உபாம்சு
4. ஸோமம்
5. அசுவப்ரதிக்ரஹம்
6. பர்ஹி
7. அப்யுதயம்

காந்தாரமில்லாத தானங்களின் யாகப்பெயர்களாவன—

1. ஸர்வஸ்வதக்ஷிணம்
2. தீக்ஷா
3. ஸோமம்
4. ஸமித்
5. ஸ்வாஹாகாரம்
6. தநூநபாத்
7. கோதோஹனம்

இவைகள் மத்தியமக் கிராமத்தைச் சேர்ந்த 21 ஷாடவதானங்களின் யாகப் பெயர்கள்.

பஞ்சமமில்லாத ஔடவதானங்களின் யாகப் பெயர்களாவன

1. இடா
2. புருஷமேதம்
3. சியேனம்
4. வஜ்ரம்
5. இஷு
6. அங்கிரா
7. கங்கம்

நிஷாதம், காந்தாரம் இவைகளில்லாத தானங்களின் யாகப பெயர்களாவன—

1. ஜ்யோதிஷ்டோமம்
2. தர்சம்
3. நாந்தீ
4. பௌர்ணமாஸிகம்
5. அசுவப்ரதிக்ரஹம்
6. ராத்ரி
7. ஸௌபரம்

பஞ்சமம், ரிஷபம் இவைகளில்லாத ஔடவதானங்களின் யாகப பெயர்களாவன—

1. ஸௌபாக்யக்ருத்
2. காரீரீ
3. சாந்திக்ருத்
4. புஷ்டிகிருத்
5. வைனதேயம்
6. உச்சாடனம்
7. வசீகரணம்

மேற்கூறியவை ஷட்ஜக் கிராமத்திலுள்ள 21 ஔடவதானங்களின் யாகப்பெயர்கள்.

ரிஷபம், தைவதம் இவைகளில்லாத தானங்களின் யாகப் பெயர்களாவன—

1. த்ரைலோக்யமோஹனம்
2. வீரம்
3. கந்தர்ப்ப பலஸாதனம்
4. சங்கசூடம்
5. கஜச்சாயை
6. ரௌத்ரம்
7. விஷ்ணுவிக்ரமம்

நிஷாதம், காந்தாரம் இவைகளில்லாத தானங்களின் யாகப் பெயர்களாவன—

1. காமதம்
2. வைரவம்
3. அவப்ருதம்
4. அஷ்டபாலம்
5. ஸ்விஷ்டக்ருத்
6. வஷட்காரம்
7. மோக்ஷதம்

மத்தியமக்கிராமத்தைச் சேர்ந்த இவை 14-ம் ஔடவ தானங்களின் யாகப் பெயர்கள்.

எந்தக் தானத்திற்கு எந்தயாகத்தின் பெயரிருக்கிறதோ அதற்கு அதன் பலன் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே தானங்களுக்கு யாகங்களின் பலன்கள் ஏற்படுவதற்காகவே யாகங்களின் பெயர்கள் அவைகளுக்கு வைக்கப்பட்டன வென்பதை முன்னரே கூறியிருக்கிறோம்.

சுத்தத் தானங்களுக்கும் யாகத்தினால் ஏற்படும் பலன்கள் ஏற்படுகின்றன வென்று கூறுவதற்குப் பிரமாணம் என்னவென்றால்—

'காந்தருவம்' என்னும் மேலே கூறப்போகும் ஒருவகை கீதத்தில் வேதங்களாலும், அதனைப் பின்பற்றும் ஸ்மிருதிகளாலும் கூறப்பட்டுள்ள சுத்த மூர்ச்சனைகளும், சுத்த தானங்களும், மறுமைப்பயனையுத்தேசித்தும், பாடும் பொழுது மூர்ச்சனைக்குத் தக்கபடி விஸ்தரிக்கப்படும் ஸ்வரங்களுக்கு ஆதாரமான சுருதியைத் தெரிந்து கொள்ளுவதை யுத்தேசித்தும் கூறப்பட்டிருப்பதுமே பிரமாணமாகும்.

அக்னிஷ்டோமதானத்தினால் ஸாமகீதத்தைக் கேட்பவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபட்டு ஜயித்தற்கரிய உலகங்களையும் ஜயிக்கிறான்.

தக்ஷனால் சொல்லப்பட்ட ஸ்தோத்திரத்தை காலை, மாலை இவைகளின் ஸ்ந்தியா காலங்களின் சுத்த ஷட்ஜத்துடன் பாடுகிறவன் தேவலோகத்தையடைகிறான்.

எவர்கள் அக்னிஷ்டோமதானத்தினால் சிவனைத்துதித்துப் பாடுகின்றனரோ அவர்கள் இவ்வுலகில் ஸகல சுகங்களையும் பெறுவதோடு மறுமையில் சிவஸாயுஜ்யத்தையுமடைகின்றனர்.

கூட தானங்களுக்குப், பாட்டில் மூர்ச்சனையைப் பின்பற்றிவரும் ஸ்வரங்களினுடைய ஆதாரசுருதிகளை யறிதலே பலனாகும்.

எனவே தானமென்பது ஸ்வரங்களை விஸ்தரித்தல் என்று பொருள்படுகிறது. இது சுத்த தானமென்றும், கூட தானம் என்றும் இருவகைப்படும்.

சுத்ததானமென்பது இரட்டை ஸ்வரங்களாக வரிசை வரிசையாகவும் ஒவ்வொரு ஸ்வரங்களாகவும் முறையே விஸ்தரிக்கும் தானம். இது ஔடவ, ஷாடவ, ஸம்பூர்ணங்களுடன் கூடியிருக்கும்.

கூடதானமென்பது ஸ்வரங்களை வரிசையாகவும், நினைத்தபடி வக்ரங்களாகவும் பாடுவதையே கூடதானமென்பார்கள். இது ஆர்ச்சிகம், காதிகம், ஸாமிகம், ஸ்வராந்தம், ஔடவம், ஷாடவம், ஸம்பூர்ணம் என்ற பேதங்களுடனும் கலந்திருக்குமென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஒரே ராகத்தில் இரண்டு ராகங்களின் சாயை தோன்றும்படி கிரஹபேதம் செய்து பாடுவதே கூடதானமென்று வேங்டமகி முதலிய பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

ஸாதாரணப் பிரகரணம்

கீதத்தில் விக்ருத ஸ்வரங்களைப் பிரயோகம் செய்வதினால் ஒரு விசித்திரமான நிலை ஏற்படுவதையும் சிற்சில இடங்களில் கானத்திற்குச் சமமாக இருத்தலையும் விளக்குவதற்கென சாதாரணப் பிரகரணமென்றொன்று ஸ்ங்கீத ரத்னகரத்தில் பின்வருமாறு காணப்படுகிறது.

ஸாத⁴ாரணம் ப⁴வேத்³தேவாத⁴ா ஸ்வரஜாதிவிசேஷணத்
ஸ்வரஸாத⁴ாரணம்த்ததிர சதுர்த⁴ா பரிகீர்தித்தம்
காகல்யன்தரஷட்³ஜெச்ச மத்⁴யமேனவிசேஷணத்

—ஸ. ரத்னகரம்

ஸாதாரணம்—ஸ்வரஸாதாரணம், ஜாதிஸாதாரணம் என இரு வகைப் படும். ஸ்வரஸாதாரணமானது காகலிஸாதாரணம், அந்தர ஸாதாரணம் ஷட்ஜஸாதாரணம், மத்தியம ஸாதாரணம் என நான்கு வகைப்படும்.

பலவற்றிலும் பற்றுதலுடையதென்று பொருள்படும்படி உலக வழக்கிலுள்ள 'ஸாதாரண'மென்னும் சொல்லிற்கு இங்கு தகுதியுள்ள பொருள் யாதெனில்—

''ஸாத⁴ாரண: காகலீஹி ப⁴வேத்³ ஷட்³ஜநிஷாத³யோ:
ஸாத⁴ாரண்யமதஸ்தஸ்ய யத்தத்ஸாத⁴ாரணம் விது³:

காகலி நிஷாதம் விக்ருதமாகவும், நான்கு சுருதிகளுள்ளதாகவும் இருக்கிறபடியாலும், சுத்தமானஷட்ஜம், நிஷாதம் இவைகளுக்கு ஸாதாரணமாக ஆகிறபடியாலும், ஸ, நி, இவைகளின் சுருதிகளுடன் சம்பந்தம் பெற்றிருப்பதாலும், அதை ஸாதாரணமென்று கூறுகின்றனர். இது காகலி ஸாதாரணம்.

அந்தரகாந்தாரமானது விக்ருதமாகவும் சதுச் சுருதியுள்ளதாகவுமிருக்கிறபடியாலும், இரு சுருதிகளான சுத்த காந்தாரம் மத்தியமம் இவைகளிடைந்திருக்கிறபடியாலும் இவைகளுக்கு அந்தரம் ஸாதாரணமாக இருக்கிறது. ஆகவே இது அந்தர ஸாதாரணம் எனப்பட்டது.

ஷட்ஜத்தை உச்சரித்தபின்னர், காகலி தைவதம் இவைகள் முறையே பிரயோகிக்க வேண்டியவை. இதுபோலவே மத்தியமத்தை யுச்சரித்துப் பின்பு அந்தரம், ரிஷபம், இந்த ஸ்வரங்களைப் பிரயோகிக்க வேண்டும் அல்லது ஷட்ஜம் காகலி இவைகளைப் பிரயோகித்து மறுபடி ஷட்ஜத்தை யுச்சரிக்க வேண்டும்.

ஷட்ஜத்தையடுத்திருக்கிற ஸ்வரங்களில் எது ஸமீபத்திலிருக்கிறதோ அதையே பிரயோகிக்கவேண்டும். அது நஷ்டமாயிருந்தால் அதற்கடுத்த ஸமீபத்திலிருக்கிறதையே பிரயோகிக்கவேண்டும். இம்மாதிரி மத்தியமம்,

அந்தரஸ்வரம் இவைகளையும் பிரயோகிக்க வேண்டும். அந்த ஸ்வரம் நஷ்டமாயிருந்தால் அதன் ஸமீபத்திலிருக்கிறதைப் பிரயோகிக்க வேண்டும். எல்லா விடத்திலும் காகலி, அந்தரம் இவைகளுக்குக் குறைவான பிரயோகமென்றறிக.

இவ்வாறு காகலிஸாதாரணம், அந்தரஸாதாரணம் இவைகளைப்பிரயோகங்களுடன் கூறி ஷட்ஜஸாதாரணம், மத்தியமஸாதாரணம் இவைகளையும் பற்றி ஸ்ங்கீத ரத்னகரத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

ஷட்ஜ ஸாதாரணம்—நிஷாதம் ஷட்ஜத்தின் முதல் சுருதியையும், ரிஷபம் கடைசி சுருதியையும் அடைந்திருக்குமானல் ஷட்ஜஸாதாரணமெனப்படும்.

முற்கூறிய ஸாதாரணங்கள் நான்கும் இரு கிராமங்களிலும் வரும்பொழுது ஸ்வரங்கள் விக்ருதாவஸ்தையை யடைந்தபோதிலும் கூட 5 சுருதிகளையடைதலென்பது அவைகளுக்குத் தகாதென்று நினைத்து மத்தியமத்திற்கு ஸாதாரணம் மத்தியம் தானென்று நிச்சயித்தும் கூறப்பட்டிருக்கிறது.

மத்யமஸாதாரணம்—மத்தியமமானது ம, க இவைகளையோ, க, ப இவைகளையோ அடைந்திருக்குமானல் இது மத்தியமஸாதாரணமெனப் படுகிறது.

மத்தியமத்திற்கு ஸாதாரணமென்றல் மத்தியமக் கிராமத்தையடைதலென்று பொருள்.

ஷட்ஜஸாதாரணம், மத்தியமஸாதாரணம் இவைகளுக்கு வேறான உலக வழக்கத்திலுள்ள பெயர்களும் பின் வருமாறு காரணமூலமாக விளக்கப் பட்டிருக்கிறது.—

ஷட்ஜமத்தியம ஸாதாரணங்கள் கேசத்தின் நுனிபோல் அணுவாக இருக்கிறபடியாலும், சதுச்சுருதிகளான அவைகள் நழுவி இரு சுருதிகளான காரணம் பற்றி அல்பமாயிருக்கிறபடியாலும் கைசிகங்கள் என்று கூறப்படுகின்றன. இவைகள் கிராமங்களில் வரையறுத்திருக்கிறபடியால் கிராம ஸாதாரணங்கள் என்று சொல்லப்படுகின்றன.

ஜாதி ஸாதாரணம்—ஒரே கிராமத்திலுண்டானதும் ஒரே அம்சங்களுள்ளதுமான ஜாதிகளில் கானத்திற்கு ஸாதாரணமாக எது இருக்கிறதோ அதை ஜாதி ஸாதாரணமென்று பெரியோர் கூறுகின்றனர். சிலர் ராகங்களையே ஜாதி ஸாதாரணம் என்று கூறுகின்றனர்.

ஸ்தாயிகள்

ஷட்ஜ பஞ்சமங்கள் அமைந்து த்வாதசஸ்வர ஸ்தானமுள்ள சக்கரத்தில் கண்டபடி 12 ஸ்வரஸ்தான அளவுள்ளது ஸ்தாயீ எனப்படும். ஸ்தாயீ மந்தர மத்யமமென்றும், மத்யமமென்றும், தாரம் என்றும், அவை முறையே தக்கு, மத்யம், ஹெச்சு என்றும் மூன்று வகைப்படும்.

இருதயத்திலிருந்து பேசுவது மந்திரஸ்தாயியென்றும், கண்டத்திலிருந்து பேசுவது மத்ய ஸ்தாயியென்றும், தலையிலிருந்து பேசுவது தார ஸ்தாயி என்றும் சொல்லப்படும். ஸங்கீத சாஸ்திரத்தில் ஸ்தாயிகள் மூன்றேயெனக் கூறப்பட்டிருப்பினும் வீணைகளில் இவைகளுக்கு மீறி அனுமந்த்ர ஸ்தாயிஸம்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. அதன் விவரத்தை சுருதிப்பிரகரணத்தில் கூறியிருக்கிறோம்.

முற் கூறிய மூன்று ஸ்தாயிகளும் பிரஸ்தாரக் கிரமத்தில்—

(1) மந்த்ர மந்த்ரம்.
(2) மந்த்ர மத்யம்.
(3) மந்த்ர தாரம்.
(4) மத்ய மந்த்ரம்.
(5) மத்ய மத்யம்.
(6) மத்ய தாரம்.
(7) தார மந்த்ரம்.
(8) தார மத்யம்.
(9) தார தாரம்.

என 9 வகையினவாகப் பிரிக்கப்படுகின்றன.

ஸ்தாயிகளை அறிவிப்பதற்கு கையாளப்படும் அடையாளங்கள்

மந்த்ரஸ்தாயி	மத்ய ஸ்தாயி	தார ஸ்தாயி
ஸ ரி க ம ப த நி	ஸ ரி க ம ப த நி	. . . . . . ஸ ரி க ம ப த நி

ஸ்வரங்களுக்குக் கீழ் இவ்வாறு புள்ளிகள் இடப்பட்டிருந்தால் அதனை மந்த்ர ஸ்தாயியென்றும், ஸ்வரங்களுக்கு மேற்புறம் இவ்வாறு புள்ளிகளிட்டிருப்பின் அதனை தாரஸ்தாயி என்றும், அவ்வாறு இல்லாதவற்றை மத்யஸ்தாயி என்றும் கூறுவர். இந்தப் புள்ளியடையாளங்களைக் கொண்டுதான் ஸ்வரம், அலங்காரம், கீதம், பதம், வருணம், கீர்த்தனை முதலியவற்றில் ஸ்வரங்களின் ஸ்தாயியைக் கண்டுபிடிக்க இயலுகிறது.

அனு மந்த்ரஸ்தாயியைக்காட்ட ஸ்வரத்தின் கீழ் (நி) என்ற இரு புள்ளிகளையும், அனு தார ஸ்தாயியைக் காட்ட ஸ்வரத்தின் மேல் (ஸ்) என்று இரு புள்ளிகளையும் இடுவது ஒரு ஸம்பிரதாயமென்று ஸங்கீத ஸம்பிரதாயப் பிரதர்சனியில் காண்கிறோம்.

கமகங்கள்

'ஸ்வரஸ்ய கம்போ க³மக: சிரோதிருசித்தஸு²காவஹ:'

—ஸ. ரத்னகரம்.

கேட்போர் மனங்களிக்குமாறு ஏற்படும் ஸ்வரங்களின் அசைவே கமகமெனப்படுகிறது.

இவைகள் 15 விதமானவையென்றும், 10 விதமானவையென்றும் மதபேதங்களிருக்கின்றன. அவற்றுள் 15 கமகங்கள் என்பதற்கு ஆதாரமாகக் கீழ்க் கண்ட சுலோகம் காணப்படுகிறது.

திருபஸ்பு²ரிதச்செவ கம்விதோலீனமித்யபி
ஆன்தே³ாலிதோ வலிச்சாத² திரிபி⁴ன்ன: குருளாஹதள.
உல்லாஸித: பிலாவிதச்ச ஹும்பிதோ முத்³ரிதஸ்தத²ா
நாமிதோ மிச்ரிதச்சேதி பே⁴த³ா: பஞ்சத³ச ஸ்மிருதா:

—ஸ. ரத்னகரம்.

1. திருபம்—ஸ்வரத்தில் அரை அக்ஷரகாலம் நிறுத்தி, அதை உதைத்து, மேல் ஸ்வரத்தின் சாயை வரும்படிச் செய்தல். த்ருதத்தின் நான்கிலொரு பாகமான கமகம் திருபம் எனப்படும். இதனை வீணை வாசிப்பு பரிபாஷையில் 'நொக்கு' என்பார்கள். (உ-ம்) நி ஸ கா—த நி ரீ.

2. ஸ்புரிதம்—ஸ ஸ, ரி ரி முதலிய ஆரோஹண அவரோஹண ஜண்டை ஸ்வரங்களைப் பின்ஸ்வரங்களுடன் அதட்டி மேல் ஸ்வரங்களின் சாயை வரும்படி செய்தல். அதிகமாக அடுத்து இரு ஸ்வரங்களை எழுப்புதலுமாம்.

3. கம்பிதம்—ஒரு ஸ்வரத்தை ஒரு அக்ஷரகாலம் அசைத்து அதனையடுத்துள்ள ஸ்வரத்தில் சாயை வருமாறு செய்தல். இது வீணையில் ஒரு ஸ்வர ஸ்தானத்தை இடது கைவிரல்களால் மீட்டுடன் தந்தியை யசைத்தலைக் குறிப்பதாகும். (உ-ம்) கா.....மா..... இந்த கம்பி தமென்ற கமகமே தன்னுள் மூன்று கமகங்களை யடக்கிக் கொண்டிருக்கிறது.

4. லீனம்—ஒரு ஸ்வரத்தில் இரண்டு அக்ஷரகாலம் நிறுத்தியசைத்து, அதையடுத்துள்ள மற்ற ஸ்வரங்களின் சாயையை வருவித்து லயிக்கச் செய்தல். இது வீணையில் கீழ் ஸ்வரத்திலிருந்து தந்தியை மீட்டி மேல் சுருதியோடு சுத்தமாக லயிப்பதைக் குறிக்கிறது. இது மத்யமத்திலிருந்து பஞ்சமத்திற்கும், நிஷாதத்திலிருந்து ஷட்ஜத்திற்கும் அடிக்கடி வரக்கூடிய கமகம். (உ-ம்) மா, பா, நீ, ஸா.

5. ஆந்தோளிதம்—ஒரு ஸ்வரத்தை 4 அக்ஷரகாலம் அசைத்து அதனையடுத்துள்ள ஸ்வரத்தின் சாயையை வருவித்தல். இது வீணையில் ஸ்வர ஸ்தானத்தில் விரல் வைத்துப் பல்லக்குக் கொம்பு போல் சில ஸ்வரங்களை ஒரே மீட்டில் இழுத்து, இரண்டு, மூன்று ஸ்வரங்கள் தொனிக்கும்படியாய் மிருதுவாய் மீட்டினஸ்வரத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பதாகும். (உ-ம்) ஸ க ரி ஸா, ப நி த ப.

6. வலி—ஒரு ஸ்வரத்தை வக்ரமாக அசைத்து, அதன் மேல் ஸ்வரங்களின் சாயையை வருவித்தல். இது எறும்புசாரி போவது போல் ஒரு ஸ்வரத்தை விட்டு ஒரு ஸ்வரம் பிரியாமல் அடுக்கடுக்காக ஸ்வரத்தைச் சேர்த்து வாசித்தலுமாம். (உ-ம்) ஸ ஸ ரீ, ரீ ரி க, க கா ம.....

7. த்ரிபின்னம்—வீணையில் மந்த்ரம், பஞ்சமம், ஸாரணை இந்தத் தந்திகளைக் குறுக்காக மீட்டி, விரல்களை வைத்துக் கொண்டு வலதுகையால் அந்த மூன்று தந்திகளையும் சேர்த்து மீட்டல், இது மும்மூன்று ஸ்வரங்களாக வாசித்தலுமாம். (உ-ம்) ஸ ஸ ஸ, ரி ரி ரி, க க க....

8. குருளம்—அவரோஹண ஸ்வரத்தில் கீழ்ஸ்தாயியில் இறங்கும்பொழுது 'நி த ப ம' என்ற ஸ்வரங்கள் நி ஸ, த நி, ப த, ம ப என்று இசைக்கும்படி ஒவ்வொரு ஸ்வரத்திற்கும் உதைத்து மேல் ஸ்வரங்களின் சாயையைக் காண்பித்து, அவைகளைத் தளர்த்திக் கொண்டு நழுவலாக இறங்குதல். இது குருலமென்றும் ஒரிகையென்றும் இரு வகைப்படும். இவற்றுள்—

(1) குருலம்—இது பஞ்சம ஸ்வரத்தில் விரல்களை வைத்து மீட்டி, 'த நி த த ப' என்ற ஸ்வரம் பேசும்படி இழுத்து வாசித்தல்.

(2) ஒரிகை—பஞ்சம ஸ்வரத்தில் விரல்களை வைத்து மீட்டி 'பா நி த ப' என்ற ஸ்வரங்கள் பேசும்படி இழுத்து வாசித்தல்.

9. ஆஹதம்—ஏதாவது ஒரு ஸ்வரத்திலிருந்து நழுவி மேல் வரும் ஸ்வரத்தின் சாயையுடன் கீழ் ஸ்வரத்திற்கு வருதல். (உ-ம்) 'ப ம' என்று அவரோகணிக்கும் பொழுது 'ப ப ம' என்னும் தொனியுடன் இரங்குதலாகும்.

10. உல்லாஸிதம்—ஒரு ஸ்வரத்திலிருந்து மேலுள்ள ஏதாவதொரு ஸ்வரத்திற்கு ஆரோஹணிக்கும் பொழுது அதன் இடையிலுள்ள ஸ்வரங்களை நழுவி துபோலத் தளர்த்திக்கொண்டு ஏறி இறங்குதல். இது ஏற்ற ஜாரு என்றும், இறக்க ஜாரு என்றும் இருவகைப்படும். அவற்றுள்—

(1) ஏற்ற ஜாரு—இது பஞ்சமத்தில் விரல் வைத்து 'ப த' என்று பிடித்தல்.

(2) இறக்க ஜாரு—இது முன்போலவே 'த ப' என்று பிடித்தல். இதுவே குருளமென்ற கமகமாகவுமாகிறது.

11. ப்லாவிதம்—ஒரு ஸ்வரத்தை 12 அக்ஷரகாலம் அசைத்து, அதன் மேல் ஸ்வரத்தின் சாயையைக் காண்பித்தல்.

12. ஹும்பிதம்—நழுவிக்கொண்டே ஹும்காரத்துடன் ஆரோஹணக் கிரமமாகவும், அவரோஹணக் கிரமமாகவும் ஸ்வரங்களை உச்சரித்தல், இது வீணையில் தந்தியின் கீழ் ஷட்ஜத்திலிருந்து மீட்டி, மேல் ஷட்ஜம் வரையில் ஒரேயடியாய் ஹும்கார நாதத்துடன் வாசித்தலாகும். இந்த கமகம் பாடகர்களுக்கு மிகவும் முக்கியமானது.

13. முத்ரிதம்—வாயை மூடிக்கொண்டு பாடுவதால் ஏற்படும் ஸ்வரங்களின் அசைவு. இக் கமகம் பாடுவதற்கு மாத்திரமேயுபயோகமானது. வீணையிலோவெனில்—மெட்டுக்களையழுத்தாமலே, விரலடிகளால் தந்திகளிலிருந்து நாதத்தை யுண்டாக்கி ராகச் சாயையைக் காண்பிப்பது. இந்த கமகம் பாடகர்களுக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

14. நாமிதம்—நாதத்தைக் குறைத்து ஸூக்ஷ்ம த்வனியுடன் பாடுவதால் ஏற்படும் ஸ்வரங்களின் அசைவு, கீர்த்தனம் முதலியவைகளை வாசிக்கும் பொழுது அதற்குள்ள அக்ஷரங்களில் மீட்டுக்கொடுத்து ரஸம் உத்பத்தியாகும்படி வாசிப்பது.

15. மிச்ரிதம்—மேற் கூறிய கமகங்களில் இரண்டு மூன்று சேர்ந்து வரும்படி செய்தல். ஒரு ஸ்வர ஸ்தானத்தைப் பிடிக்கும் பொழுது அதிலிருந்து இழுக்கக் கூடிய ஸ்வரங்கள் இரண்டு தைவதங்களாகவோ, இரண்டு நிஷாதங்களாகவோ தொனிக்கும்படி வாசித்தல்.

இவ்வாறு கூறப்பட்ட 15 வித கமகங்களும் வீணை வாசிப்பவர்களுக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

கமகங்கள் 15 விதப்படுமெனப் பல நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. கமகங்கள் 10 விதம் தானென்றும் அதன் உட்பிரிவுகள் சேர்வதால்த் தான் 15 கமகங்கள் ஆகின்றனவென்றும் சிலர் கொள்கை. முக்கியமாக இவை வீணை முதலிய வாத்தியங்களுக்கே உரியவை. வாய்ப்பாட்டிற்கும் சில கமகங்கள் அவசியமாயிருந்தாலும், அவைகளைச் சொல்லாமலே சாரீரத்தில் தொனிக்கக் கூடியவைகளாயிருக்கின்றன.

கமகம் என்ற சொல் ரஹஸ்யம் என்ற பொருளைக் குறிக்கும். வீணை முதலிய வாத்தியங்களை அப்யஸிக்கக் கூடியவர்களுக்கு இடது கை விரல்கள் பலவிதமான ஸங்கதிகளையும் ஸ்வரங்களின் அசைவுகளையும் காட்டுவதற்காக ஏற்பட்டிருக்கும் கிரமமேயாகும். பாடுகிறவர்களும் இந்த கமகங்களையும் அகார, உகார, மகார, இகாரங்களோடு செய்யலாமாயினும் இன்னும் பல வேறு வரிசைகளையும் ஸாதகம் செய்தால்த்தான், டாயம், மத்யமகாலம், கனம் முதலியவைகளையும் பாட முடியும். ஆகையால் பாடகர்கள் பலகமகங்களை (அதாவது ஸ்வரவரிசைகளை) பிரஸ்தார லக்ஷணத்திலும், அலங்காரங்களிலும் கண்டிருக்கிறபடி ஸாதகம் செய்யவேண்டுமென்பது அனுபவ ஸித்தாந்தம்.

ஸங்கீத பாரிஜாதத்தில் சாரீரம் முதலிய 17 கமகங்களுக்கு லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஸங்கீத ரத்னகரத்தில் கூறப்பட்டிருக்கும் கமகங்கள் 10 விதமானவைதான். கோஹலாசார்யர் என்பவரும் தம் நூலில் 10 கமகங்கள் தான் கூறியிருக்கிறார். ஆனல் அவைகளின் பெயரும் லக்ஷணமும் கீழ்க் கூறியவாறிருக்கின்றன.

எண்	கமகப் பெயர்கள்	லக்ஷணம்
1	ஆரோஹணம்	ஸ ரி க ம ப த நி ஸ.
2	அவரோஹணம்	ஸ நி த ப ம க ரி ஸ.
3	டாலு	ஸப, ஸம, ஸக, ஸரி, ஸஸ.
4	ஸ்புரிதம்	ஸஸ, ரிரி, கக, மம.
5	கம்பிதம்	பா ப ப ப ப...(ஒரே ஸ்தானத்தில் நின்று ஸ்வரத்தை அசைத்தல்)
6	ஆஹதம்	ஸரி, ரிக, கம, மப, பத, தநி, நிஸ.
7	பிரத்யாஹதம்	ஸநி, நித, தப, பம, மக, கரி, ரிஸ.
8	த்ரிபுச்சம்	ஸஸஸ, ரிரிரி, ககக, மமம, பபப, ததத, நிநிநி.
9	ஆந்தோளிதம்	ஸரிஸபாப, ரிகரிமாம, கமகதாத.
10	மூர்ச்சனை	ஸரிகமபதநி, ரிகமபதநிஸ.

இதன் விளக்கம்

1. ஆரோஹணக்கிரமத்தில் தானமாக, அதாவது அகார வகையில் பிர்கா வாங்குவதற்கு ஆரோஹணமென்று பெயர்.

2. அவரோஹணக்கிரமத்தில் முன் கூறியபடி பிர்கா வாங்குவதற்கு அவரோஹணமென்று பெயர். இவ்விரு கமகங்களுக்கும் பொதுவாக பிர்காவென்று பெயர் வழங்குகிறது.

3. டாலு—தந்தியை மீட்டிச் சிறிது காலத்திற்குப்பின் உடனே ஒரு ஸ்வரத்தை உதாரணத்திற் கண்டபடி பேசுவிப்பதற்கும், ஒரு ஸ்வரத்தை ஆரம்பத்தில் உட்புறம் காணித்து முடிவில் மற்றொரு ஸ்வரத்தை வெளியிற் பேசுவிப்பதற்கும் டாலு என்று பெயர்.

4. ஸ்புரிதம்—ஒரிக்கையாக இரட்டை வரிசை பேசுவிப்பதற்கு ஸ்புரிதம் என்று பெயர்.

5. கம்பிதம்—ஒரே ஸ்வரத்தில் நடுக்கத்துடன் நிற்பதற்குக் கம்பிதம் என்று பெயர்.

6. ஆஹதம்—ஆரோஹணக்கிரமத்தில் ஒரு ஸ்வரத்திலிருந்து மற்றொரு ஸ்வரத்திற்கு அடித்துக் கொண்டுபோகும் ரீதிக்கு ஆஹதமென்று பெயர்.

7. ப்ரத்யாஹதம்—முன்னர் கூறியவாறு அவரோஹண முறையாகப் பேசுவிப்பதற்கு ப்ரத்யாஹதம் எனப் பெயர்.

8. த்ரிபுச்சம்—ஒரிக்கையாக மும்மூன்று ஸ்வரங்களைப் பேசுவிப்பதற்கு த்ரிபுச்சம் எனப் பெயர்.

9. ஆந்தோளம்—முன்னும் பின்னுமாக ஜாரு பேசுவிப்பதற்கு ஆந்தோளமென்று பெயர். இதற்குப் பொதுவில் 'ஜாரு'வென்றும் பெயர். ஸ்புரிதம், கம்பிதம், ஆஹதம், ப்ரத்யாஹதம், த்ரிபுச்சம் ஆகிய இந்த ஐந்து கமகங்களுக்கும் பொதுவில் 'ஒரிக்கை' என்று பெயர்.

10. மூர்ச்சனை—ராகத்தின் ஆரோஹண அவரோஹணக் கிரமத்தில் ராகத்தின் கலையைக் காண்பிப்பதற்கு மூர்ச்சனையென்று பெயர்.

ஸ்ரீ வெங்கிடமகி அவர்கள் முதலிற் கூறியவாறே 15 கமகங்களைத் தான் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். 'கமயதீதி கமகம்' என்ற பதப்பிரிவால் 'தன்னுடைய ஸ்தானத்திலிருக்கும் சுருதியிலுள்ள சாயையும், மற்றொன்றை யடுத்துள்ள சாயையும் ஒன்று சேர்க்கிறது' என்ற பொருள் கமகம் என்ற வடமொழிச் சொல்லுக்கு ஏற்படுவதைக்குறிப்பிட்டு, பரதர் முதலியோருக்கும் 15 தான் கமகங்கள் என்கிறார்.

இனி ஸங்கீத பாரிஜாதத்திற் கூறப்பட்டிருக்கும் முறைப்படி 17 வித கமகங்களை விவரிக்கிறோம்—

1. சாரீரம்—தன் ஸ்தானத்தை விட்டுவிடுதலால் ஏற்படும் கமகம் சாரீரமெனப்படும்.

2. கம்பிதம்—ஒரே ஸ்தானத்தில் இரு ஸ்வரங்களை இரு முறையெழுப்புவது.

3. ப்ரத்யாஹதம்—ஒரேயடியால் ஒரே ஸ்வரத்தை யெழுப்புதல்.

4. த்விராஹதம்—ஒரே இடத்தில் இருமுறை யடித்து ஒரு ஸ்வரத்தை எழுப்புதல்.

5. ஸ்புரிதம்—அதிகமாக அடித்து இரு ஸ்வரங்களையெழுப்புதல்.

6. சாந்தம்—அடித்த பிறகும் அவ்விடத்திலேயே அனுஹத ஸ்வரம் ஏற்படுமாயின் அது சாந்தமென்றும் கமகமாகும்.

7. த்ரிபம்—த்ருதத்தின் நான்கிலொரு பாகமான கமகம் இது.

8. கர்ஷணம்—ஒரு இடத்தில் அடிப்பதாலேயே எல்லா ஸ்வரங்களும் அபிவ்யாப்தங்களாக (பரந்தவைகளாக) ஆவது.

9. அவகர்ஷணம்—இதுவும் கர்ஷணத்தைப் போன்றதேயாகும்.

10. விகர்ஷணம்—தன் ஸ்தானத்தில் மற்றொரு ஸ்வரத்தை இழுப்பது.

11. புனஸ்வஸ்தானம்—மேல் ஸ்தானத்திற்குச் சென்று பின் திரும்பித் தன் ஸ்தானத்திற்கே வருவது.

12. அக்ரஸ்வஸ்தானம்—கீழ் ஸ்தானத்திற்குச் சென்று திரும்பித் தன் ஸ்தானத்திற்கு வருவது.

13. கர்த்தரீ—ரேபத்தோடு (ர) கூடிய வர்ணத்திற்குக் காரணமாயிருப் பது.

14. ஸம்பவா—நடுவிரல், ஆட்காட்டிவிரல் இவ்விரண்டாலும் முறையே வெளியில் வருவது.

15. ஸ்புடம்—எதையுத்தேசித்துக் கிரியை யாரம்பிக்கப்படுகிறதோ அதனைக் கேட்பது.

16. நைமன்யம்—ஒரு ஸ்வரத்தால் மற்றொரு ஸ்வரத்தை யடக்கி மறைப்பது.

17. ஸுடாலு—இரு ஸ்வரங்களைப் பரப்பி மறைப்பது.

ஹும்பிதத்தின் ஒரு பகுதியே 'முத்ரா' என்னும் கமகம். ஆகவே இதனைத் தனியாக ஒரு கமகமென்று கூறுவதில்லை. இத்தகைய பல்வேறு லக்ஷணங்களை யுடைய பற்பல கமகங்கள் அறிஞர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நூல் விரிவுக்கஞ்சி யவற்றையெல்லாம் விரிக்காது விடுத்தனம்.

வர்ணலங்காரப் பிரகரணம்

கீழ்ப்பிரகரணத்தில் ஸாதாரணம், ஜாதிஸாதாரணம் இவைகளை நன்கு விளக்கினோம். அதன் பின்னர் கானஸம்பந்தம் கொண்டு எழுந்த வர்ணங்கள், அவைகளையடைந்துள்ள அலங்காரங்கள், அவைகளின் உட்பிரிவுகள், இவைகளை இந்தப் பிரகரணத்தில் உதாரணங்களுடன் விவரிக்கிறோம். அவற்றுள் முதலில் வர்ணத்தின் லக்ஷணத்தையும், அதன் உட்பிரிவுகளையும் கூறுவோம்:—

க³ானகிரியோச்யதே வர்ண: ஸசதுர்த⁴ா நிரூபித:
ஸ்த²ாய்யாரோஹ்யவரோஹீ ச ஸஞ்சாரீத்யத²² லக்ஷணம்
ஸ்தி²த்வா ஸ்தி²த்வா பிரயோக³: ஸ்யாதே³க ஸ்யைவ ஸ்வரஸ்ய ய:
ஸ்த²ாயீ வர்ண: ஸ விஜ்ஞேய: பராவன்வர்த²² நாமகள
ஏதத்ஸம்மிச்ரணத்³ வர்ண: ஸஞ்சாரீ பரிகீர்தித:

—ஸங்கீத ரத்னகரம்.

வர்ணம் என்றால் கானத்தின் கிரியையாகும். அது (1) ஸ்தாயி (2) ஆரோஹி (3) அவரோஹி (4) ஸஞ்சாரி என நால்வகைப் பிரிவையுடையது. அவை வரு மாறு:—

1. ஸ்தாயி.—ஒவ்வொரு ஸ்வரத்தையும் மூன்று தடவையோ அல்லது நான்கு தடவையோ தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டிருத்தலாகும். (உ-ம்) ஸாஸாஸா, ரீரீரீ, ஸாஸாஸாஸா, ரீரீரீரீ.

2. ஆரோஹி.—இது ஸ்வரங்களை ஆரோஹணமுறையைப் பின் பற்றிப் பிரயோகித்தலாகும். (உ-ம்) 'ஸரிகமபதநி'.

3. அவரோஹி. இது அவரோஹணமுறையைப் பின்பற்றி ஸ்வரங் களைப் பிரயோகித்தலாகும், இக்காரணம் பற்றியே இதற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. 'ஆரோஹி' என்ற வர்ணத்திற்கும் அதன் காரணம் பற்றியே பெயர் அமைந்துள்ளது என்று அறிக. (உ-ம) 'நிதபமகரிஸ'

4. ஸஞ்சாரி. இதில் ஸ்தாயி முதலிய மூன்று வர்ணங்களிலுள்ள ஸ்வ ரங்கள் தகுந்தவாறு சேர்ந்து பிரயோகித்திருத்தலால் இதற்கு இப்பெயர் உரித்தாயிற்று. (உ-ம்) ஸாரி ஸாரிகா, ஸநிதா ஸாரிகா.

மேற் கூறப்பட்ட கானக்கிரியா ரூபமான வர்ணங்களுள், லக்ஷணங்களின் பிரகாரம் வர்ணங்களை அறிந்து கொள்க.

இனி கீழ்க்கூறப்பட்ட வர்ணங்களின் விசேஷச்சேர்க்கையாகின்ற அலங் காரத்தை உட்பிரிவுகளுடன் கூறுவோம்.

அலங்காரத்தின் லக்ஷணம் வருமாறு:—

''விசிஷ்டவர்ணஸன்த³ர்ப⁴ மலங்காரம் பிரசக்ஷதே
தஸ்யபே⁴த³ா ப³ஹ்வித⁴ா: தத்ர ஸ்த²ாயிக³தான்பு³ருவே

—ஸங்கீத ரத்னகரம்.

ஸங்கீத அறிஞர்களால் முறையே வகுக்கப்பட்டுள்ள கலைகளுடன் கூடிய வர்ணங்களின் கூட்டம் அலங்காரம் எனப்படும். இது பல விதப் பிரிவினைகளையுடையது. இவைகளினால் கீதம் அலங்கரிக்கப்படுதலால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது. உலகில் ஹாரம் முதலிய ஆபரணங் களால் பெண்களும், காவ்யத்தில் 'உவமை' முதலிய அருத்தாலங்காரங்கள், அனுப்ராஸம் முதலிய சப்தாலங்காரங்கள் இவைகளினால் ரஸமும் எவ்வாறு அலங்கரிக்கப்படுகின்றனவோ அது போன்று 'பிரஸன்னதி' முதலிய அலங்காரங் களினால் கீதியும் அலங்கரிக்கப்படுகிறது என்று அறிக. இவை ஸ்தாயிவர்ணத்

தையடைந்திருத்தால் இவைகளை ''ஸ்தாயி அலங்காரங்கள்'' என்று கூறுதல் மிகவும் பொருத்தமாகும். அவை வருமாறு.

ஏஷாமாத்³யன்தயோரேக; ஸ்வரஸ்தே ஸ்த²ாயிவர்ணகா:
பிரஸன்னுதி: பிரஸன்னுன்த: பிரஸன்னுத்³யன்தஸம்ஜ்ஞக:
தத: பிரஸன்னமத்⁴ய: ஸ்யாத் பஞ்சம: க்ரமரேசித:
பிரஸ்தாரோரித³ பிரஸாத³: ஸ்யாத் ஸப்தெதேஸ்த²ாயினி ஸ்தி²தா:
—ஸங்கீதரத்னகரம்

எந்த அலங்காரங்கள், தங்கள் கலைகளின் ஆரம்பம் முடிவு இவைகளி லுள்ள ஒரு ஸ்வரத்தை மூர்ச்சனையுள்ளதாகவமையப் பெற்றிருக்கின்றனவோ அவை ஸ்தாயி வர்ணத்தைச் சேர்ந்தவை என்று அறியற்பாலது.

அவைகள் வருமாறு:—

(1) ப்ரஸன்னுதி
(2) ப்ரஸன்னுந்தம்
(3) ப்ரஸன்னுத்யந்தம்
(4) ப்ரஸன்னமத்தியம்
(5) க்ரமரேசிதம்
(6) ப்ரஸ்தாரம்
(7) ப்ரஸாதம்

இந்தப் பிரகரணத்தில் ஒவ்வொரு மூர்ச்சனையிலும், மூர்ச்சனையின் முதல் ஸ்வரத்தை மந்த்ரம் என்றும், அதன் 8-வது ஸ்வரத்தைதாரம் என்றும் அறிக. மந்த்ரதாரஸ்வரம் தன்மேல் ஒரு ரேகையோடுகூடியதாக இருக்கும். மந்த்ர ஸ்வரமும், தாரஸ்வரமும் முறையே ஒரு பிந்துவையும், ஒரு ரேகையையும் தம் மேல்பாகத்தில் உடையவை. லிபியில் மூன்று என்று எழுத பட்டிருப்பின் அந்த அக்ஷரத்தை ப்லுதம் என்றும் அறிக. இது ஆறு அக்ஷரகாலமுள்ளது.

1. ப்ரஸன்னுதி.

மன்த்³ரத³ஸ்யாத் பரேதாரே பிரஸன்னுதி³ருதீ³ரித;

இரு மந்த்ர ஸ்வரங்களைத் துடர்ந்து தாரஸ்வரம் பிரயோகிக்கப்பட்டி ருப்பின் அதனை இத்தகையதாகக் கூறுவர்.

(உ-ம்) ஸா ஸா ஸா

2. ப்ரஸன்னுந்தம்.

தத்³வெவெலோம்யே பிரஸன்னுன்த:

'ப்ரஸன்னுதி' என்ற அலங்காரத்தை முறையே திருப்பி பிரயோகித் திருந்தால் அது இத்தகைய பெயரையடையும்.

(உ ம்) ஸா ஸா ஸா

3. பிரஸன்னுத்தியந்தம்.

பிரஸன்னத்³வயமத்³யகே³ தீ³ப்தே பிரஸன்னுத்³யனத: ஸ்யாத்

இது இருப்ரஸன்ன (மந்த்ர) ஸ்வரங்களின் நடுவில் ஒரு தீப்தஸ்வரத் தோடு கூடியதாகும.

(உ-ம்) ஸா ஸா ஸா

4. பிரஸன்ன மத்தியம்.

தாரயோர்மத்⁴யகே³ புன:
மன்த்³ரே பிரஸன்னமத்⁴யாக்²யமலங்காரவிதே³ா விது³:

இது இருதாரஸ்வரங்களின் நடுவில் ஒரு மந்த்ரஸ்வரத்தையுடையது.

(உ-ம்) ஸா ஸா ஸா

5. க்ரமரேசிதம்.

ஆத்³யன்தோமூர்ச்²னுத்³ச்சேத் ஸ்வரேமத்³யோத்³விதீயத:
ஸைகாகலாத³ சேன்மத்⁴யே அத³ திருதீயசதுர்த²கள
ஸாத்³விதீயா பஞ்ச மாத்³யாஸ்திரயோரின் தச்சேத்கலாபரா
ஏவம் கலாதிரயேணைக்தோ அலங்கார: கிரமரேசித:

இது மூன்று கலைகளுடன் கூடியது. இவற்றுள் முதற்கலை மூன்று ஸ்வரங்கள் அமையப் பெற்றது. இது மூர்ச்சனையின் முதல் ஸ்வரமான ஷட்ஜத்தை ஆதியிலும் இறுதியிலும் பெற்றிருக்கும். நடுவில் மூர்ச்சனையின் இரண்டாவது ஸ்வரமான ரிஷபத்துடன் கூடியதுமாகும். இரண்டாவது கலை. முன்போலவே முதலிலும், கடைசியிலும் ஷட்ஜத்துடன் சேர்ந்தும் மத்தியில் மாத்திரம் மூர்ச்சனையின் 3-வது 4-வது ஸ்வரத்துடன் பிரயோகிக்கப் பட்டிருக்கும். மூன்றுவது கலை, இருமந்த்ர ஸ்வரங்களுடன் கூடிய கலையின் மத்தியில் மூர்ச்ச னையின் 5, 6, 7-வதான 'பதநி' என்ற ஸ்வரங்களுடன் கூடியதாகும். முறையே உதாரணம்:—

ஸா ரி ஸா | ஸா கம ஸா | ஸ பதநி ஸா |

6. பிரஸ்தாரம்.

தீப்தோரின்தச்சேத் பிரதிகலம் பிரஸ்தார: ஸோ⁴ரி⁴தீ⁴யதே

இது ஒவ்வொரு கலையிலும் தீப்தஸ்வரத்தை இறுதியில் அமையப் பெற்றுள்ளது. முதல் ஸ்வரம் மந்த்ரமுள்ளது.

(உ-ம்) ஸரிஸா | ஸகமஸா | ஸபதநிஸா |

7. ப்ரஸாதம்.

தாரமன்த்³ரவிபர்யாஸாத்தம் பிரஸாத³ம் பிரசக்ஷதே

இது தார, மந்த்ர ஸ்வரங்களில் 'ப்ரஸ்தார' அலங்காரத்திற்கு நேர் மாறுதலுள்ளதாகும்.

(உ-ம்) ஸாரிஸா | ஸாகமஸா | ஸாபதநிஸா |

இத்துடன் ஸ்தாயீவர்ணத்தின் அலங்காரங்கள் முடிவுற்றன. இனி ஆரோஹி வர்ணத்தின் அலங்காரங்களைக் கூறுவோம்;—

ஸ்யாதாம் விஸ்தீர்ண நிஷ்கர்ஷள பி²ன்து³ரப்⁴யுச்ச³யோரிபர:
ஹஸித பிரேங்கி²தாக்ஷிப்தஸன்தி⁴ பிரச்சாத³ஞஸ்ததா²
உத்³கி³தோத்³வாஹிதளதத்³வத்திரிவர்ணே வேணிரித்யமீ
த்³வாத³காரேர்ஹிவர்ணஸ்தா²லங்காரா: பரிகீர்திதா:

—ஸங்கீதரத்னகரம்.

(1) விஸ்தீர்ணம்
(2) நிஷ்கர்ஷம்
(3) பிந்து
(4) அப்யுச்சயம் (ச்ர)
(5) ஹஸிதம்
(6) ப்ரேங்கிதம்
(7) ஆக்ஷிப்தம்
(8) ஸந்திப்பிரச்சாதனம்
(9) உத்கீதம்
(10) உத்வாஹிதம்
(11) த்ரிவர்ணம்
(12) வேணி

இவை ஆரோஹிவர்ணத்தைச் சேர்ந்தவை. இவைகளுக்கு லக்ஷணமும் லக்ஷ்யமும் முறையே வருமாறு:

1. விஸ்தீர்ணம்.

மூர்ச்²னதே³: ஸ்வராத்³த்ர கிரமேணரோஹணம் ப⁴வேத்
ஸ்தி²த்வாஸ்தி²த்வாஸ்வ தெரெர்தீ³ர்கெ⁴: ஸவிஸ்தீர்ணேபி⁴தீ⁴யதே

இது மூர்ச்சனையின் முதல் ஸ்வரத்திலிருந்து ஆரம்பித்து, அதன் முடிவுவரையில் தீர்க்கமான ஸ்வரங்களால் முறையே ஆரோஹணத்துடன் கூடியது.

(உ-ம்) ஸா ரீ கா மா பா தா நீ:

2. நிஷ்கர்ஷம்.

ஹ்ரஸ்வெ; ஸ்வரெ: ஸநிஷ்கர்ஷோ த்³வித்³ விருக்தெ:
நிரன்தரெ:

இது குறிலான இரண்டு இரண்டு ஸ்வரங்களுடன் சேர்ந்து பிரயோகிக்கப் பட்டிருக்கும்.

(உ-ம்) ஸஸ ரிரி கக மம பப தத நிநி;

காதரவர்ணம்

திரிச்சதுர்வா ஸ்வரோச்சாரே க³காதிரவர்ணமிமம் விது³:

இது மூன்று அல்லது நான்கு ஸ்வரங்களுடன் பிரயோகிக்கப்பட்டிருக்கும்.

(உ-ம்) ஸஸஸ ரிரிரி ககக மமம பபப தததத நிநிநி;
ஸஸஸஸ ரிரிரிரி கககக மமமம பபபப தததத நிநிநிநி;

மேற் கூறப்பட்ட இரண்டும் 'நிஷ்கர்ஷ'த்தின் உட்பிரிவுகள் என்று சிலர் கருது கின்றனர்.

3. பிந்து

பிலுதம் ஹ்ரஸ்வம் பிலுதம் ஹ்ரஸ்வம் பிலுதம் ஹ்ரஸ்வம் பிலுதம் ஸ்வரம்
குர்வன்கிரமாத்³யத³ரோஹேத்ததோ பி⁴ந்துரயம்மத:

இது முதலில் ப்லுதம், பின்னர் குறில்ஸ்வரம், பின்னர் ப்லுதம் இவ்வ பிரயோகிக்கப்படுதலால் இதற்கு பிந்து என்று பெயர். ப்லுதஸ்வரம் என்ரு 6 அக்ஷரகாலம் கார்வையுடன் கூடியது என்று பொருள்.

(உ-ம்) ஸாஸாஸாரி, காகாகாம, பாபாபாத, நீநீநீஸ;

4. அப்யச்சயம்

ஏகாந்தரஸ்வராரோஹமாஹுரப்⁴யுச்ச²யம் பு³த⁴ர:

ஒவ்வொரு ஸ்வரத்தை விட்டு விட்டு ஆரோஹணமுறையைப் பின்பற்றி ஸ்வரங்களைப் பிரயோகித்தல் இத்தகைய அலங்காரமாகும்.

(உ-ம்) ஸ க ப நி;

5. ஹஸிதம்

யத்ரெகோத்தரவிரு³த்த⁴ரபி⁴ராவிருத்திபி⁴ருதீ³ரீதா:
ஆருஹ்யந்தே ஸ்வரா: பிராஹ ஹஸிதம் தம் சிவபிரிய:

முதல் ஸ்வரத்தை ஒரு தடவையும், இரண்டாவது ஸ்வரத்தை இரண்டு தடவையும், இவ்வாறு ஆரோஹண முறையைப் பின்பற்றி மற்ற ஸ்வரங்களையும் பிரயோகித்தல் 'ஹஸிதம்' என்ற அலங்காரமாகும் என்று சிவப்ரியர் கூறுகிறார்.

(உ-ம்) ஸா ரீரீ காகாகா மாமாமாமா பாபாபாபாபா—
தாதாதாதாதாதா நீநீநீநீநீநீ;

6. ப்ரேங்கிதம்

ஸ்வரத்3வயம் ஸமுச்சார்ய பூர்வபூர்வயுதம் பரம்
யத3ந்தே3ாலிதமாரோஹேத்பிரேங்கி3தோ3ஸள கிரமோரித2வா

முதலில் இரண்டு ஸ்வரங்களைப் பிரயோகித்தபின்னர் முன் முன் உள்ள ஸ்வரத்துடன் துடர்ந்து அடுத்து அடுத்து வரும் ஸ்வரங்களை ஊஞ்சல் ஆடுதல் போல் பிரயோகித்தல் இத்தகையதாகும்.

(உ-ம்) ஸரீ, ரிகா, கமா, மபா, பதா, தநீ;

7. ஆக்ஷிப்தம்

ஏகாந்தரம் ஸ்வரயுக3ம் தாதி3ருக்பூர்வயுதம் பரம்
கிரமாத3ாரோஹதி யத3ா தத3ாக்ஷிப்தம் பிரசக்ஷதே

மத்தியில் ஒவ்வொரு ஸ்வரத்தை விட்டுவிட்டு, முன்னுள்ள ஸ்வரத்துடன் துடர்ந்து ஆரோஹண முறையே இரண்டு இரண்டு ஸ்வரங்கள் பிரயோகிக்கப் படின் அதனை ஆக்ஷிப்தம் என்பர் அறிஞர்.

(உ-ம்) ஸகா, கபா, பநீ;

8. ஸந்திப்ரச்சாதனம்

திரிஸ்வராத்3யா கலாரிந்யேச பூர்வா பூர்வாந்திமாffதி3மே
கலேஸ்தஸ்திரிஸ்வரே யதிர ஸந்தி4ப்ரச்ச2ாத3னஸ்து ஸ:

இது மூன்று கலைகளுடன் கூடியது. முதற்கலையில் மூன்று ஸ்வரங்கள் உள. இதில் 1-வது 2-வது ஸ்வரங்கள் குறிலாகவும், மூன்றுவது ஸ்வரம் நெடிலாகவும் அமைந்திருக்கும். இரண்டாவது கலை, முதற் கலையின் கடைசி ஸ்வரத்திலிருந்து துடர்ந்து இருக்கும். இதுபோலவே மூன்றுவது கலையும், 2-வது கலையின் கடைசி ஸ்வரத்தின் தொடர்பு உள்ளது. முதற்கலையைப் போலவே இரண்டாவது, மூன்றுவது கலைகளிலும் இரு ஸ்வரங்கள் குறிலாகவும், ஒரு ஸ்வரம் நெடிலாக வும் அமையப்பெற்றிருக்கும்.

(உ-ம்) ஸரிகா, கமபா, பதநீ;

9. உத்கீதம்

யத3ாத்3ய ஸ்திரிஸ்திராவிருத்த: கலயோஸ்த்ரிஸ்வராத்மனே:

மூன்று ஸ்வரங்களுள்ள ஒவ்வொரு கலையிலும் முதல் ஸ்வரம் மூன்று தடவை பிரயோகிக்கப்பட்டிருக்கும். இதற்கு உத்கீதம் என்று பெயர்.

(உ-ம்) ஸஸஸரிகா, மமமபதா;

10. உத்3வாஹிதம்

மத்4யமேன தாத்3ருசோத்3வாஹிதோ மத:

மூன்று ஸ்வரங்களுடைய ஒவ்வொரு கலையிலும் நடுவிலுள்ள ஸ்வரம் மூன்று தடவை பிரயோகிக்கப்பட்டிருப்பின் அதனை உத்வாஹிதமென்பர் ஸங்கீத அறிஞர்.

(உ-ம்) ஸரிரிரிகா, மபபபதா;

11. த்ரிவர்ணம்

அந்தியஸ்யது திரிராவிருத்தள திரிவர்ணம் வர்ணயந்தியமும்

ஒவ்வொரு கலையிலும் கடைசி ஸ்வரம் மூன்று தடவை பிரயோகம் செய்யப் பட்டிருக்கும்.

(உ-ம்) ஸரிகககா, மபதததா;

12. வேணி

திரயாணும் து திரிராவிருத்தள பிரத2க்வேணிரு3தீரிதா

மேற் கூறப்பட்ட உத்கீதம், உத்வாஹிதம், த்ரிவர்ணம் இம்மூன்றும் சேர்ந்து பிரயோகிக்கப்படின் அதனை வேணியென்பர். அதாவது ஒரு கலையின் மூன்று ஸ்வரங்களும் மூன்று தடவை பிரயோகம் செய்யப்பட்டிருக்கும்.

(உ-ம்) ஸஸஸ ரிரிரி ககக மமம பபப தத்த நிநிநி.

அவரோஹியின் அலங்காரங்கள்

அவரோஹகிரமாதே3தே த்3வாத3சாபியவரோஹி ணீ

'ஆரோஹி' வர்ணத்திற்குக் கூறப்பட்ட அலங்காரங்களே அவரோஹண முறையைப் பின்பற்றி பிரயோகிக்கப்படின் அவை 'அவரோஹி' வர்ணத்தின் அலங்காரங்கள் ஆகின்றன என்று அறிக.

இனி 'ஸஞ்சாரீ' வர்ணத்தின் அலங்காரங்களைக் கூறுவோம்:—

